PRINTED AT
ANANDA PRESS, MADRAS.

श्रीः

श्री दिग्विजयरामोविजयते.

# த்வைத விஜய துந்துபி.



எஸ். கிருஷ்ணசாரியாரால்

சேகரிக்கப்பட்டது.

---

திருச்சானூர்

ஸ்ரீமன் மத்வஸித்தாந்தாபிவ்ருத்திகாரிணீ ஸபையோரால்

ப்ரசுரிக்கப்பட்டது.

1936.

# முன்னுரை.

ஸ்ரீ குருப்யோ நம:

எல்லாப்ராணிகளாலும் விரும்பப்படும் துக்கமற்ற ஸுகரூபமான மோக்ஷம் "யஸ்ய ப்ரஸாதாத் பரமார்த்திரூபாதஸ்மாத் ஸம்ஸாரான் முச்யதே நாபரேண" என்றவாறு ஸ்ரீ பரமாத்மாவின் ப்ரஸாதத்தினலேயே கிடைக்கக்கூடியதாயிருக்கிறது. அந்த ப்ரஸாதத்திற்காக "ஆத்மாவாரே த்ரஷ்டவ்ய: ஶ்ரோதவ்யோ மந்தவ்யோ நிதித்யாஸிதவ்ய:" என்றவாறு அந்த பரமாத்மாவைக்காணுவதற்காக அவனிட மகிமைகளைக் கேட்டு தெரிந்து த்யானித்துக்கொண்டே அவனிடத்தில் பக்திசெய்ய வேண்டியதாகும். அந்த பரமாத்மாவின் மகிமைகளை அறிவிப்பதற்காகவே ஸகல வேத இதிஹாஸ புராணங்களும் வெளியாயிருக்கின்றன.

ஆனல் அவைகளுக்கு வெகு ஜனங்கள் பலவிதமாகவும், பரஸ்பர விருத்தமாகவும் அர்த்தம் கூறியிருப்பதினல் நாம் எதைச் சரியானதென்று அறிவதெனின் :—காடகோபனிஷத் 2-வது அத்யாயம் 8, 9-வது மந்த்ரங்களில் தானே "அனன்யப்ரோக்தே கதிரத்ர நாஸ்தி...........ப்ரோக்தான்யேனைவ ஸுஜ்ஞானயப்பேஷ்ட" அனன்யனல் சொல்லப்பட்ட வாக்யங்களால் கதி கிடையாது என்றும், அன்யனல் சொல்லப்படும் வாக்யங்களினலேயே நல்ல ஞானம் கிடைக்குமென்றும் சொல்லியிருக்கிறது. 'அனன்யேன அபேதஜ்ஞானினு' அனன்யனென்ருல் அபேதஜ்ஞானி என்று சங்கராசார்யரே ஷ உபனிஷத் பாஷ்யத்தில் அர்த்தம் செய்திருப்பதால் 'அன்யேன' என்ருல் பேதஜ்ஞானி என்றே அர்த்தம் செய்ய வேண்டும். 'ப்ரோக்தான்யேன ஸுக்யானய' பேதஜ்ஞானியால் சொல்லப்படும் வாக்யங்களே நல்ல ஞானத்திற்கு காரணங்களென்று உபனிஷத்து தானே சொல்லியிருப்பதினல் 'கதி:' என்ற பதத்திற்கும் ஞானமென்றே அர்த்தம் சொல்லவேண்டும். ஆகக்கூடி அபேதஜ்ஞானிகளால் கூறப்பட்டுள்ள "பஹுஶாகாஹ்யனந்தாஶ்ச புத்தயோவ்யவஸாயினம்" (ப. கீ. 2-41.) என்றவாறு பரஸ்பர விருத்தமான அனேக வாக்யங்களினல் மோக்ஷஸாதனமான சரியான ஞானமுண்டாகாதென்றும், பேதஜ்ஞானியினல் சொல்லப்படும் "வ்யவஸாயாத்மிகா புத்திரேகேஹ குருநந்தன" (கீதா 2-41.) என்றவாறு பரஸ்பர விருத்தமல்லாத ஒரே அர்த்தத்தையுடைய வாக்யங்களையே அங்கீகரிக்க வேண்டியதென்றும் ஸித்தமாகிறது.

அத்தகைய பேதஞானிகளில் பரமஸ்ரேஷ்டரான ஸ்ரீமத்பரமஹம்ஸேத்யாதிகுணகணலங்க்ருத ஸ்ரீ உத்தராதிமடாதீஶ ஸ்ரீஸ்ரீமத் ஸத்யத்யானதீர்த்த ஸ்ரீ பாதரவர்கள் தம் குருக்களான ஸ்ரீமத் ஸத்ய ஞான தீர்த்தரால் மேற்படி வைதிக வைஷ்ணவ ஸித்தாந்த (த்வைதஸித்தாந்த) ப்ரதிஷ்டாபனத்திற்கு என்றால் ஸன்யாஸத்தைப் பெருவதற்கு உத்திரவளிக்கப்பெற்றனரோ அன்றே தான் இவ்வில்லர சுகங்களை வெருப்புடன் துறந்தவராய் ஸ்ரீராமர், பரசுராமர் முதலியோர்கள் எல்லா சொத்துக்களையும் ஸர்வஸ்வ தானம் செய்ததுபோல் தம்மிட ஸகல சொத்துக்களையும் என்றால் 99500-ரூபாய் பொருமான க்ராமங்கள் முதலியவற்றை, தம்மிட குருக்களால் சகே 1826 க்ரோதி வருஷம் (1905)மாக சுத்த நவமிதினம் ஸ்ரீமலகேடா க்ஷேத்திரத்தில் ஸ்தாபிக்கப்பட்ட ஸ்ரீமன்மத்வ ஸித்தாந்தாபிவ்ருத்திகாரிணீ ஸபைக்கு சகே 1833 விரோதிக்ருத் புஷ்ய பஹுளஷஷ்டி (9-1-1912)யில் உயில் பத்திரம் செய்து தானம் கொடுத்து, பிறகு அவ்வாஸ்ரமத்தை பெற்று, 1930-ம் வருஷம் ஜனவரிமாதம் 30-ம் தேதியில் 1860-ம் வருஷத்திய 21-வது ஸொஸைடீஸ் ரிஜிஸ்ட்ரேஷன் ஆக்ட்படிக்கு ரிஜிஸ்டர் ஆன மேற்படி ஸபையின் கௌன்ஸில் மெம்பர்களுக்கு 1930-வருஷம் பிப்ரவரிமாதம் 28-ம் தேதியில் ஸெடில்மெண்ட் மற்றும் ட்ரஸ்ட்டீட் செய்து மேற்படி சொத்துக்களை ஒப்புவித்து, அக்காலத்தில் தமக்கு வரவேண்டியிருந்த 56,000-ரூபாய்களுக்கும் கிராமங்களை வாங்கித்தருவதாய் ஸங்கல்பித்து, மற்றும் சீக்கிரத்திலேயே மேற்படி ஸபைக்கு ப்ரதிவருஷமும் செலவுக்கு வேண்டிய 28,000-ரூபாய்கள் வருமானம் கிடைப்பதற்குத் தேவையான நான்கு லக்ஷம் ரூபாய்களைத் தாமும் தம்மிட சீடர்களாலும் ஸித்தப்படுத்தி கொடுப்பதாயும், அதுவரைக்கும் இப்போதிருக்கும் சொத்துக்களால் வரும் சுமார் 9400-ரூபாய்கள் போக மீதி ஸபா செலவுக்கு வேண்டிய பணத்தை தாம் கொடுப்பதாயும் உத்திரவளித்து அதின்படிக்கே நடந்துகொண்டு வித்யா பக்ஷபாதிகளாய் மும்மதஸ்தராண ஸகல வித்வான்களையும் ஆதரித்து வரும் விஷயம் உலகத்தில் புகழ்பெற்றதேயாகும்.

மற்றும் இமமகனீயர் த்வைதமதஸ்தாபனுதிகாரத்தைப்பெற்றஉடனே திக்ஜயத்திற்காக புறப்பட்டு ஆங்காங்கு ஸபை கூட்டி அச்சபைகளில் த்வைதமதத்திற்கு விருத்தமான மதங்களிலுள்ள தோஷங்களை எடுத்துக்காட்டி அவைகளைக்கண்டித்து, ஸ்ரீமதானந்ததீர்த்தரின் த்வைதமதத்தை நிலை நிருத்திக்கொண்டே இரண்டுதடவைகளில் ஆஸேதுஹிமகிரி பூப்ரதக்ஷிணம் செய்து ஆங்காங்குள்ள ஸஜ்ஜனர்களின் ஸந்தேஹாதிகளை போக்கிக் கொண்டுமிருக்கிறார். ஆகையால் இம்மகனீயராலும், இவரைப் போன்ற த்வைத ஞானிகளாலும் கூறப்படும் வாக்யங்களினுலேயே மோக்ஷஸாதனமான மேலான ஞானம் கிடைக்குமென்று ஸித்தமாகிறது.

ஸ்ரீ ஸ்ரீ உத்தராதிமடாதீசர் ஆங்காங்கு ஸபைகளில் அத்வைதமதத்தைக் கண்டித்து த்வைதமதத்தை ஸ்தாபித்துக்கொண்டிருந்தபோதிலும், இவ்விஷயங்களை நன்கறியாத சில ஸஜ்ஜனர்கள் பிறரால் ஆங்காங்கு ஸபையில் நடந்ததற்கு விருத்தமாய் வர்த்தமான பத்திரிகை முதலியவற்றில் வெளியிட்டிருப்பதைக்கண்டு ஸம்ஶயமுடையவர்களாய் விசாரப்பட்டு வருகிறபடியால், ஆங்காங்கு நடந்த நிஜமான விஷயங்களை மேற்படி ஸஜ்ஜனர்களுக்கு அறிவித்து அவர்களிட மனதிற்கு ஆனந்தமுண்டாக்குவதுடன், மேற்படி ஸ்ரீ ஸ்ரீகளின் ஞானபக்திவைராக்ய ஔதார்யாதி குணங்களை எல்லோரும் அறிந்து "யஸ்யதேவே பராபக்தி: யதா தேவே ததா குரௌ" மோக்ஷத்தைத்தரக்கூடிய பரமாத்மாவிடத்தில் பக்தி செய்வதைப் போலவே 'முகுந்த பக்த்யை குருபக்திஜாயை' மேற்படி பரமாத்மாவிடத்தில் பக்தியுண்டாவதற்காக பரமகுருக்களான ஸ்ரீ ஸ்ரீகளிடத்தில் விசேஷமான பக்தியையடையக்கடவார்களென்ற கோறிக்கையால் ஸ்ரீ ஹரி குருஸேவாரூபமாக என் புத்திக்கெட்டியமட்டில் எழுதப்பட்ட இச்சிறு புத்தகத்தை ஸ்ரீ ஸ்ரீகளின் ஸ்ரீபாத கமலங்களில் அநேக கோடி வந்தனங்களுடன் ஸமர்பித்துக்கொண்டிருக்கிறேன். இதிலுள்ள பூர்வாபரீகாரங்களை அம்மகனீயரும் இதர ஸஜ்ஜனர்களும் மன்னித்து எனக்கு ஸ்ரீ ஹரி குரு அனுக்ரஹத்தினுல் ஞானபக்தி வைராக்யங்கள் கிடைக்கும்படிக்கு அனுக்ரஹிப்பாராகவும்.

ஸ்ரீ ஸ்ரீகளின் பாதஸேவகன்,

**ஸ. கிருஷ்ணசார்.**

# அட்டவணை.


| விஷயம். | பக்கம். |
|---|---|
| மங்களாசரணம் ... ... ... | 1 |
| மதங்களுக்கு விஜயபராஜயங்களாவன ... ... | 3 |
| அத்வைதமததத்வங்களும் அவைகளின் பொருந்தாமையும் ... ... ... | 4 |
| த்வைதமத தத்வங்களும் அவைகளின் மேன்மையும் ... | 8 |
| மாகதவிஜயம் முதலாவது (கயா) ... ... | 12 |
| வாரணாஸீ விஜயம் முதலாவது (காஸீ) ... ... | 18 |
| ரேவா விஜயம் ... ... ... | 24 |
| சோழவிஜயம் முதலாவது (சிதம்பரம்) ... ... | 25 |
| ,, இரண்டாவது (கும்பகோணம்.) ... | 25 |
| கர்ணாடக விஜயம் முதலாவது (மைஸூர்) ... | 27 |
| மஹாராஷ்டிர விஜயம் (சிகோடி) திலகருடன் ஸம்வாதம் ... ... ... | 28 |
| சோழவிஜயம் மூன்றாவது திருவிசநல்லூர் ராமசுப்பாஶாஸ்திரிகளின் சந்த்ரிகா கண்டன கண்டனம் (திருச்சானூர்)... ... | 35 |
| கர்ணாடக விஜயம் இரண்டாவது (பெல்காம்) ... | 37 |
| ,, மூன்றாவது (பெங்களூர்) ... ... | 43 |
| ,, நான்காவது (மைஸூர்) ... ... | 44 |
| ,, ஐந்தாவது (மைசூர்) (அய்யாகனபாடிகளின் ஸபை) } ... ... | 45 |
| சோழவிஜயம் நான்காவது (ஸ்ரீரங்கம்) ... ... | 51 |
| ,, ஐந்தாவது (கும்பகோணம்) ... ... | 52 |
| புதுக்கோட்டை விஜயம் ... ... ... | 57 |
| பாண்ட்ய விஜயம் (மதுரை) ... ... | 60 |
| கேரள விஜயம் (அனந்தசயனம்) ... ... | 63 |
| மதராஸ் விஜயம் ... ... ... | 64 |
| ஆந்த்ர விஜயம் (விஜயநகரம்) ... ... | 65 |
| மாகத விஜயம் இரண்டாவது (கயா) ... ... | 72 |
| வாரணாஸீ விஜயம் ,, (காசீ) ... ... | 77 |
| ஆந்த்ர விஜயம் இரண்டாவது (குண்டூர்) ... ... | 99 |
| ,, மூன்றாவது (பல்லாரீ) ... ... | 111 |
| ,, நான்காவது (ஆதவானீ) ... ... | 115 |
| இதர விஷயங்கள் ... ... ... | 120 |
| த்வைதத்திற்கு பராஜயமாகிலும் அத்வைதத்திற்கு ஜயமாகிலும் எப்படி கிடைக்கும். ... | 122 |

**श्री दिग्विजयरामोविजयते.**



ஸத்ய த்யான ஸுதீர்த்த! தாவகமிதம்
சித்ரம் சரித்ரம் விபோ!
காவ்யாலாப விவேகிநோபி கவயஶ்ஶக்தா
ந வக்தும் தியா ||
தாவத் ப்ராஹ்மபவ ப்ரபஞ்சவிஷயே
ஸஞ்சிந்தயந்தோ முதா
ஹ்யௌபம்யாநவபோத ஹீனமதிதா-
விர்பாவபாஜோ ந்ருணாம் || (ம. ஶா.)

ஸ்ரீ திக்விஜயராமோ விஜயதே.

# ஸ்ரீ த்வைத விஜய துந்துபி.

---

## ஸ்ரீ குருப்யோ நம:

ஜயத்யமிதபௌருஷ: ஸ்வஜனதேஷ்ட சிந்தாமணி:॥
அஜேஶமுக வந்திதோ குணகணார்ணவ: ஸ்ரீபதி: ॥ 1 ॥
ஆநந்ததீர்த்த பும்ஸிம்ஹோ மாயாவாதி திதேஸ்ஸுதான் ।
விதார்ய யுக்திநகரை ரப்ரதீபோ விபாஸதே ॥ 2 ॥
ஸத்யதீர கராப்ஜோத்தான் ஸத்யவைராக்ய பூஷிதான்॥
ஸத்யபுத்தி ஸம்ருத்யர்த்தம் ஸத்யஜ்ஞான குரூன் ஶ்ரயே ॥ 3 ॥

---

ஶ்ருத்வா யத் ஸிம்ஹநாதம் கதிசன குதிய: பண்டிதம்மன்யவர்யா:
ப்ராப்தா கோமாயுபாவம் கிமபி கலகலம் குர்வதே காந்திஶீகா: ॥
வித்யாபீடேபி காஶ்யாம் ஸகல புதஜனா: ஶிஷ்யபாவம் ப்ரபன்னா:
பீத்வா யஸ்யோபதேஶாம்ருதமிஹ ஸுதிய: ஸம்பவந்தி ப்ரஸன்னா: ॥ 1 ॥
ஜாதோ யஸ்யாஸ்ய கஞ்ஜாம்ருதரஸ நிகரைர்நாஸ்திகாத்வா விஶீர்ண:
ஶேஷ: கிம் வா கணேஶ: ஸ்வயமத கிமஹோ! வாக்பதி ஶ்சாவதீர்ண:॥
ஶ்ருத்யைவ த்வைதஸித்திம் கதயிதுமமலாம் தத்வவித் ஸித்தமந்த்ர:
ஸ்ரீ ஸத்யத்யான தீர்த்தஸ் ஸுமதிநுதபத: ஸர்வதந்த்ர: ஸ்வதந்த்ர: ॥ 2 ॥

ஸ்ரீ ஸிதாராம்ஜா (மைதில:) காசீ, ஸாஹித்ய பரிஷதுப ஸபாபதி:

---

'ஸுகமேவ மே ஸ்யாத் துக்கம் மனாகபி மாபூத்' என்றவாரு எல்லோராலும் அபேக்ஷிக்கப்படும் துக்கமற்ற ஸுகரூபமான மோக்ஷத்தை யடைவதற்கு மேலான ஸாதன பூமியான இவ் வார்யாவர்த்த க்ஷேத்ரத்தில் பம்பாய் இலாகா பெல்காம் ஜில்லா சிகோடி என்னும் கிராமத்தில் ஆத்ரேய கோத்ரத்தில் பிறந்த ஸ்ரீமத் பூஜ்ய கொர்லஹள்ளி போதராயாசார்யர் என்பவர்— ஸ்ரீமன் மத்வாசார்யரிட மஹாஸம்ஸ்தானத்தை, ஞான பக்தி வைராக்ய வீர்ய தைர்ய ஔதார்யாதி குணகணாலங்க்ருத ஸ்ரீமத்

பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யவர்ய * ஸ்ரீமதுத்தராதி மடாதீச ரான ஸ்ரீமத் ஸத்ய வீரதீர்த்தரால் க்ரமமாக அடைந்து, ஸ்ரீமதாசார்ய பீடாரூடராய் ஸ்ரீமத் ஸத்ய தீரரென்னும் பெயர்பெற்று, தீர்த்தயாத்ரா நிமித்தமாய் ஆங்காங்குள்ள சிஷ்ய ஸங்கத்தை ஞானோபதேசாதிகளினல் புனிதராகச் செய்து கொண்டிருந்தனர்.

அக்காலத்தில் அவரிட பூர்வாச்ரம ஸத்புத்ரரான பூஜ்ய ஸேதுராமாசார்யரென்பவர் ஷை ஸம்ஸ்தானத்தின் யுவராஜாராய் ஸம்ஸ்தானத்தின் ஸகல கார்யங்களையும் நிறைவேற்றிக்கொண்டிருந்து, ஷை ஸத்ய தீரரின் கரகமலஸஞ்ஜாதரான ஸ்ரீ ஸத்ய ஞான தீர்த்த ஸ்ரீபாதரவர்களால் வீரவல்லி என்னும் கிராமத்தில் விரோதிக்ருத் வருஷம் புஷ்ய பஹுள தசமி சனிக்கிழமை 13-1-1912-ல் ஷை ஸம்ஸ்தானத்தை பெற்று, ஷை வருஷம் மாக சுத்த ஏகாதசி (30-1-1912) இராஜமஹேந்திரவரத்தில் ப்ருந்தாவன ப்ரவிஷ்டரான தம் குருக்களின் (ஸ்ரீ ஸ த்ய ஞா ன ரி ன்) மஹா ஸமாராதனை மஹோத்சவத்தை செய்துகொண்டு, உடனே தம்மால் அடையப்பெற்ற வேதாந்த ராஜ்யத்தை பரிபாலிப்பதற்காகவும், வைஷ்ணவ ஸித்தாந்த ப்ரதிஷ்டாபனசார்யரென்னும் பெயரை நிஜமாக்கிக்கொள்ளுவதற்காகவும், திக் விஜயத்திற்கு புறப்பட்டு ஸ்ரீகயா முதல் கன்யாகுமாரிவரைக்குமுள்ள ஸகல தீர்த்த க்ஷேத்ரங்களை சேவித்துக்கொண்டு ஆங்காங்குள்ள சிஷ்ய ஸமூஹத்துக்கு ஸத்சாஸ்த்ரோபதேசாதிகளைச் செய்துகொண்டு ஆங்காங்கு மஹா ஸபையைச் சேர்த்து அத்வைதமதம் அவைதிகமானது (வேதத்தினல் சொல்லிக் கொள்ளப்படாததுமன்றி வேதத்திற்கு விருத்தமுமானது) என்கிற விஷயத்தை தம்மால்

---

* ஸாதாரணமாய் கோதாவரி தீரத்திலிருந்து வந்தவர்களை தென் தேசத்தில் உத்திராதி (வடகத்தியார்) என்று சொல்லுவத வழக்கம். அப்படியே கோதாவரிக் கரையிலுள்ள தேசத்திலிருந்து உடுப்பிக்கு வந்திருந்தபடியால் உத்தராதிவரென்று ப்ரஸித்தரா யிருந்த சோபனபட்டரென்பவர் ஸ்ரீ மத்வாசார்யரின் முதல் சீடராய் அவரால் ஸன்யாஸாச்ரமத்தை யடைந்து ஷை ஆசார்யரின் மஹா ஸம்ஸ்தானத்தைப் பெற்றது முதல் அம்மடம் உத்தராதி மடமென்று உலகத்தில் புகழ்பெற்றது.

இயற்றப்பட்டு அநேகபாஷைகளில் வெளியிடப்பட்ட, ஸம்யமனீ புரம் ஹைகோர்ட் வேதாந்த விசாரணை ஸிவில் ஸூட் முதலிய அனேக நூல்களின் முகாந்தரமாய் ஶங்கர பாஷ்யம், கௌடபாத காரிகா, பாமதி முதலிய அத்வைத நூல்களினாலேயே ஸித்தப் படுத்திக்காட்டி ஷை அத்வைதமதத்தை * கண்டித்து, த்வைத மதமே வேதாதிகளினால் ஸித்தமாகிறதென்று கூறி, த்வைதமதத் தின் விஜயத்தை பறைசாற்றிக்கொண்டு, வைஷ்ணவ (த்வைத) ஸித்தாந்த ப்ரதிஷ்டாபனாசார்யரென்னும் தம்மிட பெயரை காரணப் பெயராக்கிக்கொண்டே, இரண்டு தடவை பூப்ரதக்ஷி ணம் செய்து, மூன்றாவது ப்ரதக்ஷிணத்திற்கு விஜயம் செய்திருக் கும் விஷயம் உலகத்தில் புகழ்பெற்றதேயாகும். யாராகிலும் பிடி வாதமின்றி ஶாஸ்திரங்களை ஆராய்வரேயாகில் எக்காலத்திலும் த்வைதமதத்திற்கே விஜய மென்பதை அவர்கள் ஒத்துக்கொள் ளாமலிருக்க முடியாது.

## மதங்களுக்கு விஜய பராஜயங்களாவன.

பரஸ்பர விருத்தமான இரண்டு மதங்களில் எந்த மதத்தின் † தத்வங்களுக்கு இருமதஸ்தராலும் ப்ரமாணமென்று ஒப்புக்

---

* இவ்வாசார்யர் தம்மதத்தை ஸ்தாபனம் செய்துக் கொள்ளட்டும், இதரமதத்தை தூஷித்து கண்டிப்பானேன் எனின்— 'ஸ்வபக்ஷஸ்தாபன பரபக்ஷோபாலம்பாப்யாம் நிர்ணய:' என்றால் தன்மதஸ்தாபனத்தினாலும் விருத்தமதகண்டனத்தினாலும் (தத்வ) நிர்ணயமாகும் என்று நியாயமுண்டு. குமாரிலபட்டர் தம்மதத்தை ஸ்தாபனம் செய்ய பௌத்தரை இராஜனால் கொல்லுவித்திருக்கிறார். சங்கராசாரியர் தம் மதஸ்தாபனத்திற்காக பல மதங்களைக் கண்டித்திருக்கிறார். (ஆனந்த கிரி சங்கரவிஜயம்) நெல்லைப் பயி ரிடுவோர் அதற்கு விருத்தமான புல்பூண்டு முதலியவைகளைப் பிடுங்கி எறி கிறார்கள். கோர்ட்டில் ஜனங்கள் தம்மிடபேச்சை நிஜப்படுத்திக்கொள்ளு வதற்காக தனக்கு வேண்டிய ஆதாரங்களை ஹாஜராக்குவதுடன், பிரதி வாதிக்கு விருத்தமான அநேக ரிகார்டுகளை வெகு சிரமப்பட்டுச் சம் பாதித்து ஹாஜர்படுத்தி அவனிட அயோக்யத்தனத்தை கோர்ட்டில் வெளிப்படுத்துகிறார்கள். இப்படியே விருத்தமதத்திலுள்ள தோஷங்களை அறிவித்தாலொழிய தம் மதத்தில் ஜனங்களுக்கு மதிப்பு உண்டாகாதாகை யால் விருத்த மதகண்டனம் முதலில் ஆவசியகமாகும்.

† தத்வம் என்றால் நிஜமான ஞானத்திற்கு விஷயமானது.

கொள்ளப்பட்ட நூல்களின் ஆதார முண்டோ அம்மதத்திற்கு விஜய மென்றும், எந்த மதத்தின் தத்வங்களுக்கு இருவராலும் ப்ரமாணமென்று அங்கீகரிக்கப்பட்ட நூல்களின் ஆதாரங்களில் லாமலிருப்பதுமன்றி, அந்நூல்களின் விரோதமு மிருக்கின்றனவோ அம்மதத்திற்கு பராஜயமென்றும் எல்லோராலும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

தற்காலம் த்வைத விஜயமெனின் த்வைத மதத்தில் சொல்லப்பட்ட விஷயங்களை த்வைதிகளாலும் அத்வைதிகளாலும் ப்ரமாணமென்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கும் ஶ்ருதி ஸூத்ர கீதாக்களினால் ஸித்தப்படுத்திக் காட்டுவதுடன், த்வைத மதத்திற்கு விருத்தமான அத்வைதமத தத்வங்கள் ஶ்ருதி ஸூத்ர கீதாக்களில் சொல்லப்படாததுமன்றி அவைகளுக்கு விருத்தமுமானவைகளென்பதை ஸித்தப்படுத்தி (அம்மதத்தைக் கண்டனம் செய்து) காட்டுவதேயாகும்.

இதைப்போலவே அத்வைத விஜயமெனின்—அத்வைதமதத்தில் சொல்லப்பட்டுள்ள விஷயங்களை ஶ்ருதி ஸூத்ர கீதாக்களினால் ஸித்தப்படுத்திக் காட்டுவதுடன், த்வைதமதத்தில் சொல்லப்பட்ட தத்வங்கள் ஶ்ருதி ஸூத்ர கீதாக்களில் சொல்லப்படாததுமன்றி அவைகளுக்கு விருத்தமுமாயிருக்கின்றனவென்பதை வெளிப்படுத்துவதே யாகும். இவ்விதமாக த்வைதாத்வைத விஜயங்களின் நிர்ணயம் எல்லோருக்கும் ஸம்மதமானது.

இந்த த்வைத விஜய துந்துபியை முழங்கச் செய்வதற்கு முன்னமே அத்வைத மத தத்வங்களையும், த்வைதமத தத்வங்களையும் விசாரம் செய்து அவைகளின் யுக்தாயுக்தங்களை எடுத்துரைப்பது ஆவஶ்யகமானதாகையால் அவைகளைச் சுருக்கமாக விசாரிப்போம்.

## அத்வைத மத தத்வங்களும் அவைகளின் பொருந்தாமையும்.

ஶ்லோகார்த்தேன ப்ரவக்ஷ்யாமி யதுக்தம் க்ரந்தகோடிபி: ।
ப்ரஹ்ம ஸத்யம் ஜகன்மித்யா ஜீவோ ப்ரஹ்மைவ நாபர: ॥

(1) ப்ரஹ்மம் ஸத்யம் மற்றும் நிர்குணம் (2) ஜகத்து கனவைப்போல் மித்யை,(முக்காலத்திலு மில்லாதது) கயிற்றில் தோன்றும் பாம்பைப்போல் ப்ரமையினுல் தோன்றுவது, (3) ஜீவன் ப்ரஹ்மமே யொழிய வேரல்ல என்பனவைகளே அத்வைதமத தத்வங்கள்.

இவ்விஷயங்களைச் சொல்லும் ஷை மதமே ஸித்தமாகிற தில்லை. அப்ராமாணிகம் (ப்ரமாண மில்லாதது). எப்படி எனின்:- கௌட ப்ரஹ்மானந்தர் முதலிய அத்வைதிகளே 'அனவஸ்தாதயோ தோஷா: ஸத்தாம் நிக்னந்தி வஸ்துன: | அத்வைதினும் தே ஸுஹ்ருத:...' (கௌடப்ரஹ்மானந்தீயம்) 'ந மாயாவாதே அத்யந்த முபபாதனுர்த்தம் ப்ரயதிதவ்யமிதி' (கல்பதருபரிமளம் 1-4-22) முதலிய க்ரந்தங்களில் தம்மிட மாயாவாதம் "அநேக தோஷயுக்தமானது. அத்தோஷங்கள் அம்மதத்தை ஸித்தமாகாமற் செய்கின்றன. ஆகையால் அம்மதத்தை ஸித்தப்படுத்த முடியாது. ஆகையால் நாம் அந்த மாயாவாதத்தை (அத்வைத மதத்தை) ஸித்தப்படுத்துவதற்காக அதிகப்ரயத்னம் செய்யக் கூடாது. ஒருக்கால் தோஷங்களில்லாமல் அத்வைதமதம் ஸித்தமாய்விடுமேயாகில் அத்வைதமதமொன்று ப்ரஹ்மமொன்று ஸத்யமாய் நம் அத்வைதமதமே பாழாகும்" என்று சொல்லி யிருக்கிறபடியால் அத்வைதமதமே * ஸித்தமாகிறதில்லை என்று ஏற்படுகிறது.

ப்ரமாணமெனின்—நிஜமான பதார்த்தத்தின் ஞானத்தை உண்டாக்கக்கூடியதென்று அர்த்தம். அத்வைதமதத்தின்படிக்கு வேதாதிகள் அத்வைதிகளின் நிஜமான ப்ரஹ்மத்தைச் சொல்லுகிறதில்லை. அந்த ப்ரஹ்மம் ஸ்வத: ப்ரகாஶமானது என்றுல் இதர ப்ரமாணங்களினுல் அறியப்படாதது என்றும், வேதாதிகளினுல் சொல்லப்படும் ஜகத்து மித்யை (பொய்) யானது என்றும்

* அத்வைதமதம் ஸித்தமாயின் அத்வைதமதம் பாழாகிறது. அத்வைதமதம் ஸித்தமாகாவிடின் அத்வைதமதம் முதலே இல்லை. ஸிவில் ஸூட் 2வது இஷ்யூ ஜட்ஜ்மெண்ட் பாகம், 33வது பக்கம் பார்க்கவும்.

* "ஶாத்தம் ஹி ந த்ருஶ்யம்..........கிந்தூபஹிதமேவ । தச்ச மித்யைவ........நசைவம் ஸதிஶாத்தஸித்திர் ந ஸ்யாதிதி வாச்யம், ஸ்வத ஏவ தஸ்ய ப்ரகாஶத்வேந ஸித்தத்வாதிதி" (அத்வைதஸித்தி) முதலிய வாக்யங்களால் அத்வைதிகளே ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அத்வைத ப்ரஹ்மம் ஸ்வப்ரகாசம் என்னும் விஷயத்திலும் ப்ரமாணமில்லை. ப்ரமாண மில்லாமலே ப்ரஹ்மம் ஸ்வப்ரகாஶமாயின் ப்ரமாணமில்லாத முயற்கொம்பு, மலடிமகன் முதலியவைகளும் ஸ்வப்ரகாஶமானவைகளென்றும், நிஜமானவைகளென்றும் ஒப்புக்கொள்ளவேண்டியதாகும்.

ப்ரஹ்மம் நிற்குணம் என்னும் விஷயத்தில்—நிற்குண ப்ரஹ்மத்தில் த்ரவ்யம், பேதம், குணம், கர்மம், நாமம், ரூபம் முதலிய தர்மங்களில் எந்த தர்மமுமில்லை என்று † "யஸ்மின் நகஶ்சித் விஶேஷோஸ்தி நாமவா..... அதோ ந நிர்தேஷ்டும் ஶக்யதே இதம் ததிதி" என்று 2-3-6 ப்ருஹதாரண்யக பாஷ்யத்தில் சங்கராசார்யரே சொல்லியிருக்கிறார். ஷை ப்ரஹ்மம் தர்மரஹிதமாகையால் ப்ரமாணத்தினால் ஸித்தமாவதற்கு ஸாத்யமில்லை. ப்ரமாணத்தினால் ஸித்திப்பதே இல்லை என்ற பிறகு அந்த ப்ரஹ்மத்தின் இருப்பே இல்லாததாயிற்று. ஆகையால் அத்வைதிகளின் நிர்குண ப்ரஹ்மம் முயற்கொம்பு முதலியவற்றைப்போல் பொய்யானதென்றே ஸித்தமாகிறது.

ஸர்வஜ்ஞத்வாதி குணங்கள், ப்ராஹ்மணாதி வர்ணங்கள், ப்ரஹ்மசர்யாத்யாஶ்ரமங்கள், வேதம், யஜ்ஞம், தேவதைகள், கங்காதி தீர்த்தங்கள், தாரதம்யம் முதலிய ஜகத்து கனவைப் போல் மித்யை, ப்ரமையினால் கயிற்றில் தோன்றும் பாம்பைப் போல் ப்ரஹ்மத்தில் தோன்றுவது என்னும் விஷயத்தில்:—

அத்வைத மதத்தின் படிக்கு பொய்யான ஜகத்தைச் சொல்லும் வேதம் ப்ரமாணமாகாததினால் இவ்விஷயமும் அப்ராமாணிகமேயாகிறது.

---

* ஸிவில்ஸூட் 5 வது இஷ்யூ விசாரணை பாகம் 36 வது பக்கம்.

† ஸிவில் ஸூட் 2 வது இஷ்யூ விசாரணை பாகம் 93 வது பக்கம்.

* மின்னல் ஒரு நொடியில் பிறந்து நஷ்டமடைவதைப் போல் ஸ்வப்னத்தில் ஸகல பதார்த்தங்களும் மனதில் வாஸனை என்னும் பதார்த்தத்தினால் வெளிப்பதார்த்தங்களைப் போலவே ஈச்வரனால் உண்டாக்கப்பட்டு நாசமுமடைகிறபடியால், கனவில் காணும் பதார்த்தங்களும் பொய்யல்ல, ஸத்யமானவைகளே.

† பாமதிகாரர் முதலிய அத்வைதிகளே 'பரமார்த்ததஸ்து ந விப்ரமோநாம கச்சித்' (பாமதி 4-1-3) இது முதலிய வாக்யங்களினால் ப்ரமம் சொல்ல வராததென்று சொல்லியிருக்கிறபடியாலும், அத்வைத மதத்தின்படிக்கு ப்ரமையுண்டாவதற்குக் காரணங்களே இல்லாததினாலும் ப்ரமையே இல்லை என்று ஸித்தமாகிறது. ஆகையால் அத்வைத மதத்தின் படிக்கே ஜகத்து ப்ரமையினால் ப்ரஹ்மத்தில் தோன்றுவதென்று சொல்லமுடியாது. ஆகையால் ஜகத்து மித்யை என்று ஸித்தமாகிறதில்லை. நாஸ்திகர்கள் கண்ணுக்குப் புலப்படாத பதார்த்தங்களை மாத்திரம் மித்யை என்கிறார்கள். இவ்வத்வைதிகளோ கண்ணுக்குப் புலப்படாதவைகளையும், எல்லோருக்கும் அனுபவஸித்தமாய் கண்ணுக்குப் புலப்பட்டுக்கொண்டிருக்கும் பதார்த்தங்களையும் மித்யை என்கிறார்களே! என்ன ஆச்சர்யம்!! என்ன ஸாஹஸம்!!!

அத்வைத மதத்தின்படிக்கு வேதம் ப்ரமாணமல்லாததினால் ஜீவன் ப்ரஹ்மமே என்னும் விஷயமும் அப்ராமாணிகமே தவிர, சங்கராசார்யரும் இவ்விஷயத்திற்கு ஆதாரமென்று வைத்துக்கொண்டிருக்கும் தத்வமஸ்யாதி 4-6 ச்ருதிகளும் ஜீவப்ரஹ்மாபேதத்தை முக்ய வ்ருத்தியால் (முக்யார்த்தத்தால்) சொல்வதில்லை. லக்ஷணார்த்தம் (அமுக்யார்த்தம்) செய்து, அக்னி ஜலங்களைப்போல் அத்யந்த விருத்த குணங்களுடன் கூடிய ஜீவப்ரஹ்மத்திலுள்ள குணங்களை விட்டு, இரண்டிற்கும் ஐக்யம் சொல்லவேணுமென்கிறார். ஷ விருத்த குணங்களை எடுப்பதெப்படி? எடுப்பவர் யார்? அது விட்டுப் போவதெப்படி? இப்படி சொல்லுவது மிகவும் அஸங்கத

---

* விலில் ஸ்கூட் 2-வது இஷ்யூ விசாரணை பாகம் 119-வது பக்கம்.

† விலில் ஸ்கூட் 2-வது இஷ்யூ விசாரணை பாகம் 56-வது பக்கம்.

மென்னும் விஷயம் ஆபால கோபாலகர்களுக்கும் தெரிந்ததே யாகும். தவிர லக்ஷண விருத்தியினுல் ஒரு பதார்த்தம் தெரிய வேண்டுமாயின் அந்த பதார்த்தத்தின் அறிவு முதலே இருந்திருக்க வேண்டும். இப்பதார்த்தமோ வேறெந்த ப்ரமாணங்களினுலும் தெரிவதல்ல. ஆகையால் லக்ஷணர்த்தத்தினுலும் ஐக்யம் பொருந்துகிறதில்லை. மற்றும் 'தத்வமஸி' 'அஹம் ப்ரஹ்மாஸ்மி' முதலிய வாக்யங்கள் அகண்டார்த்த போதகங்கள் என்ருல் சித் என்று மாத்திரம் போதிக்கிறதென்று சொல்லுவதினுல் ஜீவ ப்ரஹ்மாக்களின் அபேதத்தைப் போதிக்கிறதில்லை என்பதை அத்வைதிகளே ஒப்புக்கொண்டதாயாகிறபடியால் அத்வைதம் (ஜீவப்ரஹ்மைக்யம்) அப்ராமாணிகமென்றே ஏற்படுகிறது. ஆகையால் மேற்சொன்ன மூன்று விஷயங்களிலும் அத்வைத மதத்திற்கு பராஜயம் என்கிற விஷயத்தையே இத்துந்துபி வெளியிடுகிறது.

மேற்கூறிய மூன்று விஷயங்களுக்கும் தம்மதத்தின் பராஜயத்தை அத்வைதிகள் ஒப்புக்கொள்ளாவிடின் ப்ரஹ்மத்தின் நிர்குணத்வம், ஜகத்தின் மித்யாத்வம், ஜீவப்ரஹ்மாக்களின் ஐக்கியம் இம்மூன்று விஷயங்களையும் முக்யார்த்தத்தைச் சொல்லும் ஶ்ருதி ஸூத்ர கீதா ரூப ப்ரமாணங்களால் ஸித்தப்படுத்திக் காட்டி ஜயமடையட்டும்.

## த்வைத மத தத்வங்களும் அவைகளின் மேன்மையும்.

(1) த்வைதிகளால் கொண்டாடப்படும் ஸர்வேஶத்வ ஸ்வதந்த்ரத்வ க்யாநானந்தாத்யனந்த அப்ராக்ருத குணங்களுடன் கூடியதும், ப்ராக்ருதமான ஸத்வாதி குண ரஹிதமுமான ப்ரஹ்மமே நிஜமானது. *இவ்விஷயத்தை 'யஃ ஸர்வஜ்ஞ: ஸர்வவித்' 'ஆகாஶஸ்தல்லிங்காத்' 'பரம் ப்ரஹ்ம பரம்தாம' இது முதலிய ஶ்ருதி ஸூத்ர கீதா ரூப ப்ரமாணங்கள் முறையிடுகின்றன. சங்கராசார்யரும் † 'ஸர்வேஶத்வ ஸ்வதந்த்ரத்வ ஸர்வஜ்ஞத்வாதி

* விவில் ஸூட் 4-வது இஷ்யூ பார்க்கவும்.

† விவில் ஸூட் 3வது இஷ்யூ 8வது பேஜ் முதலிய அநேக இடங்கள்.

பிர்குணே:' இது முதலிய வாக்யங்களினுலும், 'நாநாவிதானி திவ்யானி' என்னும் 11-5-வது கீதாஶ்லோக வ்யாக்யானத்தில் * 'திவ்யானி = அப்ராக்ருதானி ரூபாணி' என்று எழுதியிருக்கும் வாக்யங்களினுலும், மற்றும் 'அஸம்ஶயம் ஸமக்ரம் மாம்' என்னும் 7-1 கீதாஶ்லோகத்திலுள்ள 'ஸமக்ரம்' என்கிற பதத்திற்கு † 'விபூதி பல ஶக்த்யை ஶ்வர்யாதி குணஸம்பன்னம்' என்று அர்த்தம் செய்திருப்பதினுலும் ப்ரஹ்மம் அப்ராக்ருதமான ஸர்வஜ்ஞத்வாத்யனந்த கல்யாணகுண பூர்ண மென்றும், 'நிற்குணம்' என்கிற பதத்திற்கு சங்கராசார்யரே தம்மிட கீதாபாஷ்யத்தில் ‡ 'குணாঃ = ஸத்வ ரஜஸ்தமாம்ஸி தை: ரஹிதம் நிற்குணம்' என்று எழுதி யிருக்கிறபடியால் குண பூர்ணமான ப்ரஹ்மமே நிஜமானதென்றும் அத்வைதிகளே ஒப்புக்கொண்டிருக்கிறார்கள் (Admission) என்று ஸித்தமாகிறது என்ற பின் இவ்வாதத்தில் த்வைதத்திற்கே விஜய மென்பதும், ஷ த்வைத விருத்தமான ஸர்வஜ்ஞத்வாதி ஸகல தர்மரஹிதமான, அப்ராமாணிகமான ஶூன்யத்தையே ப்ரஹ்மமென்று சொல்லும் § பௌத்தமதாவலம்பிகளான அத்வைதிகளுக்கு பராஜயமென்பதும் ஸித்தமேயாகும்.

(2) ஸர்வஜ்ஞத்வாதி குணங்கள், ப்ராஹ்மணுதி வர்ணங்கள், ப்ரஹ்மசர்யாத்யாஶ்ரமங்கள், வேதம், யஜ்ஞம், தேவதைகள் கங்காதி தீர்த்தங்கள், தாரதம்யம் முதலியவைகளுடன் கூடிய **ஜகத்து ஸத்தியமானது** ¶ என்கிற விஷயம், 'விஶ்வம் ஸத்யம்' 'ததேதத் ஸத்யம்' 'நித்யோ நித்யானும்' 'ஜன்மாத்யஸ்ய யதঃ' 'அஸத்யமப்ரதிஷ்டம் தே' இது முதலிய ஶ்ருதி ஸூத்ர கீதா வாக்யங்களினுல் ஸித்தமாகிறது. மற்றும் மித்யை என்பதற்கே வ்யாவஹாரிகமென்று அத்வைதிகளின் பரிபாஷை என்று அத்வைதிகளே 1-1-1 கல்பதருபரிமளம், ப்ரஹ்மவித்யாபரணம் முதலிய

---

* ஸிவில் ஸூட் 4வது இஷ்யூ ஜட்ஜ்மெண்ட் பாகம், 15வது பக்கம்.

† ஸிவில் ஸூட் 4-வது இஷ்யூ 73-வது பக்கம்.

‡ ஸிவில் ஸூட் 4வது இஷ்யூ 54 வது பக்கம்.

§ ஸிவில் ஸூட் 5-வது இஷ்யூ பார்க்கவம்.

¶ ஸிவில் ஸூட் 2-வது இஷ்யூ பார்க்கவும்.

நூல்களில் * 'வ்யாவஹாரிகவிஷயஸ்ய' இது முதலிய வாக்கியங்களால் சொல்லியிருக்கிறார்கள். தவிர ஜகத்து வ்யாவஹாரிகஸத்யம்=மித்யை என்று சொல்லும் பௌத்தர்களை 2-2-28 முதல் 32 வரைக்குமுள்ள 'நாபாவ உபலப்தே:' முதலிய ஸூத்ர பாஷ்யங்களினால் "ப்ரமாணங்கள் தம்தம் விஷயங்களை பாரமார்த்திக ஸத்யமென்றே க்ரஹிக்கின்றனவே யொழிய வ்யாவஹாரிக ஸத்யமென்று க்ரஹிப்பதில்லை யாகையால் ப்ரமாணங்களால் ஸித்தமாகும் ஜகத்து வ்யாவஹாரிக ஸத்யமென்று சொல்லக்கூடாது" என்று சொல்லியிருக்கிறபடியாலும் † ஜகத்துக்கு எந்த அவஸ்தையிலும் பாதை இல்லை என்று 2-2-29வது ப்ரஹ்மஸூத்ர பாஷ்யத்தில் சங்கராசார்யரே சொல்லியிருப்பதாலும், ப்ரஹ்மாதிரிக்தமான ஜகத்து பாரமார்த்திக ‡ ஸத்யமென்றே ஸித்தமாகிறது.

(3) **ஜீவன் ப்ரஹ்மத்தைவிட வேறானவன், மற்றும் ப்ரஹ்மத்தின் அதீனன்** என்னும் விஷயத்தை 'த்வாஸுபர்ண' முதலிய எல்லா ஶ்ருதிகளும், 'பேதவ்யபதேஶாச்சான்ய:' முதலிய எல்லா ஸூத்ரங்களும், எல்லா கீதாவாக்யங்களும் முரையிடுகின்றன. தவிர சங்கராசார்யர் முதலிய அத்வைதிகளும் எல்லா ப்ரமாணங்களும் ஜீவேஶ்வர பேதத்தையே சொல்லுகின்றன வென்று (2-1-20) ப்ருஹதராண்யக சாங்கர பாஷ்யத்தில் 'ந கேவலம்' முதலிய வாக்யங்களினால் § ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆனால்—'தத்வமஸி' முதலிய 4-6 வாக்யங்கள் அபேதத்தைச்சொல்லுவதாகச் சொல்லுகிறார்கள். அந்த 'த்வமஸி' முதலிய நாலாறு வாக்யங்கள் முக்யார்த்தத்தால் விருத்த தர்மங்களுடன் கூடிய ஜீவப்ரஹ்மாக்களின் ஐக்யத்தைச் சொல்லுகிறதில்லை. அகண்டார்த்த போதகம் 'சித்' என்

---

* விவில் ஸூட் 5-வது இஷ்யூ விசாரணை பாகம் 20-வது பக்கம்.

† விவில் ஸூட் 2-வது இஷ்யூ 115-வது பக்கம்.

‡ விவில் ஸூட் 2-வது இஷ்யூ.

§ அவ்வாக்யம் பூர்வபக்ஷ வாக்யமென்று சொல்லக்கூடும். ஆயினும் அதற்குச் சரியான சமாதானம் கூறாமல் யாதொரு ஆதாரமுமின்றி அவைகளை வ்யாவஹாரிகம் = பொய்யென்று சொல்லவேணுமென்று சொல்லியிருக்கிறபடியால் அவ்வாக்யம் ஸித்தாந்தமேயாகிறது.

கிற அறிவை மாத்ரம் உண்டாக்குகிறதாகையால் ஐக்ய ஞான முண்டாவதில்லை. ஐக்யம் முன் எந்த ப்ரமாணத்தினுலும் அறியப் படாததாகையால் லக்ஷணுவினுலும் (அமுக்யார்த்தத்தினுலும்) ஸித்தமாகிறதில்லை. சங்கராசார்யரும் * லக்ஷணுர்த்தம் சொல்லு வது சரியல்ல என்று தம்மிட 3-1-22; 4-2-1 ஸூத்ர பாஷ்யங்க ளில் 'ஶ்ருதிர்ந்யாய்யா ந லக்ஷணு' என்றும் சொல்லியிருக்கிறுர். ஜீவன் அல்பஜ்ஞத்வ அஸ்வதந்த்ரத்வம் முதலிய குணங்களுடன் கூடினவனென்றும் சங்கராசார்யரே "த்வமர்த்தஸ்து கிஞ்சிஜ்ஞோ துக்கஜீவனஃ। ஸம்ஸார்யயம் தத்கதிகஃ ஜீவஃ ப்ராக்ருதலக்ஷணஃ" என்று தம்மிட ஸர்வ வேதாந்த ஸித்தாந்தஸாரா ஸங்க்ரஹ மென்னும் க்ரந்தத்தில் சொல்லியிருக்கிறுர்.

'ஶோத்யம்வா பரிஹாரோவா க்ரியதாம் த்வைத பாஷயா ! அத்வைதே நாஸ்தி சோதனு' 'த்ருடதிய: தூஷ்ணீம் ஶிலாவத் ஸ்திதா:' இது முதலிய அநேக வாக்யங்களை யனுசரித்து த்வைத கண்டனமென்ருகிலும், த்வைதிகளுக்கு பராஜயமென்ருகிலும் என்றைக்கும் அத்வைதிகள் சொல்லுவதற்கு ஸாத்யமே இல்லை. இப்படியிருக்க ஷை எல்லா ப்ரமாணங்களினுலும் ஸித்தமாகும் த்வைதமத தத்வங்களை அத்வைதிகள் அத்வைதத்திற்கு ஆதார மென்று நினைத்திருக்கும் 'தத்வமஸி' முதலிய 4-6 ஶ்ருதிகளுக்கு அனேக பேத ஶ்ருதிகளுக்கு அனுகூலமாய் வெகு ஸுலபமாய் அர்த்தம் செய்வதற்கு வந்துகொண்டிருந்து, அப்படியே அனேக இடங்களில் அர்த்தம் செய்திருந்தும், அத்வைத மதத்தி லுள்ள ஆக்ரஹத்தினுல் ஸரியான யாதொரு ஆதாரமுமின்றி 'த்ருதீயா ப்ரதமார்த்தே யோஜனீயேதி க்லேஶஸ்யாத்' என்று 1-4-22 ந்யாய ரக்ஷாமணியில் சொல்லியவாறு வெகு கஷ்டப்பட்டு பொய்யென்று சொல்லவேண்டுமென்பது எவ்வளவு பரிஹாஸகர மானதென்பதை வாசகர்களே அறியலாம்.

மேற்சொல்லப்பட்ட மூன்று விஷயங்களிலும் த்வைத மதத்திற்கே விஜயமென்றும் அத்வைத மதத்திற்கு பராஜய மென்றும் இத்துந்துபி அடிக்கடி முழங்குகின்றது. அத்வைதி கள் தம் மதத்தின் பராஜயத்தை ஒப்புக்கொள்ளாவிடின் ப்ரஹ்

* விலிஸ் ஸூட் 3வது இஷ்யூ விசாரணை பாகம் 28வது பக்கம்.

மத்தின் நிர்குணத்வம், ஜகன்மித்யாத்வம், ஜீவப்ரஹ்மைக்யம் இம்மூன்று விஷயங்களேயும் முக்யார்த்தத்தைச்சொல்லும் ஶ்ருதி ஸூத்ர கீதா ரூப ப்ரமாணங்களால் ஸித்தப்படுத்திக் காட்டட்டும்.

இவ்விஷயங்களேயே ஜீவகாருண்யமுள்ள நம் உத்தராதிமடாதீசரான ஸ்ரீமத் ஸத்யத்யானதீர்த்தாசார்யரவர்கள் தம்மால் இயற்றப்பட்ட'அத்வைத விமர்ஶை''த்வைத ஸித்தாந்த விசாரம்' 'வேதாந்த விசாரணை ஸிவில் ஸூட்''அத்வைதகபோலசபேடிகா' 'அத்வைதப்ராந்தி ப்ரகாஶம்' முதலிய நூல்களால் விஸ்தாரமாய் வெளிப்படுத்தி ஆங்காங்குள்ள சிடர்களுக்கு உபதேசித்துக் கொண்டே திக்விஜயம் செய்துவருகிறார் என்கிற விஷயத்தையே இத்துந்துபி மேன்மேலும் முழங்குகிறது.

---

## 1. மாகத (கயா) விஜயம்.

### (முதலாவது)

பாண்டு குமாரரான தர்மராஜரிட ராஜஸூய யாகத்தை நடத்துவதற்காக ஸ்ரீ பீமஸேன யுவராஜர் ஸ்ரீக்ருஷ்ணனுடன் கூடி திக்விஜயத்திற்காக புறப்பட்டு முதன்முதல் ஷை வைஷ்ணவ யாகத்திற்கு பரம விரோதியான மாகதனை (ஜராஸந்தனை) கொல்லுவதற்காக மகத தேசத்திற்குச் சென்றதைப்போல், அதே பீமசேனரிட அவதாரரான ஸ்ரீமத்வாசார்யரின் பீடாதிபதிகளான ஸ்ரீமத் ஸத்யத்யானதீர்த்தரவர்கள் தான் வைஷ்ணவ (த்வைத) ஸித்தாந்த ப்ரதிஷ்டாபனாதிகாரத்தைப் பெற்றதும் தம் சிடர்களால் தத்வ விசாரரூபமான ஸத்ரயாகத்தை நடப்பிப்பதற்காக என்றால் த்வைத ஸித்தாந்தத்தைப் ப்ரசுரப்படுத்துவதற்காக ஷை கார்யத்திற்கு விரோதிகளான மாகதீயரை நிக்ரஹிப்பதற்காக என்றால் த்வைதத்திற்கு விருத்தமான அத்வைதத்தைக் கண்டிப்பதற்காக ஸ்ரீராமருடன்கூடி இராஜமஹேந்திரவரத்திலிருந்து புரப்பட்டு ஸ்ரீகூர்மாதி க்ஷேத்ரங்களின் மார்க்கமாய் மகத தேசத்திற்கு (ஸ்ரீகயைக்கு) சகே 1834 பரீதாவி வருஷத்தில் (1912-வது வருஷம் ஜூலை மாதத்தில்) விஜ

யம் செய்தனர். அங்கு தம் சீடர்களான கயாபாலரால் வெகுவைப வத்துடன் வரவேற்கப்பெற்று, ஸ்ரீவிஷ்ணுபாதத்தை வணங்கி, அங்கு வெகுநாள் வஸித்து தம் சீடர்களுக்கு த்வைதமத தத்வங்களை அத்வைத மத கண்டன பூர்வகமாய் உபதேசித்துக்கொண்டிருந்து, நவராத்ரா காலத்தில் ஸபை நடத்துவதற்காக எல்லா ஸம்ஸ்தானாதிபதிகளுக்கும் தம்மிட வித்வான்களை ஸ்ரீகயா க்ஷேத்ரத்திற்கு அனுப்பவேணுமென்றும், வழிச்செலவல்லாமல் ஐம்பது ரூபாய்களுக்கு குறைவின்றி விசேஷ பஹுமானம் செய்யப்படுமென்றும் அழைப்புப் பத்திரிகைகளை அனுப்பிவித்தனர். அதன்படிக்கே எல்லா தேசத்து த்வைதாத்வைத விஶிஷ்டாத்வைத பண்டிதர்களும் வந்து சேர்ந்தனர். அங்கு எட்டுநாள் வரைக்கும் நியாய வேதாந்த விசாரங்கள் நடந்து வித்வான்களுக்கெல்லாம் யோக்யதானுஸாரமாக ஸம்பாவனையும் அளிக்கப்பட்ட * விஷயம் எல்லோருக்கும் தெரிந்ததேயாகும்.

பிறகு ஸ்ரீஸ்ரீமத் ஸத்யத்யான தீர்த்த பகவத் பாதாசார்யரவர்கள் அவ்வூரைவிட்டு புறப்படும் ஸமயத்தில் அவ்வூரிலிருக்கும் பண்டித சந்திரசேகரபட்டரென்பவர் தான் மத்வ மதம் ஶ்ருதி ஸ்ம்ருதி விருத்தமானதென்று ஸித்தப்படுத்துவதாயும், ஸபை சேர்க்கவேண்டுமென்றும் ஸ்ரீஸ்ரீகளுக்கு விண்ணப்பம் செய்துகொள்ளவே ஸ்ரீஸ்ரீகள் 23-10-1912-ல் த்வைத விஜயம் அக்ஷயமானதென்று காட்டுவதற்காக அக்ஷய வடத்தின் நிழலில் அநேக வித்வான்களை வரவழைத்து ஸபை சேர்க்கவே, சந்த்ரசேகரபட்டாவர்கள் ஷை ஸபைக்கு வந்து அச்சபையில் ஸ்ரீமத்வ மதம் ஶ்ருதி ஸ்ம்ருதி விருத்தமானதென்று ஸித்தப்படுத்த ப்ரயத்னப்பட்டனரேயொழிய அவரால் முடியவில்லை. ஆகையால் ஸ்ரீமத்வ மதமே (த்வைத மதமே) நிஜமான வைதிக மதமென்று ஸித்தமானதினால் த்வைத மதத்திற்கே விஜயமென்றுகூறும் இத்துந்துபியின் முதல் முழக்கத்தின் ஒலி அக்காலத்தில் அங்கு வெளியாயிருக்கும் அடியில் கண்ட பத்திரிகையின் வழியாய் இப்பவும் எல்லோரிடகாதையும் செவிடாக்கிக்கொண்டிருக்கிறது.

---

* இவ்விஷயம் ஸபாஸாரஸங்க்ரஹம் 5-வது வால்யூம் XXV பக்கம்.

श्रीः

श्री हरये नमः ।

सब महाशयोंको विदितहोकी श्रीमन्मध्वमत प्रतिष्ठापनाचार्य स्वामी सत्यध्यान तीर्थजी महाराज उत्तरादिमठ गयाक्षेत्र में लगभग तीन महिने से आये हैं. और अपने मध्वमतका उपदेश नित्य करते हैं. अकस्मात गया धर्मसभाके मंत्री गोवर्धनमिश्र बी. ए., बी. एल. वकीलने एक नोटीस-इस विषयकी प्रकाशित कीहै. की श्रीमध्वमतको गयाके पंडित चंद्रशेखर भट्टजी श्रुतिस्मृतिविरुद्धकरेंगे. इस कारण विज्ञापनद्वारा कई उत्तरप्रत्युत्तर होनेके बाद गयाक्षेत्रका अक्षय वट २३-१०-१९१२ को दोनो ओरसे शास्त्रार्थ केलिये स्थान नियतहुआ, और गयाके इनचार्ज मजिस्ट्रेटकलक्टर साहेब बाबू नगेंद्रनाथगुप्त महाशय सभापति नियतहुये, औरमैं उनकेद्वारा मध्यस्थ चुनागया शास्त्रार्थ आरंभहुआ. सभापतिने आज्ञादीकि पण्डित चंद्रशेखरभट्टजी अपने विज्ञापनानुसार श्री मध्वमतको श्रुतिस्मृतिविरुद्ध प्रामाणित करें. उसपर पंडित चंद्रशेखरभट्टजीने श्री मध्वाचार्यकृत ब्रह्म-सूत्रके मध्वभाष्यके दो तीन पत्रोंका पारायणपाठ किया. और कहाकि श्रीमध्वाचार्यजीने वेदोंकी शाखाकी संख्याओंको अपने मध्वभाष्यमें न्यूनाधिक लिखाहै, और उसके प्रमाणमे जो स्कंदपुराणका बचन लिखाहै सो उनका स्वकल्पित है. इसपर श्री स्वामीजीके पण्डित श्रीब्रह्मतर्क कृष्णा चार्यजीने उत्तर दियाकि वेदोंकी शाखाओंकी संख्या संबंधी उक्तवचन श्री मध्वाचार्यजीके २०० दोसौ वर्ष पूर्वहीमें श्री रामानुजाचार्यके शिष्य श्री व्यासाचार्यजीने अपने (श्रुतप्रकाशनामग्रंथमे) लिखाहै, अत एव उक्तवचन स्वकल्पित नहीहै. इसपर पंडित चंद्रशेखरभट्टजीने कहाकी ऐसा नहीं है. इसपर श्री रामानुजाचार्य मतानुयायी तिरुपति बालाजी देवस्थान कालिजके हेड् पंडित कपिस्थलं देशिकाचार्यजीने स्वीकाराकियाकि मेरे मतके श्रुतप्रकाश-नाम ग्रंथमे यथार्थ में ऐसा लिखाहै. ग्रंथभी मेरे पास यहिमौ जूदहै. मै देखलासक्ताहूं. इसपर पंडित चंद्रशेखरजीने कहा किं? श्रुतप्रकाशकार श्री मध्वाचार्यके बाद हुये है. इसपर पं. देशिकाचार्यने प्रमाणित कियाकी श्रुत-

प्रकाशकारभी श्री मध्वाचार्यके प्रथम हुऐहै. उसपर चंद्रशेखरभट्टजी निरुत्तरहुऐ. और थोडीदेरतक चुपरहे. इसपर सभापति इनचार्ज मजिस्टेट् साहेबने कहाकी अपनेभाष्यमें वेदोंकी संख्याओंको कम लिखनेसे श्री मध्वमत श्रुतिस्मृतीसे विरुद्ध नही कहा जा सक्ताहै. आपको दस मिनिट और अवकाश दीजाती है. आप आपने विज्ञापनानुसार श्री मध्वमतको श्रुतिस्मृतिके विरुद्धप्रामाणित कीजिये दशमिनिट अवसर पानेपरभी जब पंडित चन्द्रशेखरभट्टजी श्रुतिस्मृतिका कोइ प्रमाण नदेसके, अर्थात श्री मध्वमतको श्रुतिस्मृतिके विरुद्ध प्रामाणित नकरसके तब सभापति श्रीमान इनछार्ज कलक्टर मजिस्ट्रेट साहेबने कहाकी मुझे बहुत देरतक ठहरनेका समय नही है. और आपने श्री मध्वमतको श्रुतिस्मृतिसे विरुद्ध प्रमाणित नही किया. यदि अब भी आप प्रामाणित करसके तो पुलीसका बन्दोबस्त कर सक्ता हू. और मेरे बनाय मध्यस्थ पण्डित गंगाधरशास्त्री यहां हैं ही हैं. अब प्रामाणित कीजिये. इसपर पण्डित चन्द्रशेखरभट्टजी निरुत्तर होगये (चुपरहगये). और सभापतिके उठनेके समय पण्डित कन्हैया लाल मिश्रजीने उसने पूछाकि यह बात समाचार पत्रमें प्रकाशित कराई जायगी? पण्डित चन्द्रशेखर भट्टजीने श्री मध्वमतको श्रुतिस्मृतिविरुद्ध नही प्रामाणितकिया. सभापति महाशय हां कहकर उठकर चलेगये. सभा विसर्जन हुई. इतनीबाद होनेपरभी पण्डित गोवर्धन मिश्रजीने पण्डित चन्द्रशेखर भट्टजीके विजयकी नोटीस छपवाकर बटवाई हैं. सो सर्वथा मिथ्या है, और यह बुद्धिमानका काम नहीं है।

सभापति इनछार्ज डिस्ट्रिक्ट मजिस्ट्रेट बहदूर गया।

सभायां मध्यस्थः गंगाधरशास्त्री, हेडपण्डित ट्रेनिंगकालेजि, पाटना।

पण्डित कन्हैया लालमिश्रेण दृष्टोयमर्थः।

दृष्टोयमर्थो पाठकोपाद्ययेन वासुदेवशर्मणा पण्डितेन।

पण्डित मयूरशेखरशास्त्री ग्वालियर।

तिरुपति संस्कृत पाठशाला प्रधानोपाध्याय पण्डित देशिकाचार्यः।

सभायां दृष्टोयमर्थः रघुबरदयालु शर्मणा गया पाठशालाध्यापकेन।

दृष्टोयमर्थो मिश्रोपाह्वयेन पण्डित चक्रपाणिशर्मणा रुक्मिणीविद्याल- याऽध्यापकेन ।

---

गया सुलभप्रेसमे छपा । प्रकाशक पं. ब्रह्मतर्क कृष्णाचार्यः

(ஹிந்தி பத்திரிகையின் மொழிபெயர்ப்பு)

ஸ்ரீமன் மத்வமத ப்ரதிஷ்டாபஞசார்யரான ஸத்யத்யான தீர்த்தரவர்கள் கயாக்ஷேத்ரத்திலுள்ள உத்தராதி மடத்தில் மூன்று மாதங்களாய் வஸித்துக்கொண்டிருந்து தினந்தோரும் மத்வமதத்தை உபதேஶித்து வருகின்றனர். இப்படியிருக்க—

ஆகஸ்மிகமாக ஸ்ரீகயா தர்ம ஸபா மந்த்ரியும் வக்கீலுமான கோவர்த்தனமிஶ்ர பி. ஏ., பி. எல்., அவர்களும் கயாக்ஷேத்ரத்தி லிருக்கும் பண்டிதரான சந்த்ரஶேகரபட்டரவர்களும் 'மத்வமதம் ஶ்ருதி ஸ்ம்ருதி விருத்தமானதென்று ருஜூப்படுத்துவோ மென்று வெளிப்படுத்தினர். விண்ணப்பமூலமாய் உத்தர ப்ரத்யுத் தரங்கள் நடந்த பிறகு கயா க்ஷேத்திரத்தில் அக்ஷயவடத்தின் அடி யில் 23-10-1912 தேதியன்றே விஷயங்களில் ஶாஸ்த்ரவிசாரங்கள் நடப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. கயாவில் அப்பொழுது மேஜிஸ்ட்ரேட்டாயிருந்த ஸ்ரீநகேந்த்ரநாத குப்தா அவர்கள் அந்த ஸபாபதியாக நியமிக்கப்பட்டனர். ஶாஸ்த்ர விசாரத்தை தீர்மானிப்பதற்காக சில பண்டிதர்கள் மத்யஸ்தர்களாய் வரவேற் கப்பட்டனர். தம்மிட விஜ்ஞாபனனுஸாரம் ஸ்ரீமத்வ மதம் ஶ்ருதி ஸ்ம்ருதி விருத்தமானதென்று ப்ரமாணத்தைக் காட்டுங்களென்று சந்த்ரசேகரபட்டரை ஸபாபதி உத்திரவளித்தனர். அப்போது பண்டித சந்த்ரசேகரபட்டர் ஸ்ரீமத்வாசார்யரால் செய்யப் பட்ட ஸ்ரீப்ரஹ்மஸூத்ர பாஷ்யத்தின் இரண்டு மூன்று பக்கங் களை வாசித்து, ஸ்ரீமத்வாசார்யர் வேதசாகாக்களின் ஸங்க்யைகளை தம்மிட பாஷ்யத்தில் ஏற்றக்குரைவாக எழுதி அதற்கு ஆதார மாக ஸ்காந்தபுராண வசனங்களை எழுதியிருப்பது அவரால் கல்பிக்கப்பட்டதென்று சொன்னர். பிறகு பண்டித ஸ்ரீப்ரஹ்ம தர்க கிருஷ்ணசார்யர் மேற்கூறப்பட்ட வசனங்கள் ஸ்ரீமத்வா சார்யருக்கு 200 வருடங்களுக்கு முன்னமே ஸ்ரீராமானுஜாசார் யரின் சிஷ்டரான ஸ்ரீவ்யாஸாசார்யார் தம்மிட ஶ்ருதப்ரகாஶிகா

என்னும் நூலில் எழுதியிருப்பதினுல் அது ஸ்வகல்பிதமல்ல என்று பதிலளித்தனர். சந்த்ரசேகரபட்டர் அப்படிக்கில்லை என்று சொன்னுர். அப்பொழுது ஸ்ரீராமானுஜமதானுயாயியும் திருப்பதி பாலாஜி தேவஸ்தான கலாசாலை ப்ரதான பண்டிதரு மான கபிஸ்தலம் தேஶிகாசார்யர் 'ஶ்ருதப்ரகாசிகா' என்னும் க்ரந்தத்தில் நிஜமாக எழுதப்பட்டிருக்கிறதென்றும், அந்த நூல் தன்னிடத்தில் இருப்பதாயும் அதைக் காட்டுவதாயும் சொன்னுர். அதற்கு சந்த்ரசேகரபட்டர் ஶ்ருதப்ராகாஶிகாகாரர் ஸ்ரீமத்வா சார்யருக்கு பின்னுல் வந்தவரென்று சொன்னுர். ஶ்ருதப்ர காஶிகாகாரர் ஸ்ரீமத்வாசார்யருக்கு மின்னிருந்தவரே என்று தேசிகாசார்யர் ருஜுப்படுத்தினுர். அப்போது சந்த்ரசேகர பட்டர் நிருத்தரரானுர். அப்போது ஸபாபதி அவரைப் பார்த்து 'உம்மிட வார்த்தைகளினுல் ஸ்ரீமத்வமதம் ஶ்ருதி ஸ்ம்ருதி விருத்தமென்று சொல்லமுடியாததாயிற்று. உமக்கு பத்து நிமிஷம் அவகாஶம் கொடுத்திருக்கிறேன். உம்மிட விஜ்ஞா பனுனுஸாரமாக ஸ்ரீமத்வ மதம் ஶ்ருதி ஸ்ம்ருதி விருத்தமான தென்று ஆதாரங்களைக் காட்டும்' என்ருர். 10 நிமிஷங்களாயும் சந்த்ரசேகரபட்டர் பதிலளிக்காததினுல் "இனி நிற்பதற்கு நமக்கு நேரமில்லை. நீர் ருஜு செய்வதாயின் இங்கு ரக்ஷகபடர் களை (போலீஸார்களை) இருப்பதற்கு ஏற்பாடு செய்கிறேன். அவ் வளவேயல்லாமல் என்னுல் நியமிக்கப்படும் மத்யஸ்தரான பண்டித கங்காதர ஶாஸ்த்ரிகள் இருப்பார்" என்ருர். அதற்கும் சந்த்ரசேகரபட்டர் பதிலளிக்காமலிருந்தார். ஸபாபதி எழுந் திருக்கவே "பண்டித சந்த்ரசேகரபட்டர் ஸ்ரீமத்வ மதம் ஶ்ருதி ஸ்ம்ருதி விருத்தமானதென்று ப்ரமாணங்களைக் காட்டக்கூடாமற் போயினர் என்று வர்த்தமான பத்திரிகைகளில் வெளியிடு வோமா" என்று ஸ்ரீ கன்னையாலால்மிஶ்ரரவர்கள் ஸபாபதியைக் கேட்டார். அப்படியே செய்யலாமென்று சொல்லி ஸபாபதி ஸபையை விட்டுப்போயினர். உடனே ஸபை முடிந்தது. இவ்வளவு நடந்த பின்னும் பண்டித சந்த்ரசேகரபட்டர் வென்ருரென்று ஸ்ரீ கோவர்த்தனமிஶ்ரர் வெளியிட்டனர். அது வெறும் பொய், அப்படிச்செய்வது புத்திமான்களின் கார்யமுமல்ல.

ஸபாபதி.

இன்சார்ஜ் டிஸ்டிரிக்ட் மாஜிஸ்ட்ரேட் பஹதூர், கயா.

ஸபையிலுள்ள மத்யஸ்தர்:—பண்டித கங்காதர ஶாஸ்த்ரி, ப்ரதான பண்டிதர், ட்ரைனிங் காலேஜ், பாட்னு.

பண்டித கன்னையாலால் மிஶ்ர.

பண்டித வாஸுதேவ ஶர்மா.

பண்டித மயூரசேகர ஶாஸ்த்ரி, க்வாலியர்.

பண்டித தேசிகாசார்யர், திருப்பதி ஸம்ஸ்க்ருத பாடசாலா ப்ரதானோபாத்யாயர்.

ரகுவரதத்யாலு ஶர்மா, கயா பாடசாலாத்யாபகர்.

பண்டித சக்ரபாணி ஶர்மா, ருக்மிணி வித்யாலயாத்யாபகர்.

---

கயா ஸுலப அச்சுக்கூடத்தில் அச்சிடப்பட்டது. } ப்ரகாஶகர்-பண்டிதப்ரஹ்மதர்க்க கிருஷ்ணுசார்யர்.

---

## 2. வாரணுஸீ (காஸீ) விஜயம்.

(முதலாவது.)

ஶ்ரீஶ்ரீஸத்யத்யானதீர்த்தரவர்கள் கயா ஸபையை முடித்துக்கொண்டு, அங்கு வந்துள்ள எல்லா வித்வான்களுடனும் கூடிக்கொண்டு ஷைபரீதாவி வருஷம் ஆஶ்வீஜமாதத்தில் காசி க்ஷேத்திரத்திற்கு விஜயம் செய்தனர். அங்கும் ஸபை சேர்த்து த்வைதாத்வைத விசாரம் நடத்திவந்தனர். ஸபையின் அபிவிருத்திக்காக காசியிலிருக்கும் வ்யாகரண வேதாந்த தர்க்க பண்டிதர்களெல்லோரும் ஸபைக்கு வரவேணுமென்றும் ஸபைக்கு வரும் வித்வான்களுக்கு முதல்நாள் ஐந்து ரூபாய் வீதமும், மருநாள் முதல் ஸபை முடிகிறவரைக்கும் ப்ரதிதினமும் ஒவ்வொரு ரூபாய் வீதமும் கொடுப்பதுடன் ஸபை முடிந்ததும் வித்வான்களின் யோக்யதானுஸாரம் பஹுமானம் செய்யப்படுமென்றும், ப்ரதிதினமும் மாலை 4 மணி முதல் 8 மணிவரைக்கும் ஸபை நடக்குமென்றும் வெளியிட்டு வித்வான்களை வரவழைத்து ஸபையையும் நடத்தினர்.

அவ்வூரிலுள்ள ஜயதேவ மிஶ்ரர், ஸுப்ரஹ்மண்ய ஶாஸ்த்ரிகள், வாமாசரணபட்டாசார்யர் முதலிய பண்டிதர்களும் வந்திருந்தனர்.

அக்காசி பட்டணத்திலுள்ள பண்டிதர்களுக்கெல்லாம் த்வஜஸ்தானீயரான ஸ்ரீஶிவகுமாரமிஶ்ரரென்பவரை ஸபைக்கு வரவேண்டுமென்று சொல்லி அனுப்பியதற்கு அவர் 'நாம் வந்தால் நமஸ்கரிக்கமாட்டோம், ஆஸனத்திலேயே உட்காருவோம், ஸபை முடிந்ததும் சந்தன தாம்பூலாதிகளால் மரியாதை நடத்த வேண்டு' மென்று சொல்லி அனுப்பினர்.

அதற்கு ஸ்ரீஸ்ரீகள் பலாத்காரமாய் உம்மால் செய்வித்துக் கொள்ளப்படும் நமஸ்காரத்திற்கு மதிப்பில்லை. அப்படிப்பட்ட நமஸ்காரம் நமக்கு வேண்டியதில்லை என்றும், தங்களிஷ்டப்படி நடத்துவதாயும் சொல்லியனுப்பினர். பிறகு ஶாஸ்த்ரிகள் தம்மிட அநேகசீடர்களுடன் கூடிக்கொண்டு ஸபைக்கு வந்து தம்மிட ஆஸனத்தில் உட்கார்ந்தனர். பிறகு அவருக்கும் ஸ்ரீகளுக்கும் நடந்த வாக்யார்த்தத்தின் சில விஷயங்களை மாத்திரம் சுருக்கமாக இங்கு விவரிப்போம்.

**ஸ்ரீஸ்ரீகள்**—அத்வைதத்தில் ப்ரமாணமென்ன ?

**சிவகுமார ஶாஸ்த்ரிகள்**—ப்ரஹ்மத்தைவிட வேரான ஜகத்து மித்யை என்று ஶ்ருதி ப்ரமாணங்களினுல் ஸித்தமாகிறபடியால் ப்ரஹ்மமொன்றே ஸத்யமென்று ஸித்தமாகிறது.

**ஸ்ரீஸ்ரீகள்**—ஜகத்து மித்யை என்பதற்கு ப்ரமாணமென்ன?

**ஶாஸ்த்ரிகள்**—ஜகத்துக்கு காரணம் பொருந்தாததினுல் மித்யை.

**ஸ்ரீஸ்ரீகள்**—காரணமில்லை என்பதை பிறகு விசாரிப்போம். நீர் சொல்லியவாரே காரணமில்லை என்று வைத்துக்கொண்டபோதிலும் கார்யமான அல்லது பிறந்த ஜகத்து இல்லாமற் போகட்டும், நித்யமான ஜகத்து ஏன் இருக்கக்கூடாது ?

**ஶாஸ்த்ரிகள்**—நித்யமான ஜகத்து உண்டென்னும் விஷயத்தில் ப்ரமாணமில்லை. ஆகையால் மித்யை.

**ஸ்ரீஸ்ரீகள்**—அப்படி சொல்லின்—தமஸ்ஸு முதலிய நித்ய பதார்த்தங்கள் உண்டென்று சொல்லும் 'தம ஆஸீத்' 'தமஸா கூள்ஹம்' 'நைவேஹகிஞ்சன ஆஸீத்' 'ம்ருத்யுனைவேத மாவ்ருத மாஸீத்' 'ஆத்மைவேதமக்ர ஆஸீத்' 'நான்யத் கிஞ்சன மிஷத்' இது முதலிய ஶ்ருதிகள் கோபம் கொள்ளுமல்லவோ ?

**ஶாஸ்த்ரிகள்**—'ஏகமேவாத்விதியம் ப்ரஹ்ம' என்கிற ஶ்ருதி ப்ரஹ்மத்தைவிட வேறான பதார்த்தத்தை நிஷேதிக்கிறபடியால் இரண்டாவது வஸ்து இல்லை என்று சொல்லவேண்டும்.

**ஸ்ரீஸ்ரீகள்**— 'ஏகே முக்யான்ய கேவலா:' என்று கோசமுண்டு. 'ஏக: ஸுபர்ண:' என்கிற ருக்வேத மந்த்ரத்திலுள்ள 'ஏக:' என்கிற பதத்திற்கு 'அஸஹாய:' என்று வ்யாக்யானம் செய்திருக்கிறார். 'ஏகோ கோத்ரே' என்கிற இடத்தில் 'ஏக ஶப்தோயம் அன்யப்ரதான ஸஹாய ஸங்க்யா ப்ராதம்ய ஸமான வாசீ' என்று கையட வ்யாக்யான மிருக்கிறது. 'ஷ்ணாந்தா ஷட்' என்கிற ஸூத்ர பாஷ்யத்தில் 'ஏக ஶப்தோயம் பஹ்வர்த்த:' என்று வ்யாக்யானம் செய்யப்பட்டிருக்கிறது. 'ஏகோன்யார்த்தே ப்ரதானேச ப்ரதமே கேவலே ததா। ஸாதாரணே ஸமானேல்பே ஸங்க்யாயாம் சப்ரயுஜ்யதே'' என்று ப்ரௌடமனோரமாகாரர் எழுதியிருக்கிறார். 'ஆத்யந்தவதேகஸ்மின்' என்கிற ஸூத்ர வ்யாக்யானத்திலும், 'வ்யபதேஶவதேகஸ்மின்' என்கிற பரிபாஷா வ்யாக்யானத்திலும் ஏக ஶப்தம் அஸஹாய வாசகமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இக்காரணங்களினல் ஏகஶப்தத்திற்கு இதரப்ரமாணங்களுக்கனுகூலமாய் முக்யமென்றாகிலும், அஸஹாய மென்றாகிலும்,ப்ரபஞ்ச பின்ன மென்றாகிலும் அர்த்தம் செய்யலாம். சங்காசார்யரும் 'ஏக' ஶப்தத்திற்கு 'ஸ்வகார்யபதிதம் அன்யத் நாஸ்தி' ஸ்ருஷ்டி ஆரம்பத்தில் தன்னல் உண்டாக்கப்பட்ட பதார்த்தங்கள் ஒன்றும் இருக்கவில்லை என்று எழுதியிருக்கிறாரேயொழிய வேறு பதார்த்தமே இல்லை என்று எழுதவில்லை. ஆகையால் இந்த 'ஏகமேவாத்விதீயம்' என்னும் ஶ்ருதி இரண்டாவது வஸ்துவில்லை என்று * ஸாதிக்காதலலவா?

---

* விவில் ஸூட் 3-வது இஷ்யூ விசாரணை பாகம் 42-வது பக்கம் பார்க்கவும்

**ஶாஸ்த்ரிகள்**— ஜகத்துக்கு ஸத்யத்வத்தைப் போதிக்கும் ப்ரமாணங்கள் இல்லாததினுல் ஜகன்மித்யாத்வம் ஸித்தமாகிறது.

**ஸ்ரீஸ்ரீகள்**— 'ததேதத் ஸத்யம்' 'விஶ்வம் ஸத்யம்' 'யச்சிகேத ஸத்யமித்தன்ன மோகம்' இது முதலிய ஶ்ருதிகள் ஜகத்துக்கு ஸத்யத்வத்தையே சொல்லுகிறதினுல் ஶ்ருதிகளுக்கு பரஸ்பர விரோதம் வருகிறதல்லவா?

**ஶாஸ்த்ரிகள்**— 'விஶ்வம் ஸத்யம்' முதலிய ஶ்ருதிகள் வ்யாவஹாரிக ஸத்யத்வத்தைப் போதிக்கிறது, 'நேஹநாநாஸ்தி கிஞ்சன' முதலிய ஶ்ருதிகள் ஜகத்துக்கு பாரமார்த்திக ஸத்யத்வத்தை நிஷேதிப்பதினுல் ஶ்ருதி விரோதம் வருகிறதில்லை.

**ஸ்ரீஸ்ரீகள்**— பௌத்த மதத்தைக் கண்டிக்கும் 'ஸர்வதானுபபத்தேஶ்ச' என்கிற (2-2-32) ப்ரஹ்ம ஸூத்ரத்தின் சாங்கர பாஷ்யத்தையும், அதின் வ்யாக்யானமான பாமதி முதலிய க்ரந்தங்களையும் தாங்கள் பார்த்திருந்தால் ப்ரமாணங்கள் வ்யாவஹாரிக ஸத்யத்வத்தை போதிக்கின்றனவென்று தாங்கள் சொல்லியிருக்க மாட்டீர். ப்ரமாணங்கள் தம்தம் விஷயங்களை பாரமார்த்திகமென்று கிரஹிக்கின்றனவேயொழிய வ்யாவஹாரிகமென்று கிரஹிக்கிறதில்லை என்று சங்கராசார்யர் முதலிய அத்வைதிகளே சொல்லியிருப்பதினுல் 'விஶ்வம் ஸத்யம்' முதலிய ஶ்ருதிகள் ஜகத்துக்கு பாரமார்த்திக ஸத்யத்வத்தைப் போதிக்கின்றனவென்றே ஸித்தமாகிறது. தவிர "ந ச வ்யாவஹாரிக ப்ராமாண்யே ஸாவகாஶம்! ஏதத்பரிபாஷாயா: அத்வைதி பரிகல்பிதாயா: வஸ்துவ்யவஸ்தாபகத்வாஸம்பவாத்" என்று ப்ரஹ்மவித்யாபரணத்திலும், "பாத்யவிஷயே ச வ்யாவஹாரிகம் ப்ராமாண்யமிதி வ்யவஹாரஸ்ய அத்வைதபரிபாஷாமாத்ர ஸித்தத்வாத்" என்று கல்பதருபரிமளம் முதலிய நூல்களிலும் வ்யாவஹாரிக மென்கிற ஶப்தம் அத்வைதிகளால் கல்பிதமேயொழிய ஶாஸ்த்ரீயமல்ல என்கிற அபிப்ராயத்தைக் *காட்டியிருக்கிருர்கள். ஆகையால் 'விஶ்வம் ஸத்யம்' முதலிய ஶ்ருதிகள் வ்யாவஹாரிக ஸத்யத்வத்தைச் சொல்லுகிறதென்று சொல்லுவது வைதிகர்களென்று சொல்லிக்கொள்ளப்பட்டவர்களுக்கு எப்படி யுக்தமாகும்?

---

* ஸபா ஸாரஸங்க்ரஹம் வால்யூம் V, பக்கம் xxxi.

**ஶாஸ்த்ரிகள்**—நான் காரணங்கள் பொருந்துவதில்லை என்று முதலிலேயே சொல்லியிருப்பதினால் ஜகத்து ஸத்யமென்று ஒப்புக்கொள்வதற்கு முடியாது.

**ஸ்ரீஸ்ரீகள்**—*உபாதான காரணம், † நிமித்த காரணமென்னும் இருவகை காரணங்களில் ஜகத்துக்கு எந்த காரணம் இல்லை என்கிறீர்?

**ஶாஸ்த்ரிகள்**—ப்ரஹ்மம் நிஷ்க்ரியமென்று ஶ்ருதி சொல்லுவதினால் நிமித்த காரணமில்லை என்று ஸித்தமாகிறது. நிரவயவமான(பாகங்களில்லாத) ப்ரக்ருதி கார்யமான ஜகத்தாகமாட்டாது. ஆகையால் உபாதான காரணமும் ஸித்திக்கிறதில்லை.

**ஸ்ரீஸ்ரீகள்**—'பராஸ்ய ஶக்திர்விவதைவ ஶ்ரூயதே ஸ்வாபாவிகீ ஞான பலக்ரியாச' 'ததைக்ஷத' 'யதோவா இமானி பூதானி ஜாயந்தே' 'ஜன்மாத்யஸ்ய யதஃ' 'மத்தஃ ஸ்ம்ருதிர்ஜ்ஞானமபோஹனம் ச' இது முதலிய ஶ்ருதி ஸூத்ர ஸ்ம்ருதிகள் பரமாத்மாவுக்கு க்ரியையுண்டு, ஜகத்தைப் படைக்கிறானென்று சொல்லுகின்றன. 'மயாத்யக்ஷேண ப்ரக்ருதிஃ ஸூயதே ஸ சராசரம்' இது முதலிய ப்ரமாணங்களால் ப்ரக்ருதி ஜகத்துக்கு உபாதானகாரணமென்றும் ப்ரக்ருதி ஸாவயவமென்றும் ஸித்தமாகிறதல்லவா?

**ஶாஸ்த்ரிகள்**—ப்ரக்ருதி ஸாவயவமாயின் (விபாகங்களுடன் கூடினதாயின்) கடத்தைப்போல் அதுவும் அனித்யமாக வேண்டியதாகும். அதற்கு மற்றொரு நித்ய காரணம் வேண்டும். இப்படியே அனவஸ்தா தோஷ முண்டாகிறது. தவிர—பரமாணுவும் மேருபர்வதமும் அநேகாவயவங்களுடன் கூடினதாகையால் பரிமாணத்திலும் ஒன்றேயாக வேண்டிவருமாகையால் ஜகத்துக்கு ப்ரக்ருதி உபாதான காரணமாகமாட்டாது.

**ஸ்ரீஸ்ரீகள்**—ஒரு வஸ்து ஸாவயவமான மாத்ரத்தினால் அது அனித்யமாகவேணுமென்கிற நியமமில்லை. நித்யமான ஆகாயம் ஸாவயவமே. அதைப்போலவே ஸாவயவமான வஸ்து நித்யமுமாக்லாம். அநேகாவயவாரப்தரூப ஸாமான்ய தர்மமிருந்த

* குடத்திற்கு மண்ணைப்போல்.

† குடத்திற்கு குயவனைப்போல்.

மாத்ரத்தினல் பரமாணுவுக்கும் மேருபர்வதத்திற்கும் ஸாம்யம் சொல்லவேண்டியது மில்லை. எப்படி கல்பங்களும் யுகங்களும் வர்ஷ அயன ருது மாஸ பக்ஷ திவஸங்களும் நாழிகை க்ஷணலவாதிகளும் அநந்தமோ, மற்றும் எப்படி க்ஷணாநந்த்யத்தைவிட தினநந்த்யம் அதிகமோ அதைவிட பக்ஷானந்த்யம் அதிகமோ இப்படியே ஒன்றைவிட ஒன்று அதிகமோ அப்படியே பரமாண்வவயவங்களின் ஆனந்த்யத்தைவிட மேர்வவயவங்களின் ஆனந்த்யம் அதிகமாயிருக்கலாம். ஆகையால் ஜகத்துக்கு இருவகை காரணங்களும் பொருந்துகின்றன. நித்யமான ப்ரக்ருதிமுதலிய அநேக ஜகத்து உண்டு. ப்ரஹ்மத்தைவிட வேரான வஸ்து இல்லை என்று சொல்லும் ப்ரமாணமில்லை. 'விஶ்வம் ஸத்யம்' முதலிய ஶ்ருதி ஸித்தமான ஜகத்து மித்யையாயின் 'ஸத்யம்ஞானமநந்தம் ப்ரஹ்ம' இது முதலிய ஶ்ருதி ஸித்தமான ப்ரஹ்மமும் மித்யையாக வேண்டியதாகும். ஆகையால் எந்த நியாயத்தினல் ப்ரஹ்மத்திற்கு ஸத்யத்வத்தை ஒத்துக்கொள்ளுகிறீர்களோ அதே நியாயத்தினல் ஜகத்துக்கும் ஸத்யத்வத்தை ஒப்புக்கொள்ளவேண்டியதேயாகும்.

**ஶாஸ்திரிகள்**—ஸந்த்யாகாலமாய் விட்டதல்லவா?

**ஸ்ரீஸ்ரீகள்**—மேல்விஷயம் நாளேயதினம் நடக்கலாம்.

**ஶாஸ்திரிகள்**—மேல் நடக்கவேண்டிய விஷயமே ஒன்று மில்லை. நம் ஸித்தாந்தம் இவ்வளவுதான் என்று சொல்லி வெகு ஆச்சர்யத்துடன் நமஸ்கரித்தார்.

**ஸ்ரீஸ்ரீகள்**—நமஸ்காரம் வேண்டியதில்லையே.

**ஶாஸ்திரிகள்**—மடாதிபதிகளென்ருல் ஸாமான்யமான எல்லா மடாதிபதிகளைப்போலென்று நான் நினைத்தேன், அது பிசகு. இத்தகைய மகான்களுக்கு வணங்காத சரீரம் என்னத்திற்கு? என்று சொல்லி உட்கார்ந்தனர். (ஸபாஸாரஸங்க்ரஹம் வால்யூம் V, பக்கம் xxvi முதல் xxxiv வரையில்)

பிறகு ஸபைக்கு சந்தனதாம்பூல தக்ஷிணாதிகளினல் மரியாதைநடந்தது. ஸபை முடிந்தது. பிறகு ஶாஸ்த்ரிகளும் மிகவும் ஆச்சர்யமும் ஸந்தோஷமுமடைந்து சென்றனர். ஆகையால் அங்கும் த்வைத மதமே விஜயமடைந்ததென்கிற விஷயத்தைத்

தெரிவிக்கும் இத்துந்துபியின் முழக்கம் அடியில்கண்ட ஸ்லோகங்களால் உலகமெங்கும் பரவி வருகிறது.

* * * *

सत्यध्यानसुतीर्थ तावकमिदं चित्रं चरित्रं विभो
काव्यालाप विवेचिनोपि कवयश्शक्ता न वक्तुं धिया ।
तावद्ब्रह्मभवप्रपञ्चविषये सञ्चिन्तयन्तो मुदा
ह्यौपम्यानवबोधहीनमतिताविर्भावभाजो नृणाम् ॥ १० ॥
वादे च साधं नहि तेन कोपि
शक्तो बुधस्स्यादिति मे मनीषा ।
विस्मेरतामाप यतस्स धीमान्
कुमारमिश्रश्शिवशब्दपूर्वः ॥ ११ ॥

| | |
|---|---|
| माघ शुक्ल वसन्त पञ्चमी सं. १९८९. | काशीस्थ राजकीयविद्यालये धर्मशास्त्रप्रधानाध्यापकस्य महादेवशास्त्रिणः, |

आरूढस्सहसा यतीन्द्रपदवीं गत्वा च वाराणसीं
तत्रत्यान् कुमतप्रचारनिरतानद्वैति दिग्दन्तिनः ।
प्रौढार्थैर्वचनैस्सुयुक्ति खचितैस्संभीषयन् मोदयन्
सत्यध्यानसुकेसरी विजयते पादाश्रितः श्रीपतेः ॥

---

## 3. ரேவா விஜயம்.

ஸ்ரீஸ்ரீகள் ஷை காசிஸபையை முடித்துக்கொண்டு ஸ்ரீப்ரயாக க்ஷேத்ர மார்க்கமாய் சித்ரகூடத்திற்கு அருகிலுள்ள ரேவா (ரீமா) என்னும் இராஜ்யத்திற்கு விஜயம் செய்தனர். அங்கு அந்த இராஜ்யத்தின் மகாராஜரிட முன்னிலையில் ஸபை சேர்த்து, அத்வைத மதம் வேத விருத்தமானதென்றும், த்வைத மதமே வேத ஸம்மதமான மதமென்றும், த்வைதானுஷ்டானத்தினுலேயே நிஜமான மோக்ஷம் கிடைக்குமென்றும் உபதேசிக்கவே, மகாராஜா அவர்கள் விசாரபூர்வமாக ஷை உபதேசங்களைக்கேட்டு வெகு ஆனந்தமடைந்து இனி தம்மிட தேசத்தில் அத்வைதமதமே இல்லாமற் செய்வதாகச்சொல்லி ஸ்ரீஸ்ரீகளுக்கு யானை முதலியவைகளைக் கொடுத்து, வெகு உபசாரத்துடன் ஸ்ரீராம பூஜையை நடப்பித்திருக்கிறுரென்றும் இத்துந்துபி முழங்குகிறது.

## 4. சோழ விஜயம்.

### முதலாவது (ஆகாயலிங்க க்ஷேத்ரம்—சிதம்பரம்.)

பிறகு ஸ்ரீஸ்ரீகள் ஸ்ரீஸேது (ராமேஶ்வர) யாத்ரைக்காக நாகபூர், ஹைதராபாத், கெத்வால், திருப்பதி, மதராஸ், ஆரணி முதலிய ஸம்ஸ்தான க்ஷேத்திரங்களுக்கு விஜயம் செய்துகொண்டே, ஆங்காங்கு 'த்வைதமதமே வைதிகமென்றும், அத்வைதமதம் வேதவிருத்தமானதால் அனுஷ்டானத்திற்கு அர்ஹமானதல்ல' வென்றும் அநேக ஶ்ருதி ஸூத்ர கீதா வாக்யங்களால் ஸித்தப்படுத்தி, தம் சீடர்களின் ஸம்ஶய விபரீத ஞானங்களைப் போக்கிக்கொண்டே, சகே 1836 ஆனந்த வருடத்தில் ஆகாஶலிங்க க்ஷேத்ரமான சிதம்பரத்திற்கு விஜயம் செய்து, அங்கிருந்த அப்பைய தீக்ஷிதரின் வம்ஶஸ்தரும் அத்வைதத்தில் மஹாபண்டிதருமான ஹரிஹர ஶாஸ்த்ரி, மஹாமஹோபாத்யாய தண்டபாணி தீக்ஷிதர் இவர்களுடன் மூன்றுநாள்வாதம்செய்து, அத்வைத மதம் வேத விருத்தமானதென்றும் த்வைதமதமே வேத ஸம்மதமானது (வைதிகமானது) என்றும் ஸித்தப்படுத்தினர். அதற்கு ஸ்ரீ ஹரிஹர ஶாஸ்த்ரிகள் 'நமக்கு பதில் சொல்ல வராததினுல் நம்மிட மதி (புத்தி) தௌர்பல்யம் என்று சொல்லவேணுமேயொழிய, மதத்தில் தோஷம் சொல்லக்கூடாது' என்றனர். அதற்கு ஸ்ரீஸ்ரீகள் மகாபண்டிதரான தமக்கே பதில் சொல்ல வராதது தம்மிட மதி தௌர்பல்யமல்ல, அம்மதத்தின் தௌர்பல்யமே என்று பதில் கூறி விசேஷமாய் ஸன்மானம் செய்தனுப்பினரென்று துந்துபியின் இம்முழக்கத்தினுல் வெளியாகிறது. (ஸபாஸாரஸங்க்ரஹம் V-வது வால்யூம் 51-வதுபக்கம்.)

---

## 5. சோழ விஜயம்.

### இரண்டாவது (கும்பகோணம்)

பிறகு ஸ்ரீஸ்ரீகள் சிதம்பரத்திலிருந்து புறப்பட்டு, திருக்கோயிலூர் மார்க்கமாய் கும்பகோணத்திற்கு விஜயம் செய்தனர். அங்கு அச்சமயத்தில் வஸித்திருந்த சதுஶ்ஶாஸ்த்ர கல்பதரு

ஶேஷாசார்யரென்கிற விஶிஷ்டாத்வைத பண்டிதருக்கு அவ்வூரிலிருந்த யாரோ ஒருவர் 'தாங்கள் இப்போது இவ்வூருக்கு வந்திருக்கும் ஸ்ரீஸ்ரீகளுடன் வாதம் செய்து அவரை வென்றால் உமக்கு 'சதுஶ்ஶாஸ்திர கல்பதரு' என்கிறபெயர் ஸ்திரமாகும். அப்படி செய்யாவிடின் மேற்படி பெயர் 'சதுஶ்ஶாஸ்த்ர தருகல்பர்' என்று மாறிவிடும் என்றால்—'நாலு ஶாஸ்திரங்களிலும் கேட்டதைச் சொல்பவ'ரென்னும்பெயர் 'நாலுஶாஸ்திரங்களிலும் மரத்திற்குச் சமானர்' என்று மாறிவிடும், என்று ஓர் கடிதம் எழுதினர். ஷை கடிதத்தை ஸ்ரீமான் ஶேஷாசார்யரவர்கள் ஸ்ரீகளிடத்திற்கனுப்பி, 'இது ஸ்ரீகளால் எழுதப்பட்டது தானா' என்று கேட்டதற்கு, ஸ்ரீஸ்ரீகள் 'இக்கடிதம் நமதல்ல, ஆயினும் அக்கடிதத்தின் அபிப்ராயம் நமக்குண்டு' என்று தம்மிட சீடரான ஸ்ரீம-ஸம். கௌலகீ எதுநாதாசாரின் முகாந்திரமாய் சொல்லியனுப்பினர். அதற்கு ஆசார்யரவர்கள்—'இவ்வாதங்களால் ப்ரயோஜனமென்ன? ஸ்ரீஸ்ரீகள் ஆநந்த தாரதம்யமுண்டென்று ஸ்தாபித்த மாத்திரத்தினால் நான் ஒத்துக்கொள்ளுவதில்லை. நான் தாரதம்யமில்லை என்று ஸ்தாபிப்பதினால் ஸ்ரீஸ்ரீகள் ஒப்புக்கொள்ளுவதில்லை. ஆகையால் வாதமேன்?' என்று சொன்னார். அதற்கு ஸ்ரீஸ்வாமிகளின் சீடர் 'தாங்கள் தாரதம்யமில்லை என்று ஶ்ருதி ஸ்ம்ருதிகளால் ஸித்தப்படுத்தின் அதை நம் ஸ்ரீஸ்ரீகள் ஒத்துக்கொள்ளத் தயாராயிருக்கிறார்' என்று சொன்னார். அதற்கு ஆசார்யரவர்கள் 'நான் மடத்திற்கு வருவது ஸம்ப்ரதாயமில்லை, மன்னிக்கவேண்டும்'. என்று சொல்லியனுப்பிவிட்டார் என்பதையும் இத்துந்துபி தன் முழக்கத்தினால் அறிவிக்கிறது. பிறகு ஸ்ரீஸ்ரீகள் அங்கு சாதுர்மாஸ்யத்தை முடித்துக்கொண்டு தஞ்ஜாவூர் மார்க்கமாய் ஆனந்தவருஷம் புஷ்ய மாதத்தில் ஸ்ரீராமேஶ்வரத்திற்கு விஜயம் செய்து, யாத்ராகார்யங்களை முடித்துக்கொண்டு, அங்கிருந்து கிரமமாக மதுரைமார்க்கமாய் மாக சுத்த அஷ்டமி பெங்களூருக்கு விஜயம் செய்து அங்குள்ள சீடர்களுக்கு தத்வோபதேஶம் செய்து வந்தனர்.

## 6. கர்ஞடக விஜயம்.

### முதலாவது (மைஸூர்)

அங்கிருந்து புறப்பட்டு, சகே 1837 இராக்ஷஸ வருஷத்தில் மைஸூருக்கு விஜயம் செய்து, அங்கு மஹாதேவ ஶாஸ்திரி, டாக்டர் வெங்கோபராவ், முதலியவர்களின் முன்னிலையில் ஸபை நடத்தினர். அச்சபையில் நடந்த விசாரத்தின் சுருக்கம்—

**வெங்கோபராயர்**— ஸ்வாமி! ப்ரௌடாவிவாகம் ஏன் செய்யக்கூடாது?

**ஸ்ரீஸ்ரீகள்**— ப்ரமாணமில்லாததினல் செய்யக்கூடாது.

**வே.**— 'ப்ரதானம் ப்ராக்ருதோ:' என்கிற கௌதமஸூத்ர மிருக்கிறதே.

**ஸ்ரீஸ்ரீகள்:**—அதற்கர்த்த மென்ன?

**வே:**— 'ப்ராக்ருதோ:' பூர்வத்தில் ருதுவாயிருக்கப்பட்டவளை கன்யாதானம் செய்யவேண்டுமென்று அர்த்தம்,

**ஸ்ரீ:**—'ருதோ: ப்ராக்' ருது ஆகாததிற்கு முன் தானம் செய்யவேண்டுமென்று அர்த்தம் செய்யலாமல்லவா?

**வே:**—செய்யலாம்.

**ஸ்ரீ:**—இதர அனேக ப்ரமாணங்களுக்கு அனுகூலமாய் இந்த ப்ரமாணத்திற்கும் அர்த்தமாய்க்கொண்டிருப்பதால், இதுவரைக்கும் பெரியோர்களால் ருது ஆவதற்கு முன்னமே விவாஹம் நடத்திவருகிறர்கள். அதற்கு விருத்தமாய் நம் இஷ்டப்படிக்கு அர்த்தம் செய்வதாயின் 'ஜக்தத்ருண துக்ததோஹா' தின்ற புல்லும், கறந்த பாலுமுள்ள என்று காடகத்தில் அர்த்தம் செய்துள்ளவாறு 'ப்ராக்ருதோ:' என்கிற பதத்திற்கு முன் ருதுவாயிருக்கப்பட்டவளை என்றல் விவாகத்திற்குப் பிறகு ருது ஆகாதவளை தானம் செய்யவேணுமென்று அர்த்தம் செய்ய வேண்டியதாகும். அதினல் இவ்வாக்யம் ப்ரௌடா விவாகத்திற்கு ஆதாரமாகாமல் வ்ருத்தா விவாகத்திற்கே ஆதாரமாகிற படியால் ஆதாரமின்றி நம்மனதிற்கு வந்தபடி அர்த்தம் செய்யக்

கூடாது. இப்படி அநேக ஸயுக்திகமான ப்ரமாணங்களால் ஷீ ப்ரௌடா விவாஹத்தைக் கண்டித்தனர்.

பிறகு அங்கிருந்து புரப்பட்டு, கதகு, ஸூர்பாலி, சிகோடி முதலிய தேசத்திலுள்ள சீடர்களை உபதேசாதிகளால் புனிதராக்கிக்கொண்டே சகே 1838 நள வருஷத்தில் கோகாவி என்கிற கிராமத்திற்கு விஜயம் செய்தனர்.

---

## 7. மஹாராஷ்ட்ர விஜயம்.

(சிகோடி.)

அங்கிருந்த ப்ரமுகரான வக்கீல் முதலியவர்கள் ஸ்ரீஸ்ரீகளைக் குறித்து ரா. திலகரவர்களால் எழுதப்பட்ட கீதாரஹஸ்யத்தில் மத்வமதத்தின்பேரில் செய்திருக்கும் தூஷணங்கள் ஸ்ரீஸ்ரீகளால் பார்வையிடப்பட்டதா? என்று கேழ்க்கவே, ஸ்ரீஸ்ரீகள் ஷீ தூஷணங்கள் பார்வையிடப்பட்டு, கீதையில் த்வைதமே சொல்லப்படுகின்றதென்று ஸித்தப்படுத்த நாம் தயாராயிருக்கிறோமென்று பாகல்கோட்டையிலிருந்து ரா. திலக் அவர்களுக்கு தெரிவித்திருக்கிறோமென்று சொன்னார். அதற்கு—ஸமீபத்தில் சிகோடியில் நடக்கும் ஸபைக்கு ரா. டிலக் வருகிறார். அச்சமயத்தில் சிகோடியிலோ அல்லது சமீபத்திலெங்காவது ஸபைகூட்டி இதின் விசாரம் நடத்தவேணுமென்று ரா. அண்ணாராவ் தேவளே முதலியவர்கள் ஸ்ரீகளிடம் விண்ணப்பம் செய்துகொண்டு ரா. டிலக்அவர்களுக்கும் கடிதம் எழுதினார்கள். அதற்கு ரா. டிலக் அவர்களால் வந்த பதில் இங்க்லீஷ் கடிதத்தின் மொழி பெயர்ப்பு:—

பூனா ஸிடி.
3-ஏப்ரெல் 1917.

பிரியமுள்ள ஐயா!

உம்மிடவும் இதர வக்கீல்களிடவும் கடிதம் சேர்ந்தது. சிகோடியில் ஸ்ரீஸ்ரீஸ்வாமிகளை சந்திப்பதற்கு எனக்கு யாதொரு தடையுமில்லை. ஆனால் தாங்கள் அறிவித்தபடிக்கு வாதத்தில் த்வைதத்தையாகிலும் அத்வைதத்தையாகிலும் ஸித்தப்படுத்திக்

கொடுப்பதற்கு எனக்கு அபிப்ராயமில்லை. இது பழையவாத மாயிருப்பதும் தவிர அதிகமாய் விசாரிக்கப்பட்டுமிருக்கிறது. ஆகையால் இதர மார்க்கங்களை விட நான் சொல்லுவது மிகவும் யுக்தியுடன் கூடியதாயும் கீதைக்கு அனுஸரித்துமிருக்கிறதென்று மாத்திரம் நான் காட்டுவேன். இதைவிட அதிகமாய் யாதொன்றையும் செய்ய முடியுமென்று எனக்குத் தோன்றவில்லை. தவிர என்னிட புஸ்தகத்தில் மத்வ மதத்தின் அபிப்ராயங்களை நான் வித்யாஸமாக எழுதவில்லை என்பதையும் காட்டக்கடவேன். இதற்கு தங்களுக்கும் தங்களிட நண்பர்களுக்கும் ஸம்மதமிருக்குமாயின் உங்களிட ஸ்வாமிகளை சிகோடியில் சந்திக்க எனக்கு தடை இல்லை.

தங்கள்

B. G. திலக்.

இவ்விதமாக ரா. திலகரிடமிருந்து வந்தபதிலை ஸ்ரீஸ்ரீகள் அஹமதாபுரத்தில் அறிந்து, ஷை 1917 வருஷம் ஏப்ரல் 12உ சிகோடிக்கு விஜயம் செய்தனர். மறுநாள் ஸாயங்காலம் ஸபை சேர்க்கப்பட்டது. ரா. திலகரும் சபைக்கு வந்தார். பிறகு வெகு விஷயங்களின் விசாரம் நடந்தது. அவைகளெல்லாம் மராடியில் புத்தக ரூபமாக வெளியிடப்பட்டிருக்கிறது. ஆயினும் முக்யமான ஒன்றிரண்டைச் சுருக்கமாக இங்கு கூறப்படுகிறது.

## முதல் நாள்.

**ஸ்ரீஸ்ரீகள்**—கீதா ரஹஸ்யத்தின் 232-33 பக்கங்களில் "உபனிஷத்துகளில் சில இடங்களில் த்வைதமும் சில இடங்களில் வெரும் அத்வைதமும் சொல்லிக்கொண்டிருப்பதினால் இரண்டு வாக்யங்களுக்கும் ஏகவாக்யதை செய்யவெண்டியது ஆவஶ்யகமிருக்கிறது. ஆனால் அத்வைத மதம் முக்யமென்று தெரிந்து, நிர்குணப்ரஹ்மம் ஸகுணமாகும்போது மாத்திரம் அவ்வளவுக்கே மாயிகமான த்வைதத்தின் ஸ்திதிப்ராப்தமானர்போல் காணுகிறதென்று அறிவதினால் எல்லா வாக்யங்களுக்கும் எப்படி வ்யவஸ்தை பொருந்துமோ, அப்படி வ்யவஸ்தை த்வைத மதத்தை ப்ரதானமென்று தெரிந்தாலாகிறதில்லை. உதாகரணத்

திற்காக—'தத்வமஸி' என்கிற வாக்யத்தில் பதங்களின் அன்வயம் த்வைத மதத்தின் படிக்கு எப்போதும் சரியாவதில்லை. த்வைதிகள் அர்த்தம் செய்வதிலும் பாதகங்கள் இல்லை என்று இல்லை. ஆனால் தத்வம்—தஸ்யத்வம் என்றால் உன்னைவிட வேறானவன், நீ அவனுக்குச் சேர்ந்தவன், அவன் நீ அல்ல இவ்விதமாக எப்படியாவது இம்மகா வாக்யத்திற்கு அர்த்தம் சொல்லி தாங்கள் ஸமாதானப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் யாருக்கு ஸம்ஸ்கிருதத்தில் கொஞ்சம் ஞானமிருந்து யாரிட புத்தி ஆக்ரஹத்தினால் அடிப்படவில்லையோ அவர்களுக்கு இது பலாத்காரமான அர்த்தம் நிஜமானதல்ல என்று உடனே தெரியவரும்" என்கிற விஷயத்தை படித்துக்காட்டி, தாங்கள் இப்படி எழுதியிருப்பது ஸரியல்ல. ஏனெனின்—"தத்வமஸி" என்கிற வாக்யம் த்வைத மதத்திற்கு எப்படி பொருந்துகிறதோ அப்படி அத்வைத மதத்திற்கு பொருந்துகிறதில்லை. அத்வைத மதத்திலேயே பலாத்காரமாக இவ்வாக்யத்திற்கு அர்த்தம் செய்திருக்கிறார்கள். எப்படி எனின்:—

(1) "ஸன்மூலா: ஸோம்யேமா: ஸர்வா: ப்ரஜா: ஸதாயதனா: ஸத்ப்ரதிஷ்டா: ............ஸ ஆத்மாதத்வமஸி ஶ்வேதகேதோ இதி" எல்லா ப்ரஜைகளும் ஸன்னாமக பரமாத்மாவை காரணமாயுள்ளவர்கள், ஸன்னாமக பரமாத்மாவை ஆஶ்ரயமாயுள்ளவர்கள், ஸன்னாமக பரமாத்மாவை ஸ்தாபகனாயுடையவர்கள் என்ற வாக்யங்களால் ஸர்வப்ரஜைகளுக்கும் பரமாத்மாவுக்கும் கார்ய காரண பாவம், ஆஶ்ரயாஶ்ரயிபாவம், ஸ்தாப்யஸ்தாபக பாவம் இவைகளால் 'ஸ ஆத்மா தத்வமஸி' என்னும் வாக்யத்தின் பூர்வ வாக்யத்தில் பேதமே ஸ்பஷ்டமாய் சொல்லப்பட்டிருக்கிறது.

(2) தவிர 'தத்வமஸி' வாக்யத்தினால் ஶ்வேதகேதுவை நீ பரமாத்மா என்று சொன்னதினால் ராமகிருஷ்ணாதிகளைப்போல் ஶ்வேதகேதுவும் பரமாத்மாவாக இருக்கக்கூடும். அவ்வளவு மாத்ரத்தினால் எல்லா ஜீவர்களும் பரமாத்மாவுடன் அபின்னர்களென்று எப்படி ஸித்தமாகும்?

(3) மற்றும் ஆத்மா + அதத்வமஸி என்று பதங்களைப் பிரித்து மேற்சொன்ன 'ஸன்மூலா:' முதலிய வாக்யங்களுக்கு

அனுகூலமாய் நீ அவனைவிட வேறானவன், நீ அவனல்ல என்று அர்த்தம் செய்வது உசிதமாகும்.

(4) மற்றும் வேதத்தில் 'ஸுபாம் ஸுலுக் பூர்வஸவர்ணச் சேயாடாட்யாஜால:' என்கிற 7-1-39 வது பாணினி ஸூத்ரத்தை யனுசரித்து, தத்பதத்திற்கு மேலுள்ள விபக்தியின் லோபமுண் டாயிருக்கிற தென்றறியவேண்டும். அல்லது 'தத்' என்கிற பதம் விபக்தி ப்ரதிரூபக அவ்யயமென்று வைத்துக்கொண்டபோதிலும் 'தத்' பதத்திற்கு 'தஸ்மின்' அவனிடத்தில் 'த்வமஸி' நீ இருக்கிறாய் என்று மேற்சொன்ன 'ஸதாயதனா:' என்கிற வாக்யத்திற்கு அனுகுணமாய் முக்யார்த்தமாகிறது. அல்லது 'தஸ்மாத்' அவனால் நீ பிறந்திருக்கிறாய் என்று மேற்சொன்ன 'ஸன்மூலா:' என்கிற வாக்யத்திற்கு அனுகுணமாய் முக்யார்த்தமேயாகிறது.

**பராஞ்ஜபே:**—ஸ்வாமி! 'தத்' பதத்திற்கு தஸ்மாத் என்று செய்துகொண்டபோதிலும் 'பிறந்து' என்கிற பதம் இல்லையல்லவா?

**ஸ்ரீஸ்ரீகள்:**—'போகிறேன்' என்கிற இடத்தில் 'நான்' என்கிற பதம் எப்படி ஸஹஜமாய் தோன்றுகிறதோ, அப்படியே 'தஸ்மாத் அஸி' என்ற இடத்தில் 'ஸன்மூலா:' என்ற வாக்யத்தை யனுசரித்து பிறந்து என்கிற பதம் தானாய் தோன்றுகிறது. அல்லது 'தஸ்மாத் அஸி' என்றால் 'ஸத்ப்ரதிஷ்டா:' என்கிற வாக்யத்தை யனுசரித்து அவனால் இருக்கிறாய் என்று அர்த்தம் செய்யின் 'பிறந்து' என்கிற பதமே வேண்டியதில்லை.

மேற் சொல்லிய எல்லா அர்த்தங்களும் த்வைத மதத்திற்கே போஷகங்களாயும் முக்யமாயும் இருக்கின்றன.

பூர்வ ஸந்தர்ப்பத்தை யனுசரித்து இவ்வாக்கியம் அத்வைத மதத்தை முக்ய வ்ருத்தியினால் ப்ரதிபாதிக்கிறதில்லை. அத்வைத மதத்தில்—'தத்வமஸி' வாக்யத்திலுள்ள 'தத்' என்கிற பதம் ஸர்வநாமமாயிருப்பதினால் பின்னால் சொல்லிக்கொள்ளப்பட்டிருக்கும் ஜகத்கர்த்ருத்வாதி குணங்களுடன் கூடிய ப்ரஹ்ம சைதன்யத்தையே க்ரஹிக்கும். 'த்வம்' பதத்தினால் அஸர்வஜ்ஞத்வாதி குணங்களுடன்கூடிய அந்த:கரணாவச்சின்ன சைதன்ய

ரூப ஶ்வேதகேது என்னும் ஜீவனின் அறிவு ஆகிறது. ஸர்வஜ்ஞத்வ அல்பஜ்ஞத்வ ரூப விருத்த தர்மங்களுடன் கூடிய ப்ரஹ்மத்திற்கும் ஜீவனுக்கும் அபேதம் பொருந்தாததினுல் ஜஹதஜஹல்லக்ஷணையினுல் (ஸர்வஜ்ஞத்வால்பஜ்ஞத்வ குணங்களை விட்டு) முக்யார்த்தத்தை விட்டு, அமுக்யார்த்தத்தினுல் ஐக்யத்தைச் சொல்லவேண்டும்.

அத்வைதிகளுக்கு ஶ்ருதிக்கு முக்யார்த்தத்தை விட்டு வேறு அர்த்தத்தைச் சொல்லுவதென்று ஏற்பட்ட பிறகு இதர ப்ரமாணங்களை அனுசரித்து 'தத்வமஸி' வாக்யத்திற்கு தத் ஸத்ருஶன், ததீனன் இது முதலிய அமுக்யார்த்தத்தை ஏன் செய்யக்கூடாது? அத்வைதபரமாகவே செய்யவேணும், த்வைதபரமாக செய்யக்கூடாதென்று ராஜாஜ்ஞை ஒன்றும் இல்லையே.

மேற்சொல்லிய விசாரங்களினுல் இம்மஹா வாக்யத்தின் அர்த்தம் த்வைத மதத்திற்கே * பொருந்திக்கொண்டிருக்க தாங்கள் 'இது பலாத்காரமான அர்த்தம், சரியானதல்ல, கொஞ்சம் ஸம்ஸ்கிருத ஞானமுள்ளவருக்கும் தெரியவரும்' என்று எழுதியிருப்பது ஸாஹஸம் என்று நமக்குத் தோன்றுகிறது. மேற்கூறியவற்றில் எது ஸரியான அர்த்தம், எது க்லிஷ்டார்த்தம் என்பதை வித்வான்கள் அறிவார்கள்.

இவ்விதமாக ஏழு விஷயங்களின் விசாரம் நடந்து அன்று ஸபை முடிக்கப்பட்டது.

மறுநாள் சபையில்:—

**திலக்:**—ஸ்ரீமத்வாசார்யர் 'யோகாரூடஸ்ய தஸ்யைவ ஶம: காரணமுச்யதே' (கீதா 6-3) என்கிற ஶ்லோக வியாக்யானத்தில்— 'கார்யம் நான்யத் தஸ்ய தேன துஷ்டோபவதி கேஶவ:' என்று எழுதியிருப்பதால் ஞானி கர்மம் செய்தாலும் செய்யாவிட்டாலும் ஒன்றே, அதில் விசேஷம் ஒன்றுமில்லை என்று தங்கள் ஆசார்யரின் அபிப்ராயமென்று காணுகிறதல்லவா?

**ஸ்ரீஸ்ரீகள்:**—'கார்யம் ந அன்யத்' வேறு கார்யம் இல்லை என்று எழுதியிருக்கிருரேயொழிய 'கர்ம கார்யம் ந' செய்ய

* விவில் ஸூட் 3-வது இஷ்யூ விசாரணை பாகம் 8—63 பக்கங்கள்.

வேண்டிய கர்மமே இல்லை என்று எழுதவில்லை. அங்கு—"நாநா ஜனஸ்ய ஶுஶ்ரூஷா கர்மாக்யாகரவன்மிதே:| யோகார்த்தினு து ஸா கார்யா யோகஸ்தேன ஹரௌ ஸ்திதி:| தேனுபி ஸ்வோத்த மானும் து கார்யான்யைரகிலேஷ்வபி| ஶக்தித: கரணீயேதி விஶேஷோஸித்தஸித்தயோ:| ப்ராப்தோபாயஸ்து ஸித்த: ஸ்யாத் ப்ரேப்ஸு: ஸாதக உச்யதே| தஸ்ய ப்ராண்யுபகாரேண ஸந் துஷ்டோ பவதீஶ்வர:| ஸித்தோபாயேன விஷ்ணோஸ்து த்யான வ்யாக்யார்சனுதிகம்| கார்யம் நான்யத் தஸ்ய தேன துஷ்டோ பவதி கேஶவ:" என்று சொல்லியிருப்பதால் த்யான வ்யாக்யான பூஜாதிகர்மங்களைச் செய்யவேணுமேயொழிய வேறு கர்மங்களைச் செய்யக்கூடாதென்று ஸித்தமாகிறது.

திலக்:—வேறு கர்மம் யாது?

ஸ்ரீஸ்ரீகள்:—அதமஜன சேவை.

திலக்:—'அர்சனுதிகம்' என்கிற வாக்கியத்திலுள்ள ஆதி பதத்தினுல் எது எடுத்துக்கொள்ளவேண்டும்?

ஸ்ரீஸ்ரீகள்:—'தேனுபி ஸ்வோத்தமானும் து கார்யான்யை ரகிலேஷ்வபி' என்றிருப்பதினுல் தன்னைவிட உத்தமர்களின் சேவை எடுத்துக்கொள்ளவேண்டும்.

திலக்:—ஆனுல் அதமஜனங்களுக்கு உபகாரம் செய்யக்கூடா தென்பது தங்கள் மதமென்று தோன்றுகிறது. ஸர்வலோகோத் தாரம் செய்யவேணுமென்னும் நம் மதத்திற்கு விருத்தமாகிறது.

ஸ்ரீஸ்ரீகள்:—அதமஜன சேவை செய்யக்கூடாதென்று நாம் சொல்லுகிறோமேயொழிய, உத்தாரம் செய்யக்கூடாதென்று நாம் சொல்லவில்லை. 'த்யானவ்யாக்யார்சனுதிகம்' என்ற வாக்யத் திலுள்ள வ்யாக்யா என்றுல் அதம ஜனங்களின் உத்தாரார்த்த மாக அவாளுக்கு உபதேஶாதிகளைச் செய்வதேயாகும் அதினுல் அவர்களின் உத்தாரம் (உபகாரம்) செய்யவேணுமென்று ஸித்த மாகிறது.

திலக்:—ஶுஶ்ரூஷா என்றுலும் அதுதானே?

ஸ்ரீஸ்ரீகள்:—அல்ல. தாங்கள் லோகோபகாரம் செய்கிறீ ரென்று ஜனங்கள் சொல்லுகிறுர்களேயொழிய ஶுஶ்ரூஷை

செய்கிறீரென்று சொல்லுவதில்லை. ஸேவை என்றால் அவரால் பணத்தை வாங்கி அவர்களின் வேலை செய்வதாகும். பணம் வாங்காமல் ஸர்வ ப்ராணிகளின் ஹிதார்த்தமாய் கர்மங்களைச் செய்வது உபகாரமாகும்.

**திலக்:**—ஆனால் இவ்விஷயத்தை என்னிட புத்தகத்தின் இரண்டாவது பதிப்பில் திருத்திக்கொள்ளுவேன்.

என்னிட புத்திக்கு எது சரி என்று தோன்றிற்றோ அதை நான் எழுதியிருக்கிறேன். அங்கீகரிக்கக்கூடுமானவைகளை அங்கீகரிக்கலாம். த்வைதாத்வைத வாதம் என்றைக்கும் முடிவதல்ல. ஆகையால் அவ்விஷயத்தில் ஒன்றும் பேசுவதற்கு எனக்கு அபிப்ராயமில்லை. சாங்கராத்வைதம் எனக்கு ஸம்மதமல்ல. நான் சாங்கராத்வைதி அல்ல. நான் ஜகத்து விநாசமுள்ளதென்கிறேன்......என்னிட முக்ய கடாக்ஷம் லோக ஸங்க்ரஹத்தினிடத்திலிருக்கிறது. அந்த அர்த்தத்தையே கீதை ப்ரதிபாதிக்கிறதென்று என்னிட நூலின் கருத்து.

**ஸ்ரீஸ்ரீகள்:**—தங்கள் நூலில் அத்வைதத்தை ப்ரதிபாதிக்காமலிருந்தால் நமக்கு அதைப்பற்றி விசாரிக்க வேண்டிய அவஸரமே இருக்கவில்லை.

இவ்விதமாக அவரிட புத்தகத்திலிருக்கும் அனேக விஷயங்களை எடுத்துக்காட்டி அவைகள் ஸரியல்ல என்பதையும் ஸ்ரீஸ்ரீகள் ஸித்தப்படுத்திக் காட்டினார். இப்படி ஸபை முடியும் காலம் வரைக்கும் விசாரம் நடந்த பிறகு நா. பௌவீ அவர்கள் "பொழுதாய்விட்டது, மற்ற விஷயங்களை கடிதமூலமாய் அறிவித்தால் திலக் அவர்கள் ஸரியான பதில்கொடுப்பார்" என்று அறிவித்தார். அதற்கு ஸ்ரீகள் 'ஏழெட்டு வருஷங்கள் ச்ரமப்பட்டு எழுதிய நூலை ஸித்தப்படுத்திக்கொள்ள ஏழெட்டு நாளாவது வேண்டாமா? நேரில் பேசுவதினால் எப்படி அபிப்ராய மாகுமோ அப்படி கடிதமூலமாய் ஆகமாட்டாது. அப்படி ஆகுமாயின் வக்கீல்களான தங்களுக்கு கோர்ட்டில்போய் வாதம் செய்யவேண்டியதே இல்லாததாகும். இதற்காகவே நேரில் பேசவேணுமென்று நாம் இது வரைக்கும் காத்திருந்தோம். இப்போது அவகாசமில்லாவிடின்

பூணுவுக்கு நாம் வருகிறோம், அங்கு விசாரம் நடக்கலாம்' என்று ஸ்ரீகள் சொல்லவே திலகர் "என்னிட முக்யகடாக்ஷம் லோக ஸங்க்ரஹத்திலேயே இருக்கிறது. அந்த அர்த்தத்தையே கீதை ப்ரதிபாதிக்கிறதென்று என்னிட நூலின் கருத்தாகும்" என்று சொன்னார். பிறகு ஸ்ரீஸ்ரீகள் அவ்வளவு மாத்திரம் ஜனங்களுக்கு தெரிவதாக எழுதியிருந்தால் நமக்கு வாதம் செய்யவேண்டிய ஜரூரே இருக்கவில்லை என்று சொல்லவே ரா. டிலக் முதலியவர்கள் ஸ்ரீஸ்ரீகளின் விடைபெற்று புறப்பட்டுப்போயினர்.

பிரகு ஸ்ரீஸ்ரீகள் கொல்ஹாபுரம் வாயி மார்க்கமாய் பூணுவுக்கு விஜயம் செய்து, அங்கு ஸபை சேர்த்து நவநாகரீக ஜனங்களுடனும் ரா. திலகருடனும் வாதம் நடத்தி அவர்களிட ஆக்ஷேபணைகளுக்கெல்லாம் தக்க ஸமாதானங்களைச் சொல்லி த்வைதத்தை நிலை நிறுத்தி எல்லோரையும் சந்தோஷப்படுத்தினர்.

பிறகு பண்டராபூர், ஹைதராபாத் மார்க்கமாய் மலகேடாவுக்கு விஜயம் செய்திருந்தபோது, பூணுவிலிருந்த அப்யங்கர வாஸுதேவ ஶாஸ்திரிகள் ஸ்ரீஸ்ரீகளுக்கு என் முன்னிலையில் வேதாந்த விஷயத்தை விசாரம் செய்யாமலிருந்தால் நான் ஸ்ரீஸ்ரீகளின் தர்சனத்திற்கு வருகிறேன் என்று விண்ணப்பம் செய்துகொண்டு வந்து இதர ஶாஸ்த்ரங்களின் விசாரம் நடத்தி மிகவும் ஸந்தோஷப்பட்டுப்போயிருக்கிறார். இக்காரணங்களினால் த்வைதத்திற்கே விஜய மென்பதை இத்துந்துபியின் முழக்கம் உலகத்திற்கு அறிவிக்கிறது.

---

## 8. சோழ விஜயம்.

(மூன்றாவது.)

ஸ்ரீஸ்ரீகள் அங்கிருந்து புறப்பட்டு ஹைதராபாத் சிஞ்சோளீ மலகேடா ராய்சூர் கெத்வால் முதலிய தேசங்களில் ஸஞ்சரித்துக் கொண்டே கொத்தலகித்தி என்னும் கிராமத்திற்கு விஜயம் செய்து, அவ்வூரில் வஸித்துவரும் ஸமயத்தில் கும்பகோண ஸமீபம் திருவிசநல்லூர் கிராமத்தில் வஸித்திருந்த ஸ்ரீமான்

மஹா. ராமஸுப்பா ஶாஸ்த்ரிகளிடமிருந்து 'சந்திரிகா கண்டனம்' என்னும் புத்தகமொன்று ரிஜிஸ்டர்மூலமாய் ஸ்ரீஸ்ரீகளிட பார்வைக்கு வந்து சேர்ந்தது. ஸ்ரீஸ்ரீகள் உடனே அப்புத்தகத்தின் கண்டனம் எழுத ஆரம்பித்து, அப்புத்தகத்தை மஹா ஸபையில் வெளிப்படுத்துவதற்காக, அங்கிருந்து புறப்பட்டு சகே 1841 ஸித்தார்த்தி வருஷத்தில் திருச்சானூருக்கு விஜயம் செய்து, அங்கு அக்காலத்தில் நடக்கும் ஸ்ரீமன் மத்வஸித்தாந்தோன் னுஹினீ ஸபைக்கு ஸகலதேஶத்து வித்வான்களேயும்வரவழைத்து, ஷை ராமஸுப்பா ஶாஸ்த்ரிகளே அழைத்து வருவதற்காக ஸ்ரீம. ஸம். பாண்டுரங்கி பீமாசார்யரையும், ம-ா-ா-ஸ்ரீ கௌகூர் ராமசந்திரராவ், ஹைகோர்ட் வக்கீல் மதரூஸ் அவர்களேயும் அனுப்பித்தார். ஷை இருவரும் ஶாஸ்த்ரிகளிடம்போய் 'நம் ஸ்ரீகள் தங்களால் எழுதப்பட்ட சந்திரிகா கண்டனத்தைக் கண்டித்து, ஷை சந்த்ரிகாகண்டனத்தை திருச்சானூர் மஹா ஸபையில் நடத்த நிச்சயித்திருக்கிறார். ஆகையால் தாங்கள் ஷை ஸபைக்கு தங்களிட சிஷ்யர்களுடன் வந்து தங்களிட கண்டனத்தை ஸ்திரப் படுத்திக்கொள்ள வேணு மென்றும், அதற்காக தங்களுக்கு வேண்டிய சகல சௌகர்யங்களேயும் நாங்கள் செய்துகொடுக்கத் தயாராயிருக்கிறோமென்றும் சொன்னார்கள். அதற்கு ஶாஸ்திரிகள்—'நான் மின் ஏதோ எழுதினேன். எனக்கு இப்போது வயதாய்விட்டபடியால் வாதம் செய்ய என்னால் முடியாது' என்றார். அதற்கு பீமாசார்யர் 'தாங்கள் கிட்ட இருந்து தங்களிட சிஷ்யர்களால் ஷை கண்டனத்தை ஸ்திரப்படுத்திக்கொள்ளலாமே' என்றார். அதற்கு ஶாஸ்த்ரிகள்—'ஸ்ரீஸ்ரீகளுடன் வாதம் செய்பவர் உலகத்தில் யார் இருக்கிறார்? அது முடிவதல்ல, எனக்கு வர சௌகர்யமும் இல்லே' என்று சொன்னார். அதற்கு பீமாசார்யர் ஸ்ரீஸ்ரீஸ்வாமிகளவர்களே இங்கு வந்தால் தாங்கள் தங்களிட க்ரந்தத்தை ஸ்திரப்படுத்திக்கொள்ளலாமல்லவா? என்று கேட்டதற்கு ஶாஸ்திரிகள் நான் ஸன்யாஸிகளேக் காணுவதே வழக்கமில்லே என்று சொல்லியனுப்பிவிட்டார். பிறகு ஸ்ரீஸ்ரீகள் 1919 வருஷம் டிசம்பர் மாதத்தில் பதினாயிரக்கணக்கான ஜனங் களுடன் கூடியிருந்த மாகஸபையில் ஸ்ரீ நாராயண ஶாஸ்திரிகள்,

ஸ்ரீ வைஷ்ணவ கோபாலாசார்யர் முதலிய பண்டிதர்களின் முன்னிலையில் ஷை சந்த்ரிகா கண்டனத்திலுள்ள தோஷங்களை எல்லாம் எடுத்துக்காட்டி அக்கண்டனத்தைக் கண்டித்து, ஸ்ரீ சந்த்ரிகா புத்தகத்தை யானையின்மேல் அம்பாரியில் வைத்து மஹா வைபவத்துடன் பதினுயிரக்கணக்கான மும்மதஸ்தரான ஜனங்களுடன் ஊர்வலம் செய்வித்திருப்பதினுல் எப்பொழுதும் த்வைதத்திற்கே ஜயம் ஜயம் ஜயம் என்று இத்துந்துபி முழங்குகிறது.

பிறகு ஸ்ரீஸ்ரீகள் சில காலம் ஸ்ரீஸ-ாகாஸ்ரமத்திலேயே (திருச்சானூரிலேயே) பாடப்ரவசனுதிகளைச் செய்துகொண்டிருந்து, அங்கு சகே 1846 ரத்தாக்ஷி வருஷத்தில் தம் குருக்களான ஸ்ரீ ஸத்யஞானரின் ஆராதனையை முடித்துக்கொண்டு, அங்கிருந்து புறப்பட்டு குண்டூர் மார்க்கமாய் விஜயநகரம் வரைக்கும் சென்று, மறுபடியும் தம் சிடர்களால் திருச்சானூர் ஸபைக்கு விஜயம் செய்யவேணுமாய் ப்ரார்த்திக்கப்பட்டு திருச்சானூருக்கு வந்து, அங்கு மஹாஸபையை நடத்திக்கொண்டு மறுபடியும் இரண்டாவது பூப்ரதக்ஷிணத்திற்காக புறப்பட்டு, பல்லாரி பாகல்கோட் மார்க்கமாய் சகே 1848 அக்ஷய (க்ஷய) வருஷம் 1927ல் பெல்காமுக்கு விஜயம் செய்தனர்.

---

## 9. கர்ஞடக விஜயம்.

### இரண்டாவது (பேல்காம்.)

அங்கு ஸ்ரீஸ்ரீமஹாஸ்வாமிகள் க்ருஷ்ணுதீரமான ஸர்த்தி என்னும் கிராமத்தில் சுமார் 70 சிடர்களுக்கு தம்மால் பாடம் சொல்லப்பட்ட ஸ்ரீமன் ந்யாயஸுதா மங்கள மஹோத்ஸவத்தை ஷை அக்ஷய வருஷம் மாக சுத்த பஞ்சமீ தினம் ஷஹபுரத்தில் வெகு வைபவத்துடன் நடத்திக்கொண்டு, நவமிதினம் காலையில், ஸ்ரீமன்மத்வஸித்தாந்தாபிவ்ருத்தி காரிணீ ஸபைக்காகவும் தம்மிட குருக்களான ஸ்ரீஸத்யஞானரின் மஹாஸமாராதனை மஹோத்ஸவத்திற்காகவும் டலகவாடியில் அலங்கரிக்கப்பட்டிருந்த ஸபா மந்திரத்திற்கு விஜயம் செய்து, அங்கு அன்று ஸ்ரீமத்வநவமீ

அராதனையை நடத்தி, தசமீ முதல் ஸபாகார்யங்களை நடத்தத் துடங்கினர். சுமார் இருபதுனுயிரம் ஜனங்கள் சேர்ந்திருந்தனர். அச்சபையில் பிரதிதினமும் 'தத்வமஸி' முதலிய வாக்யார்த்தங்கள் நடந்து வந்தன. இவ்விதமாக வாக்யார்த்தங்கள் நடந்து கொண்டிருக்க, அச்சபைக்கு வந்திருந்த மைஸூர் அரண்மனை வித்வானுகிய மஹாமஹோபாத்யாய லக்ஷ்மீபுரம் ஸ்ரீநிவாஸாசார்யரென்பவர் தம்மால் வெளிப்படுத்தப்பட்ட 'தர்ஶன மீமாம்ஸா' என்னும் நூலை ஸ்ரீஸ்ரீகளுக்கு ஸமர்ப்பித்தனர். அப்போது அங்கிருந்த மைஸூர் ஸதாஶிவ ஶாஸ்திரி முதலியவர்கள்—"மஹாஸ்வாமீ! இவ்வாசார்யர் இப்புத்தகத்தில் பத்ம புராணம் 263-வது அத்யாயத்திலுள்ள 'த்வம் ஹி ருத்ர மஹாபாஹோ' இதுமுதலிய வாக்யங்களை உதஹரித்து அத்வைதிகளை ப்ரச்சின்ன பௌத்தரென்று எழுதி அம்மதத்தை தூஷித்திருக்கிறார். ஆகையால் மைஸூரில் மிகவும் கலக்கமுண்டாய், மீடிங்கு நடந்து, இவ்வாசார்யர் மன்னிப்பு கேட்டுக்கொள்ள வேண்டியதென்று, தீர்மானித்து, ஆசார்யரை பயமுருத்தியதின்பேரில் ஆசார்யர் பயந்து 'நம்மிட தர்ஶனமீமாம்ஸையில் நம்மால் எழுதப்பட்ட ஶ்லோகங்கள் பத்ம புராணத்தில் ப்ரக்ஷிப்தமானவைகள் (சேர்க்கப்பட்டவைகள்) இவ்விஷயத்தை அறிவிப்பதற்காக ஆனந்தாஶ்ரமத்தின் புத்தகத்தில் அந்த ஶ்லோகங்கள் [ ] இவ்விதமாக அடையாளம் செய்து காட்டப்பட்டிருக்கின்றன. இராமானுஜாசார்யர் மத்வாசார்யர் முதலியோர் தம்மிட நூல்களிலெங்கும் இந்த ஶ்லோகங்களை உதகரிக்கவுமில்லை. தவிர அப்புராணத்தில் அத்வைதத்தைப் போதிக்கும் ஶ்லோகங்களுமுண்டு என்று எழுதி மன்னிப்பு கேட்டுக்கொண்டிருக்கிறார்" என்று கூறினர்கள்.

இவ்வார்த்தைகளைக் கேட்டதும் ஸ்ரீஸ்ரீகள் சொல்லியதாவது:-

"மாயாவாதமஸத்ஶாஸ்த்ரம்" இது முதலிய பத்ம புராண ஶ்லோகங்களாலும்; "ராஜன் கார்யஶ்ய மித்யாதவம் நைர்குண்யம் பரமாத்மன:| ஆபாஸ வாதோ ஜீவஸ்ய பாகண்டைருபகல்பித:" இது முதலிய ப்ருஹத்ப்ரஹ்ம ஸம்ஹிதையின் நாலாவது பாதம் எட்டாவது அத்யாயத்திலுள்ள ஶ்லோகங்களாலும் மாயாவாதம் அஸத் ஶாஸ்த்ரமென்று ஸ்பஷ்டமாய்க்கொண்டிருப்பதால், இந்த

நிஜமான விஷயத்தையே ஜனங்களுக்கு எடுத்துக்காட்டின் இவ்வாசார்யருக்கு துரத்ருஷ்டமுண்டாய் நரகாத்யனர்த்தங்களுண்டாகின்றனவென்னும் பயம் முதலே இல்லை. 'ப்ராஹ்ம ஸத்யம் ஜகன் மித்யா' புண்ய பாப ஸ்வர்க்க நரகாதி ஜகத்து பொய் என்று கதறிக்கொண்டிருக்கும் அத்வைதிகள் தம்மை நிந்திப்போருக்கு நரகாதிபாரத்ரிக பயத்தைக் காட்டுவதாயில்லை. இவ்விஷயம் மத ஸம்பந்தமாயிருப்பதினாலும், விஜ்ஞானபிக்ஷு முதலிய ப்ராசீன க்ரந்தகாரரால் விவரிக்கப்பட்டிருப்பதினாலும், பத்ம புராணாதிகளால் ஸ்பஷ்டமாய் ஸித்தமாயிருப்பதினாலும் இராஜஶாஸன பயத்திற்கு ஆஸ்பதமே இல்லை. இப்படி இருந்தும் இவ்வாசார்யர் தம் மதத்தின் அபிமானத்தையும் விட்டு, மன்னிப்பு வேண்டிக் கொள்ளவேண்டுமாயின் அத்வைதி மகா ஜனங்களால் தமக்கு கிடைக்கும் த்ரவ்யாதி ஐஹிக விஷயங்களுக்கு பாதகமுண்டாகுமென்கிற பயமொன்றே காரணமென்று நமக்குத் தோன்றுகிறது. அவர் மன்னிப்பு கேட்டுக்கொண்டதற்குக் கூறிய மூன்று காரணங்களும் கொஞ்சமும் ஸரியல்ல. எப்படி எனின்:—பத்ம புராணத்தில்:—

திஷணேன ததா ப்ரோக்தம் சார்வாகமதிகர்ஹிதம் |
தைத்யானாம் நாஶனார்த்தாய விஷ்ணுனா புத்தரூபிணா || 69 ||
[* பௌத்தஶாஸ்த்ர மஸத்ப்ரோக்தம் நக்னநீல படாதிகம் |
மாயாவாதமஸத் ப்ரோக்தம் ப்ரச்சன்னம் பௌத்தமுச்யதே || 70 ||
மயைவ கதிதம் தேவி கலௌ ப்ராஹ்மணரூபிணா |]
அபார்த்தம் ஶ்ருதி வாக்யானாம் தர்ஶயன் லோககர்ஹிதம் || 71 ||
கர்ம ஸ்வரூபத்யாஜ்யத்வமத்ர வை ப்ரதிபாத்யதே |
[† ஸர்வகர்ம பரிப்ரஷ்டம் வைதர்ம்யத்வம் ததுச்யதே || 72 ||
பரேஶஜீவயோரைக்யம் மயாது ப்ரதிபாத்யதே ||]
ப்ராஹ்மணோஶ்ய ஸ்வயம் ரூபம் நிர்குணம் வக்ஷ்யதே மயா || 73 ||
ஸர்வஸ்ய ஜகதோப்யத்ர மோஹனார்த்தம் கலௌ யுகே |
வேதார்த்தவன் மஹா ஶாஸ்த்ரம் மாயயா யதவைதிகம் || 74 ||
மயைவ ரக்ஷ்யதே தேவி ஜகதாம் நாஶகாரணாத் |

* இவ்வடையாளத்தின் மத்தியிலுள்ளவைகள் க. ஜ. ஜ (ஸ) ப (ஹ) புத்தகங்களிலுள்ளவைகள்.

† இவ்வடையாளத்தின் மத்தியிலுள்ளவைகள் க. ச. ஜ. ஜ. (ஸ) ப (ஹ) புத்தகங்களிலுள்ளவைகள்.

இவ்விதமாக ஶ்லோகங்களிருக்கின்றன. அவைகளில் சில பாகம் ஆனந்தாஶ்ரமத்தில் அச்சிடப்பட்ட புத்தகத்தில் [ ] இவ்வடையாளத்தின் மத்தியில் போடப்பட்டிருக்கிறது. அங்கு அச்சிடப்பட்ட மற்ற புத்தகங்களிலெல்லாவற்றிலும் அவைகளுக் காதாரங்களான க. ச. முதலிய அடையாளங்களுடன் கூடிய கையெழுத்து ப்ரதிகள் இன்னின்ன புத்தகம் இன்னின்னாருடையது, இன்னின்ன காலத்தியது என்று எழுதப்பட்டிருக்கிறது. இந்த பத்ம புராணத்திற்கு மாத்திரம் அப்படி எழுதப்படவில்லை. ஆகையால் வெகு சிரமப்பட்டு அநேக கையெழுத்து ப்ரதிகளை சேகரித்துக்கொண்டு பாடாந்தரங்களுடன் சோதனை செய்த கை. ஸ்ரீ. ராவ் சாஹேப் விஸ்வநாத நாராயண மண்டலிக் என்பவர் தம் மதத்திலுள்ள ஆக்ரஹத்தினால் [ ] இந்த அடையாளம் போட்டிருக்க வேண்டுமேயொழிய நிஜமாக இருப்பதற்கு இல்லை. ஆகையால் இவ்வடையாளத்தில் பண்டிதர்களுக்கு நம்பிக்கை இருப்பதற்கு சாத்யமில்லை. ஶோதகர் மூடராயிருப்பாரேயாயின் இருந்தது இருந்தாற்போல் அச்சிட்டு ஸுகமாயிருப்பார். புத்திமானாயின் தான் செய்த வேலை பிறருக்கு எப்படி தெரியாமலிருக்குமோ அப்படி செய்திருப்பார். இச்சோதகர் இரண்டாம் கட்டாராகையால் எதுவரைக்கும் அடையாளம் செய்தால் தமக்கனுகூலமென்பதை யறியாமல் அடையாளம் போட்டிருக்கிறார். அது எப்படி எனின்—'தைத்யானாம் நாசனார்த்தாய விஷ்ணுனா புத்தரூபிணா' என்கிற ஶ்லோகத்திற்கு மேலிருக்கும் 'பௌத்த ஶாஸ்த்ர மஸத் ப்ரோக்தம் நக்னநீல படாதிகம் மாயாவாதமஸத்ஶாஸ்த்ரம் ப்ரச்சன்னம் பௌத்தமுச்யதே| மயைவ கதிதம் தேவி கலௌ ப்ராஹ்மணரூபிணா' என்ற ஶ்லோகங்களுக்கு அடையாளம் போட்டிருக்கிறார். அந்த ஶ்லோகங்களுக்கு மேல் 'அபார்த்தம் ஶ்ருதிவாக்யானாம் தர்ஶயன் லோககர்ஹிதம்' என்கிற பாதி ஶ்லோகமிருக்கிறது. அடையாளத்திற்குள்ளிருக்கும் ஶ்லோகங்கள் சேர்க்கப்பட்டவைகளென்று விட்டுவிட்டால், 'தைத்யானாம் நாஶனார்த்தாய' என்கிற பாதி ஶ்லோகத்திலுள்ள 'விஷ்ணுனா புத்தரூபிணா' என்கிற பதங்களுடன் 'அபார்த்தம் ஶ்ருதிவாக்யானாம்' என்கிற பாதி ஶ்லோகத்திற்கு

ஸம்பந்தமே இருப்பதில்லை. 'விஷ்ணுநா புத்தரூபிணு' என்பதின் ஆகாங்க்ஷை பூர்ணமாக வேண்டுமாயின் அடையாளத்திற்குள்ளடங்கிய 'பௌத்த ஶாஸ்த்ரமஸத்ப்ரோக்தம்' என்கிற பாதி ஶ்லோகம் ஆவஶ்யகமாகிறது.

தவிர:—'ஶ்ருணு தேவி ப்ரவக்ஷ்யாமி தாமஸானி யதா க்ரமம்' என்று ஆரம்பித்து, ஶைவ பாஶுபதாதிகளுக்கு தாமஸத்வத்தைச் சொல்லி, அடையாளத்துக்குள்ளடங்கிய ஶ்லோகங்களுக்குமேல் 'ப்ரஹ்மணோ ஶ்ய ஸ்வயம் ரூபம் நிர்குணம் வக்ஷ்யதே மயா | ஸர்வஸ்ய ஜகதோப்யத்ர மோகனார்த்தம் கலௌ யுகே | வேதார்த்தவன் மஹாஶாஸ்த்ரம் * மாயயா யதவைதிகம்| மயைவ ரக்ஷ்யதே தேவி ஜகதாம் நாஶகாரணாத்' என்கிற ஶ்லோகங்களிலிருந்து, அவைகள் [ ] அடையாளத்திற்குள்ளாக்கப்படாமலிருப்பதால் அவைகள் எல்லா புத்தகங்களிலுமிருப்பதாய் ஏற்படுகிறது. இதினுல் அத்வைதமதம் தாமஸமானதென்று ஸித்தமாகிறது. ஆனந்தாஶ்ரம புத்தக ஶோதக ஶாஸ்த்ரிகள் 'எச்சில் தின்றாலும் நெய்க்கு வழி இல்லை' என்பதைப்போல் என்ன உபாயம் செய்தபோதிலும் அம்மதத்திற்கு தாமஸத்வம் விட்டபாடில்லை.

அப்புத்தகத்திலேயே இந்த ஶ்லோகங்கள் க. ச. ஜ. ஙு. ஹ. கையெழுத்து ப்ரதிகளில் இருக்கின்றனவென்று எழுதியிருக்கும் ஆசார்யர் இந்த ஶ்லோகங்கள் ப்ராசீன புத்தகங்களில் காணப்படவில்லை என்று சொல்லியது எள்ளளவும் ஸரியல்ல.

மதஸ்தாபகரான ஆசார்யர்கள் இதரமதத்திற்கு நிந்தகமான எல்லா ஶ்லோகங்களையும் தம்மிட புத்தகத்தில் எழுதியே தீரவேண்டுமென்கிற கட்டாயமில்லை. தவிர இந்த ஶ்லோகங்களின் அபிப்ராயங்களைத் தெரிவித்திருப்பதால் அப்புராணத்தில் இந்த ஶ்லோகங்களுண்டென்று ஸித்தமாகிறது. ஆகையால் ஸ்ரீராமானுஜாசார்யர் ஸ்ரீமத்வாசார்யர் தம்மிட க்ரந்தத்தில் இந்த ஶ்லோகங்களை உதஹரிக்கவில்லை என்று ஆசார்யர் சொன்னதும் ஸரியல்ல.

---

* 'மாயாவாதமவைதிகம்' என்று விஞ்ஞானபிக்ஷு பாஷ்யபாடம்.

பத்ம புராணத்தில் அத்வைதத்தைச் சொல்லுகிறதென்று சொல்லும் 'யோந்தராத்மா' முதலிய ஶ்லோகங்களும், விஷ்ணு புராணத்திலுள்ள 'பாமார்த்தஸ்து' இது முதலிய ஶ்லோகங்களும் விசாரிக்குங்கால் த்வைதத்திற்கு ஸாதகங்களேயொழிய அத்வைதத்திற்கு ஸாதகங்களல்ல என்றும் * ஸித்தமாகிறது.

மைஸூர் அத்வைதிகள் தமக்கடங்கியிருக்கும் லக்ஷ்மீபுரம் ஶ்ரீனிவாஸாசார்யரை வயிற்றிலடிப்போமென்று பயமுறுத்தி அவரால் மன்னிப்பு பெற்றுவிட்டமாத்திரத்தினுல் **'அத்வைத மதம் பௌத்த மதமே'** என்று பறைசாற்றிக்கொண்டிருக்கும், சங்கராசார்யரின் பாட்டனுர் (பரமகுரு) ஆகிய கௌடபாதரிட காலத்திலிருந்த பண்டிதர்கள், சங்கராசார்யரின் ஸமகாலீனரான பண்டிதர்கள், இக்காலத்திய பாஶ்சாத்ய (மேல்நாட்டு) பண்டிதர்கள் இவர்களிட † வார்த்தைகளுக்கு ஒன்றும் தடை செய்யப்

* 'த்வைத ஸித்தாந்த விசாரம்' என்கிற புத்தகத்தில் இவ்விஷயங்களின் விசாரத்தை விவரமாய்க் காணலாம்.

† (1) ஞானம் நைதத் புத்தேன பாஷிதம் (கௌடபாதீயம்)

(2) ஞான ஜ்ஞேய ஜ்ஞாத்ரு பேதரஹிதம் பரமார்த்த தத்வமத்வயமேதன்ன புத்தேன பாஷிதம்| யத்யபி பாஹ்யார்த்த நிராகரணம் ஞானமாத்ரகல்பனு சாத்வய வஸ்து ஸாமீப்யமுக்தம் இதம் து பரமார்த்த தத்வமத்வைதம் வேதாந்தேஷ்வேவ விஜ்ஞேயமித்யர்த்த: (சாங்கரபாஷ்யம்)

(3) ஞானமாத்ரம் பாரமார்த்திகம்.........ஸௌகதமதமேவ பவதாபி ஸங்க்ருஹீத மித்யாஶங்க்யாஹ—ஞானமிதி (ஆனந்தகிரி)

(4) நநு ஞானமாத்ரமேவ தத்வம் ஜ்ஞாத்ரு ஜ்ஞேயாதி ஸர்வம் தத்ர கல்பிதம் பௌத்தமதாசார: ஸ்யாதித்யத ஆஹ—நைததிதி..... ...(கௌடபாதீய விவேகம்)

(5) மஹாயானிக பௌத்தகாதிதம் மாயாவாதம் வ்யாவர்ணயந்தோ லோகான் வ்யாமோஹயந்தி (பாஸ்கராசார்யர்)

(6) யே து ரஜ்ஜுஸர்பாதிவத் ப்ரபஞ்சஸ்யாத்யந்த துச்சத்வமிச்சந்தி தே து பௌத்தப்ரபேதா ஏவ| (விஞ்ஞானபிக்ஷு)

(7) தத்வரம் அஸ்மான் மாயாவாதாத் மஹாயானிகவாத: (பார்த்தஸாரதிமிஶ்ரர்)

(8) விஞ்ஞானவாதஸ்ய ச கிம் விபேதகம் பவன்மதாப்ரூஹி தத: பரம் வ்ராஜ (வித்யாரண்யரிட சங்கரவிஜயம்)

பட்டதாய் ஆகவில்லே. ஆகையால் பத்மபுராணத்திலுள்ள ஶ்லோகங்கள் ப்ரக்ஷிப்தம் (சேர்க்கப்பட்டவைகள்) அல்ல. அத்வைத மதம் அவைதிகமான (வேதஸம்பந்தமற்ற) பௌத்தமதமே. நிஜமான ஸுகத்தையடைய விரும்புவோர் வைதிகமான த்வைத மதத்தின்படிக்கு அனுஷ்டானங்களேச்செய்து ஈஶ்வரானுக்ரஹத்தை யடையவேண்டியது என்று ஶ்ரீஶ்ரீகளவர்கள் தம் முன்ஞேர்களேப்போல் ஸித்தப்படுத்தியிருக்கிருர்.

இவ்விசாரங்களின் விவரத்தை த்வைத ஸித்தாந்த விசாரத்திலும், ஸம்யமனீபுரம் ஹைகோர்ட் ஸிவில் ஸூட் 5-வது இஷ்யூவிலும் காணலாம் என்கிற விஷயத்தை இத்துந்துபி தன் ஞெலியினுலறிவிக்கிறது.

---

## 10 கர்ணுடக விஜயம்

### மூன்ருவது (பேங்களூர்)

பிறகு பெல்காமில் ஸபா கார்யங்களே முடித்துக்கொண்டு, கர்ஜிகி, ராய்சூர் மார்க்கமாய் திருச்சானூருக்கு விஜயம் செய்து அங்கிருந்து சித்தூர், மதனபல்லி, புங்கனூர் கோலார் மார்க்கமாய் 19-3-1930 காலே பெங்களூருக்கு விஜயம் செய்து அவ்விடத்திய ஸம்ஸ்தான உத்தியோகஸ்தர்களாலும், மஹாஜனங்களாலும் வரவேற்கப்பட்டு இராஜகிய மர்யாதை முதலிய மகாவைபவத்துடன் ஊர்வலம் வந்து பஸவன்குடியிலுள்ள தம் மடத்திற்கு

(9) நூதநோ பௌத்ததர: (ஆனந்தகிரி சங்கர விஜயம்)

(10) நநு ஶாக்யபிக்ஷு ஸமயேன ஸம: ப்ரதிபாத்யயம் ச பகவத் ஸமய:.........(ஸம்க்ஷேப ஶாரீரகம் 2-25,26)

(11) மாயாவாத மஸத்ஶாஸ்த்ரம் ப்ரச்சன்னம் பௌத்தமுச்யதே (பத்ம புராணம்)

(12) பௌத்தமத ஶூன்யவாதத்திற்கு கௌடபாதர் வேதாந்த பரிபாஷை (வேதாந்தவேஷம்) கொடுத்திருக்கிருர் என்கிற விஷயம் ஜாகோபி, பௌஸின் ஸுக்டங்கர், விதுசேகர பட்டாசார்யர் முதலான பண்டிதர்களால் ஆமோதிக்கப்பட்டிருக்கிறது. (ஸர். S. ராதாகிருஷ்ணன் M. A., D. Litt.) ஸபாஸார ஸங்க்ரஹம் வால்யூம் III பக்கம் 443.

வந்து சேர்ந்தனர். அங்கு ப்ரதிதினமும் மாலை 6-மணி முதல் 9-மணிவரைக்கும் ஸபையில் ஶாஸ்த்ரார்த்தோபன்யாஸங்களும், 'தத்வமஸி' முதலிய வாக்யார்த்த விசாரங்களும், ப்ரமேய விஷயகமான வினவிடைகளும், தர்மங்களின் சர்சைகளும் நடந்து வந்தன. இவ்விதமாக அத்வைதமதம் அவைதிகம், த்வைதமதமே வைதிகமதமென்பதை தம் சிடர்களுக்கு உபதேஶித்துக்கொண்டிருந்து, ஸ்ரீமன் மத்வஸித்தாந்தாபிவ்ருத்திகாரிணீ ஸபையின் போஷணைக்காக ஸ்ரீமன் மத்வ ஸித்தாந்தாபிவ்ருத்திகாரிணீ பாங்கையும், ஸ்ரீமன் மத்வ ஸித்தாந்தாபிவ்ருத்திகாரிணீ லைப்ரரியையும் ஸ்தாபித்து, அங்கிருந்து புறப்பட்டு மத்தூர், சென்னபட்டணம், ஸ்ரீரங்கபட்டணம் மார்க்கமாய் சகே 1852 ப்ரமோதூத வருஷம் ஜ்யேஷ்ட சுத்த சதுர்தஶி (10-6-1930)ல் மைஸூருக்கு விஜயம் செய்தனர்.

---

## 11. கர்னாடக விஜயம்

### நான்காவது (மைசூர்)

அங்கும் மஹாராஜராலும் ஸம்ஸ்தான உத்யோகஸ்தர்களாலும், மஹா ஜனங்களாலும் வரவேற்கப்பட்டு ராஜகீய மரியாதைகளுடன் ஊர்வலமாய் அரண்மனையில் சென்று, மஹாராஜரால் செய்யப்பட்ட பாதபூஜையை அங்கீகரித்து, மகாராஜருக்கு பலமந்த்ராக்ஷதையளித்து, தம்மடத்திற்குச்சென்று அங்கு ப்ருந்தாவனாந்தர்கதராயிருக்கும் ஸ்ரீ ஸத்ய ஸங்கல்ப ஸ்ரீ ஸத்ய ஸந்துஷ்ட ஸ்வாமிகளவர்களின் தர்சனம் செய்துகொண்டு, அங்கிருந்து புறப்பட்டு, அலங்கரிக்கப்பட்டுள்ள ஸீதா விலாஸ சத்திரத்திற்குச்சென்று, அங்கு ஸ்ரீராமபூஜாதிகளை நடத்தினர்.

ஷை வருஷம் ஜேஷ்ட பஹுள அஷ்டமி (19-6-30) யன்று ஸ்ரீஸ்ரீகள் மஹாராஜரிட அரண்மனையில் ஸ்ரீராமரிட மஹாபூஜை நடத்தி, பரிவாரத்துடன்கூடிய மஹாராஜருக்கு ஸ்ரீராம வேதவ்யாஸரிட தர்ஶன தீர்த்த ப்ரஸாத மரியாதைகளை நடத்தி, ஸ்ரீமன் மஹாராஜா அவர்களுக்கு 'தங்கள் வம்ஶத்தின் மூலபுருஷரான ஸ்ரீ கீதாசார்யரான ஸ்ரீ க்ருஷ்ணபகவான் தன்னிட கீதையில் எங்

கும் அத்வைதம் சொல்லவில்லை. த்வைதத்தையே சொல்லியிருக்கிறார். கீதாசார்யரின் அபிப்ராயத்திற்கு விருத்தமாய் அத்வைதானுஸந்தானம் செய்பவர்களுக்கு கோரமான துக்கங்களுண்டாகின்றன. ஆகையால் த்வைதானுஸந்தானத்தையே செய்து இகபரஸுகங்களை அடையவேண்டியது. இவ்விஷயங்களில் ஸம்ஶயமிருக்குமாயின் விசாரத்திற்காக மஹாராஜாவர்கள் ஸபை கூட்டி நமக்கு ஸங்கதி தெரிவித்தால் எப்போதாகிலும், எங்காகிலும் வந்து மேற்சொன்ன விஷயங்களை ஸித்தப்படுத்திக் கொடுக்க நாம் தயாராயிருக்கிறோம்' என்று சொல்லி கீதார்த்தங்களைச் சுருக்கமாக உபதேசித்தனர்.

ஸீதா விலாஸ சத்திரத்தில் ப்ரதிதினமும் ஸாயங்காலம் மும்மதஸ்தரான மஹாஜனங்களுடன்கூடிய மஹாஸபையில் ஶ்ரீபகவத்கீதார்த்தோபன்யாஸங்களைச் செய்துகொண்டும் அத்வைதத்தில் ப்ரமாணமின்மையை ஸ்தாபித்துக்கொண்டும் த்வைத ஸித்தாந்தத்தை ஸ்தாபனம் செய்துகொண்டும்,பௌத்தாத்வைத மதங்களின் ஒற்றுமையை ப்ரமாணங்களினால் காட்டிக்கொண்டும், ப்ரமேயங்களைக் கேழ்ப்பவர்களுக்கு லௌகிக த்ருஷ்டாந்தங்களுடன் பதில் சொல்லி ஸம்ஶய விபரீதஞானங்களைப் போக்கிக் கொண்டிருந்தனர். அவைகள் கன்னடத்தில் வெளியாயிருக்கின்றன.

இவ்விதமாக சிஷ்யர்களுக்கு தத்வோபதேஶங்களைச் செய்து கொண்டே பாத்ரபதசுத்த சதுர்த்தஶிவரைக்கும் அங்கேயே இருந்து சாதுர்மாஸ்ய ஸங்கல்பத்தை முடித்துக்கொண்டு, நஞ்ஜன்கூட் மார்க்கமாய் தக்ஷிண திக்விஜயத்திற்காகப் புறப்பட்டுச் சென்றனர்.

---

## 12. கர்னாடக விஜயம்.

### ஐந்தாவது (மைசூர்)

ஶ்ரீஶ்ரீகள் மைஸூரிலிருந்து சென்ற பிறகு 18-9-1930-ல் வேதரத்னம், வைதிகஶிகாமணி அய்யாகனபாடி அவர்கள் அடியில் கண்டவாறு ஓர் பத்திரிகையை வெளிப்படுத்தியுள்ளர். அதாவது—

மைஸூர் இராஜதானியில் வஸிக்கும் எல்லா ப்ராஹ்மண வித்வான் மஹாஜனங்களிட ஸன்னிதியில் விண்ணப்பங்கள்—

ஸ்ரீஸ்ரீ உத்தராதிமடத்து ஸ்வாமிகளவர்கள் அத்வைதமதம் அவைதிகமென்றும், வேதாதி ப்ரமாணங்களால் ஸர்வதா ஸித்த மாகாதது, மற்றும் வேதாதிப்ரமாணங்களுக்கு மிகவும் விருத்தமு மானது என்று இது முதலிய ஸ்ரீமுகத்தை அனுப்பியிருக்கும் விசாரத்தில் மேல் கார்ய க்ரமங்களை நடத்துவதற்கு 22-9-1930 தேதி திங்கட்கிழமை மத்தியானம் 3-மணிக்குச் சரியாய் "மைஸூரிலிருக்கும் அபினவஶங்காலயத்தில்" ஸபை சேர வேண்டுமென்று நிச்சயித்திருப்பதால், ஆஸ்திக மஹாஜனங்க ளெல்லோரும் ஸகாலத்திற்கு ஸபைக்கு தயவு செய்யவேணுமாய் ப்ரார்த்தனை.

18-9-1930 }
மைஸூர். }

அய்யா கனபாடி,
வேதரத்ன, வைதிகஶிகாமணி.

2. எம். கே. கிருஷ்ணராவ், இனும்தார், மற்றும் டிஸ்ட்ரிக்ட் போர்ட் மெம்பர்.
3. பண்டித ஸதாஶிவ ஶாஸ்த்ரி.
4. ஸாம்ப ஶாஸ்த்ரி (ஆஸ்தான வித்வான்).
5. எம். ராமசேஷ ஶாஸ்த்ரி (ஆஸ்தான மஹா வித்வான்).
6. பி. ஸீதாராமய்ய, அட்வொகேட், மைஸூர்.
7. வி. ரங்கண்ண, நஞ்ஜன்கூட்.
8. எம். வெங்கடகிருஷ்ணய்ய.

---

ஸ்ரீ கன்யகாபரமேஶ்வரி பிரெஸ், மைஸூர். *(True Copy)*

இவ்விதமாக அறிக்கைகளை வெளியிட்ட பிறகு ஸபைகூடி அடியிற் கண்டவாரு தீர்மானங்களும் செய்யப்பட்டிருக்கின்றன:-

ஸ்ரீ.

மைஸூர். இராஜதானியின் ஸ்ரீமதபிநவசங்கராலயத்தில் 22-9-30 ப்ர. ஸ்ரீ. வேதரத்ன, வைதிகஶிகாமணி அய்யாகனபாடி அவர்கள், இனும்தார் மற்றும் டிஸ்ட்ரிக்ட் போர்ட் மெம்பர் ம. எம். கே. க்ருஷ்ணராயர், ப்ர. ஸ்ரீ. பண்டித ஸதாஶிவஶாஸ்த்ரி

கள், ஆஸ்தான வித்வான் ப்ர. ஸ்ரீ, மோடகானஹள்ளி, ராமசேஷ ஶாஸ்த்ரி அவர்கள், அட்வொகேட், ம. பாலஹள்ளி ஸீதா ராமய்யரவர்கள், ம. நஞ்ஜன்கூட் வி. ரங்கண்ண அவர்கள். ம. எம். வெங்கடக்ருஷ்ணய்யரவர்கள் இவர்களால் கைப்பத்திரிகை வெளியிடப்பட்டது.

(2) அதின்படிக்கு சேர்ந்த ஸபையில் ஆஸ்தான மஹா வித்வான் ப்ர-ஸ்ரீ. எம். ராமசேஷ ஶாஸ்த்ரிகளிட பிரேரணையின் படிக்கும்,ஆஸ்தான வித்வான் ப்ர-ஸ்ரீ. கானகானஹள்ளி நாராயண ஶாஸ்த்ரிகளே முதலானவர்களின் அனுமதியினுலும், ப்ர-ஸ்ரீ. வேதரத்ன, வைதிகஶிகாமணி அய்யாகனபாடிகளவர்கள் ஸபாத் யக்ஷராயிருக்க தீர்மானிக்கப்பட்டது.

(3) ஸபாபதியின் உத்தரவின்படிக்கு நஞ்ஜன்கூட் ம. ரா. வி. ரங்கண்ணு அவர்கள் தமக்கும் ஸ்ரீ உத்தராதி ஸ்வாமிகளவர்க ளுக்கும் நடந்த பத்திர வ்யவஹாரங்களை என்றால் "அத்வைத மதம் அவைதிகம்" இது முதலிய உத்வேககரமான வார்த்தைக ளுடன் கூடிய கடிதங்களைப் படித்தனர்,

(4) இப்படி எழுதியிருப்பது தேசகால வர்த்தமானங்க ளுக்கு விருத்தமும் அனுசிதமும் என்கிற விஷயத்தில்—

1 ப்ர. ஸ்ரீ. எம். ராமசேஷ ஶாஸ்த்ரிகள்.
2 ,, கானகானஹள்ளி நாராயண ஶாஸ்த்ரி அவர்கள்.
3 ,, ஸாம்ப ஶாஸ்திரி அவர்கள்.
4 ,, சாமராஜ நகரத்தின் ஸித்தாந்தி தம்மய்ய ஶாஸ்த்ரி அவர்கள்.
5 ,, ஸதாஶிவ ஶாஸ்த்ரி அவர்கள்.
6 ,, மஹாமஹோபாத்யாய தர்மாதிகாரிகளான விரூபாக்ஷ ஶாஸ்த்ரி அவர்கள்.
7 ,, பி. வெங்கடராம ஶாஸ்த்ரி அவர்கள்.
8 ,, கோபால ஶாஸ்த்ரி அவர்கள்.
9 டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ் ம. ரா. எம். சங்கரநாராயண ராயரவர்கள்.

10 அட்வொகேட் ம. ரா. ஸி. நரஸிம்ஹய்ய அவர்கள்.

11 ம. ரா. வெங்கடக்ருஷ்ணய்ய அவர்கள்.

12 மைஸூர் ஸ்பெஷல் கோர்ட் க்ளார்க் ம. ரா. ராகவேந்திர ராயரவர்கள்.

இவர்கள் யுக்தியுடன் கூடிய வார்த்தைகளைபாடினர்.

(5) பிறகு ஸபையில், ஸபாபதிகளின் ப்ரேரணையின்படிக்கு ஆன தீர்மானங்கள்:—

(i) ஸ்ரீ உத்தராதி ஸ்வாமி அவர்கள் எழுதுவித்திருக்கும் "அத்வைதமதம் அவைதிகமென்று" முதலிய ஶப்தங்கள் ஶாஸ்த்ர விசாரமில்லாமலே கேவலம் லௌகிக த்ருஷ்டியினால் விசாரம் செய்பவருக்கும் ஜுகுப்ஸாவஹமாயிருப்பதே (தாழ்மையை தரக் கூடியதாயிருப்பதே) யல்லாமல் ப்ராஹ்மண ஸாமான்யத்திற்கே தடுக்க முடியாமல் ஸம்பவித்திருக்கும் மகாவிபத்காலத்தில் இத்தகைய ஶப்தங்களைக் குறித்து விசாரம்செய்வதும் பரிஹாஸாஸ்பதமானதென்று ஸர்வ ஸம்மதமாய் தீர்மானிக்கப்பட்டது.

(ii) இதனால் நமக்குண்டாயிருக்கும் உத்வேகத்தை பரத கண்டத்தின் எல்லா சுற்றுப்பக்கங்களிலுமிருக்கும் அத்வைத பண்டிதர்களின் மூலமாய் ஆங்காங்கிருக்கும் அத்வைதி மஹா ஜனங்களுக்கு தெரியப்படுத்த வேண்டியதென்றும்,

(iii) இவ்விஷயத்தை பரதகண்டத்திலிருக்கும் 19 அத்வைதி மடாதிபதிகளுக்கும் "அத்வைதமதம் அவைதிகமென்பதை ஒப்புக்கொள்வீரா? அல்லது வைதிகமென்று ஸ்தாபிக்கக் கடவீரா? ஸ்தாபிக்கும் விஷயத்தில் தங்களிட ஏற்பாடு என்ன? என்பதை கூடிய சீக்கிரத்தில் உத்திரவளிக்க வேண்டு" மென்று ப்ரார்த்தித்துக்கொள்ள வேண்டியதென்றும்,

(iv) இந்த மேல்கண்ட தீர்மானங்களெல்லாம் ஆவஶ்யகங்களான இதர பாஷைகளில் மொழிபெயர்த்து அந்தந்த எழுத்துக்களில் அச்சிட்டு வெளிப்படுத்த வேண்டியதென்றும்,

(v) மேற்கண்ட தீர்மானங்களின் கார்யக்ரமத்தை நடத்துவதற்காக கீழ்க்கண்டவர்களை ஸபா கார்யதர்ஶியாகவும் மெம்பர்

களாகவும் ஏற்படுத்தி ஸந்தர்ப்பானுஸாரமாய் உப ஸபை மெம்பர்களின் எண்ணிக்கையை ஏற்றக்குறைவு செய்துகொள்ளுவதற்கு இச்சபைக்கு அதிகாரமிருக்கத்தக்கதென்றும் * தீர்மானிக்கப்பட்டது.

ஸபாத்யக்ஷர் :

ப்ர. ஸ்ரீ. வேதரத்ன வைதிகஶிகாமணி அய்யாகனபாடி அவர்கள்.

கார்யதர்ஶிகள் :

1. ம. ரா. அட்வகேட் பாலஹள்ளி ஸீதாராமய்ய அவர்கள். B. A., B. L.
2. ,, ,, நஞ்ஜன்கூட் வி. ரங்கண்ண அவர்கள்.

மெம்பர்கள் :

1. ப்ர. ஸ்ரீ. மஹாமஹோபாத்யாய தர்மாதிகாரிகளான விரூபாக்ஷ ஶாஸ்த்ரி அவர்கள்.
2. ,, ,, ஆஸ்தான மஹாவித்வான் மோடகானஹள்ளி ராமசேஷ ஶாஸ்த்ரி அவர்கள்.
3. ,, ,, பி. (B). வெங்கடராம ஶாஸ்த்ரி அவர்கள்.
4. ,, ,, கன்னம்பாடி கோபாலக்ருஷ்ண ஶாஸ்த்ரி அவர்கள்.
5. ,, ,, கானகானஹள்ளி நாராயண ஶாஸ்த்ரி அவர்கள்.
6. ,, ,, ஆஸ்தான வித்வான் ஸதாஶிவ ஶாஸ்த்ரி அவர்கள்.
7. ,, ,, ஸாம்ப ஶாஸ்த்ரி அவர்கள்.
8. ம. ரா. எம். வெங்கடக்ருஷ்ணய்யரவர்கள்.
9. ,, அட்வகேட் ஸி. நரசிம்ஹய்யரவர்கள். B. A., B. L.

---

* இவ்விஷயத்தை 1930-ம் வருஷத்திய மாத்வமித்திரனின் 90-வது பக்கத்திலும் காணலாம்.

10. ம. ரா. டிஸ்ட்ரிக்ட் போர்ட் மெம்பரும், இனும்தாரருமான எம். கே. க்ருஷ்ண ராயரவர்கள்.

மைஸூர் }
22-9-30. }

அய்யாகனபாடி,
ஸபாத்யக்ஷர்.

மேற் கூறியவாறு மைஸூர் அத்வைதி ஸபையோரால் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

அத்வைதமதாபிமானியான S. R. ஶர்மா என்பவர் 20-1-32ல் மறுபடியும் மேற்படி தீர்மானங்களை அத்வைதிகளுக்கு ஞாபகப்படுத்திக்கொண்டே, "உத்தராதிமடத்து ஸ்வாமிகளின் உபன்யாஸங்களைக்கேட்டு வெகுநாள் விசாரம்செய்து பாகல்கோட்டையிலுள்ள ஸாவுகாரரும், பாங்கருமான ம. ரா. ராமண்ணு என்பவரும், கிரகாம் ஜாகிர்தார் ஸ்ரீபாத ஶாஸ்த்ரிகளும், மைஸூரிலிருக்கும் H. ஸுப்பராவ் M. A. அவர்களும், மதராஸ் பச்சயப்பன் காலேஜ் (B. A. Hons.) வித்யார்த்தி ராமசந்த்ரமூர்த்தி என்பவரும் த்வைதமதமே நிஜமான வைதிகமத மென்றறிந்து அத்வைதமதத்தை விட்டு த்வைதமதத்தை ஆஶ்ரயித்திருக்கின்றனர். ஆகையால் கூடிய சீக்கிரத்திலேயே தகுந்த ஏற்பாடுகள் செய்து அத்வைதமதம் வைதிகமதமென்று ஸ்தாபிக்கவேண்டும்" என்று 19-அத்வைதி மடாதிபதிகளுக்கும், அத்வைதி பண்டிதர்களுக்கும் பத்திரிகை மூலமாய் விண்ணப்பித்துக்கொண்டிருக்கிறார்.

ஷ மைஸூர் அத்வைதி ஸபை மெம்பராயிருந்த மஹாமஹோபாத்யாய தர்மாதிகாரிகளான விரூபாக்ஷ ஶாஸ்த்ரிகளென்பவரே இப்போது 19-அத்வைத மடங்களிலொன்றாகிய கூட்லிகி மடத்திற்கு அதிபதிகளாயுமிருக்கிறார். இவ்வளவாயிருந்தும் 'அத்வைதமதம் அவைதிகமல்ல, பௌத்தமதமல்ல' என்று ஸ்தாபித்துக்கொள்ளும் ஏற்பாடுகள் ஒன்றும் இதுவரையிலும் நடக்காமலிருப்பதினால் த்வைதத்திற்கே விஜயம் என்றறிவிப்பதே இத்துந்துபியின் முழக்கமாகும்.

## 13. சோழ விஜயம்.

### நாலாவது (ஸ்ரீரங்கம்.)

பிறகு ஸ்ரீஸ்ரீகள் கோயமுத்தூர், தாராபுரம் மார்க்கமாய் ஸ்ரீரங்க க்ஷேத்திரத்திற்கு விஜயம் செய்தனர். அங்கு அவ்வூர் மஹாஜனங்களால் வரவேற்கப்பெற்று, தேவாலய மர்யாதைக ளுடன் தேவாலயத்திற்குச் சென்று ஸ்ரீரங்கநாதரின் தர்ஶனம் செய்துகொண்டு, அங்குள்ள சிஷ்யர்களை ஸ்ரீராம வேதவ்யாஸ தர்ஶனாதிகளால் புனிதராக்கிக்கொண்டிருந்தனர். ப்ரமோதூத வருஷம் மார்கசிர சுத்த த்ரயோதசி (3-12-30)ல் ஸ்ரீஸ்ரீ ரங்கநாயகி தாயாரிட ரங்கமண்டபத்தில், மத்தியஸ்தர்களால் ஏற்படுத்தப் பட்டிருந்தபடிக்கு மத்தியானம் ஸபை சேர்ந்தது. மும்மதஸ்த ரான பண்டிதர்களுடன் இரண்டாயிரம் ஜனங்கள் சேர்ந்திருந் தனர். அப்போது ஸ்ரீஸ்ரீ அஹோபில மடாதிபதிகளுக்கும் ஸ்ரீஸ்ரீ உத்தராதி மடாதிபதிகளுக்கும் நடந்த மோக்ஷத்திலுள்ள ஆநந்த தாரதம்ய விசாரம் எல்லோருக்கும் பரமானந்தகரமாயிருந்தது. ஸபை முடிவுபெற்றது. பிறகு சிலநாள் பிரதிதினம் ஸாயங்காலம் பண்டிதர்களின் ஸபையில் ஆநந்ததாரதம்ய விஷயத்தில் அநேக ப்ரமாணங்களைக் கூறி தாரதம்யம் அநாத்யனந்த காலத்திலு முள்ளதே என்று உபதேசித்து வந்தனர்.

பிறகு ஸ்ரீஸ்ரீகள் அங்கிருந்து புறப்பட்டு திருச்சானூரில் நடக்கும் ஸ்ரீமன் மத்வஸித்தாந்தாபிவ்ருத்தி காரிணீ ஸபையை நடத்துவதற்காக ஷை ஸபையோரால் அழைக்கப்பெற்று நாமகல், சேலம் மார்க்கமாய் ஷை ப்ரமோதூதவருஷம் புஷ்யசுத்த த்ரு தீயை தினம் திருச்சானூருக்கு விஜயம் செய்து ஷைஸபையை முடித்துக்கொண்டு, இராமேஶ்வரயாத்திரைக்காக புறப்பட்டு வேலூர், ஆரணி, திருக்கோயிலூர், தேஜோலிங்கமென்று ப்ரஸித்த மான திருவண்ணாமலை, மஞ்சகுப்பம் மார்க்கமாய் ஆங்காங்குள்ள சிஷ்யர்களுக்கு தத்வோபதேசங்களைச் செய்துகொண்டே கும்ப கோண க்ஷேத்திரத்திற்கு விஜயம் செய்தனர் என்று துந்துபியின் இவ்வொலி அறிவிக்கிறது.

## 14. சோழ விஜயம்.

### ஐந்தாவது (கும்பகோணம்)

ஸ்ரீஸ்ரீகள் 1931-ம் வருஷம் மார்ச் மாதம் 2௳ திங்கட்கிழமை ஸாயங்காலம் ஸ்ரீ உத்தராதி மடத்து படித்துரையின் மண்டபத்திலிருந்து கஜாரூடராய் மஹாவைபவத்துடனும், ஜயகோஷத்துடனும் தம் மடத்திற்கு வந்து சேர்ந்து எல்லோருக்கும் மந்த்ராக்ஷதைகளைத் தந்து அனுக்ரஹித்தனர்.

ஸ்ரீஸ்ரீகள் தேஜோலிங்க க்ஷேத்ரமான திருவண்ணாமலைக்கு விஜயம் செய்திருந்த காலத்தில் மைஸூர் ஸ்ரீமான் H. ஸுப்பராயரால் அத்வைதமதம் அவைதிகமென்று உபன்யாஸம் செய்துகொண்டிருப்பதைக்கேட்டு சுதேசமித்திரன் பத்திரிகை நிரூபரும் மற்றும் சில அத்வைதிகளும் ஷை உபன்யாஸகரையும் மடத்து திவானரையும் குறித்து—"அத்வைதமதம் அவைதிகமென்று ஸ்தாபிப்பதற்கு ஸ்ரீஸ்ரீகள் ஸமர்த்தரா? நாங்கள் இதை (Challenge) வாதத்திற்கு அழைப்பு ரூபமாய் ப்ரகடனம் செய்யலாமா" என்று வினவினர்.

அதற்கு திவானரவர்கள்-"நம்மிட ஸ்ரீஸ்ரீகளவர்கள் 'த்வைத ஸித்தாந்த ப்ரதிஷ்டாபனாசார்ய' ரென்கிற பிருதுடையவர். அவர் த்வைதமதமே ஸர்வ ப்ரமாண ஸம்மதமான ஸர்வோத்தமமான மதமென்கிற நிச்சயத்தை தம் ஸபையில் ஶிஷ்யருக்கு உபதேசித்துக்கொண்டே ஸஞ்சரித்துக்கொண்டிருப்பவர். இதுவே அவரிட தர்மம். ஸபையில் விசாரம் வாய்ந்தபோது அவர் அவஶ்யமாக த்வைதமே வைதிகமதமென்பதை ஸ்தாபித்துக் கொடுப்பதில் ஸந்தேஹமில்லை. சீடர்களின் ஸம்ஶய பரிஹாரத்திற்காக இது அவரால் செய்யப்படவேண்டிய அவஶ்யமான தர்மமேயாகிறது" என்று பதிலளித்தனர். பிறகு வத்திராயிருப்பு ஸ்ரீமான் A. ஸூர்யநாராயணய்யர் "அத்வைதமதம்தான் வைதிகமென்று வாதமூலமாய் ஸ்தாபனம் செய்ய அநேக பண்டித ஶிரோமணிகளான அத்வைதிகளும், முக்யமாய் ஸ்ரீ சிருங்கேரி ஸம்ஸ்தானம் ப்ரஹ்மஸ்ரீ தேதியூர் சுப்பிரமணிய ஶாஸ்த்ரிகளும் முயற்சியுள்ளவர்களாயிருக்கிறார்க" ளென்றும், வாதம் நடக்கும்

ஸ்தலம், மத்யஸ்தர்கள், பந்தயவஸ்து இவைகளின் விவரங்களை வெளியிடவேணுமாயும் 4-2-31-ல் மித்திரன் மூலமாய் வெளியிட்டனர். அதற்கு ஸ்ரீஸ்ரீகளின் திவான் அவர்கள்—"கும்பகோணத்தில் 4-3-1931 முதல் சுமார் ஒருமாதம் வரைக்கும் ஸபை நடக்கும். ஸபையில் நடக்கும் எல்லா வினுவிடைகளும் அச்சிட்டு வெளியிடப்படும். ஸபா விசாரங்களைப் பார்த்துக்கொள்ளவும், பந்தயம் முதலியவற்றை ஏற்பாடு செய்வதற்காகவும் ஓர் கமிட்டி ஏற்படுத்தப்படும்" என்று அதே மித்திரன் மூலமாய் அறிவித்ததேயல்லாமல் ஸ்ரீமான் தேதியூர் ஶாஸ்திரி முதலியோருக்கும் அறிவித்திருந்தனர். அதன்படிக்கே ப்ரொபெஸர் கே. எஸ். சுந்தர ராமன் முதலிய ஆரு மெம்பர்களுடன் கூடிய வேதாந்த விமர்ஶினீ மகாஸபை ஒன்று ஏற்படுத்தப்பட்டு அதன் மூலமாய் எல்லா கார்யங்களும் ஸித்தமாக்கப்பட்டிருந்து 4-3-1931 புதன்கிழமை ஸபை ஆரம்பமுமாய் 24-3-31 வரைக்கும் 21 நாள் நடந்தது. இவ்வாதத்தில் முக்யமாய் உற்சாகமுள்ள தேதியூர் சுப்பிரமணிய ஶாஸ்திரிகள் தவிர மற்ற அநேக மும்மதஸ்தரான பண்டிதர்கள் வந்திருந்தனர்.

அச்சபையில் "முதன் முதல் ஸ்ரீபகவத்கீதை த்வைதத்தைச் சொல்லுகிறதா? அத்வைதத்தைச் சொல்லுகிறதா? என்கிற விசாரம் நடக்கவேணும், பிறகு ஶ்ருதி ஸூத்ரங்களின் விசாரம் நடக்கவேணும். கீதாஶ்லோகத்திற்கு கீதா ஶ்லோகத்தினாலேயே அர்த்தம் சொல்லவேண்டும். அன்றன்று நடக்கும் விசாரங்களை எழுதி வ்யவஸ்தாபகரான ப்ரொபஸர் சுந்தராராமய்யர், வக்கீல் நரசிம்ஹராவ், பண்டிட் அ. கோபாலாசார்யர் இவர்களிட கையெழுத்தாகவேண்டும். மறுநாள் முன் விசாரம் நடக்க வேண்டும்" என்று ஏற்படுத்தப்பட்டது. பிறகு ஸ்ரீ கீதையில் த்வைதத்திற்கு ஸாதகமான வாக்யங்களெத்தனை? அத்வைதத்திற்கு ஸாதகங்களான வாக்யங்களெத்தனை? என்கிற கேழ்வியுண்டாகவே, ஸ்ரீஸ்ரீகள் கீதா முழுவதும் த்வைதத்திற்கே ஸாதகமென்று கூறினர். பிறகு—அனந்தக்ருஷ்ண ஶாஸ்த்ரிகள் 'க்ஷேத்ரஜ்ஞம் சாபி மாம் வித்தி' என்கிற ஶ்லோகம் தம் அத்வைதத்திற்கு ஸாதகமென்று சொல்லவே, அதன்பேரில் விசாரம் நடந்

தது. பிறகு ஸ்ரீஸ்ரீகள் அந்த ஶ்லோகத்திற்கு வேறு கீதா ஶ்லோகத்திலேயே அர்த்தம் சொல்லி, சங்கர பாஷ்யத்திலும் அதே அர்த்தம் செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்லவே, ஶாஸ்திரிகள்—தாங்கள் கீதா ஆதாரத்தைச் சொல்லாமல் சங்கரபாஷ்யத்தைச் சொல்லியது பிசகு என்றார். அதற்கு ஸ்ரீஸ்ரீகள் அதையே சொல்லியிருக்கிறோம் என்றார். இல்லை என்று ஶாஸ்திரிகள் சொல்லவே ஸ்ரீஸ்ரீகள் முன்னுள் மத்யஸ்தரிட கையெழுத்துடன் கூடியிருந்த பத்திரத்தை எடுத்துக்காட்டினர். அதற்கு அநந்தக்ருஷ்ண ஶாஸ்த்ரிகளுக்கு பதில் சொல்லத் தோன்றாமல் ஸபையிலிருந்து வெளியேறினர். இவ்விஷயங்களெல்லாம் ஸபா வ்யவஸ்தாபகரின் கையெழுத்துகளுடன் கூடிய பத்திரத்தின் போடோவுடன் அச்சபையின் ரிபோர்ட்டில் அச்சிட்டு வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன. அதில் விவரமாய் காணலாம். தவிர 1931-ம் வருஷத்திய மாத்வ மித்திரனின் 239—276-வது பக்கங்களிலும் காணலாம்.

## ஸபா வ்யவஸ்தாபகரின் கையெழுத்துக்களுடன் கூடிய பத்திரத்தின் போட்டோ.

"ஏதத்யோவேத்தி தம்ப்ராஹு: க்ஷேத்ரக்ஞ இதிதத்வித:"



என்று சொல்லப்பட்டிருப்பதால் க்ஷேத்திரக்ஞபதத்திற்கு க்ஷேத்திரத்தை அறிந்தவனென்று பகவானுலேயே வ்யுத்பத்தி காட்டப்பட்டிருக்கிறது. அது பரமாத்மாவுக்கும் பொதுவானது. அவரும் க்ஷேத்திரத்தை அறிகிறார். மேலும் "தத்க்ஷேத்ரம் யச்ச யாதிருக்ச யத்விகாரி யதஶ்ச யத், ஸசயோயத்ப்ரபாவஶ்ச தத்ஸமாஸேனமே ஶ்ருணு" என்றுமுதலில் சொல்லி விட்டு பிறகு மேற்கொண்டு 'மகாபூதான்யஹங்காரோ புத்திரவ்யக்த ஏவ ச, இந்திரியாணி தசைகம்ச பஞ்ச சேந்திரியகோசரா:; ஏதத்க்ஷேத்ரம் ஸமாஸேன ஸவிகாரமுதாஹ்ருதம்' என்று பகவானுலேயேக்ஷேத்திரபதத்தின் அர்த்தம் மகாபூதாதி திருத்யந்தமான வஸ்து ஸமூஹமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இது "யந்நிர்திஷ்டம்... இதம் சரீரமிதி தத்தத்சப்தேன பராம்ருசதி" என்றுள்ள தத்க்ஷேத்திரமென்னும் ஶ்லோகத்தின் சாங்கர பாஷ்யத்தாலும் தெரியவரு

கிறது. அந்த எல்லா பதார்த்தங்களின் ஞானம் பரமாத்மாவுக்குத்தான் பொருந்துகிறது. ஜீவனுக்குப் பொருந்துவதில்லை. ஆகவே, க்ஷேத்திரக்ஞ சப்தமானது பரமாத்மாபரம்தான் என்று ஸித்திக்கிறது. மாம் என்னை முன்கூறிய க்ஷேத்ர விஷயகமான ஞானத்தோடுகூடிய பரமாத்மாவென்று அறிவாய் என்று அந்த வாக்யத்திற்கு அர்த்தம் ஏற்படுகிறது. இப்படியிருக்க இந்த ஶ்லோகத்தால் ஜீவன் பிரஹ்மம் இவர்களின் அபேதம் எப்படி ஸாதிக்க முடியும்.

(ஒப்பம்) K. S. (ப்ரொபஸர், K. சுந்திரராமய்யர்)

(ஒப்பம்) R. N. (வக்கீல் R. நரஸிம்ஹ ராவ்)

(ஒப்பம்) அ. gா. (அக்னிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்)

(2) அதே கும்பகோணத்தில் ஸ்ரீ சங்கராசார்யரிடமடத்து ஆதரவின் கீழ் நடைபெறும் 'ஆர்ய தர்ம' மென்கிற மாத பத்திரிகையில்—"த்வைதிகள் ஒரு லக்ஷம் ஜனங்களிருக்கிறார்கள். அத்வைதிகள் இரண்டு லக்ஷம் ஜனங்களிருக்கிறார்கள். ஒவ்வொருவரொவ்வொருவரை பரஸ்பரம் கொன்றபோதிலும் லக்ஷம் த்வைதிகளும் லக்ஷம் அத்வைதிகளும் மடிவடைந்தபோதிலும், லக்ஷம் அத்வைதிகளே மீருகிறபடியால் அத்வைதத்திற்கே ஜயம்" என்று எழுதப்பட்டிருக்கிறது. அதினால் அத்வைதிகளுக்கு தம்மிட மதம் துர்ப்பலமானதால் வாதத்தில் தம்மால் த்வைதிகளை வெல்லமுடியாதென்றும், த்வைதாத்வைதிகளுக்கு போருண்டாகுமாகில் த்வைதிகளைக் கொன்று தாம் ஜயமடையலாமென்றும் அவர்களின் கருத்தென்று வெளியாகிறது. அதுவும் ஸாத்தியமல்ல. மாத்வர்கள் மாத்திரமே த்வைதிகளென்று ஷியாரின் கருத்தெனத் தோன்றுகிறது. அத்வைதிகள் இரண்டு லக்ஷம் ஜனங்கள்தவிர உலகிலுள்ள மற்றெல்லா மதத்தினரும் ரக்ஷகரான ராஜரும் த்வைதிகளேயாகையால் இவ்விதத்திலும் அத்வைதத்திற்கு ஜயமென்பது ஶஶவிஷாணத்தைப்போன்ற அத்வைத ப்ரஹ்ம ஸ்வரூபமேயாகும் என்கிற விஷயத்தை இம்முழக்கம் அறிவிக்கிறது.

## 15. புதுக்கோட்டை விஜயம்.

ஸ்ரீஸ்ரீஸ்வாமிகள் பிறகு கும்பகோணத்திலிருந்து புறப்பட்டு மன்னார்குடி, தஞ்ஜாவூர் மார்க்கமாய் புதுக்கோட்டைக்கு விஜயம் செய்தனர். அங்கு ஸம்ஸ்தானத்தாலும் மகாஜனங்களாலும் மரியாதைகள் நடந்தன. அங்குள்ள ஸம்ஸ்க்ருத காலேஜ் தலைமை உபாத்தியாயரும் தானாதிகாரியுமான ஸ்ரீமான் காளி ரங்காசார்யரென்னும் விசிஷ்டாத்வைத பண்டிதர் "இன்று அத்வைத மதத்தை அவைதிகமென்று சொல்லும் ஸ்ரீ ஸ்வாமிகள் நாளை விசிஷ்டாத்வைதத்தை அவைதிகமென்று சொல்லமாட்டாரா? இப்போதே இதை அடக்கிப்போடவேண்டு"மென்றுவெகு ஆடம்பரமான வியாஸங்களை புதுக்கோட்டை 'ஜனமித்திரனிலும்' கும்பகோணம் 'ஆர்யதர்மத்திலும்' * எழுதிக்கொண்டிருந்தார். அந்த வியாஸங்

---

* இவ்வாசார்யரின் மததத்வங்கள் வேதஸம்மதமாய் வேதாதிகளிட ஆதாரங்களுடன் கூடியதாயிருக்குமாயின் இவ்வாசார்யர் இவ்வித சந்தேகமடைந்து பயப்படவேண்டிய காரணமே இல்லை. இவ்வாசார்யர் கலவரப்படுவதினாலேயே "மடியில் கனமிருந்தால் மனதில் பயம்" என்றவாறு அம்மதமும் (விசிஷ்டாத்வைதம்) வேதாதிகளின் ஆதாரமற்றதாகையால் கண்டனத்திற்கு அர்ஹமானதென்று வித்தமாகிறது.

தவிர—அம்மதத்தின் டீகாசார்யரான ஸ்ரீமத் வேதாந்த தேசிகாசார்யரவர்கள் 'சததூஷணீ' என்னும் நூலின் மூன்றாவது ஸ்லோகத்தில் "ப்ராசீமுபேத்ய பதவீம் யதிராஜ த்ருஷ்டாம் தத் ஸன்னிக்ருஷ்டமபிவா மதமாஸ்ரயந்த:। ப்ராஜ்ஞா யதோதித மிதம் ஸௌகவத் படந்த: ப்ரச்சன்ன பௌத்தவிஜயே பரிதோ யதத்வம்" என்று எழுதி இருக்கிறார். அதின் கருத்து—யதிராஜரால் கண்டுகொள்ளப்பட்ட முன்னிருந்த மார்க்கத்தையடைந்து அவரிட மதத்திற்கு அடுத்த மதத்தை (மத்வமதத்தை) ஆஸ்ரயித்து, புத்திமான்கள் அவர்களால் சொல்லப்பட்டவைகளை கிளிப்பிள்ளைகளைப்போல் சொல்லிக்கொண்டே, ப்ரச்சன்ன பௌத்தத்தை (அத்வைத மதத்தை) வெல்லுவதில் ஊக்கமடையுங்கள் என்று சொல்லியிருப்பதினால் "எப்போதும் கண்டிதமாய் நிலைநிற்கக்கூடிய த்வைதமதத்தை கைக்கொண்டு நீங்களெல்லோரும் மேன்மையடையுங்கள்" என்று அவ்வாசார்யர் தம்மிட ப்ரிய சிஷ்யர்களுக்கு உபதேசித்திருக்க அதற்கு விருத்தமாய் இந்த ரங்காசார்யரவர்கள் 'அஸாத்ய கார்யே தவ சோத்யமோயம்' என்றவாறு அஸாத்யமான கார்யத்தில் ஊக்கத்தைக் காட்டியிருப்பது மிகவும் வியக்கத்தக்கதேயாகும்.

களைத் தாக்கி எழுதிய ஸ்ரீமான் N. ஸஞ்ஜீவாராவ், M. A., L. T. முதலியவர்களையும் குறைத்துப் பேசியிருந்தார். ஸ்ரீ ஸ்வாமிகள் அவரை வரவழைத்து 28-4-31ம் தேதியன்று அவருடன் பேசும் பொழுது அடியிற்கண்டவாறு இன்பமான ஸம்பாஷணை நடந்தது. அவைகளாவன:—

**ஸ்ரீஸ்ரீகள்**—ஆர்யதர்மத்தில் 'ஸ்ரீ ஸ்வாமிகள் அத்வைத மதம் அவைதிகமென்று சொல்வதுகூடாது' என்று எக்காரணத்தைக் கொண்டு எழுதினீர்களோ?

**ரங்கா:**—அத்வைதமும் வேதபிரமாணங்களுடன் கூடியதேயாகையால் எழுதினேம்.

**ஸ்ரீஸ்ரீகள்:**—அந்த விஷயம் பிறகு விசாரிப்போம். உங்கள் பரமகுருவான ஸ்ரீமத் ராமானுஜாசாரியர் **அத்வைதம் பிரச்சன்ன பௌத்தமத** மென்று தங்கள் நூலில் சொல்லியுளரா?

**ரங்கா:**—ஆம் சொல்லியுளர்.

**ஸ்ரீஸ்ரீகள்:**—ஸ்ரீமத் ராமானுஜாசார்யர் பேதத்தைச் சொல்லியுளரா? அபேதத்தைச் சொல்லியுளரா?

**ரங்கா:**—பேதத்தையே சொல்லியுளார்.

**ஸ்ரீஸ்ரீகள்:**—அப்படியாயின் அத்வைதம் அப்ராமாணம்தானே?

**ரங்கா:**—அப்படிச் சொல்ல முடியாது. அத்வைதத்திற்கும் பிரமாணங்கள் அநேகமிருக்கின்றன.

**ஸ்ரீஸ்ரீகள்:**—அவைகளை பிரமாணமாக நீர் ஒத்துக்கொள்வீரா?

---

பெங்களூரிலிருக்கும் V. N. தேசிகாசார்யர் B. A. என்பவர் விசிஷ்டாத்வைதத்திலுள்ள தோஷங்களையும், த்வைதத்திலுள்ள குணங்களையும் ஸ்ரீமத் தேசிகாசார்யரிட உபதேசங்களையும் நன்காராய்ந்து அம்மதம் தோஷயுக்தமான தென்றறிந்து அம்மதத்தை விட்டு, ஸ்ரீமத்வமத தீக்ஷையைப்பெற்று மாத்வ அனுஷ்டானங்களை அனுஷ்டித்துக்கொண்டே அக்ஷோப்யாசார்யரென்னும் பெயருடன் விளங்குகிறுர். (ஸபாஸாரஸங்க்ரஹம் Vol. III, முன்னுரை பக்கம் V.)

3-12-1930-ல் ஸ்ரீரங்கத்தில் இவ்விஷயங்களில் விசாரம் நடந்துமிருக்கிறது.

ரங்கா:—அத்வைத மத ஶாஸ்திர ரீதியில் அத்வைதம் பிரமாணம்தான்.

**ஸ்ரீஸ்ரீகள்:**—அப்படியானல் பௌத்த மதப்படி பௌத்த மதமும் பிரமாணமே. அப்படியே எல்லா மதங்களும் அந்தந்த ஶாஸ்திர ரீதியில் பிரமாணங்கள்தான். ஆகவே எல்லா மதங்களும் பிரமாணங்களே யாகவேண்டுமல்லவோ? அப்படியிருக்க அத்வைதிகள் இதர மதங்களைக் கண்டிப்பானேன்?

ரங்கா:—அப்படிச் சொல்லலாமா? அத்வைத மதமும் வைதிகமென்று வாதம் செய்யத்தயாராக இருக்கிறேன்.

**ஸ்ரீஸ்ரீகள்:**—அப்படியாயின் உங்களிட சிடர்களுக்கு நீர் பாடம் சொல்லும்பொழுது உங்களிட பரமாசார்யர் சொன்னதற்கு முரண்பாடாக 'அத்வைதம் ப்ரமாணம்தான், பேதம் ஸத்யம், அபேதமும் ஸத்யம், அத்வைதம் ப்ரச்சன்ன பௌத்த மதமல்ல' என்று சொல்லுவீரா?

ரங்கா:—அப்படி நான் சொல்லமாட்டேன். **அத்வைதம் ப்ரச்சன்ன பௌத்தம்தான். பேதம் ஸத்திய** மென்றே சொல்வேன்.

**ஸ்ரீஸ்ரீகள்:**—அப்படியாகில் ஆர்ய தர்மத்தில் ஏன் அப்படி எழுதினீர்?

ரங்கா:—ஸ்வாமி! நான் வீட்டில் கதவுகளை தாப்பாளிட்டுக் கொண்டு என்னிட சிடர்களுக்கு 'அத்வைதம் ப்ரச்சன்ன பௌத்தம்தான், பேதம் ஸத்யம் தான்' என்று சொல்லுவேன். ஆனல் நான் இந்த ஸம்ஸ்தானத்தில் தானுதிபதியாய் இருக்கிறேன். அநேகம் பெயர்கள் ஸ்மார்த்தாள் என் ஸ்நேகிதர்களாயிருக்கிறார்கள். ஆனதால் நான் ஸபையில் அத்வைதம் வைதிகமென்றே வாதிக்கவேண்டியிருக்கிறது.

இவ்விதமாக ஸம்பாஷணைகள் நடந்து, பிறகு அப்பண்டிதருடன் வழக்கப்படிக்கு சில வாக்யார்த்த விசாரமும் நடைபெற்றிருக்கிறது என்கிற விஷயத்தை 1931-வது வருஷத்திய மித்ரனில் 315-வது பக்கத்தில் காணலாமென்று இத்துந்துபி முழங்குகிறது.

பிறகு ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிகள் மானுமதுரை மார்க்கமாய் ஸ்ரீராமேஶ்வரத்திற்கு விஜயம் செய்து ஒரு வாரம் அங்கு தங்கி, ஸ்ரீமத்வாசார்யர், ஸ்ரீ சிருங்கேரி மடாதிபதிகளை வாதத்தில் வென்ற இடமாகிய ராமேஶ்வர தேவாலயத்திலுள்ள ஸர்வ தீர்த்தக் கரையில் சம்பரதாயப்படிக்கு ஸ்ரீராம பூஜாதிகளை நடத்திக்கொண்டு அங்கிருந்து ராமநாதபுரம் மார்க்கமாய் மதுரைக்கு விஜயம் செய்தனர்.

---

## 16. பாண்டிய விஜயம்.

(மதுரை)

அங்கு 17-5-31 ஸாயங்காலம் 4-மணிக்கு ஸ்ரீ ஸ்ரீகளுக்கும் ஸ்ரீமான் தேதியூர் சுப்பிரமண்ய ஶாஸ்த்ரிகளுக்கும் ஸபையில் வாதமாரம்பமாய் ஒன்றிரண்டு கோடிகள் நடந்ததும் ஶாஸ்த்ரிகள் ஸாயங்காலமானதும் ஸந்த்யாவந்தனத்திற்கு நேரமாய்விட்டதென்று சொல்லி எழுந்து விட்டனர். அப்போது ஸ்ரீ ஸ்ரீகள் கும்பகோணத்தில் விசாரம் நடந்ததுபோலவே இங்கும் இரவு 9-மணி வரைக்கும் விசாரம் நடக்கலாமே என்றார். அதற்கு ஶாஸ்த்ரிகள் —தான் மறுநாள் மத்யானம் சிருங்கேரிக்குப் போகவேண்டியிருப்பதால் சில காரியங்களிருக்கின்றனவென்றும், மறுநாள் காலை சீக்கிரத்திலேயே வந்து வாதத்தை முடித்துக்கொண்டு போவதாயும் அறிவித்தார். மறுநாள் (18-5-31) காலை ஸ்ரீ ஶாஸ்த்ரிகள் வெகுநேரம் கழித்து வரவும், முதல் நாள் நடந்த வாதத்தின் பேரில் ஸ்ரீ ஸ்வாமிகள் ஆக்ஷேபணை சொல்லி அவைகளை ஸம்ஸ்க்ருதத்தில் எழுதுவித்து கையொப்பமாகி முடிய சுமார் 11½-மணி ஆயிற்று. அப்போது ஶாஸ்த்ரிகள் இதற்கு மேல் தான் பதில் கூறி எழுந்து போவதாய்ச் சொல்லவே, ஸ்ரீ ஸ்ரீகள்—"சிருங்கேரி ஸ்வாமிகள் மற்றொருவருக்கு ஆஶ்ரமம் கொடுக்கிறபடியால் போஜனமானதும் நான் போகவேணுமென்று சொல்வீராகையால் இப்போதே நீர் சொல்லும் பதிலின்பேரில் என்னிட ஆபேக்ஷபணைக்கு அவகாசம் கொடுக்கவேணும், அல்லது மறுபடியும் மத்தியானம் ஸபை நடக்க வேணும் என்றார்.

அதற்கு ஶாஸ்த்ரிகள்—“எனக்கு மத்தியானம் ஸபை நடத்துவதற்கும் அவகாசமில்லை, என்னிட உத்திரத்திற்கு தங்களால் கொடுக்கப்படும் ப்ரத்யுத்தரத்தைக்கேழ்க்கவும் எனக்கு அவகாசமில்லை” என்று சொன்னார். அதற்கு ஶ்ரீஶ்ரீகள் ‘நமக்கு ப்ரத்யுத்தரம் கொடுக்க அவகாஶமில்லையாகில் தங்களிட உத்திரத்தை நாம் கேழ்க்கமாட்டோம்’ என்று சொல்லிக்கொண்டேயிருக்க ஶாஸ்த்ரிகள் ஸபையினின்றும் வெளியேறினர். பிறகு அச்சபையில் நடந்த நடவடிக்கைகளையும் அவரே மதுரை அத்வைத ஸபையின் ஆதரவில் ப்ரஸித்தமாயிருக்கும் ‘த்வைதாத்வைத விசாரம்’ என்னும் புத்தகத்தில் வெளிப்படுத்தியிருக்கிறார்.

மற்றும் அப்புத்தகத்தின் 4-வது பக்கத்தில் எழுதியுள்ள (1) “தத்வமஸி மஹாவாக்யத்தில் முக்யார்த்தத்தை விட்டுவிடுவது (தோஷம்) (2) லக்ஷணையினால் அபேதந்தான் போதிக்கப்படுகிறது என்றதில் ப்ரமாணமில்லை, (3) ஜீவப்ரஹ்ம அபேத விஷயத்தில் ப்ரமாணமில்லை என்கிற ஶ்ரீஶ்ரீஸ்வாமிகளின் பூர்வபக்ஷத்திற்கு ஷை புத்தகத்தின் 9-வது பக்கத்தில் முதலாவது ஸமாதானத்தில் அத்வைதிகள் தாங்கள் ஜயமடைவதற்கு ப்ரஹ்மாஸ்த்ரமென்று வைத்துக்கொண்டிருக்கும் “தத்வமஸி என்ற மஹாவாக்கியத்திலோ அபேத போதகமான * ஸாமாநாதிகரண்ய ப்ரதீதி பாதிதமாயிருப்பதினால் முக்யார்த்த பரித்யாகம் தோஷமாக ஆகாது” என்று எழுதியுளர். 2-வது ஸமாதானத்தில் “லக்ஷணை அபேதத்தைத்தான் போதிக்கிறது என்றதில் அபாதிதமான ஸாமாநாதிகரண்ய ப்ரதீதியே நியாமகம்” என்றும்; 4-வது ஸ்மாதானத்தில் “அபேதத்தில் அபாதிதமான ஸாமாநாதிகரண்ய ப்ரதீதியே ப்ரமாணமாகும்” என்றும் எழுதியிருக்கிறார்.

ஶாஸ்த்ரிகள் இவ்விதமாக எழுதியிருப்பதினால்—“லக்ஷணை அபேதத்தைத்தான் போதிக்கிறது” என்ற விஷயத்திலும், “அபேதத்தில் ப்ரமாணமுண்டு” என்னும் விஷயத்திலும் அபாதித ஸாமாநாதிகரண்ய ப்ரதீதியே முக்ய ஆதாரமென்றும், தத்வமஸி வாக்யம் பாதித ஸாமாநாதிகரண்யத்துடன் கூடியதாகையால் அது ஷை விஷயத்தில் ஆதாரமாக மாட்டாதென்றும் ஏற்படுகிறது.

* இரண்டு பதங்களும் ஒரே வேற்றுமையாயிருப்பது.

ஶாஸ்த்ரிகள் ஷை விஷயங்களில் அவ்விதமான (அபாதித் ஸாமாநாதிகரண்யத்தையுடைய) வாக்கியங்களைக்* காட்டாமலே, பாதித ஸாமாநாதிகரண்யத்துடன் கூடிய "தத்வமஸி என்ற வாக்யத்தை அவலம்பித்து அத்வைதமே வைதிகம் என்று ஸித்தாந்தம் செய்யப்பட்டது" என்று 9-வது பக்கத்தில் எழுதியிருப்பது எவ்வளவு ஹாஸ்யாஸ்பதம் என்பதை வாசகர்களே அறியலாம்.

மற்றும் அப்புத்தகத்தின் 26-வது பக்கத்தில் ஸ்ரீஸ்ரீகளின் ஆக்ஷேபத்திற்கு தான் சொல்லப்போகும் பதிலையும் அடியில் கண்டவாறு எழுதியுளர்:—

"யேநேந்த்ரியேண யா வ்யக்தி: க்ருஹ்யதே தேனைவ தன்னிஷ்டா ஜாதி: ததபாவஶ்ச க்ருஹ்யதே" எந்த இந்த்ரியத்தினால் எந்த பொருள் அறியப்படுகிறதோ அதே இந்த்ரியத்தினால் அதின் அபாவமும் அறியப்படுகிறது என்று நியமமிருப்பதால், த்வைதம் வைதிகமான (வேதத்தினால் க்ரஹிக்கப்பட்ட) பிறகு த்வைதாபாவரூபமான அத்வைதமும் வைதிகமே (வேதத்தினால் ஸித்தமானதே) யாகிறது. ஆகையால் ஸ்ரீ உத்தராதி மடத்து ஸ்வாமிகள் த்வைதம் வைதிகமென்று ஒத்துக்கொண்ட பிறகு, அத்வைதமும் வைதிகமென்று ஸித்தமாகிறது. த்வைதம் வைதிகமென்று சொல்லிக்கொண்டே அத்வைதம் அவைதிகமென்று சொல்வது 'மே மாதா வந்தியா = என் தாய் மலடி' என்று சொல்வதைப்போல் வ்யாஹதபாஷணமாக வில்லையா? என்று எழுதியிருக்கிறார்.

ஷை நியாயத்தை ஶாஸ்த்ரிகள் சொல்லியவாறு உபயோகப் படுத்துவார்களேயாயின்—இந்த வீடு எனது எனது என்று வாதி ப்ரதிவாதிகள் நியாயஸ்தானத்தில் வாதமாடிக்கொண்டிருக்க வாதி இந்த வீடு எனது பிரதிவாதியினுடையதல்ல என்று எந்த ஆதாரத்தினால் ஸித்தப்படுத்திக்கொள்ளுவானோ அதே ஆதாரத்தினால்

---

* தத்வமஸியே பாதித ஸாமாநாதிகரண்ய ப்ரதீதியுடன் கூடியதான பிறகு—அபேதத்திலும் லக்ஷணைக்கு அபேதபரமாகவே அர்த்தம் செய்யவேண்டுமென்பதிலும் அபாதிதமான ஸாமாநாதிகரண்ய ப்ரதீதியையுடைய வேறு வாக்யத்தை எங்கிருந்து எடுத்துக்காட்டுவது?

வாதிக்கு விருத்தமாக இவ்வீடு வாதியினுடையதல்ல என்கிற ப்ரதிவாதியின் பக்ஷமும் ஸித்தமாய், ப்ரதிவாதிக்கு இவ்வீடு வாதியினுடையதல்ல என்று ஸாதிக்கும் கஷ்டமே இல்லாமற் போகவேண்டியதாகும். இவ்விதமாகவே ஸேஶ்வரவாதிகளென்கிற அபிமானமுள்ள அத்வைதிகள் நிரீஶ்வரவாதிகளான சார்வாகர்களுடன் வாதம் செய்யும்போது ஈஶ்வர ஸித்திக்காக எந்த ப்ரமாணத்தை அத்வைதிகளுதஹரிக்கிறார்களோ அதே ப்ரமாணத்தினால் அதின் அபாவமும் என்றால் ஜகத்துக்கு நிரீஶ்வரத்வமும் ஸித்தமாய் நிரீஶ்வரத்வத்தை ஸாதிக்கும் சார்வாகனுக்கு யாதொரு கஷ்ட மில்லாமற் போகவேண்டியதாகும்.

இது முதலிய சிறுவர்களுக்கும் எளிதில் தோன்றும் தோஷங்கள் ஶாஸ்த்ரிகளின் பக்ஷத்தை சின்னபின்னமாக்கியே யிருக்கின்றன. ஒரே ஆதாரத்தினால் ஒரு ப்ரமேயமும் அதற்கு விருத்தமான ப்ரமேயமும் ஸித்தமாகும் என்று சொல்லும் ஶாஸ்த்ரிகளின் பாண்டித்யம் எத்தகையதென்பதையும் இத்தகையோருக்கு நியாயமெப்படி கிடைக்குமென்பதையும் வாசகர்களே ஊஹித்துக்கொள்ளலாம். இவ்விஷயம் 1931-வருஷம் செப்டம்பர் மாதம் 16, 17-தேதி ஸ்வதேசமித்திரனில் விசாரிக்கப்பட்டிருக்கிறதென்று துந்துபியின் இம்முழக்கம் அறிவிக்கிறது.

---

## 17. கேரள விஜயம்.

### (அனந்தஶயனம்)

பிறகு ஸ்ரீஸ்ரீகள் மதுரையிலிருந்து புறப்பட்டு அனந்தஶயனத்திற்கு (திருவாங்கூருக்கு) விஜயம் செய்து அங்கிருக்கும் சிடர்களுக்கு 'அத்வைதமதம் அவைதிகமான பௌத்தமதமே த்வைதமதமே வைதிகமானதாகையால் அதிற் சொல்லியவாறே அனுஷ்டித்து ஈஶ்வராநுக்ரஹத்தினால் ஐஹிகபாரத்ரிக ஸுகத்தையடைய வேண்டியது' என்று உபதேசித்து, அங்கு ப்ரதிபடரை (எதிரிகளை)க் காணாமல் அங்கிருந்து புறப்பட்டு கன்யாகுமரி, தோதாத்ரி முதலிய க்ஷேத்ர யாத்திரைகளைச்செய்துகொண்டு க்ரமமாய் 1931-வருஷம் ஜுலை மாதம் 31உ மதராஸுக்கு விஜயம் செய்தனர்.

## 18. மதராஸ் விஜயம்.

அங்குள்ள தம் மடத்தில் ப்ரதிதினமும் ஸாயங்காலம் 6-மணி முதல் 8-மணி வரைக்கும் தத்வோபதேஶங்களினுற் தம் சீடர்களின் ஸம்ஶயாதிகளைப் போக்கிக்கொண்டிருந்து, தத்வமஸ்யாதி ஶ்ருத்யர்த்த விசாரம், புத்தஜயந்தி உபன்யாஸம் முதலிய புத்தகங்களை இயற்றுவித்து அத்வைதமதம் பௌத்தமதமே என்று ஸ்தாபித்தனர். அச்சமயத்தில் (1931-வருஷம் அக்டோபர் மாதத்தில்)கல்கத்தாவிலிருக்கும் மஹாமஹோபாத்யாய,அனந்தக்ருஷ்ண ஶாஸ்திரிகள் ஸ்ரீஸ்ரீகளிடத்திற்கு வந்து, தான் வாக்யார்த்த விசாரத்தில் உத்ஸாஹமுள்ளவராயிருப்பதாயும், ஸ்ரீஸ்ரீகளின் ஸன்னிதியில் சிலநாள் விசாரம் செய்வதாயும் அறிவித்தனர். அதற்கு ஸ்ரீஸ்ரீகள் மிகவும் ஸந்தோஷமடைந்து ஸபையை நடத்துவதற்குத் தயாராயினர். அதற்கு ஶாஸ்த்ரிகள் தனக்கு ஏதோ கார்யமிருப்பதால் க்ராமாந்தரத்திற்கு போய் பத்து நாளைக்குள் வந்து ஸபை நடத்துவதாய்ச் சொல்லி உத்திரவுபெற்று *சென்றனர். மருபடியும் பத்துநாள் கழித்து வந்து ஸபை சேர்ப்பதற்கு இத்தேசத்திலிருப்பவர்கள் ஒத்துக்கொள்ளவில்லை யாகையால் ஸ்ரீஸ்ரீகள் நம்மிட தேசத்திற்கு வந்தால் அங்கு ஸபை சேர்க்க ஏற்பாடு செய்கிறேன் என்று சொல்லி உத்திரவுபெற்றுசென்றனர். பிறகு ஸ்ரீஸ்ரீகள் அநந்தக்ருஷ்ண ஶாஸ்த்ரிகளின் கோறிக்கையை நிறைவேற்றுவதற்காக அத்தேசத்திற்குப் போவதற்காகப் புறப்பட்டு, திருச்சானூர், குண்டூர், இராஜமந்திரி மார்க்கமாய் 19-3-1932ல் விஜயநகரத்திகு விஜயம் செய்தனர்.

---

* ஸபை நடத்த தம்மிடகுருக்களான காமகோடி பீடாதிபதிகளின் உத்திரவு பெறுவதற்காக சித்தூருக்குச் சென்றிருந்தனரென்றும் அங்கு ஸ்ரீகாமகோடி பீடாதிபதிகள் ஸ்ரீ உத்தராதி மடாதிபதிகளுடன் வாதத்திற்குப் போகவேண்டாமென்று ஶாஸ்த்ரிகளைத்தடுத்ததாயும் வதந்தி.

## 19. ஆந்த்ர விஜயம்.

### முதலாவது. (விஜயநகரம்)

அங்கு—"அத்வைத மதத்திற்கும் பௌத்த மதத்திற்கும் யாதொரு பேதமுமில்லை. சங்கராசார்யர் பௌத்தமதத்தைக் கண்டிப்பதில் தம்மிட மதத்தையே கண்டித்துக்கொண்டிருக்கிறார்" என்கிற இது முதலிய விஷயங்களடங்கிய ஓர் வியாஸத்தையும், "வேதங்கள், வேதார்த்த நிர்ணயகங்களான ப்ரஹ்ம ஸூத்ரங்கள் பகவத்கீதை இவைகளிலும், ப்ரத்யக்ஷ்ய அனுமான ப்ரமாணங்களிலும் ஜீவப்ரஹ்மாக்களின் பேதமே (த்வைதமே) சொல்லப்பட்டிருக்கிறது. 5-6 வேதவாக்யங்கள் தவிர மற்றெல்லா வேதவாக்யங்களும் 2-3 ஸூத்ரங்கள் தவிர மற்ற எல்லா ப்ரஹ்ம ஸூத்ரங்களும், ப்ரத்யக்ஷானுமான ப்ரமாணங்களும் த்வைதத்தையே ப்ரதிபாதிக்கின்றனவென்று சங்கராசார்யர் முதலிய அத்வைதிகள் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், அவர்கள் 5-6 வேதவாக்யங்கள், 2-3 ஸூத்ரங்கள் அத்வைதத்தைப்போதிக்கிறபடியால் மற்ற வேத வாக்ய ஸூத்ர ஸமுதாயங்களும், ப்ரத்யக்ஷாதி ப்ரமாணங்களும் வ்யாவஹாரிகமான (பொய்யான) பேதத்தை (த்வைதத்தை)ச் சொல்லுகின்றனவென்று சொல்ல வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். 'பஹூபாதஸ்ய அன்யாயத்வாத் (Principle of majority and minority) என்கிற நியாயத்தை யனுஸரித்து சில வாக்யங்களை யனுஸரித்து அநேக வாக்யங்கள் பொய் சொல்லுகிறதென்று சொல்வது ஸரியல்ல. மற்றும் அந்த 5-6 வேதவாக்யங்களும் 'சித்' என்கிற ஞானத்தை யுண்டாக்குகிறதேயொழிய ஜீவப்ரஹ்மாக்களின் அபேதத்தைச் சொல்லுவதில்லை என்று சங்கராசார்யர் முதலிய அத்வைதிகளே ஒப்புக்கொண்டிருக்கின்றனர். அவ்விரண்டு ப்ரஹ்மஸூத்ரங்களிலாகிலும் (ஆத்மேதி தூபகச்சந்தி க்ராஹயந்திச, 4-1-3; ஶாஸ்த்ர த்ருஷ்ட்யா தூபதேஶோ வாமதேவவத்; 1-1-30) அபேதத்தை யறிவிக்கும் பதமே இல்லாததுமன்றி பேதத்தை யறிவிக்கும் பதங்களுமிருக்கின்றன. ஆகையால் வேதங்களிலும், ஸூத்ரங்களிலும் அபேதத்தைச் சொல்லுவதொன்றுமே இல்லை. கீதையிலும் அபேத ப்ரதிபாதகஶ்லோகங்களில்லாததேயன்றி 'ஈஶ்வரோஹம்'

என்கிறவன் அஸுரனென்று சொல்லப்பட்டிருப்பதினாலும், அபேதத்தை நிஷேதித்து, 'உத்தம: புருஷஸ்த்வன்ய:' என்று த்வைதத்தையே அறிவிக்கிறது. ஆகையால் அத்வைதம் வைதிக மதமல்ல" என்றிருக்கும் மற்ருெரு வ்யாஸத்தையும் ஸ்ரீஸ்ரீகள் வெளியிட்டு, அவ்வூர் காலேஜிலிருக்கும் லௌகிக வைதிக பண்டிதர்களுக்கும் அனுப்பினர்.

20-3-1932ல் ஸர்.எஸ். ராதாகிருஷ்ணன் M.A.,D. Litt.,(Vice-Chancellor of the Andhra University), அவர்களும் என்.வெங்கடராமன், ப்ரின்ஸிபால், விஜயநகரம் காலேஜ் அவர்களும் சில அத்வைதபண்டிதர்களும் ஸ்ரீஸ்ரீகளின் தர்ஶனத்திற்காக வந்தனர். அப்போது ஸ்ரீஸ்ரீகள் மேல்கண்ட இரண்டு உபன்யாஸங்களையும் அவர்களுக்குக் காட்டி, எஸ். ராதாகிருஷ்ணன் அவர்களும் 'அத்வைதமதம் பௌத்தமதமே' என்று எழுதியிருக்கிருர் என்று சொல்லி அவரிட வாக்யத்தையும் ஸ்ரீஸ்ரீகள் எடுத்துக்காட்டினர். பிறகு 22-3-32ல் என். வெங்கடராமன் அவர்கள் 'விஜயநகரத்திலிருக்கும் அத்வைத பண்டிதர்கள் ஸ்ரீஸ்ரீகள் வெளியிட்டிருக்கும் அத்வைத கண்டன க்ரந்தங்களின்பேரில் விசாரம் நடக்கவேண்டுமென்று அபேக்ஷிக்கிருர்கள்' என்கிற கருத்துள்ள அடியில் கண்ட கடிதமொன்று அங்குள்ள ம-ா-ா-ஸ்ரீ கான்குர்த்தி V. கிருஷ்ணராயரவர்களுக்கு எழுதியுளர்.

Letter to Mr. Kanukurti V. Krishna Rao.

My dear Sir,

Having seen the pamphlets issued by His Holiness the Swamigal of the Uttaradi Mutt, it is the desire of the learned pandits of this place to have a discussion on the questions raised there. Kindly convey their wish to His Holiness; and after consulting his convenience, please let me know the time and place suitable to him. They would like to have it in the Matam; and on Saturday and Sunday next. The discussion would be confined to the Swamiji and the Pandits, and to the

main points of controversy. It is their earnest desire that such an opportunity as the learned Swamiji being in our midst should not be missed to discuss thoroughly the questions at issue. I hope to hear from you in the course of to-day.

Yours sincerely,
(Sd) N. VENKATARAMAN.
22—3—32.

இக்கடிதத்தை வெங்கடகிருஷ்ணராயர் ஶ்ரீஶ்ரீகளிடத்தில் அறிவித்துக்கொண்டனர். அதற்கு ஶ்ரீஶ்ரீகள் மறுநாளே ஷி-விசாரத்தை நடத்துவதற்குத் தயாராயிருப்பதாக வெங்கடராமன் அவர்களுக்கு அறிவிக்க உத்திரவளித்தனர். பிறகு வெங்கட-ராமன் அவர்கள் வ்யாகரண வித்வானான தாதா ஸுப்பய்ய சாஸ்திரிகளுடன் வந்து 'இவ்வூரில் (விஜயநகரத்தில்) அத்வைத வேதாந்த பண்டிதர்களில்லை, பித்தாபுரத்திலிருந்து வரவழைக்க வேண்டியதாயிருக்கிறது, இரண்டுநாள் அவகாஶம் கொடுக்க வேணும்' என்று கேட்டுக்கொண்டனர். அதற்கு ஶ்ரீஶ்ரீகள் ஸம்மதித்தனர். பிறகு 26-27உகளில் ஸபை நடத்துவதாய் நோடீஸ் முகாந்திரமாய் எல்லோருக்கும் அறிவிக்கப்பட்டது. அவ்விதமாகவே அத்தேதியில் ஸபை ஆரம்பிக்கப்பட்டது. ஶ்ரீபாத லக்ஷ்மீ நரஸிம்ஹ ஶாஸ்த்ரிகள் 'யத்ர ஹி த்வைதமிவ பவதி' என்கிற ஶ்ருதிக்கு ஶ்ரீஶ்ரீகள் அர்த்தம் செய்ததில்—'தர்க்கம் அநுமான ப்ரமாணத்தில் ஒரு வகையானது' என்று எழுதியிருக்கிறார். தர்க்கம் அநுமானத்தின் ஒரு வகையானதல்ல. நையாயிகர்கள் 'ஸம்ஶய விபர்யய தர்க பேதாத்' என்று தர்க்கத்தை அயதார்த்தானுபவத்திலேயே சேர்த்திருக்கிறார்கள் என்று ஆக்ஷேபித்தனர். அதற்கு ஶ்ரீஶ்ரீகள் நையாயிக மதத்தை த்வைதிகளும், அத்வைதிகளும், வியாஸரும் கண்டித்திருக்கிறார்கள். ஆகையால் நையாயிக மதத்தின்படிக்கு சொல்லவேண்டிய அவசரமில்லை. பாமதி முதலிய அத்வைத க்ரந்தங்களில் தர்க்கம் அநுமானரூபமென்றே சொல்லப்பட்டிருக்கிறது. சங்கராசார்யரும் 'கோஹ்யேவான்யாத்' என்கிற தைத்திரீயோபனிஷத் பாஷ்ய வ்யாக்யானத்தில்

தர்க்கத்தை ப்ரமாணமென்று அங்கீகரித்திருக்கிறார் என்று ஸமா தானங்கூறி சங்கரபாஷ்யத்தைக் காட்டினர். அதற்கு ஶாஸ்த்ரிகள் தர்க்க ஶாஸ்திரம் அப்ராமாணிகமென்ற பிறகு தார்க்கிகரான நமக்கு இச்சபையினால் என்ன பிரயோஜனம்? என்று சொல்லி ஸபையிலிருந்து வெளியேறினர். பிறகு தெந்தசூரி நரசிம்ஹ ஶாஸ்த்ரிகள் முதலில் வாதத்திற்கு ஆரம்பித்தனர். 'யத்ர ஹி த்வைதமிவ பவதி' என்கிற வாக்யத்திலுள்ள 'இவ' என்பதற்கு 'ஏவ' என்று அர்த்தம் செய்து, ஜகத்து ஸத்யமென்று சொல்லுகிறீர். 'இவ' என்கிற பதத்திற்கு 'ஏவ' என்று அர்த்தமில்லாததினால் இது அயுக்தமென்று சொன்னார்.

அதற்கு—"சங்கராசார்யரே 'பூய இவ' என்கிற ஈஶாவாஸ்யோபனிஷத்திலிருக்கும் 'இவ' ஶப்தத்திற்கு 'ஏவ' என்று அர்த்தம் செய்திருக்கிறார். இவ ஶப்தத்திற்கு ஸாத்ருஶ்யார்த்தகத்வத்தை வைத்துக்கொண்டபோதிலும் பாரமார்த்திக ஸத்யத்வமே ஸித்தமாகிறதென்று சங்கராசார்யர் தம்மிட ப்ருஹதாரண்யக உபனிஷத் பாஷ்யத்தில் எழுதியிருக்கிறார். 'இவ' ஶப்தத்திற்கு 'ஏவ' என்று அர்த்தம் செய்தபோதிலும், ஸாத்ருஶ்யார்த்தத்தை வைத்துக்கொண்டபோதிலும் ஜகத்து ஸத்யமென்றே ஸித்தமாகிறது" என்று ஶ்ரீஶ்ரீகள் பதிலளித்தனர்.

தாதா சுப்பராய ஶாஸ்த்ரிகள் 'ஸ ஆத்மா தத்வமஸி' என்கிற வாக்கியத்தில் உம்மிட க்ரந்தகாரர் 'அதத்' என்றும் 'தத்வம்' என்றும் இரண்டுவிதமாக பதத்தைப் பிரித்திருக்கிறார். இது ஸரியல்ல என்று ஆக்ஷேபித்தனர். அதற்கு ஶ்ரீஶ்ரீகள் உம்மிட சங்கராசார்யர் 'தத்' என்றும் 'தத்வம்' என்றும் இரண்டுவிதமாக பதம் பிறித்திருப்பது யுக்தமோ என்று வினவினர். அதற்கு ஶாஸ்த்ரிகள்—நம் ஆசார்யர் அப்படி பதவிபாகம் செய்யவில்லை என்று சொன்னார். அதற்கு ஶ்ரீஶ்ரீகள் சாங்கர பாஷ்யத்தைக் காட்டினார். அதற்கு ஶாஸ்த்ரிகள்-'இந்த அச்சு புத்தகம் ஸரியானதல்ல' என்று சொன்னதற்கு ஶ்ரீஶ்ரீகள் பழைய கையெழுத்துப் புத்தகத்தை எடுத்துக் காட்டினர். அப்புத்தகத்திலும் 'தத்' 'த்வம்' என்றும், 'தத்வம்' என்றும் பதங்கள் பிறிக்கப்பட்டிருப்பதைக்கண்டு, தாதா சுப்பராய ஶாஸ்த்ரிகள் மௌனமடைந்தனர்.

பிறகு அத்வைதம் அவைதிகமல்ல என்று ஸாதிப்பதற்கு அத்வைதத்தைப் போதிக்கும் ஶ்ருதியைச் சொல்லவேண்டு மென்று ஸபிகர்கள் கேழ்க்கவே—த்வைதம் வைதிகமென்று ஸ்தாபிக்கும் ஶ்ருதிகளை ஸ்ரீஸ்ரீஸ்வாமிகள் சொல்லவேண்டுமென்று சுப்பராய ஶாஸ்திரிகள் சொன்னார். அதற்கு, த்வைதப்ரதிபாதகங்களான ஶ்ருதிகளுண்டென்று சங்கராசார்யர் முதலான அத்வைதிகளே ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகையால் த்வைத ஶ்ருதிகளுண்டென்று நாம் சொல்லவேண்டிய ஆவஶ்யகமில்லை. அத்வைத ப்ரதிபாதகங்களான ஶ்ருதிகளே இல்லை என்று நாங்கள் சொல்லுகிறோம். 'தத்வமஸி' முதலிய வாக்யங்கள் 'சித்' என்கிற அறிவை மாத்திரம் உண்டாக்குகிறதே யொழிய அபேதத்தை அறிவிக்கிறதில்லை என்றும் அத்வைதிகளே சொல்லுகிறார்கள். ஆகையால் அத்வைத ப்ரதிபாதகங்களான ஶ்ருதிகளைக் காட்டவேண்டிய கடமை உங்கள் பேரிலேயே இருக்கிறது என்று ஸ்ரீஸ்ரீகள் சொன்னார்.

பிறகு—தெந்தகூரி நரசிம்ஹ ஶாஸ்த்ரிகள் ஐக்கிய விஷயத்தில் புராணத்தை ஆதாரமாகச் சொன்னார். 'அத்வைதமத விஷயத்தில் வேதமாதாரமாகாமல் புராணமே ஆதாரமான பிறகு அத்வைதமதம் பௌராணிக மதமாகுமே யொழிய வைதிகமாகமாட்டாது. மற்றும் அப்புராண வாக்யங்களாகிலும் ஐக்கியத்தைப் போதிக்கிறதில்லை' என்று ஸ்ரீஸ்ரீகள் சொல்லவே, ஶாஸ்திரிகள் அவ்விசாரத்தை விட்டு ஶுகரஹஸ்யோபனிஷத் முதலிய வாக்யங்களை ஐக்கிய விஷயத்தில் உதாகரித்து உபன்யஸிக்க ஆரம்பித்தனர். அதற்கு ஸ்ரீஸ்ரீகள் இவ்வாக்யங்கள் உம்மிட ஸ்ரீசங்கராசார்யர் முதலிய ஆசார்யர்களாலாகிலும் நம்மாசார்யர்களாலாகிலும் மற்றெந்த ஆசார்யர்களாலாகிலும் எங்கும் உதாஹரிக்கப்படாததினால் அல்லோபனிஷத் முதலியவற்றைப்போல் இவ்வுபனிஷத்தும் கல்பிதமானதாகையால் இவைகளை ப்ரமாணங்களென்று அங்கீகரிக்கப்படமாட்டாது என்று ஸ்ரீஸ்ரீகள் சொன்னார். இதற்குள் இரவு 8-மணியாய் ஸபை முடிக்கப்பட்டது.

பிறகு ரா. V. ராமராயரவர்கள் ரா. என். வெங்கடராம அய்யர் அவர்களுக்கு இரண்டு நாட்களில் ஸபையில் நடந்து

எழுதப்பட்ட விசாரங்களை நமக்கு எழுதி அனுப்பவேணுமென்று கடிதமெழுதி அனுப்பியதற்கு, அவர்—நேற்று முந்தாணுட்களில் ஸாரமான முக்யாம்ஶங்களைக் குறித்து வாதவிவாதங்கள் நடக்குமென்று நான் எதிர்பார்த்தேன். அவ்விஷயங்களின் விசாரத்தை விட்டு பித்தாபுரத்து அத்வைத பண்டிதரின் வாதம் உபன்யாஸமாக மாரிற்றென்றும் சென்ற இரண்டுநாள் நடந்த விசாரங்களை இத்துடன் உம்மிடத்திற்கு அனுப்பிக்கொண்டிருக்கிறேன் என்கிற அடியிற்கண்ட கடிதத்தை ரா. வி. கிருஷ்ணராயருக்கு எழுதியனுப்பியிருக்கிறுர்.

### Letter to Mr. V. Rama Rao.

Dear Sir,

I am in entire agreement with you that there must be reply and counter-reply to issues raised. But the pandits from Pithapur have been persuaded with great difficulty to stay and take part in to-day's discussion. I expected yesterday, even the day before, would be restricted to a mere discussion on the main points at issue. Instead it took the form of a lecture by the pandit,..............................

The proceedings of the last two days will be sent to you shortly.

Yours sincerely,

(Sd.) N. VENKATARAMAN.

அத்வைதமத ஸ்தாபக ஸபையின் வ்யவஸ்தாபகரான ப்ரின்ஸிபால் வெங்கடராமன் அவர்களிட கடிதத்திலேயே ஸ்ரீ நரஸிம்ஹ ஶாஸ்திரிகள் ஶாஸ்த்ர விசாரம் செய்யவில்லை, வெறும் உபந்யாஸத்தையே செய்தனர். அது ஸபையில் நடப்பதற்கு யோக்யமானதல்ல என்று ஸ்பஷ்ட (வெட்டவெளிச்ச) மாகிறது.

மூன்றும் நாள் ஸ்ரீஸ்ரீகள் நரஸிம்ஹ ஶாஸ்திரிகள் உபன்யாஸத்தில் சொல்லிய ஶ்ருதி புராண வாக்யங்களுக்கு சங்கர பாஷ்யத்தின் ஆதாரத்தினுலேயே வேறு அர்த்தங்களைச் சொல்லிக்கொண்டிருக்க இரவு $7\frac{1}{2}$-மணி ஆயிற்று. அப்போது ஸபை முடிவதற்கு $\frac{1}{2}$-மணி நேரம்தானிருந்தது. அப்போது ஶாஸ்த்ரிகள் ஸ்ரீஸ்ரீகளிட வார்த்தைகளுக்குப் பதில் கூறுகிருர்கள், அவ்வார்த்தைகளுக்கு மறுபடியும் ஸ்ரீஸ்ரீகள் பதில் சொல்லுவதற்கு அவகாஶம் கொடுக்கவேண்டும், இல்லாவிட்டால் நாளையதினமாவது ஸபை நடத்தவேண்டும் என்ற விஷயத்தில் ரா. வெங்கடராமன் அவர்களுக்கும் ரா. ராமராயருக்கும் விசாரம் நடந்து கொண்டிருக்க, தெந்தகூரி ஶாஸ்த்ரிகள்-நாளையதினம் ஊருக்குப் போகவேண்டியிருப்பதால் ஸபைக்குவர முடியாதென்று சொன்னுர். அதற்கு ஸ்ரீஸ்ரீகள்—பித்தாபுரம் மகாராஜருக்கு நாங்கள் தந்தி மூலமாய் அறிவித்து ஸபை முடிகிறவரைக்கும் தங்களுக்கு அவகாசம் கொடுப்பிக்கிறேம் என்று சொன்னுர். அதற்கு ஶாஸ்த்ரிகள் தனக்கு அவகாஶமில்லை என்று சொல்லிக்கொண்டே ஸபையிலிருந்து வெளியேறினர்.

மறுநாள் ஶாஸ்த்ரிகள் பித்தாபுரத்திற்குப் போகவில்லை. ஸபைக்கும் வரவில்லை. அவ்வூரிலேயே இருந்தனர். இதினுல்—ஸ்ரீஸ்ரீகளுடன் விசாரம் செய்வதற்கு ஶாஸ்த்ரிகள் தனக்குத் திறமையில்லை என்று தெரிந்துகொண்டே ஸபைக்கு வரவில்லை என்று வெளியாகிறது.

மற்றும் ரா. என். வெங்கடராமனவர்கள் எழுதியிருக்கும் கடிதத்திலுள்ள—'இரண்டுநாள் ஸபையில் விசாரம் செய்யாமல் உபன்யஸித்தனர்' என்கிற வார்த்தைகளின் ஆதாரத்தினுலும், ஶாஸ்த்ரிகள் 'நமக்கவகாஶமில்லை, ஊருக்குப் போகிறேம்' என்று சொல்லி ஊருக்குப் போகாமல் மறுநாள் அவ்வூரிலேயே இருந்ததினுலும் ஶாஸ்த்ரிகளுக்கு விசாரம் செய்து அத்வைதத்தை ஶ்ருதி ஸூத்ர கீதாக்களின் ஆதாரங்களினுல் ஸித்தப்படுத்தும் திறமை இல்லை என்று ஸித்தமாகிறது. தவிர பத்திரிகைகளில் ஆதாரமின்றி எழுதப்பட்ட நிஷ்ப்ரயோஜனமான விஷயங்களை நம்பத் தகுந்ததன்று என்றும் வெளியாகிறது.

அத்வைத மதத்தின்படிக்கு—"ந வேதா:, ந யஜ்ஞா:, ந நிரோத:, ந சோத்பத்தி:, ந பத்த:, நசஸாதக:, ந முமுக்ஷு:, ந வை முக்த:" என்று எல்லா ஸ்ம்ருதிபுராண க்ரந்தங்களும் அக்ரந்தங்களைச் சொல்பவர்களும் அக்ரந்தங்களால் ஸித்தமாகும் அத்வைதிகளால் சொல்லப்படும் நிற்குண ப்ரஹ்மம், மோக்ஷம், ப்ராஹ்மணாதி வர்ணங்கள் இவைகளெள்ளாம் ஶஶவிஷாணத்தைப்போல் (முயற் கொம்பைப்போல்) அஸத்யமானது (முக்காலத்திலு மில்லாதது) ஆகையால் ப்ரஸித்தமான ஶ்ருதிகளாலும் ஸாதிப்பதற்கு வருவதல்ல.

இச்சாஸ்த்ரிகள் 'அத்வைத ஸித்தாந்த ரஹஸ்யம்' என்கிற க்ரந்தத்தில் எந்தப்ராசீனரான ஆசார்யராலும் உதகரிக்கப்படாமல் இருக்கும் கல்பிதமான பரம அஸம்பத்தமான 'ஶுகரஹஸ்யம்' முதலிய உபனிஷத்துகளின் ஆதாரத்தினல் அத்வைதத்தை ஸித்தப்படுத்த ப்ரயத்னப்படுவது ஓர் மனிதனை முயற்கொம்பினுல் குத்திக் கொல்ல ப்ரயத்னப்படுவதைப்போல் நிஷ்பலமானதேயாகும். இவ்விஷயங்களை அக்காலத்திலேயே ஆந்த்ரபாஷையில் வெளியாயிருக்கும் அச்சபையின் ரிபோர்ட்டில் விவரமாய்க் காணலாம் என்று இத்துந்துபி தன்னெலியினுல் அறிவிக்கிறது.

---

## 20. மாகத விஜயம்.

### இரண்டாவது (கயா)

பிறகு அநேக தீர்த்த க்ஷேத்ர யாத்திரைகளைச் செய்து கொண்டு மருபடியும் சகே 1854 ஆங்கிரஸ வருஷம் சைத்ர மாதத்தில் (1932-ம் வருஷத்தில்) ஷை கயா க்ஷேத்திரத்திற்கு ஶ்ரீ ஶ்ரீகள் விஜயம் செய்து பிரதிதினமும் ஶ்ரீ விஷ்ணு பாத தேவாலயத்தில் அவ்வூரிலிருக்கும் தம் சிடர்களான கயாபாலர்களுக்கு "த்வைத மதமே வைதிகமானது, அத்வைத மதம் அவைதிகம் என்றுல் வேதத்தினுல் ஸித்தமாகாததும் தவிற வேத விருத்தமுமானது, பௌத்த மதமேயாகும்" என்கிற விஷயங்களையும், வைஷ்ணவ தர்மங்களையும் உபதேஶித்து வந்தனர். அவ்வூரில் அத்வைத பண்டிதர்களே கிடையாது. ஆகையால் யாரும் வாதத்திற்கு

வரவில்லை. எந்த கிரந்தங்களையும் எழுதவில்லை. இப்படியிருக்க ஓர் அத்வைதி 'பஸ்மருத்ராக்ஷ தாரணம் வைதிகம், ஶிவனே ஸர்வோத்தமன், அவனை நிந்திப்பது யோக்யமல்ல, பஸ்ம ருத்ராக்ஷங்களைத் தரிக்கவேண்டும், யஜ்ஞத்தில் ப்ரத்யக்ஷ பசுவையே கொல்லவேண்டும், பிஷ்ட பசு செய்யவே கூடாது' என்று பத்திரிகை மூலமாய் வெளியிட்டனர்.

'தேவத்விஷாம் நிகமவர்த்ம நிவிஷ்டிதானும் பூர்பிர்மயேன விஹிதாபிரத்ருஶ்ய மூர்த்திঃ। லோகான் க்னதாம் மதிவிமோஹமதி ப்ரலோபம் வேஷம் விதாய யதபாஷத ஔபதர்ம்யம்'॥ (பாகவதம் 2-7-33) 'ததঃ கலௌ ஸம்ப்ரவ்ருத்தே ஸம்மோஹாய ஸுரத்விஷாம்। புத்தோ நாம்னா ஜின ஸுதঃ கீகடேஷு பவிஷ்யதி' (பாக. 1-3-24) முதலிய ஶ்லோகங்களில் சொல்லியுள்ளவாறு ஸ்ரீ விஷ்ணு அஸுரர்களை மோசம் செய்வதற்காக புத்தரூபத்தினல் வேத விருத்தமான அநேக நூல்களை இயற்றியிருப்பதைப் போல்; 'ருத்ர:—'மாயாவாதமஸத் ஶாஸ்த்ரம் ப்ரச்சன்னம் பௌத்தமுச்யதே। மயைவ கதிதம் தேவி கலௌ ப்ராஹ்மண ரூபிணா। அபார்த்தம் ஶ்ருதி வாக்யானும் தர்ஶயன் லோக கர்ஹிதம்.....................பரேஶ ஜீவயோரைக்யம் மயா து ப்ரதிபாத்யதே। (பத்ம புராணம்) இது முதலிய ஶ்லோகங்களில் சொல்லியுள்ளபடிக்கு ஸ்ரீருத்ராவிஷ்டரான ஸ்ரீ சங்கராசார்யர் அஸுரர்களை வஞ்சிப்பதற்காக அத்வைத மதத்தை இயற்றியிருக்கிறார். அதை நம்பி, ஸ்ரீ விஷ்ணு புத்த ரூபத்தினல் இயற்றியிருக்கும் நூல்களை ஸஜ்ஜனேத்தாரார்த்தமாய் வேதவ்யாஸ ரூபத்தினல் கண்டித்திருப்பதைப்போல் சங்கராசார்யர் தாமே தம் மதத்தை ஸூத்ர உபனிஷத் பாஷ்யங்களில் ஆங்காங்கு *கண்டித்திருப்பதை முன் பின் விசாரம் செய்யாமல் வெகு ஆக்ரஹத்துடன் ப்ராஹ்மணதி வர்ணங்கள், தேவதைகள், வேதம், யஜ்ஞம் முதலிய எல்லா ஜகத்தும் பொய்யென்று சொல்லும் அத்வைதிகளுக்கு ஷ பத்திரிகைக்கு பதிலளிப்பது அனுவஶ்யகமாயினும், அப்பத்திரிகைகளைப் பார்க்கும் த்வைதிகளுக்குண்டாகும் ஸம்ஶயாதிகளைப் போக்குவதற்காக நம் ஸ்ரீஸ்ரீகள் 'அத்வைதி ப்ராந்தி ப்ரகாஶம்'

* விவில் ஸூட் 2 வது இஷ்யூவின் விசாரணையில் பார்க்கவும்.

'அத்வைதமத விமர்ஸை' (ஹிந்திபாஷை) அத்வைத விமர்ஸமாலை யின் ஒன்றுமுதல் ஆறுவரைக்குமுள்ள புஷ்பங்கள் முதலிய நூல் களை இயற்றி ஷை பத்திரிகையில் சொல்லப்பட்டிருக்கும் விஷயங் களை விவரமாய்க் கண்டித்திருக்கிறார். அவைகளின் சுருக்கம்:—

## பஸ்மதாரண விஷயத்தில்:—

* ப்ராஹ்மணர்கள் ஊர்த்வ புண்ட்ரத்தையும், க்ஷத்ரியர்கள் அர்த்த சந்திராகாரமாயும், வைஶ்யர்கள் வர்துலாகாரமாயும், ஶூத்ரர்களே த்ரிபுண்ரட்த்தையும் தரிவிக்கவேண்டும். (ப்ராஹ்ம ராத்ரம்.)

† பஸ்ம த்ரிபுண்ட்ரதாரிகளை சண்டாலரைப்போல் விலக்க வேண்டியது.

‡ உத்தம ப்ராஹ்மணனாயினும் பஸ்மத்தை தரிப்பானேயாகில் அவனை மத்தியத்தினால் (கள்ளினால்) உச்சிஷ்டமான குடத்தைப் போல் விடவேண்டியது. §தாமஸ புராணங்களைப் பார்த்து மோகத் தினால் யார் திர்யக் புண்ட்ரத்தைத் தரிக்கிறானோ அவன் அந்தந் தமஸ்ஸில் மூழ்குகிறான். ¶ப்ராணம்போயினும் திர்யக் புண்ட்ரத்தை தரிக்கக்கூடாது. ப்ராஹ்மணன் குலீனனாயும் வித்வானாயு மிருந்த போதிலும் திர்யக் புண்ட்ரத்தை தரிப்பானேயாகில் இராஜன் அவனைக் கழுதைமேலேற்றி ஊரைவிட்டுத் தெருத்தவேண்டியது.

---

*ப்ராஹ்மணஸ்யோர்த்வ புண்ட்ரம் ஸ்யாத் க்ஷத்ரியஸ்யார்த்த சந்த்ரகம்। வைஶியஸ்ய வர்துலாகாரம் ஶூத்ரஸ்யைவ த்ரிபுண்ட்ரகம்" (ப்ராஹ்ம ராத்ரம்)

† கபால கேஶ பஸ்மாஸ்தி ஶுக்தி பாஷாணதாரிணம் । த்ரிபுண்ட்ர தாரிணம் விப்ரம் சண்டாலமிவ ஸந்த்யஜேத் (பத்ம புராணம்.)

‡ குலீனோ ப்ராஹ்மணோ வித்வான் பஸ்மதாரீ பவேத்யதி । வர்ஜயேத் தாத்ருஶம் தேவி மத்யோச்சிஷ்ட கடம் யதா।। (பத்ம.)

§ "தாமஸானி புராணானித்ருஷ்ட்வா மோஹாச்ச யோ த்விஜ: । த்ரி புண்ட்ரதாரணம் க்ருத்வா தமஸ்யந்தே நிமஜ்ஜதி" (பத்ம.)

¶ திர்யக்புண்ட்ரம் ந குர்வீத ஸம்ப்ராப்தே மரணேபி ச। ப்ராஹ்மண: குலஜோ வித்வான் திர்யக்புண்ட்ரதரோ யதி । தம் கர்தபம் ஸமாரோப்ய ராஜா ராஷ்ட்ராத் ப்ரவாஸயேத் (பத்ம புராணம்)

* ருத்ரார்ச்சனை த்ரிபுண்ட்ர தாரணம் இவைகள் ப்ராஹ்மணரல்லாதவர்களின் விஷயம். ப்ராஹ்மணர்களுடைய விஷயமல்ல. இவ்விதமாக அநேக ப்ரமாணங்களில் சொல்லப்பட்டிருப்பதினாலும், † 'ஸௌசாதிகளை விட்டு மூடராய் ஜடாபஸ்மாதிகளை தரிக்கட்டும்' என்று ப்ருக்வாதிகளின் ஸாபமிருப்பதினாலும், ‡ 'திரிபுண்ட்ர பஸ்மாதிகளை தரித்து மித்யாஜ்ஞானிகளாய் பொய் சொல்லிக்கொண்டே வேதபாஹ்யராகக்கடவீர்கள்' என்று கௌதமரிட ஸாபமிருப்பதினாலும் பஸ்மாதிதாரணங்கள் ப்ராஹ்மணேதரர்களுக்கு ஏற்பட்டதென்றும், ப்ராஹ்மணர்கள் தரிக்கக்கூடாதென்றும் தெரியவருகிறது.

தவிர 'நிரஸ்தபூதிம்' என்கிற அத்வைதிகளின் ஸ்லோகத்தினாலேயே ஸங்கராசார்யரும் பஸ்மதாரணம் செய்யவில்லை என்று தெரியவருகிறது. ஒருக்கால் அவர் தரித்திருந்தபோதிலும், தம்மிட § குருவான ப்ராஹ்மணேதரரான ரேவணஸித்தரென்பவரின் ஆசாரத்தை அவரால் கொடுக்கப்பட்ட சந்த்ரமௌளீஸ்வரரை ஆராதித்து வரும் தான் குருபக்தியினால் அனுஷ்டித்திருக்கக் கூடுமோ என்னமோ. ஆகையால் பஸ்ம ருத்ராக்ஷதாரணங்கள் ப்ராஹ்மணர்களுக்கு யோக்யமானதல்ல என்று ஸித்தமாகிறது.

---

* யத்து ருத்ரார்ச்சனம் ப்ரோக்தம் த்ரிபுண்ட்ரம் வாபி ஸத்தமாঃ। ததப்ராஹ்மண்ய விஷயம் ந து விப்ரஸ்ய கர்ஹிசித் (வஸிஷ்ட ஸம்ஹிதா)

† நஷ்டஸௌசா மூடதியோ ஜடாபஸ்மாஸ்திதாரிணঃ। (பாகவதம்)

‡ த்ரிபுண்ட்ரதாரிணோ நித்யம் பஸ்மோத்தூலன தத்பராঃ। பவிஷ்யத த்ரயீபாஹ்யா மித்யாஜ்ஞான ப்ரலாபினঃ। (ஆதித்யபுராணம்)

§ பத்ராங்குராய பஜதாமபயங்கராய யோகேஸ கல்பதரவே கவயே மனூனும் । கைவல்ய கல்பகுரவே குரவே குரூணும் ஸ்ரீரேணுகாய கணபாய நமோஸ்து துப்யம் (சங்கராசார்யரிட குரு ஸ்துதியின் கடைசி ஸ்லோகம். ஸபாஸார ஸங்க்ரஹம் வால்யூம் III, பக்கம் 450)

ஸ்ரீசந்த்ரமௌளீஸ்வர லிங்கமஸ்மை ஸத்ரத்னகர்பம் கணநாயகம் ச। ஸ விஸ்வரூபாய ஸஹவித்த தத்தம் ததவா ந்யகாச்சிரமர்சயேதி (குருவம்ஸ காவ்யம் 109-வது பக்கம்) 'ததঃ ஸ ரேவணஸித்த ஸம்ப்ரதாய ப்ரவர்திநும்। ஸங்கராசார்யவர்யாணும் பாரம்பர்ய க்ரமாகதம் (ஸிவரத்னுகரம் 4-வது கல்லோலம் 12-வது தரங்கம் 9-வது ஸ்லோகம். கீதோபன்யாஸம் பார்ட் II பக்கம் 446, 47)

## சிவநிந்தா விஷயத்தில்:—

ஸ்ரீ ருத்ர பகவானை நம்மைவிட உத்தமனென்றும் 'வைஷ்ணவானாம் யதா ஸம்பு:' என்கிற ப்ரமாணானுஸாரம் வீர வைஷ்ணவாக்ரேஸரரென்றும், ஞானாதி ஸகலாபீஷ்டங்களையும் கொடுப்பவரென்றும், அனேககுண பூர்ணரென்றும் அவரிட பார்யையான பார்வதி நம்மைவிட உத்தமரென்றும் நமக்குத் தாய் என்றும் சொல்லும் நாம் ஸிவபக்தர்களேயொழிய, அந்த ஸிவனின் குணங்களும் க்ரியை முதலியவைகளும் பொய்யென்றும் இந்த்ராதி ஜகன்மாதாவாகிய பார்வதிபதியான அந்த ஸிவனே நான் என்றும் சொல்லுபவர்கள் ஸிவபக்தர்களாகாததும் தவிர சிவனை நிந்திப்பவர்களுமாவர்.

## யஜ்ஞ விஷயத்தில்:—

* யஜ்ஞத்தில் ப்ரத்யக்ஷ பசுக்களைக் கொல்லுபவர்கள் மூடர்கள், நாஸ்திகர்கள், மரியாதை விட்டவர்கள் என்று தூஷித்துக் கொண்டே †ஸ்ருதி ஸ்ம்ருதிகளிலும், கஞ்ஜவடேகர் ஸாஸ்த்ரிகளால் செய்யப்பட்ட ப்ரத்யக்ஷ பசு மீமாம்ஸா என்னும் க்ரந்தத்திலும் தேவதைகளுக்கு ஆகாரமாகிய மேதஸ் வ்ரீஹ்யாதிகளில் (தான்யமாவு முதலியவைகளில்) சேர்ந்திருப்பதாயும், அவைகளாலேயே யஜ்ஞாதிகளைச்செய்து ஈஸ்வரானுக்ரஹத்தைச் சம்பாதிக்கவேண்டியது என்றும் ஸித்தமாகிறதென்று அத்வைதி ப்ராந்திப்ராகாஸாதி நூல்களால் ஸ்ரீஸ்ரீகள் வெளிப்டுத்தியிருக்கிறார் என்கிற விஷயத்தை இத்துந்துபி தன்னொலியினால் வெளியிடுகிறது.

---

* "அவ்யவஸ்தித மர்யாதைர்விமூடை: நாஸ்திகைர்நரை: | ஸம்ஸயாத்மபி ரவ்யக்தைர்ஹிம்ஸா ஸமனுவர்ணிதா" (மஹாபாரதம்)

† நமஸ்காரேண ஹவிஷா ஸ்வாத்யாயைரௌஷதைஸ்ததா | பூஜா ஸ்யாத்தேவதானாம் ஹி யதா ஸாஸ்த்ர நிதர்ஸனம்| (பார.ஸாந்தி 263 அத்.) ததா ஔஷதைர்வ்ரீஹியவாதிபி:,பஸுப்யோ வைமேதா உதக்ராமம்ஸ்தெள் வ்ரீஹிஸ்சைவ யவஸ்ச பூதாவஜேயேதாம் தஸ்மாதாஹு: புரோடாஸஸத்ரம் லோக்யம்' இதி ச தயோர்ஹவிஷ்ட்வாவகமாத்—புருஷாச்ஸிவகோஜாஸ்ம் பஸுனுமமேத்யத்வ ஸ்ருதேஸ்ச த ஏதஉத்க்ராந்தமேதாஅமேத்யா: பஸவ: இத்யாதி (நீலகண்டீயவ்யாக்யா) "புருஷம் வை தேவா பசுமாலபந்த ......ஏதே உத்க்ராந்தமேதா: அமேத்யா: பஸவ: தஸ்மாதேதேஷாம் நாஸ்னீயாத்.........ஸோனுகதோ வ்ரீஹிரபவத் (ஐதரேயம்)

## 21. வாரணுஸீ விஜயம்.

### இரண்டாவது (காஸீ)

ஸ்ரீஸ்ரீகளவர்கள் மருபடியும் இரண்டாவது பூப்ரதக்ஷிணையில் ஸகே 1854 ஆங்கிரஸ் வருஷம் மார்கஸிர ஸுத்தத்தில் (1932) ஸ்ரீகாசீ பட்டணத்திற்கு விஜயம் செய்தனர். ஸ்ரீகயாக்ஷேத்திரத்தி லிருந்தபோதே அத்வைதமதம் அவைதிகமான பௌத்தமதமே என்று ப்ரமாணஸஹிதமாய் ஸித்தப்படுத்தியிருக்கும் ‘அத்வைத மதவிமர்ஸ’ என்கிற புத்தகத்தை அச்சிட்டு காஸிமுதலிய பெரிய இடங்களிலிருக்கும் அத்வைத பண்டிதர்களுக்கு ரிஜிஸ்டர் தபால் மூலமாக அனுப்பப்பட்டிருந்தது. பிறகு காசீ பட்டணத் திற்கு விஜயம் செய்து ப்ரதிதினமும் ஸபை நடத்தவே மேற்படி ஸபைக்கு ஹரிநாராயணத்ரிபாடி, மஹாதேவ ஸாஸ்திரி, பூர்ண சந்த்ராசார்ய, ஹாராண ஸாஸ்த்ரி, நாராயணஸுக்ல, தாராசரண பட்டாசார்ய, வாமாசார்ய பட்டாசார்ய, மஹாமஹோபாத்யாய முகுந்தஜா முதலிய அநேக பண்டிதர்கள் வந்துகொண்டிருந் தனர். அச்சபையில் அத்வைதமதம் அவைதிக பௌத்தமத மென்கிற சர்சையும், நியாய வ்யாகரண, பூர்வமீமாம்ஸா, ப்ரஹ்ம மீமாம்ஸா முதலிய ஸாஸ்திரங்களின் சர்சையும் நடந்துகொண் டிருந்து, காசியிலிருக்கும் லௌகிக வைதிக பண்டிதர்களின் முகாந்தரமாய் கீழ்க்கண்டவாரு விளம்பரப்படுத்தப்பட்டது.

(அதின் ஹிந்திபாஷையின் மொழிபெயர்ப்பு)

### ஸ்ரீராமோ விஜயதே.

ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யத்வாதி அநேக பிருதாங்கித ஸ்ரீமத்வைஷ்ணவ (த்வைத) ஸித்தாந்த ப்ரதிஷ்டா பனசார்ய, பரமமான்ய, வித்வத்சிரேஷ்ட, ஸ்ரீ உத்தராதிமடாதி பதிகளான ஸ்ரீமன்மாத்வ ஸாம்ப்ரதாயாசார்யரான ஸ்ரீமத் ஸத்ய த்யானதீர்த்த ஸ்ரீபாதங்களவர்களிட உத்திரவின்படிக்கு காசீ பட்டணத்தில் ஹனுமான் காட் 163 நெம்பர் வீட்டில் பௌஷ்ய வத்ய 6 திங்கட்கிழமை மத்தியான்ம் 2 மணிமுதல் 5 மணிவரைக் கும் வித்வத் ஸபை நடக்கும், அந்த ஸபையில் பண்டிதர்கள் வந்து,

நியாய, வ்யாகரண, வேதாந்த, மீமாம்ஸாக்களிலும் மற்றும் இதர விஷயங்களிலும் ஸங்கோச (கூச்ச) மின்றி விசாரம் செய்யலாம். எந்த பண்டிதர்களுக்காகிலும் எந்த ஶாஸ்த்ரங்களிலாகிலும் தத்வநிர்ணயமாக வேண்டுமென்கிற விருப்பமிருக்குமாயின் விசாரிக்கப்பட்ட அவ்விஷயங்களை எழுதி ஸபாவ்யவஸ்தாபகரின் கையெழுத்துடன் வெளியிடவேண்டியது. அதுவே மான்ய மாகும். வ்யவஸ்தாபகரின் கையெழுத்தில்லாத விஷயம் ஸபையில் நடந்ததென்று மதிக்கப்படமாட்டாது.

1. ஸ்ரீ ஹரி நாராயணத்ரிபாடி, ராஜகீய ஸம்ஸ்கிருத வித்யாலய வ்யாகரண ப்ரதாநாத்யாபகர்.

2. ஸ்ரீ மஹாதேவ ஶாஸ்த்ரி ராஜகீய ஸம்ஸ்க்ருத வித்யாலய தர்மஶாஸ்த்ர ப்ரதாநாத்யாபகர்.

3. பண்டித் ஸ்ரீகாசிராமஶர்மா M. A. (லேட் இன்ஸ்பெக்டர், ஸம்ஸ்க்ருத பாடஶாலா U. P.)

4. ஸ்ரீ ஶங்கர தர்க்க பட்டாசார்யர், விஶ்வவித்யாலயத்தின் ப்ரதாநாத்யாபகர்.

5. ஸ்ரீ பூர்ணசந்த்ர வ்யாகரணாசார்யர், டிகமணி காலேஜ்.

இவ்விதமாக அறிக்கைப்பத்திரிகையை வெளிப்படுத்தி, ஸபை நடந்தது. ஶாஸ்த்ர விசாரம் நடந்துக்கொண்டிருக்க ஹாராண ஶாஸ்த்ரி என்பவர் ஸபைக்கு வந்து, "பண்டிதர்களுக்கு ஸபையின் அழைப்புப் பத்திரிகையில் தத்வநிர்யத்தின் விருப்பமிருக்குமாயின் எழுத்து மூலமாய் வாக்யார்த்த விசாரம் நடக்கவேண்டும், அந்த லேகனம் ஸபாவ்யவஸ்தாபகரின் கையெழுத்துடன் ப்ரசுரப்படுத்தவேண்டும். அந்த ப்ரஸித்த பத்திரிகையில் கண்ட விஷயங்களே நிஜமானவைகளென்று அறியவேண்டும். நான் அந்த வாக்யார்த்தம் செய்தேன். இவ்வாக்யார்த்தம் சொன்னேன் என்று வாயால் சொல்லும் பொய்பேச்சுகள் மான்யமாகமாட்டாது என்று எழுதியிருப்பது காஶியிலிருக்கும் பண்டிதர்களுக்கு ஸபா அழைப்புப் பத்திரிகையின் ஒழுங்கல்ல. இப்படி நீங்கள் எழுதியதைப் பார்க்க உங்களுக்கு வெல்லும் விருப்பம் இருப்பதாகத் தோன்றுகிறது. இத்தகைய ஸபைக்கு நாங்கள்.

வரவே கூடாது" என்று செய்த பூர்வபக்ஷத்திற்கு, அந்த ஸபையில் வந்திருந்த த்ரிபாடி ஹரிநாராயண முதலிய பண்டிதர்கள் "இது லௌகிக இராஜாக்களின் ஸபையல்ல. அச்சபைகளில் எப்படி வேண்டுமோ அப்படி வாக்யார்த்தம் செய்துகொண்டு, வெளியில் வேண்டியது சொல்லிக்கொள்ளலாம். இது பண்டிதரான வைஷ்ணவ பீடாசார்யரின் ஸபையாயிருக்கிறது. தத்வநிர்ணய விருப்பமிருக்குமாயின் எழுத்து மூலமாய் வாக்யார்த்த விசாரம் நடத்தி தத்வநிர்ணயத்தை யடையலாம். தத்வநிர்ணய விருப்பமில்லையாயின் வெரும் விசாரம் செய்யலாம். அந்த வாக்யார்த்த விசாரம் நாம் இவ்விதமாக வாக்யார்த்தம் செய்தோமென்று வெளிப்படுத்த முடியாது என்கிற எண்ணத்தினுல் இவ்விதமான அழைப்புப் பத்திரிகை நாம் (லௌகிக வைதிகர்கள்) விசாரம் செய்தே கொடுத்திருக்கிறோம். தத்வநிர்ணய விருப்பம் வேறு, விஜய விருப்பம் வேறு. அவ்விரண்டும் ஒன்றே என்று நீர் தெரிந்து கொண்டிருந்தால் தத்வ நிர்ணயரூபமான விஜயேச்சை எல்லோருக்கும் இருக்கத்தக்கதேயாகும்" என்று ஸமாதானம் கூறினும் ஶாஸ்த்ரிகள் அதைக் கேளாமல் கோபத்துடன் ஒன்றிரண்டு பண்டிதர்களை அழைத்துக்கொண்டு சபையினின்றும் வெளியேறினர். பிறகு வாக்யார்த்தங்கள் நடந்து, வந்திருந்த வித்வான்களுக்கு ஸம்பாவனை முதலிய மர்யாதைகள் நடத்தப்பட்டது. வெளியேறினவர்களில் ஹாராண ஶாஸ்த்ரிகள் தவிர மற்ற வித்வான்களும் மருபடியும் வந்து தக்ஷிணை பெற்று சென்றனர்.

இவ்விதமாக ஹாராண ஶாஸ்த்ரிகள் கோலாகலம் செய்து (பேரொலியிட்டு) எழுந்துபோய், ஸ்ரீ ஸ்வாமிகளவர்களால் ஸபையில் கோலாகலம் (பேரொலி) செய்யப்பட்டதென்று பத்திரிகையை வெளியிடவே, அச்சபைக்கு வந்திருந்த வித்வான்கள் தங்களிட கையெழுத்துடன் அடியில்கண்ட பத்திரிகையை ஹிந்திபாஷையில் வெளியிட்டிருக்கிறார்கள். அதின் மொழி பெயர்ப்பு—

## ஸ்ரீ விஶ்வேஶ்வரோ விஜயதே.

எல்லா ஜனங்களுக்கும் அறிவிப்பது என்னவெனில்— ஸ்ரீ உத்ராதிமடத்தில் பண்டிதர்களுக்கு தக்ஷிணை கொடுக்கும் தினம்

ஸபை சேர்ந்தது. அன்று நடந்த நடவடிக்கைகளை சிலர் நடந்த தற்கு விருத்தமாய் புஷ்ய பஹுள ஏகாதசி தினம் வெளியிட்டிருக்கின்றனர். நாங்கள் அன்று முதலிலிருந்து கடைசிவரைக்கும் அங்கேயே இருந்தோம். நிஜமாய் அங்கு அடியில் கண்டவாறு நடவடிக்கைகள் நடந்தன.

முதலில் ஶாஸ்த்ரார்த்த விசாரம் நடந்தது. அச்சமயத்தில் பண்டித ஹாராணசந்த்ரர் அழைப்புப் பத்திரிகையை அங்கீகரிக்காமல் அச்சபைக்கு வந்து 'அழைப்புப் பத்திரிகை நியம விருத்தமானது இது முதலிய வார்த்தைகளையாடவே அழைக்கப்பட்டு வந்திருக்கும் வித்வான்களால் ஸமாதானம் செய்யப்பட்டபோதிலும் கேளாமல் கலகம் செய்துகொண்டே ஸபையிலிருந்து வெளியேறினர். மற்றும் தம்முடன் சிலரையும் அழைத்துச் சென்றார். பிறகு ஶாஸ்த்ர விசாரம் முடிந்தபிறகு தக்ஷிணை கொடுக்க ஏற்பாடுசெய்து அழைக்கப்பட்ட ஜனங்களில் இருந்த ஜனங்களுக்கு ஸன்மானபூர்வகமாய் தக்ஷிணை கொடுக்கப்பட்டது. மற்றும் வெளியேறின ஜனங்களில் அநேக ஜனங்கள் மறுபடியும் வந்தனர். அவர்களுக்கும் தக்ஷிணை கொடுக்கப்பட்டது. இதற்குள் ஸாயங்காலமாயிற்று. நாங்கள் புறப்பட்டுப்போய்விட்டோம். இதைவிட அதிகமொன்றும் நடக்கவில்லை. இப்படியிருக்க 'ஸ்ரீஸ்ரீகளவர்களால் கோலாஹலம் செய்யப்பட்டது' என்று வெளிப்படுத்துவது அநுசிதமாத்ரமேயல்ல, மித்யை (பொய்) யுமாகும்.

1. மஹாமஹோபாத்யாய, ஸ்ரீ முகுந்தஜா வக்ஸீ.
2. ஸ்ரீ ஹரிநாராயண த்ரிவேதீ, ராஜகீய ஸம்ஸ்க்ருத வித்யாலய வ்யாகரண ப்ரதானாத்யாபக வையாகரண கேஸரீ, வ்யாகரணாசார்ய.
3. பண்டித ஸ்ரீ தாராசரண பட்டாசார்ய, டிகமணி காலேஜ் ஸாஹித்ய தர்ம ஶாஸ்த்ர ப்ரதானாத்யாபகர்.
4. பண்டித ஸ்ரீ வாமாசரண பட்டாசார்ய, டிகமணி காலேஜ் நியாய ஶாஸ்த்ர ப்ரதானாத்யாபகர்.

5. ஸ்ரீ பாலபோத மிஶ்ர, காஶீ ஸம்ஸ்க்ருத வித்யாலயத்தின் பூர்வோத்தர மீமாம்ஸாத்யாபக, நியாயாசார்ய, வ்யாகரணாசார்ய ஸாங்க்யதீர்த்த, யோகதீர்த்த இத்யாதி.
6. பண்டித ஸ்ரீ மஹாதேவ ஶாஸ்த்ரி, ராஜகீய ஸம்ஸ்கிருத வித்யாலயத்தின் தர்மஶாஸ்த்ர ப்ரதானாத்யாபக, ஸாங்க்யயோக ஸாஹித்யாசார்யர்.
7. பண்டித ஸ்ரீ பகவான் தத்தஶாஸ்த்ரி, அக்னிஹோத்ரீ.
8. பண்டித ஸ்ரீ பூர்ணசந்திராசார்ய, வையாகரண கேஸரீ, வ்யாகரண மார்தாண்ட, பரீக்ஷாபோர்ட் மெம்பர்.
9. பண்டித ஸ்ரீ வேணிமாதவாசார்ய ரமலஶாஸ்த்ரி.
10. பண்டித ஸ்ரீ கிரிஜா ஶங்கர ஶாஸ்த்ரி வ்யாகரணாசார்ய பிநகாராஜ்ய வித்யாலயாத்யாபகர்.
11. பண்டித ஸ்ரீதேவி ப்ரஸாத, வையாகரண கேஸரி.
12. பண்டித ஸ்ரீ பேசனராம சதுர்வேதீ, வையாகரண.
13. பண்டித ஸ்ரீ ஜகதீஶ ஶுக்ல, ஸாஹித்யாசார்ய.
14. பண்டித ஸ்ரீ காஶீநாத ஶாஸ்த்ரி, வைதிக கனபாடி.
15. பண்டித ஸ்ரீ வாணிஜா கவிரத்ன.
16. பலதேவ மிஶ்ர, ஜ்யோதிஷாசார்ய B. A.
17. காஶீநாத கர்மகாண்டீ.
18. கமலநயனாசார்ய, உபதேஶக மார்த்தாண்ட.
19. பண்டித ஸ்ரீ நந்தகிஶோரஶர்மா வாணீபூஷண.
20. பண்டித ஸ்ரீ பூர்ணசந்த்ர த்ரிபாடி, ஜ்யோதிஷாசார்ய.
21. பண்டித ஸ்ரீ ஹரகோவிந்த ஶாஸ்த்ரி, ஸாஹித்யாசார்ய.
22. பண்டித ஸ்ரீ வித்யாவிலாஸ ஶர்மா, வ்யாகரணாசார்ய.
23. பண்டித ஸ்ரீ ஜயகர்ண, த்ரிவேதீ.
24. பண்டித ஸ்ரீராம க்ருஷ்ணபானு, சதுர்வேதீ, வையாகரண.
25. பண்டித ஸ்ரீஹரிஜீ கர்மகாண்டி.
26. வைதிகாக்ய லக்ஷ்மீநாராயணஶர்மா.
27. பண்டித நாராயண ஶாஸ்த்ரி ஓஜா.

28. பண்டித ஸ்ரீ நாராயணதத்த த்ரிபாடி வ்யாகரணுசார்ய.
29. பண்டித ஸ்ரீ மிவமங்கல, த்ரிவேதீ, நியாயாசார்ய, வ்யாகரண தீர்த்த இத்யாதி.
30. பண்டித ஸ்ரீராமாநந்த ஜ்யோதிர்வித்.
31. பண்டித ஸ்ரீபாஸ்கராநந்த மாஸ்த்ரி, வையாகரண.
32. வம்மீதரமிம்ர, ஜ்யோதிஷாசார்ய.
33. பண்டித மங்களாநந்த மாஸ்த்ரி.
34. ஸ்ரீ ஸ்வாமிகளவர்களால் கோலாஹலம் நடக்கவில்லை. பண்டித ஸ்ரீ அநந்தராமடோங்கரீ, வேதாசார்ய.
35. ஸ்ரீ ஸ்வாமிகளவர்களால் கோலாஹலம் முதலியவைகள் நடக்கவில்லை. பண்டித ஸ்ரீ வ்ரஜ விஹாரீ ஜா, வ்யாகரணுசார்ய.
36 ஆசார்யரவர்களால் எவ்விதமான ஹல்லா நடக்கவில்லை. கோலாகலம் ஆனதெல்லாம் காமீபண்டிதர்களாலேயே. பண்டித ஸ்ரீ ஸீதாராமஜா, ஜ்யோதிஷாசார்யர்.

---

இவ்விதமாக காமியிலிருக்கும் வித்வான்கள், 'காசியிலிருக்கும் ஹாராண மாஸ்த்ரி முதலிய ஜனங்களால் கோலாஹலம் செய்யப்பட்டதேயொழிய ஸ்ரீகளால் கோலாகலம் நடக்கவில்லை' என்று வெளிப்படுத்தி, ஹாராண மாஸ்த்ரி முதலியோருக்கு மடத்து பண்டிதர்களாலும், காமியிலிருக்கும் பண்டிதர்களாலும் கீழ்க்கண்டபடிக்கு அறிக்கைப்பத்திரிகை கொடுக்கப்பட்டது.

ஸ்ரீராமசந்த்ரோ விஜயதே.

## அறிக்கை.

ஸபையின் அழைப்புப் பத்திரிகையில் விஜயேச்சை கண்டு வருகிறதென்று ஸ்ரீ முகுந்தஜா, ஸ்ரீகங்காதர மாஸ்த்ரி, ஸ்ரீசின்ன ஸ்வாமி மாஸ்த்ரி, ஸ்ரீ ஹாராணசந்திர மாஸ்த்ரிமுதலிய பண்டிதர்கள் எழுதியிருக்கிறுர்கள். மேற்சொன்ன பண்டிதர்களுக்கு அழைப்புப் பத்திரிகையினுல் இவ்விதமாய் தோன்றியது ஆச்சர்யமே. இதினுல் அவர்களுக்கு ஸொந்த விஜயேச்சை இருப்பதாகக் காண்கிறது. ஆகையால் இந்த அறிக்கையினுல் அறிவிப்பதென்ன

வென்றால்:—அழைப்புப் பத்திரிகையில் கண்டவாறே எழுத்து மூலம் ஶாஸ்த்ரார்த்தம் நடத்த தாங்கள் தயாராயிருப்பதாயின் வேதாந்தாதி ஶாஸ்திரங்களில் விசாரம் செய்ய நாம் ஸந்தோஷத்துடன் தயாராயிருக்கிறோம். எழுத்து மூலமல்லாமல் வெரும் ஶாஸ்த்ரார்த்தத்தினால் நிர்ணயமாகமாட்டாததுமன்றி வெரும் கோலாஹலம் நடக்கும் ஸம்பவமுமுண்டு.

## நிவேதகர்கள்.

1. ஶ்ரீஹரிநாராயண த்ரிவேதி, ராஜகீய ஸம்ஸ்க்ருத வித்யாலய வ்யாகரண ப்ரதானாத்யாபகர்.
2. ஶ்ரீபாலபோதமிஶ்ர, காசி ராஜகீய ஸம்ஸ்க்ருத வித்யாலயத்தின் வ்யாகரணப்ரதானாத்யாபகர்.
3. ஶ்ரீ மஹாதேவஶாஸ்த்ரி, ராஜகீய ஸம்ஸ்க்ருத வித்யாலயத்தின் தர்மஶாஸ்த்ர ப்ரதானாத்யாபகர்.
4. டிகமணி ஸம். கா. ஶ்ரீ பூர்ணசந்திராசார்ய, வ்யாகரண விஶிஷ்டாத்வைத வேதாந்த ப்ரதானாத்யாபகர்.
5. பண்டிதஶிரோமணி நரஸிம்ஹாசார்ய.
6. பண்டித நாராயணாசார்ய.
7. வேதாந்த வித்வான் வ்யாகரணபூஷண ஸீதாராமாசார்ய.
8. தர்க்க மஹோபாத்யாய லக்ஷ்மீநாராயணாசார்யர்.
9. தர்க்க ஶிரோமணி குருராஜாசார்யர்.

இவ்விதமாக நோடீஸ் கொடுத்தபோதிலும் ஹாராணஶாஸ்த்ரிகள்,நாராயணஶுக்ல,சின்னஸ்வாமி ஶாஸ்த்ரிகள் எழுத்து மூலமாக ஶாஸ்த்ரார்த்த விசாரம் செய்வதற்கு ஸித்தராகாமல் 'அத்வைதமதம் பௌத்தமதமே' என்று எழுதியிருக்கும்'அத்வைதமத விமர்ஶ' என்கிற க்ரந்தத்திற்கு கண்டனத்தைப்போல் தோன்றும் க்ரந்தத்தை எழுதி அதில் 'அத்வைதிகளின் ப்ரஹ்மம் ஞானரூபமானது, பௌத்தரின் ஶூன்யம் ஞானரூபமல்ல. ஆகையால் அத்வைதமதம் பௌத்தமதமே எப்படி ஆகும்? ஶ்ரீ ஸ்வாமிகள் பௌத்தரிட ஶூன்யம் அத்வைதிகளின் ப்ரஹ்மத்தைப்போல்

ஞானரூபமென்று சொல்லமாட்டாரல்லவா? ஶூன்யம் அபாவ ரூபம், அத்வைதிகளின் ப்ரஹ்மம்பாவரூபம். இது முதலிய அநேக பேதங்கள் இருப்பதினல் அத்வைதமதம் பௌத்தமதமெப்படி யாகும்? இதைக்கண்டித்தால் ஆயிரம் ரூபாய்கள் கொடுக்கிறோம்' என்று பத்திரிகையில் வெளியிட்டனர். அதற்கு ஸ்ரீஸ்ரீகள் 'பௌத்தர்களின் ஶூன்யம் அத்வைதிகளின் ப்ரஹ்மத்தைப்போலவே ஞானரூபமானது' என்று அத்வைத ஸித்தி, ப்ரஹ்மாநந்தீயம் முதலிய அத்வைதி க்ரந்தங்களின் ஆதாரங்களினுலும், மற்றும் 'அத்வய விஜ்ஞப்திரூபாம்' இது முதலிய பௌத்த க்ரந்தங்களின் ஆதாரங்களினுலும் ஸ்தாபித்து, மற்றும் அத்வைதப்ரஹ்மம் அபாவ ரூபமானதென்றும் ஸ்தாபித்து ஆயிரம் ரூபாய்களை நமக்கு கொடுக்கவேண்டியதென்று எழுதி அப்புத்தகத்தை இயற்றி அவர்களுக்கு அனுப்பவே, 'பௌத்தரின் ஶூன்யம் ஞானரூபம்' என்கிற இது முதலிய விஷயங்களை தங்களிட க்ரந்தங்களில் ஒப்புக் கொண்டபோதிலும் ரூபாய்களை மாத்திரம் அனுப்பவில்லை. பொய் (மித்யை) சொல்லுபவராயினர். ஆனல் எல்லாம் மித்யை என்று சொல்லும் அத்வைதிகளுக்கு இதொரு பொய் சொல்லு வது ஆஶ்சர்யமல்ல. அவர்பேரில் கோர்ட்டில் தாவாசெய்து வசூல் செய்யவேண்டியிருந்தது. ஆனல் ஏழை ப்ராஹ்மணர்களென்று உதாஸீனம் செய்யப்பட்டது. இவ்விதமாக ஹாராண ஶாஸ்த்ரி முதலியோர்கள் நியம பூர்வகமாய் மடத்தில் நடந்த ஸபைக்கு வர வில்லை. மேற்படி ஹாராண ஶாஸ்த்ரி முதலியவர்கள், ஹரி நாராயண த்ரிபாடியவருக்கு 'தாங்கள் காசிக்கு பெரிய பண்டிதர். தாங்கள் நம் பக்கத்திலிருந்து காசிக்கு மரியாதை பெற்றுத் தர வேண்டியதேயொழிய ஸ்ரீஸ்ரீகளின் பக்கத்தில் சேர்ந்து நம்மிட மர்யாதையை கெடுக்கக்கூடாது' என்று சொல்லிக்கொண்டதற்கு, 'நீர் நியமபத்தமான ஶாஸ்த்ரார்த்த விசாரம் செய்து காசிக்கு மரியாதை பெற்று கொடுக்கவேண்டுமேயொழிய, வெறும் சண்டை யிடுவது ஸரியல்ல என்று உமக்கு நோடீஸ் மூலகமாக முதலி லேயே அறிவித்திருக்கிறேன்' என்று ஹரிநாராயண த்ரிபாடி சொல்லி அவரிட கூட்டத்திலிருந்து எழுந்து வந்துவிட்டனர். இந்த ஸமாசாரத்தை வேண்டுமாயின் ஹரிநாராயண த்ரிபாடிக

ளைக்கேட்டுத் தெரிந்துகொள்ளலாம். இவ்விதமாக ஸ்ரீஸ்ரீகள் ஸபை முதலியவைகளை நடத்தி அத்வைத மதத்தைக் கண்டித்துக் கொண்டே அவ்வூரில் ஐந்துமாதங்கள் இருக்கும்போதே 'பலாயனம்' என்று சில மூர்க்கர்கள் எழுதியிருக்கிறார்கள். அப்படி எழுதும் மூர்க்கர்களின் கைப்பிடிக்கிறவர்கள் யார்? அவர்கள் எழுதிய தேதியில் ஸ்ரீஸ்ரீகள் அதே ஊரிலிருந்தனர்.

பிறகு அவ்வூரிலுள்ள டௌன்ஹாலில் எல்லாஜனங்களுக்கும் தர்மோபதேஶம் (தத்வோபதேஶம்) செய்யவேண்டுமென்று காஶியிலிருந்த லௌகிக வைதிக மஹாஜனங்கள் ஸ்ரீஸ்ரீகளை ப்ரார்த்தித்துக்கொண்டு, தங்களிட கையெழுத்துடன் அடியில் கண்டவாரு ப்ரஸித்த பத்திரிகை வெளியிட்டனர்.

**அதின் ஸம்ஸ்கிருத ஹிந்திபாஷைகளின் மொழிபெயர்ப்பு.**

ஸ்ரீராம சந்திரோ விஜயதே.

**தர்மோபதேஶம்.**

ஸ்ரீமத்ஜகத்குரு வைஷ்ணவ (த்வைத) ஸித்தாந்த ப்ரதிஷ்டாபக பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யாதி விவித பிருதாலங்க்ருத ஸ்ரீமத்வாசார்யரின் பீடாதீசரான ஸ்ரீ உத்திராதிமடாதீசரான ஸ்ரீமத் ஸத்யத்யானதீர்த்த ஸ்வாமிகளவர்களும் ஸ்ரீ ஸோஸ்ப்ரஹ்மண்யமடாதீசரான ஸ்ரீமத் வித்யாஸிந்து தீர்த்த ஸ்வாமிகளும் காசீ பட்டணத்தில் வந்து விராஜமானராயிருக்கிறார்கள். அவர்களின் (ஸ்ரீ ஸத்யத்யான தீர்த்தரவர்களின்) பாண்டித்ய பூர்ணமான தர்மோபதேஶம் ஆக்ஷேபித்தவர்களுக்கு ஸமாதான பூர்வகமாய் டவுன்ஹாலில் 20-12-32 மங்களவாரம் மத்தியானம் 3-மணி முதல் 5-மணிவரைக்கும் மூன்று நாள் ஸம்ஸ்க்ருத பாஷையில் நடக்கும். அதைவிட அதிக நாட்களாகிலும் நடக்கும்.

அவர் செய்யும் தர்மோபதேஶத்தின் தாத்பர்யம் கேழ்க்கும் எல்லா ஜனங்களுக்கும் தெரியும்படிக்கு ஸ்ரீமான் மாத்வ ஸம்ப்ரதாயாசார்யதார்ஶநிக ஸார்வபௌம ஸாஹித்ய தர்ஶநாத்யாசார்ய, தர்க்கரத்ன, நியாயரத்ன கோஸ்வாமி ஸ்ரீதாமோதர ஶாஸ்த்ரிமகாராஜா அவர்களால் ஹிந்திபாஷையில் அனுவாதம் செய்யப்

படும். இச்சமயத்தில் எல்லா தார்மிக ஜனங்களும் வந்து இந்த அபூர்வ லாபத்தை அடையவேண்டியதென்று அபேக்ஷிக்கிறோம்.

---

## நிவேதகர்கள்.

ராஜா ஸ்ரீமோதீசந்தஜீ C. I. E.

ராய்பஹதூர் பாபூ ஸ்ரீபகவான் தாஸஜீ சௌதரீ.

பாபூ ஸ்ரீநரோத்தம தாஸஜீ, B. A.

பண்டித ஸ்ரீகாசீ ராம ஶர்மா, M. A. (லேட் இன்ஸ்பெக்டர் ஸம்ஸ்க்ருத பாடசாலா, U.P.)

பண்டித ஸ்ரீ மதனமோஹன் ஶாஸ்த்ரி (மாரவாடி ஸம்ஸ்க்ருத பாடஶாலாத்யக்ஷர்.)

பண்டித ஸ்ரீசண்டீப்ரஸாத ஶுக்ல (கோயன் ஸம்ஸ்க்ருத பாடஶாலாத்யக்ஷர்.)

---

வித்யாவிலாஸ ப்ரெஸ், பனாஸ் விடி.

இவ்விதமாக வெளியிட்ட பத்ரிகையின்படிக்கு டவுன் ஹாலில் சேர்ந்திருந்த சுமார் இரண்டாயிரம் ஜனங்களுக்கு ஸ்ரீஸ்ரீகள் தத்வோபதேஶங்களைச் செய்துகொண்டே சில நாள் ஸ்ரீகாசியில் வஸித்திருந்து, பிறகு நாகபூர் முதலிய பட்டணங்களின் மார்க்கமாய் ஸ்ரீ வெங்கடாசலத்திற்கு விஜயம் செய்தனர்.

2. இவ்விஷயங்களை காசியிலிருக்கும் ஸ்ரீ ஹரிஹரானந்த ஸரஸ்வதி (பரமஹம்ஸ கரபாத்ரி) அவர்கள் தம்மிட உபன்யாஸத்தில் சொல்லியிருக்கிறார். ஸ்ரீப்ரேமவல்லப ஶாஸ்த்ரிகள் என்பவர் மேற்படி உபன்யாஸங்களை ஸங்க்ரஹித்து 'ஸர்வ ஸித்தாந்த ஸமன்வயம்' என்கிற புத்தகத்தை எழுதியிருக்கிறார். அப்புத்தகத்தை ஹிந்திபாஷையில் ரா. ஸ்ரீ. ஶீதலப்ரஸாத் அஸிஸ்டெண்ட் கமிஷனர் பனாஸ் இவர்களால் 1935-வது வருஷத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டிருக்கிறது. அதில் 12-13 வது பக்கங்களில் அடியில் கண்டவாறு எழுதப்பட்டிருப்பதை எல்லோரும் காணலாம்.

(ஹிந்தி பாஷை)

परमपुण्य भगवान् भूतभावनकी बाराणसीपुरीमें कई साल हुए "श्रीमान् माध्वसम्प्रदायाचार्य" पधारेथे। काशीस्थ विद्वान् उनको एक साम्प्रदाय का आचार्य समझकर उनके साथ शिष्टतानुसार व्यवहार करते थें; परन्तु उक्त सम्प्रदायाचार्यजीकी उत्सुकता "श्री मच्छङ्कर भगवत्पाद"को विज्ञानवादी, याशून्यवादी, बौद्ध, अवैदिक अद्वैत-सिद्धान्तके प्रचारक, तथा भस्मरुद्राक्ष धारणकरनेवाले विद्वान् ब्राह्मणों का नरक जाना इत्यादि विषयोंके सिद्धकरनेमें थी।

आचार्यमहोदयकी ऐसी विलक्षण उत्सुकता को देखते हुएभी अधिकविद्वान् मण्डल सुसंपन्न संघटनमे विघ्नसमझकर मौन रहे। दो एक विद्वानोंने कुछ प्रतिवादभी किया। परन्तु वह कार्यक्रम उनके चले जानेपरभी उनके सिद्धान्तानुयायी कुछ विद्वानो द्वारा काशीमें प्रचलितहै.

---

மேற்படி ஹிந்திபாஷையின் மொழிபெயர்ப்பு.

பரம புண்யமான பகவானின் வாரணஸீ க்ஷேத்ரத்தில் சில வர்ஷங்களுக்குப் பின் ஸ்ரீமான் மத்வஸம்ப்ரதாயாசார்யர் விஜயம் செய்திருந்தனர். காசியிலிருக்கும் வித்வான்கள் இவர் ஓர் ஸம்ப்ர தாயாசார்யரென்று தெரிந்துகொண்டு, அவருடன் ஶிஷ்டாசாரத் தின்படிக்கு மரியாதைகளைச் செய்து வந்தனர். ஆயினும் 'ஸ்ரீமத் சங்கர பகவத்பாதர் விஜ்ஞானவாதி மற்றும், ஶூன்யவாதி; பௌத் தரின் அவைதிக மதத்திற்கே வைதிகவேஷத்தைக் கொடுத்து அத்வைத மதமென்று ஸ்தாபித்தனர்.' மற்றும் 'பஸ்மருத்ராக்ஷ தாரணம் செய்யும் வித்வான்களான ப்ராஹ்மணர்கள் நரகத்திற்கு போகிறவர்கள்' என்கிற இது முதலிய விஷயங்களை ஸித்தப் படுத்துவதில் அந்த மத்வ ஸம்ப்ரதாயாசார்யரின் உத்ஸாஹ மிருந்தது. இத்தகைய மஹானுபாவரான இந்த ஆசார்யரின் உத்ஸாஹத்தைப் பார்த்துக்கொண்டிருந்தும் காசியிலிருக்கும் வெகு வித்வான்கள் இத்தகைய ஸுஸம்பன்னமான (மகாபாக்ய மான) வேலைக்கு தடைசெய்யக்கூடாதென்று தெரிந்துமௌனமா

யிருந்தனர். ஒன்றிரண்டு வித்வான்கள் மாத்திரம் ஏதோ சிலப்ரதி வாதங்களைச்செய்தனர். இவ்வாசார்யர் காசி விட்டுப்போன பிறகும் அத்வைதம் அவைதிகமான பௌத்தமதம் என்று ஸித்தப் படுத்தும் கார்யக்ரமம் அவரிட ஸித்தாந்தானுயாயியான வித்வான்களின் முகாந்தரமாய் காசியில் நடந்துவருகிறது.

ப்ரதிமாதத்திலும் அத்வைத விமர்ஶமாலா புஷ்பம் என்ற புத்தகம் விலையின்றி கொடுத்து வருகிறார். அதில் கண்ட விஷயங்களின் சுருக்க மென்ன வெனின்—ஶங்கராசார்யர் ப்ரச்சன்ன பௌத்தராயிருந்தார். தாமஸ ஜனங்களின் மோகனார்த்தமாகவே அவதரித்திருந்தார். அத்வைதிகள் வேதஶாஸ்த்ர ஈஶ்வரதேவதைகள், ப்ராஹ்மணாதிவர்ணங்கள், ப்ரஹ்மசர்யாத் யாஶ்ரமங்கள், ஸ்வர்க நரக புண்ய பாபங்களெல்லாம் மித்யை (பொய் = எக்காலத்திலுமில்லாதது) என்று சொல்லுகிறார்கள். ஆகையால் நாஸ்திகராவர். சில அத்வைதிகள் சில கர்மங்களைச் செய்வது ஆஸ்திகரின் வஞ்சனைக்காகவேயாகும். த்ரிபுண்ட்ர பஸ்மதாரணங்களால் நரகமுண்டாகிறது. 'த்ரிபுண்ட்ரதாரணாத்விப்ர: பதத்யேவ ந ஸம்ஶய:| த்ரிபுண்ட்ரதாரணம் க்ருத்வா தமஸ்யந்தே நிமஜ்ஜதி||' இது முதலிய வாக்யங்களால் 3-வது 6-வது புஷ்பங்களில் மேற்படி விஷயங்களை ஸித்தப்படுத்தும் ப்ரயத்னம் செய்யப்பட்டிருக்கிறது.

ஷை ஸர்வஸித்தாந்த ஸமன்வய புத்தகத்தில் 'அந்தந்த வாதங்களுக்கபிமதமான அந்தந்த தேவதைகளின் அவதாரரான அந்தந்த ஆசார்யர் மாத்ஸர்யாதி தோஷஶூன்யராய் 'ப்ரமாணம் பரம: ஶ்ருதி:' என்று கதறிக்கொண்டே நிரர்த்தகமான ஸித்தாந்தத்தை ஏன் ஸ்தாபிப்பார்கள்?' என்று எழுதி எல்லா ஸித்தாந்தங்களையும் ஸமன்வயப்படுத்த (ஒன்றாக்க) சிலர் புறப்பட்டிருக்கின்றனர். ஆயினும், பரஸ்பரவிருத்தமான ஸித்தாந்தங்கள் என்றைக்கும் ஒன்றேயாவதற்கு ஸாத்யமில்லாததினால் அந்த க்ரந்தகாரர் அப்படி எழுதியிருப்பது ஸரியல்ல. ஆயினும் அந்த 'ஸர்வஸித்தாந்த ஸமன்வய க்ரந்தத்திலுள்ள ஸ்ரீ ஹரிஹராநந்தஸரஸ்வதி அவர்களிட உபன்யாஸத்தினால்—உத்தராதிமடத்து ஸ்வாமிகள் காஶியில் அத்வைதமதம் அவைதிகமான பௌத்தமதமே

என்று சொன்னதற்கு ஒன்றிரண்டு பண்டிதர்கள் ஏதோ சில ஆக்ஷேபங்களைச் செய்தனரே யொழிய அனேக பண்டிதர்கள் சும்மாயிருந்தனரென்றும், ஸ்ரீஸ்வாமிகள் காசி விட்டுவந்த பிறகும் 'அத்வைதமதம் அவைதிகம்' என்று ஸ்ரீமன் மத்வமதானுயாயிகளான பண்டிதர்கள் காசியில் ப்ரசாரப்படுத்தி வருகிறார்கள் என்றும் ஸித்தமாகிறபடியால் காஶியில் த்வைத மதத்திற்கே விஜயமென்று இத்துந்துபி முழங்குகிறது.

(3) ஸ்ரீஸ்ரீகள் ஸ்ரீ காஶீ பட்டணத்தைவிட்டு வந்து மூன்று நான்கு மாதங்களுக்குப் பிறகும் கவர்ன்மெண்ட் க்வீன்ஸ் காலேஜியில் த்வைத ஸித்தாந்த பாடத்தை ஸ்தாபிக்கவேண்டுமென்று காஶியிலிருக்கும் பண்டிதர்களின் வேண்டுகொளுக்கிணங்கி, மேற்படி கலாசாலையில் த்வைத ஸித்தாந்தத்தைக்கற்பிக்கும் வகுப்பை ஏற்படுத்தி ஷை ஸித்தாந்தத்தைப் பாடம் சொல்லும் பண்டிதரையும் ஸ்தாபித்திருக்கின்றனர். மற்றும் ஷை கலாசாலையில் ஸ்ரீஸ்ரீமன் மத்வாசார்யரின் படமும் ஸ்ரீஸ்ரீமத் ஸத்யத்யானதீர்த்தரிட படமும் ஸ்ரீமான் காஶீராஜா ஸ்ரீ ஆதித்யநாராயணஸிம்ஹ பகதூர் K. C. S. I. மகாஶயரால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. இவ்விஷயத்தை 'பண்டித' என்கிற வர்த்தமான பத்திரிகாதிகளில் அடியிற் கண்டவாறு கூறப்பட்டிருக்கிறது.

# श्रीमन्मध्वाचार्यका चित्रोद्घाटन

## गवर्मेंट कालेजमें श्रीमान् काशी नरेशद्वारा

ता० २७-११-३४ मंगलवारको मध्यान्होत्तर २॥ बजे श्रीमान् काशिराज श्री १०५ आदित्यनारायण सिंह बहादुर के० सी० एस० आई० महोदय, युवराज श्री विभूति नायायण सिंह महोदय, चीफ सेक्रेटरी तथा अन्य प्रधान राज-कर्मचारियोंके साथ गवर्मेंट कालेजमें पधारे थे। कालेजका भव्य हाल निमंत्रित गण्यमान्य सज्जन तथा विद्यार्थिवृन्दोंसे ठसाठस भरा था। कालेजके प्रिंसपल बी० संजीवराव एम० ए० आई० ई० एस० महोदयकी प्रार्थनानुसार श्रीमान् महाराजने विद्यार्थियोंसे निनादित मधुर वादन तथा पुष्पवृष्टिमें उक्त चित्रोद्घाटन प्रतिष्ठापन

भक्तिपुरस्सर किया। श्रीमान् संजीवरावजीने जगद्गुरु श्री १००८ मध्वाचार्य जीके द्वैत दर्शनका परिचय कराते हुए ऐसे महापुरुषोंके चित्रोद्घाटनकी गवर्मेंट कालेज जैसे स्थानोंमें अत्यावश्यकता भी प्रदर्शित की। श्रीमान् जगद्गुरु उत्तरादि मठाधीश्वर श्री स्वामीजीके शिष्य पण्डित शिरोमणि नरसिंहाचार्यजीने तथा पण्डित नारायणाचार्यजीने श्रीमान् महाराज तथा युवराज महोदयोंको श्री स्वामीजीके शुभाशीर्वाद रूपमें समुचित प्रसाद मंत्राक्षतादि समर्पण किया। श्रीमान् महाराजाकी आज्ञानुसार पण्डित ठाकुरप्रसाद साहित्याचार्यजीने श्री संजीवरावजी तथा श्रीमान् पण्डित नरसिंहाचार्य आदि समस्त सभ्यवृन्दोंको धन्यवाद दिया। इसी उत्सवके उपलक्ष्यमें उपस्थित जनताको मिष्टान्न भी वितरित किया गया और द्वितीय दिन कालेजको छुट्टी भी मिली थी।—निवेदक—रामचन्द्र दूबे (छात्र क्वींस कालेज)।

॥ श्रीः ॥

यौ तौ शंखकपालभूषितकरौ हारास्थिमालाधरौ।
देवौ द्वारवतीश्मशाननिलयौ नागारिगोवाहनौ॥
द्वित्र्यक्षौ बलिदक्षयज्ञमथनौ श्रीशैलजावल्लभौ।
पापघ्नौ हरतां सदा हरिहरौ श्रीवत्सगङ्गाधरौ॥

अयि महोदयाः विद्वद्वर्याः भवन्तोऽस्मिन्महोत्सवेऽस्मानाहूय यच्छ्रीमत्परमहंस-परिव्राजकाचार्य भगवद्विष्णुभक्ति सम्प्रदायप्रवर्तक पूज्यपाद श्रीमदानन्दतीर्थ भगवत्पादाचार्याणाम् तथा श्रीमदुत्तरादि मठ प्रधान देवतास्वरूप श्रीमदादिमध्वाचार्य करकमलसम्पूजित श्रीमन्मूलरामदेवचरणार्चन प्रथितवर्तमान श्रीमदुत्तरादि मठाधीश्वर परमहंस परिव्राजकाचार्य सर्वविद्याऽऽदरणीय पूज्यपाद श्री १०८ सत्यध्यानतीर्थ स्वामिपादानाम् च तैलचित्रावरणोद्घाटनशुभकर्मणि नियोज्य च महद्गौरवं प्रापितवन्तः तेन वयं कृतार्था जाताः अतोऽत्र भवन्तो माननीयाः सज्जनाः श्रीनरसिंहाचार्य महोदयाश्चातीव धन्यवादार्हाः यैरमूल्यसमय प्रदाने नयता परिश्रमेणचैतत्कार्यम् सुष्ठु सम्पादितमिति

S/d. श्रीमान् हिज हाइनेस महाराज काशी नरेश महोदय

श्री आदित्यनारायणसिंह

K. C. S. I.

## (ஷ ஹிந்தி பாஷையின் மொழி பெயர்ப்பு)

### கவர்ன்மேண்ட் காலேஜியில் ஸ்ரீமான் காஶீ நரேஶரால் ஸ்ரீமன் மத்வாசார்யரின் சித்ரோத்காடனம்.

27-11-34 செவ்வாய்கிழமை மாலை $2\frac{1}{2}$-மணிக்கு ஸ்ரீமான் காஶிராஜா ஸ்ரீ 105 ஆதித்யநாராயணஸிம்ஹ பஹதூர் K. C. S. I. மகாஶயரும், யுவராஜ ஸ்ரீ விபூதிநாராயணஸிம்ஹ மகாஶயரும், சீப் செக்ரிடரி மற்றும் இதர ப்ரதான இராஜகார்யஸ்தர்களுடன் கவர்ன்மெண்ட் காலேஜிக்கு விஜயம் செய்தனர். காலேஜியின் அலங்கிருதமான மண்டபம் அழைக்கப்பட்டிருந்த மான்யரான ஸஜ்ஜனர்களுடனும் வித்யார்த்திகூட்டத்துடனும் நிறைந்திருந் தது. காலேஜ் ப்ரின்ஸிபால் B. ஸஞ்ஜீவி ராவ் M. A., I. E. S. மகாஶயரின் வேண்டுகோளின்படிக்கு ஸ்ரீமான் மகாராஜரால் வித்யார்த்திகளின் மதுரமான ஜயஶப்தத்துடனும் புஷ்பவ்ருஷ்டி யுடனும் கூடி சித்ரோத்காடன ப்ரதிஷ்டை (படத்தின் திறப்பு) பக்திபூர்வகமாய் செய்யப்பட்டது. ஸ்ரீமான் ஸஞ்ஜீவிராயரால் ஜகத்குரு ஸ்ரீ 1008 மத்வாசார்யரின் த்வைத ஶாஸ்த்ரத்தைத் தெரிவித்து, இத்தகைய மகான்களின் படங்களின் ஸ்தாபனம் கவர்னமெண்ட் காலேஜ் முதலிய இடங்களில் அத்யாவஶ்யக மென்பதையும் காட்டினர். ஸ்ரீமதுத்தராதிமடத்து ஸ்வாமிகளின் சீடரான பண்டித சிரோமணி நரசிம்ஹாசார்யராலும், பண்டித நாராயணுசார்யராலும் ஸ்ரீமான் மகாராஜருக்கும் யுவராஜருக்கும் ஸ்ரீ ஸ்வாமிகளின் ஶுபாஶீர்வாதரூப ப்ரஸாத மந்த்ராக்ஷதைகளை ஸமர்ப்பிக்கப்பட்டது. ஸ்ரீமான் மகாராஜரின் உத்திரவின்படிக்கு பண்டித டாகுர் ப்ரஸாத் ஸாஹித்யாசார்யரால் ஸ்ரீ ஸஞ்ஜீவிராவ், பண்டித நரஸிம்ஹாசார்யர் முதலிய ஸபையோருக்கு தன்யவாதம் கொடுக்கப்பட்டது. இவ்வுர்ச்சவத்திற்காக வந்திருந்த ஜனங் களுக்கு ஶுபோஜனமுமளிக்கப்பட்டது. மருநாள் காலேஜிக்கு ரஜாவிடப்பட்டது. நிவேதகர் ராமசந்த்ர தூபே (க்வீன்ஸ் காலேஜ்.)

## ஸ்ரீமான் காசீ ராஜரின் தன்யவாதத்தின் சுருக்கம்.

ஸ்ரீமத் பரமஹம்ஸ ஸ்ரீமத்வாசார்யரிடவும், ஸ்ரீமதுத்தராதி மட ப்ரதான தேவதாஸ்வரூப ஸ்ரீமதாதி மத்வாசார்ய கரகமல ஸம்பூஜித ஸ்ரீமன் மூலராம தேவசரணார்ச்சனபரரான ஸ்ரீமதுத்த ராதி மடாதீஶ்வரபரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஸர்வ வித்யா தரணீய பூஜ்யபாத ஸ்ரீ 108 ஸத்யத்யான தீர்த்த ஸ்வாமி பாத ரிடவும் படங்களைத் திறக்கும் கார்யத்தில் என்னை நியோகித்து கௌரவப்படுத்தியதற்காக ஸஜ்ஜனர்களெல்லோரும் மற்றும் நரசிம்மாசார்யரும் தன்யவாதார்கள்.

---

மற்றும் ப்ரதி வருஷம் மத்வ நவமியன்று காசியிலிருக்கும் எல்லா பண்டிதர்களும் ஸ்ரீ காசி மகாராஜரும் சேர்ந்து ஸ்ரீமன் மத்வாசார்யரின் உற்சவத்தை நடத்தி வருகின்றனர். காசியில் மேற்கூறிய கார்யங்களெல்லாம் த்வைதவிஜயத்திற்கு ஞாபகங்களா யிருக்கின்றன.

ஸ்ரீ ஸ்வாமிகளவர்கள் காசியில் பராஜிதராய் பலாயனம் செய் திருந்த பக்ஷத்தில், டவுன் ஹாலில் தத்வோபதேஶம், ஸ்ரீகள் ஊர் விட்டு வந்த பிறகு கவர்ன்மெண்ட் காலேஜியில் த்வைத வேதாந்த வகுப்புத் திறப்பு, ஆசார்யரின் பிம்ப ஸ்தாபனம் முதலிய கார்யங் கள் எப்படி நடக்கும்? இவைகளையறியாமல் எவனோ அச்சம் பட்டனென்பவன் ஏதோ எழுதியதை அத்வைத சங்கத்தினர் அச்சிட்டு வெளிப்படுத்திராம். அது கேழ்க்க 'எருது கன் றீன்றிற்று' என்று சொல்லவே 'கொட்டகையில் கட்டு' என்று சொல்லியவாறு, மிகவும் பரிஹாஸாஸ்பதமாயிருக்கிறது. இத்த கைய வார்த்தைகளை யாராவது புத்தியில்லாதவர்கள் எழுதியிருக் கக்கூடுமேயொழிய சங்கத்தினர் எழுதுவது அனுசிதமாகும் என்கிற விஷயங்களை இத்துந்துபி தன்னொலியினால் உலகமெங்கும் பரவச் செய்கிறது.

4. ஸ்ரீஸ்ரீகள் காசியை விட்டு வந்து சில காலம் கழிந்த பிறகு 1934-வது வருஷத்தில் கும்பகோணம் ஸ்ரீகாஞ்சீகாமகோடி பீடாதிபதிகளான ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளிட சரண

பக்தனுன நீலகண்டஶர்மா என்கிற ஓர் அத்வைதி கீழ்கண்டவாறு ஹிந்திபாஷையில் ஒரு பத்திரிகையை வெளியிட்டனன். அதின் மொழிபெயர்ப்பு:—

॥ ஸ்ரீ ஜகத்குரு ஶங்கராசார்யோ விஜயதேதராம் ॥

ஶ்ரௌதஸ்மார்த்த தர்மாபிமானிகளான ஸ்ரீமத் * ஜகத்குரு ஸ்ரீ ஶங்கரபகவத் பாதாசார்யரின் முகாந்தரமாய் ப்ரசுரிக்கப்பட்ட அத்வைத ஸம்பிரதாயானுயாயிகளான காஶீவாஸிகளான எல்லா தார்மிக ஜனங்களுக்கும் அறிவிப்பதென்ன வெனின்—வருகிற த்ரயோதஶி தினம் ஸ்ரீமத் ஜகத்குரு சங்கராசார்யரிட முக்ய குரு பீடமான காமகோடி பீடாதீஶ்வரர் ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் காஶிக்கு வருகிருர்.

சில நாட்களுக்கு முன்னமே பகவான் விஶ்வநாதஸ்வாமியின் இப்புண்ய பட்டணத்தில் மத்வமதப்ரவர்த்தக உத்தராதி மடத்தின் ஆசார்ய ஸ்வாமிகளான ஸ்ரீமத் ஸத்யத்யான தீர்த்தரவர்களால் தம்மிட சீடர்களின் முகாந்திரமாய் பகவான் ஸ்ரீ சங்கரா

* ஜகத் குருத்வம் யாருக்குப் பொருந்துகிறது? ஸ்ரீமத் மஹாபாரதம் சாந்தி பர்வத்தின் 349 வது அத்தியாயத்திலுள்ள (கும்பகோணம் பதிப்பு) 'வாகுவாச—ஏஷ ப்ரஹ்மா லோக குருঃ ஸர்வலோகபிதாமஹ:| ||51||........ பகவானுவாச—தாதா (धाता) த்வம் ஸர்வபூதானும் த்வம் ப்ரபுர்ஜகதோ குருঃ। த்வய்யாவேஶித பாரோஹம் த்ருதிம் ப்ராப்ஸ்யாம்ய தாஞ்ஜஸா ||93||' என்கிற ப்ரஸித்த ப்ரமாணங்களால் ஜகத்குருத்வத்தை ஸ்ரீபகவான் சதுர்முக ப்ரஹ்மாவுக்குக் கொடுத்திருப்பதாய்த் தெரியவருகிறது. ஸ்ரீ ராமாயணம் உத்தரகாண்டம் 37 வது ஸர்க்கத்திலுள்ள 'ஸர்வாஸு வித்யாஸு தபோவிதானே ப்ரஸ்பர்த்ததே யோ ஹி குரும் ஸுராணும் | ஸோயம் நவ வ்யாகரணர்த்தவேத்தா பரஹ்மா பவிஷ்யத்யபி தே ப்ரஸாதாத் ||50||' இது முதலிய ப்ரமாணங்களால் எல்லா வித்தைகளிலும் தபஸ்ஸிலும் ப்ரஹஸ்பதியையும் வெல்லக்கூடிய அந்த இவன் (ஹனுமார்) உன் ப்ரஸாதத்தினுல் ப்ரஹ்மா ஆகிருர் என்றிருப்பதாலும், மத்வாசார்யர் அநேக ஶ்ருதி ஸ்ம்ருதி ப்ரமாணங்களால் அந்த ஹனுமானின் அவதாரரென்று ஸித்தமாயிருக்கிறபடியால் அந்த ப்ரஹ்மாவுக்கு அளிக்கப்பட்ட ஜகத் குருத்வத்தின் பாத்யதை மத்வாசார்யருக்கும் அப்பீடத்தை அலங்கரிப்பவர்களுக்கும் மாத்திரமே ஸித்திக்குமேயல்லாமல், ருத்ராவதாரரென்றும் ருத்ராவிஷ்டாவதாரரென்றும் ப்ரஸித்தராயிருக்கும் சங்கராசார்யருக்காகிலும், அப்பீடாதிபதிளுகக்காகிலும் எப்படி ஸித்தமாகும்?

சார்யர் மற்றும் அவரிட அத்வைத ஸித்தாந்தம் இவைகளின் விஷயத்தில் அநேகமான நிரர்கலமான (தடையில்லாத) வார்த்தைகள் ப்ரசாரம் செய்யப்பட்டிருக்கின்றன. அப்படியே காஶியிலிருக்கும் சில கண்யரான மான்யரான பண்டிதர்களுக்கு அவமானம் செய்யப் பட்டிருக்கிறது. ஸ்ரீமத் ஜகத்குருக்களுக்கும் இவ்விஷயம் தெரிந்திருக்கிறதல்லவா?

முக்ய குருபீடாதிபதி ஸ்ரீ சங்கராசார்ய மகாராஜருக்கு இவ் வார்த்தைகளைக் கேட்டு வெகு மனக்கலக்கம் உண்டாயிருக்கிறது. அத்வைத ஸித்தாந்தம் முக்காலத்திலும் அபாதிதமாயிருக்கிறது. அதின் கண்டனம் செய்வது யாராலும் ஸாத்யமில்லை. யாருக்காகிலும் நிஜமாய் இவ்விஷயத்தை விசாரிக்கும் உற்சாகமிருக்குமாயின் அவர்கள் ஸ்ரீ முக்ய பீடாதிபதிகளான ஜகத்குருக்களின் எதிரில் வந்து அவரிட உற்சாகத்தை முடித்துக்கொள்ளலாம். வெரும் நோடீஸுகளால் பகவான் ஸ்ரீ சங்கராசார்யரையாகிலும், அவரிட அத்வைத மதத்தையாகிலும் தூஷிப்பது சிஷ்யர்கள் செய்யும் கார்யமல்ல. இக்காரியம் மத்வ ஸம்பிரதாயத்திற்கும் ப்ரஶம்ஸாகரமல்ல.

இப்படியிருக்க தம்மிட முக்யமான அத்வைத ஸம்ப்ரதாய விஷயத்தில் அனர்கலமான ப்ரசாரத்தைக் கேட்டு, ஸ்ரீமதாசார்ய சரணரின் மனது எவ்வளவு க்ஷோபையு (கல்க்கமு)டையதாயிருக்கிறதோ அதை விவரிப்பதற்கு ஸாத்யமல்ல. ஸ்ரீமான் மகா மகோபாத்யாய பண்டித அனந்தக்ருஷ்ண ஶாஸ்த்ரி வேதாந்த விஶாரதரைப்போன்ற ஆசார்யசரணரின் பக்தரிடமிருக்க எந்த மத்வ ஸம்ப்ரதாயிகளாகிலும் அல்லது இதர ஸம்ப்ரதாயிகளாகிலும் அத்வைதமதத்தின் கண்டனம் செய்வதற்கு ஸாஹஸிப்பது ஸூர்யனின் முன்னிலையில் மிணகராம்பூச்சி ப்ரகாஶிப்பதுபோல் அறியவேண்டியது. ஆசார்யரின் சரணாபிமானிகளான காஶியிலுள்ள பண்டிதஜனங்கள் ஸாவதானராகவும் நிஶ்சிந்தராகவும் இருக்கவேண்டும்.

நிவேதகர்—ஸ்ரீமதாசார்ய சரண பக்த

நீலகண்ட ஶர்மா.

---

(ஹிந்து பாஷைக்குச் சரியான மொழி பெயர்ப்பு)

மேல்கண்ட நோடீஸில் "மத்வமத ப்ரவர்த்தக உத்தராதி மடத்தின் ஆசார்ய ஸ்வாமிகள் சங்கராசார்யரின் அத்வைத ஸித்தாந்த விஷயத்தில் அநேகமான நிரற்கலமான பேச்சுகளின் ப்ரசாரத்தினுல் (கண்டனுதிகளால்) காஞ்சீ காமகோடி மடத்தின் ஸ்வாமிகளுக்கு மிகவும் மனக்கலக்கமுண்டாயிருக்கிறது. தம்மிட முக்யமான அத்வைத ஸம்பிரதாய விஷயத்தில் அனற்கல ப்ரசாரத்தைக் கேட்டு சங்கராசார்யரின் மனது எவ்வளவு கலக்க முள்ளதாயிருக்குமோ அதை வர்ணிக்க ஶக்யமல்ல. இப்போது வந்திருக்கும் சங்கராசார்யர் த்வைதமதத்தைக் கண்டித்து அத்வைதமதத்தை ஸ்தாபிக்கிறுர். காஶியிலிருக்கும் அத்வைத பண்டிதர்கள் ஸாவதானமாகவும், நிஶ்சிந்தராகவும் இருக்க வேண்டும்" என்று எழுதியிருப்பதினுல் "அத்வைதமதத்தை உத்தராதிமடத்து ஸ்வாமிகள் கண்டித்தனர். அக்காலத்தில் அவரை எதிர்த்து அத்வைதமதத்தை ஸ்தாபிப்பதற்கு காஶியி லிருக்கும் பண்டிதர்களால் முடியவில்லை" என்று ஸ்பஷ்டமாய் தெரியவருகிறது.

மேற்கண்ட பத்திரிகையைப் பார்த்து ஸ்ரீஸனுதனதர்ம லேககமண்டல ப்ரதானுத்யக்ஷரான, ஸ்ரீ ஜகத்குரு உத்தராதிமடாதீஶரின் சீடரான பண்டித சிரோ:மணி நரசிம்ஹாசார்யர் கும்பகோணம் மடாதீச ஸ்ரீகாமகோடி மடத்தின் அத்யக்ஷருக்கு ஸம்ஸ்க்ருதத்தில் கடிதம் எழுதியிருக்கிறுர்.

---

## ஷை ஸம்ஸ்க்ருத கடிதத்தின் ஸரியான மொழி பெயர்ப்பு.

ஸ்ரீ:

ஸ்ரீமத் காமகோடி மடகார்யாலயத்தின் ப்ரதானுத்யக்ஷருக்கு:—

மஹாஶயரே! என்றைக்கு உங்களிட ஸ்வாமிகள் ப்ரயாகத்திலிருந்து காஶிக்குப் புறப்பட்டனரோ அன்றே இந்த காஶியில் 'நீலகண்ட ஶர்மா' என்கிற நிவேதகரிட பெயருடன்கூடிய

உங்களிட ஸ்வாமிகளின் ப்ராஶம்ஸாதிஶயத்தைத் தெரிவிக்கும், மற்றும் நம்மிட உத்தராதிமடாசார்யரின் அதிக்ஷேபங்களுடன் கூடியதுமான ஓர் பத்திரிகை ப்ரசித்தமாயிற்று. அதில் காசியிலிருக்கும் பண்டிதர்கள் ஸமாதானப்படுத்திக்கொள்ளப்பட்டிருந்தனர். விஶ்வேஶ்வர காலபைரவாதி ப்ரஸித்த தேவாலயங்களின் வெளியில் அப்பத்திரிகைகளை ஒட்டி இந்த ஸமாசாரத்தை எல்லா இடங்களிலும் ப்ரஸித்தப்படுத்தப்பட்டிருக்கிறது. உங்களிட மடத்து சிடரான அனந்தக்ருஷ்ண ஶாஸ்த்ரிகளும் அதில் அதிகமாக துதிக்கப்பட்டிருக்கிறார். அப்பத்திரிகையிலிருக்கும் ஸமாசாரத்தை யோசிக்கும்கால் நம் மனதில் உம்மிட மடத்திலிருந்தே இந்த பத்திரிகை வெளியாயிருக்கவேண்டுமென்று நிச்சயமாய்த் தோன்றுகிறது. ஆயினும் தங்களைக் கேழ்க்காமல் யாதொன்றும் ப்ரதிசெய்வதற்கு ஸப்யரான நம் மனதிற்கு ஸரிஎன்று தோன்றவில்லை. ஆகையால் உம்மைக் கேழ்க்கிறோம். இந்த பத்திரிகை உம்மிட அல்லது உம்மிடஸ்வாமிகளின் உத்திரவினால் புறப்பட்டிருக்கிறதோ? இதனால் எதை ஸாதிப்பதற்குத் தாங்கள் அபேக்ஷிக்கிறீர்கள்? இம்மார்க்கத்தை தாங்கள் ஆஶ்ரயிப்பதற்கு இச்சிக்கும் பக்ஷத்தில் அவசியமாய் அதற்கு ப்ரதி செய்வதற்கு நாமும் முயற்சி செய்யவேண்டியதேயாகும்.

இவ்விஷயத்தில் நீங்கள் உங்களிட அபிப்ராயத்தை சீக்கிரத்தில் அறிவிக்கவேண்டியது. அதனால் முன் கார்யங்கள் நடத்துவதற்கு இருவருக்கும் ஸௌகர்யமாகும்.

இவ்வாறு எழுதப்பட்டுள்ள இக்கடிதத்திற்கு ஸ்ரீ கும்பகோணம் ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளிட மானேஜர் (கார்ய நிர்வாஹகர்) அவர்களால் ஸ்ரீ ஸநாதனதர்மலேககப்ரதான மந்திரிகளுக்கு ஸம்ஸ்க்ருதத்தில் அடியில்கண்ட கடிதம் எழுதி அனுப்பப்பட்டது.

---

SRI KANCHI KAMAKOTI PEETATHIPATHI JAGATHGURU SRI SANKARACHARYA SWAMIGAL MUTT.

THE MANAGER.
CAMP OFFICE.
HIS HOLINESS SRI SANKARACHARYA SWAMIGAL MUTT
SAMSTHANAM.

श्रीसनातनधर्मलेखक
प्रधानमन्त्रिषु

Camp श्रीकाशी (Suttola). Ge.No. 423/1934-35 Dated 21—10—1934.

अलभतास्मल्लोचनविषयतां भवदीयो लेखः। "नीलकण्ठ
शर्मा," इति निवेदकनामाङ्कितं भवत्पत्रनिर्दिष्टानाव
श्यकानेकवृत्तान्तगर्भं पत्रं किमपि प्रकटितमासी
त्तत्रतत्रेति यल्लिखितं भवद्भिस्तद्विषये वयं न
किमप्यवगच्छामः॥ कोऽसौ नीलकण्ठशर्मेत्यपि
न जानीमः॥ अतस्तस्य पत्रस्यास्माकं च न कोऽपि
संबन्ध इति निवेदयामः॥

भवदीयः
C. S. Viswanathan
21-10-34.
Manager.

DESPATCHED
21 OCT 1934

மேற்படி கடிதத்தின் மொழிபெயர்ப்பு.

Camp. ஸ்ரீகாஶீ (Suttola) Ge. No. 423/1934-35. dated 21-10-34.

தங்களிட கடிதம் நம்மிடபார்வைக்கு கிடைத்தது. 'நீலகண்ட ஶர்மா' என்கிற நிவேதகரிட பெயருடன்கூடிய தங்களிட கடிதத்தில் கண்டிருக்கும் நமக்கு அனுவஶ்யகமான அநேக வர்த்தமானங்களடங்கிய யாதோ ஒரு பத்திரிகை ஆங்காங்கு வெளியிடப்பட்டிருந்ததென்று என்ன எழுதப்பட்டிருந்ததோ அவ்விஷயத்தில் நாம் எதையும் அறியோம். அந்த நீலகண்ட ஶர்மா யார் என்பதையும் நாம் அறியோம். ஆகையால் அக்கடிதத்திற்கும் நமக்கும் எந்த சம்பந்தமுமில்லை என்று அறிவித்துக் கொள்ளுகிறோம்.

Despatched, 21st Oct. 1934. } தங்களிட (Sd./ Eng.) ஸி. எம். விஶ்வநாதய்யர், 21—10—34. மானேஜர்.

ஸ்ரீகாமகோடி பீடாதிபதிகள் இவ்விதமாக ஸ்ரீ காஶீயிலுள்ள நீலகண்ட ஶர்மாவின் அத்வைதமதஸ்தாபனாபிலாஷையை மறுத்திருக்கிறார். பண்டித நரஸிம்மாசார்யரை வரவழைத்து வெகுமதியும் செய்திருக்கிறார். இவ்விஷயத்தை அத்தேசத்து அத்வைதிக

ளால் வெளியாகும் 1934 டிசம்பர் 3-ம் தேதிய 'பண்டித பத்ர' மென்னும் ஹிந்திவர்த்தமான பத்திரிகையில் அடியில்கண்டவாரு வெளியிடப்பட்டிருக்கிறது.

### श्री जगद्गुरु शंकराचार्यजी द्वारा

## पं० नरसिंहाचार्य जी का सत्कार

श्रीमन्मध्वाचार्य जी के चित्रोद्घाटन के उपलक्ष में गया से उक्त मत के शिष्य कुछ प्रमुख गयावाल लोग काशी आये थे। कुछ दिनों से उन लोगों में यह भ्रम फैला था, कि मध्व-सम्प्रदायी गयावालों के यहां कोई स्मार्त अपना श्राद्धादि न कराये। इसका प्रतिवाद आचार्य चरणों द्वारा पहले ही किया गया था। उसदिन भी नरसिंहाचार्यजी के साथ अर्थात् बुधवार को आगत गयावाल लोग श्री आचार्य चरणों के दर्शन के लिये गये थे। उन्हें आशीर्वाद देते हुए श्री चरणों ने यही कहा, कि जहां जो बात परम्परा से चली आ रही है वही चलनी चाहिये। यदि उसके विपरीत कोई आचरण करता है, तो वह विरोधार्ह है। आप लोग गया जाकर अपने इष्टमित्रों को यह कह दीजियेगा, कि आपके अधिकारों पर कोई आक्रमण किया चाहे, तो उसका सर्वथा विरोध किया जायेगा। भ्रम, जो फैल चुका है, बिलकुल निर्मूल है। इसी अवसर पर आगत सज्जनों के सामने पं० नरसिंहाचार्यजी का महावस्त्र से सत्कार किया गया। आगत सज्जनगण सन्तोष पूर्वक लौटे।

(ஷை ஹிந்தி பாஷை பத்திரிகையின் மொழி பெயர்ப்புச் சுருக்கம்)

*ஸ்ரீஸ்ரீ சங்கராசார்யரால் தம்மிட தர்சனத்திற்காக பண்டித நரசிம்மாசார்யருடன் வந்திருந்த கயாபாலரைக்குறித்து—மாத்வ ஸம்ப்ரதாயிகளான உங்களை சிரார்த்தாதிகளுக்கு அழைக்கக்கூடா தென்று அத்வைதிகள் சொல்லியது பிசகு. அப்படிச் செய்கிற வர்கள் நமக்கு விரோதிகளாவர். ஆகையால் கிரமப்படிக்கு மாத்வ ஸம்ப்ரதாயிகளான உங்களுக்கு எங்கள் மடத்து சிடர்களெல்*

லோரும் மாமூல்படிக்கு மரியாதைகளை நடத்தவேண்டியதென்று உத்திரவளிக்கப்பட்டு அச்சமயத்தில் அங்கு வந்திருந்த ஸஜ்ஜனர்களின் முன்னிலையில் பண்டித நரசிம்மாசார்யருக்கு மஹாவஸ்திர வெகுமதி செய்யப்பட்டது.

இவைகளால் ஸ்ரீகாமகோடி பீடாதிபதிகளான ஸ்ரீ சங்கராசார்யர் ஸ்ரீகாசிக்கு விஜயம் செய்தும் அத்வைதமதம் ஸ்தாபிக்கப் படாததினால் த்வைதமதத்திற்குண்டாயிருக்கும் விஜயம் ஸ்திரமாயிற்று (கன்பர்ம்ட்) என்று இத்துந்துபியின் ஒலியினால் விளங்குகிறது.

---

## 22. ஆந்த்ர விஜயம்.

### இரண்டாது (குண்டூர்.)

'அஸத்யமப்ரதிஷ்டம் தே ஜகதாஹுரனீஶ்வரம்' 'ஈஶ்வரோஹமஹம் போகீ' என்று பகவத்கீதையில் சொல்லியவாறு ஜகத்து மித்யை என்றும், நானே ஈஶ்வரன் என்றும் சொல்லிக் கொண்டே அதோகதியையடையும் ஜனங்களின் ஸஹவாஸத்தினாலும், அவர்களிட மத உபன்யாஸாதிகளைக் கேழ்ப்பதினாலும், அவாளிட நூல்களைப்படிப்பதினாலும் தம்மிட சீடர்களுக்கு உண்டாகும் ஸம்ஶயாதிகளை, அம்மதங்களிலுள்ள தோஷங்களை எடுத்துக்காட்டி, போக்கடித்து, நல்வழியை எளிதில் போதிப்பதற்காக ஸ்ரீஸ்ரீகள் ஶூகாஶ்ரமமென்று புகழ்பெற்றிருக்கும் திருச்சானூரில் சிலகாலம் தங்கி 'வேதாந்த விசாரணை ஸிவில் ஸூட்' என்னும் நூலை இயற்றி, ஆயிரக்கணக்கான பணச்செலவினால் பல பாஷைகளிலும் வெளியிட்டனர்.

இப்படியிருக்க—குண்டூரில் ஸ்ரீஸதனத்தில் வஸித்துவரும் ஜகத்குரு ஸ்ரீ கல்யாணாநந்த பாரதீமாந்தாசார்யரென்பவர் 14-11-'34 புதன்கிழமை ஸாயங்காலம் ஏதோ ஒருவிதமாகத் தன் கைக்கெட்டிய மேற்படி புத்தகங்களைப் பெற்று, அதைக் கண்ட உடனே தம்மதத்திற்கு இதுவரைக்கும் நேர்ந்திராத ஏதோ மஹாவிபத்து இப்போது நேர்ந்துவிட்டாற்போல் நினைத்து,

வெகுகலவரத்துடன் "ஸ்ரீ கல்யாணானந்த பாரதீமாந்தாசார்ய ரவர்களால் ப்ரதிஜ்ஞாபூர்வகமாய் உத்தராதிமடாதீச ஸ்ரீமத் ஸத்ய த்யானதீர்த்தரவர்களுக்கு அனுப்பப்பட்ட பஹிரங்க ஸ்ரீமுக பத்திரிகை ஸம்யமனீபுரம் ஹைகோர்ட் ஸிவில் கேஸ் கண்டனம்" என்னும் ஓர் சிறு புத்தகத்தை அச்சிட்டு 25-11-34ல் ரிஜிஸ்டர் மூலமாய் ஸ்ரீஸ்ரீகளிட ஸன்னிதிக்கு அனுப்பியுளர். அதின் 5-வது பக்கத்தில்—"உம்மிட மதத்தையும் நூல்களையும் அடியிற் சொல்லியவாறு தூஷித்துக்கொண்டிருக்கிறோம். ஆகையால் உம்மிட மதத்தை நிலைநிருத்திக்கொள்ளும் பாத்யதையை வகித்து உசிதமான பந்தய நிர்ணயத்துடன் ஸ்ரீமுகத்தைப் பெற்றுக்கொண்ட பதினைந்து நாட்களில் ஸித்தராகக்கடவீர்களென்று நம்புகிறோம்" என்றும்; 45-வது பக்கததில் "மேற்கூரிய தூஷணங்களை நிர்வஹித்துக்கொள்ளுவதற்காக ஸபை நடத்தும் இடத்தையும் பந்தயத்தையும் நிச்சயித்தால் நாங்கள் எல்லாவிதத்திலும் ஸம்ஸித்தராயிருக்கிறோம்.........." என்றும் எழுதியுளர். (அப்புத்தகத்தில் செய்திருக்கும் கண்டனமண்டனாதிகளின் யுக்தாயுக்தங்களைப் பிறகு விசாரிப்போம்.) அதற்கு ஸ்ரீ உத்தராதிமடாதீசர் தம்மிட திவான் முகாந்திரமாய்—"தங்களிட கோரிக்கையின்படிக்கு ஸிவில் கேஸ் புத்தகத்தில் கூறியுள்ள அத்வைதமதம் அவைதிகமென்னும் விஷயத்தை ஸபையில் ஸ்தாபிப்பதற்குத் தயாராய், அதற்காக திருச்சானூரில் 20-12-34 முதல் வாதம் முடிகிறவறைக்கும் ஸபை நடத்தப்படுமாகையால் தாங்கள் தங்களிட சிடவர்க்கத்துடன் வந்து அத்வைதமதம் வைதிகமென்று ஸாதித்துக்கொள்ளலாம்" என்று 4-12-34ல் பதிலளித்தனர்.

அதற்கு மாந்தாசார் தம்மிட பஹிரங்க பத்திரிகை புத்தகத்தின் 45-வது பக்கத்தில் எழுதியிருக்கும் "ஸபை நடக்கும் இடம் பந்தயம் முதலியவைகளைத் தெரிவித்தால் அதற்கு நாங்கள் எல்லாவிதத்திலும் ஸம்ஸித்தராயிருக்கிறோம்" என்கிற ப்ரதிஜ்ஞையை மறந்து, ஸபை நடக்காமலிருக்க வழி தேடிக்கொண்டே "தாங்கள் ஸபை நடத்துவதற்காக ஏற்பாடு செய்திருக்கும் திருச்சானூர் உங்களுடைய ஸ்வ கிருஹம், நீங்கள்

ஏற்படுத்தியிருக்கும் ஸபை ப்ரதிவருஷமும் நடக்கக்கூடிய ஸபையேயாகையால் இவ்வாதத்திற்கு அத்தேசமும் அக்காலமும் பிரயோஜனமில்லை. ஸபை நடத்த பெரிய பட்டணமாயிருக்க வேண்டும்" என்கிற இது முதலிய காரணங்களை எழுதி 7-12-34ல் மறுத்துவிட்டார்.

அதற்கு மருபடியும் ஸ்ரீஸ்ரீகள் தம்மிட திவான் முகாந்திரமாய் "வாதத்திற்கு பாண்டித்யமும் ப்ரமாணங்களும் எப்படி ஆவஶ்யகமோ அப்படி பெரிய பட்டணம் முதலியவைகள் ஆவஶ்யக மில்லை. ஸபை நடத்த எல்லாவிதத்திலும் திருச்சானூர் ஸௌகர்யமாயிருக்க அது உங்களுக்குப் பிடிக்காவிடின் உங்களிஷ்டப்படி எந்த பெரிய பட்டணத்திலாகிலும், எப்போதாகிலும் எந்த பந்தயத்துடனுகிலும் ஸபை ஏற்படுத்தித் தெரிவித்தால் நம் ஸ்ரீகள்வரத் தயாராய் இருக்கிறுர்" என்று 14-12-1934ல் பதிலளித்தனர்.

அதற்கு குண்டூர் வைதிக தர்ம ஸம்வர்த்தனீ ஸபையோர் "குண்டூரை ஸபாஸ்தலமாக நிச்சயித்து அங்கு விஷ்ணுதாஸ மதத்தை ப்ரமாணங்களுடன் ஸ்தாபித்துக்கொள்ளுவதற்காக ஸ்ரீ ஸ்வாமிகள் ஸ்ரீ உங்களிட ஸ்வாமிகளை அழைத்துக்கொண்டிருக்கிறுர். அதற்கு நீங்களங்கீகரிப்பீராயின் இதர விஷயங்கள் ஏற்பாடு செய்யப்படும்" என்று 20-12-34ல் திவான் அவர்களுக்கு அறிவித்துளர். பிறகு ஷை குண்டூர் ஸபா ஸப்யரில் ப்ரமுகரான ம. ரா. ராயப்ரோல் லிங்கன ஸோமயாஜி B. A., B. L. வகில் அவர்கள் 25-12-34ல் திருச்சானூரில் ஸ்ரீஸ்ரீகளின் ஸன்னிதிக்கு வந்திருந்தார். அப்போது ஸ்ரீஸ்ரீகள் அவரைக் குறித்து "நம்மிட ஸிவில் ஸூட் புத்தகத்திலுள்ள விஷயங்களை விசாரம் செய்வதற்குகாக ஸபை நடத்த திருச்சானூர் நமக்கு ஸ்வக்ருஹமான திஞல் எப்படி யுக்தமான ஸ்தலமல்ல என்று உங்கள் ஸ்வாமிகளால் சொல்லப்பட்டதோ அப்படியே குண்டூர் உங்கள் ஸபையோருக்கும் உங்கள் ஸ்வாமிகளுக்கும் ஸ்வக்ருஹமாகையால் ஸபைநடத்த யுக்தமான இடமல்லாததிஞல் உங்கள் ஸ்வாமிகளால் சொல்லப்பட்டவாறு பெரிய பட்டணமான மதராஸில் ஸபை

நடத்த ஏற்பாடுசெய்தால் நாங்கள் அங்கு வரத் தயாராயிருக்கிறோம்" என்று சொல்லவே, ஸோமயாஜியவர்கள் அப்படியே செய்வதாய்ச் சொல்லிப் புறப்பட்டுப்போயினர். பிறகு இவ்விஷயங்கள் ஸ்ரீமன் மத்வஸித்தாந்தாபிவ்ருத்திகாரிணீ ஸபையோரால் 31-12-34ல் ஆந்த்ரபத்திரிகா முகாந்தரமாய் வெளியிடப்பட்டது. ம. ரா. ஸோமயாஜி அவர்கள் அதைக் கண்டதும் தான் ஏதோ ஸொந்த கார்யத்திற்காக திருச்சானூருக்கு வந்திருந்தபோது ஸ்ரீஸ்ரீகளின் தர்சனத்திற்கு வந்ததாயும் அப்போது ஸ்ரீஸ்ரீகளால் சொல்லப்பட்டதற்கு அப்படியே செய்யலாமென்று தான் சொன்னரேயொழிய ஸபைக்காக தான் யாதொன்றும் ஒத்துக்கொள்ளவில்லை என்றும் அவ்விஷயத்தில் தனக்கு யாதொரு சம்பந்தமுமில்லை என்றும் ஷை பத்திரிகை முகாந்திரமாய் வெளியிட்டுவிட்டனர்.

பிறகு குண்டூர் ஸபையோரும் ஸ்ரீமாந்தாசார்யரும் ஷை விஷயங்களை கவனிக்காமலே 11-1-35ல் ஷை ஸபா கார்யதர்ஶி முகாந்தரமாய் "குண்டூர் அரண்டல்பேட்டையில் ஸ்ரீஸதனத்தில் 15-1-35௳ முதல் 3-2-35௳ வரைக்கும் தினம்தோரும் மாலை 5½ மணிமுதல் 7-மணிவரைக்கும் ஸபை நடத்தப்படும், அதில் ஸ்ரீமாந்தாசார்யரவர்கள் ப்ரஸ்தானத்ரயத்தினுல் வைதிக தர்மங்களைக் காட்டிக்கொண்டே மத்வமதத்தை முறிப்பார். மாத்வர்யாராகிலும் பந்தய நிர்ணயத்துடன் மத்வமதத்தை நிலைநிறுத்திக் கொள்ளத்தயாராயின் கடிதமூலகமாய் கார்யதர்ஶியவர்களுக்கு அறிவித்துக்கொண்டால் தகுந்த ஏற்பாடு செய்யப்படும்" என்று ஓர் பத்ரிகையை 20 உபன்யாஸங்களின் அட்டவணையுடன் வெளியிட்டனர். அதற்குப் பதிலாய் குண்டூர் மாத்வர்களால் அடியிற் கண்டவாறு பத்திரிகை வெளியிடப்பட்டது.

---

ஸ்ரீலக்ஷ்மீ நரஸிம்ஹோ விஜயதேதராம்

குண்டூர் வைதிகதர்ம ஸம்வர்த்தனீ ஸபாகார்யதர்ஶி

ம. ரா. அக்கனப்ரகட ஸூர்யநாராயண ராவ் அவர்களுக்கு எழுதிய

# பஹிரங்கபத்திரிகை.

மஹாசயரே!

குண்டூர் அரண்டல்பேட்டையில் ஸ்ரீஸதனத்தில் 15-1-35௳ முதல் 3-2-35௳ வரைக்கும் நடத்தப்படும் விசேஷ ஸபைகளில் மத்வமத ஸ்தாபனத்திற்குத் தயாராயிருக்கும் மாத்வர்கள் பந்தய நிர்ணயத்துடன் அதை ஸ்தாபித்துக்கொள்ளுவாராயின் இடம் கொடுக்கப்படுமென்று 11-1-35ம் தேதிய உம்மிட ப்ரகடனத்தி லுள்ள பந்தயத்தின் ஸ்வரூப மின்னதென்று நிர்ணயிக்கப்பட வில்லை.

உம்மிட அத்வைதமத கண்டனத்துடன் மத்வமதமண்டனம செய்வதற்கு நாமும் நம்மிட மாத்வ பண்டிதர்களும் தயாரா யிருக்கிறோம். ஸபைக்கு ஸ்வக்ருஹம் யுக்தமல்ல அல்லவா? ஆகையால் உம்மிட ஸபை எங்கு நடக்கும்? உங்களிட பத்திரிகை யிலுள்ள பந்தயத்தின் ஸ்வரூபமென்ன? அது இருவராலும் நிர்ணயிக்கக்கூடியதா? உங்களால்மாத்திரம் நிர்ணயிக்கப்படுவதா? ஸபா நிபந்தனங்களென்ன? ஸபையிலுண்டாகும் ஜயாபஜயங்களை நிர்ணயிக்கும் தத்வ நிர்ணயகாரர்கள்யார்? இது முதலியவைகளை நீங்கள் வெளியிடவில்லை.

இவ்விஷயங்களை எல்லாம் உபயவாதிகளின் அனுமதியினல் நிர்ணயமாகும்வரைக்கும் நிதானிக்காமல் நீங்கள் ஸபைகளை ஆரம் பிப்பது வித்வான்களின் தர்மமல்ல மாத்வபண்டிதர்களுக்கு இடங் கொடாமலே அவஸரப்பட்டு நீங்கள் ஸபை ஆம்பிப்பீராயின் அத்தகையஸபைகளில் உங்களிட ஸ்ரீகல்யாணநந்தபாரதி மாந்தா சார்ய ஸ்வாமிகளிட மதபஞ்ஜனத்திற்கு எவ்வளவுமாத்திரமும் மதிப்புண்டாகமாட்டாதென்று நம்புவீராகவும்.

இப்படிக்கு,

நியாயவேதாந்தவித்வான் மார்காபுரம் பத்மநாபாசார்யர்.

கொத்தபேட்டை,
குண்டூர்,
13-1-35

கூட்லி ப்ரஹ்லாதாசார்யர்
முஜூம்தார் அச்யுதராவ்
பி. வி. ஸூப்பராவ்
எஸ். புருஷோத்தமராவ்.

சந்திரிகா ப்ரெஸ், குண்டூர்.

இவ்விதமானபத்திரிகையை வெளியிடுவதுடன், ஷை ஸபா கார்யதர்சியவர்களுக்கு நேரிலும்கொடுக்கப்பட்டது. அதற்குகார்ய தர்சியவர்கள் 'இப்பத்ரிகையை நான் ஸபையோர் முன்னிலையில் வைத்து அவர்களால் செய்யப்படும் தீர்மானத்தைத் தங்களுக்கு அறிவிக்கிறேன்' என்று சொன்னாரேயொழிய இதுவரைக்கும் யாதொன்றையும் தெரிவிக்காமலே 15-1-35ஷ ஸபை ஆரம்பித்து விட்டனர். ஸ்ரீமாந்தாசார்யர் உபன்யாஸங்களைச் செய்யவும் துடங்கினர். பிறகு குண்டூர் மாத்வ பண்டிதர்கள் அடியில் கண்ட பத்ரிகையை வெளிப்படுத்தினர்.

## அறிக்கை.

குண்டூர் கொத்தபேட்டையில் இரத்னஹாலுக்கு ஸமீபத்திலுள்ள முஜூம்தார் வெங்கடரமணய்ய பந்துலு அவர்கள் வீட்டில் 20-1-35ஷ முதல் 4-2-35ஷ வரைக்கும் பிரதிதினம் ஸாயங்காலம் 5-மணிமுதல் 7-மணிவரைக்கும் ஸ்ரீ உத்திராதிமடத்திற்கு ஸம்பந்தப்பட்ட ஸ்ரீமன் மத்வ ஸித்தாந்தாபிவ்ருத்திகாரிணீ ஸபா தரபில் விசேஷ ஸபைகள் நடத்தப்படும். அச்சபையில் ஸ்ரீமதுத்தராதி மடாதீசரின் சீடர்களான பண்டித சிரோமணி சிஞ்சோளீ கிருஷ்ணாசார்யர், அவதானி சிரோமணி காசி கிருஷ்ணாசார்யர், மார்காபுரம் ஸ்ரீனிவாஸாசார்யர் முதலியவர்கள் ப்ரஸ்தானத்ரய ப்ரமாணங்களால் வைதிக ஆஸ்திகமாகும் மதம் ஸ்ரீமத்வமதமே என்றும், அத்வைதமதம் ப்ரஸ்தானத்ரயத்தினால் ஸித்தமாவதல்ல என்றும் நிரூபிப்பார்கள். ஆகையால் ஆஸ்திகர்களெல்லோரும் வந்து தத்வங்களையறிந்து நன்மையையடைய வேண்டுமாய்க் கோருகிறோம்.

இச்சபையில் அத்வைதிகளெவராகிலும் தம் மதத்தை நிலை நிறுத்திக்கொள்ளத் தயாராயின் தகுந்த வேறு ஏற்பாடு செய்யப்படும். அவர்கள் கொத்தபேட்டையிலிருக்கும் மார்காபுரம் பத்மநாபாசார்யரால் நேரில் தகுந்த ஏற்பாடு செய்துகொள்ளலாம்

இப்படிக்கு வ்யவஸ்தாபகாள்,

நியாய வேதாந்தவித்வான் மார்காபுரம் பத்மநாபாசார்யர்

குண்டூர்.<br>கொத்தபேட்டை<br>18-1-35.

மஜூம்தார் அச்யுதராவ்<br>பி. வி. சுப்ப ராவ்<br>ஜி. ஸ்ரீனிவாஸ ராவ்

ஷ பத்திரிகையை உபன்யாசங்களின் அட்டவணையுடன் வெளியிட்டு, அதின்படிக்கு பண்டித சிரோமணி கிருஷ்ணசாரியர் முதலியோர்கள் உபன்யாஸங்களைச் செய்துகொண்டே ஸ்ரீமாந் தாசார்யரால் அவரிட உபன்யாஸத்தில் கூறப்பட்ட விஷயங்களை ஸயுக்திகமாகவும் ஸப்ரமாணமாகவும் கண்டித்து ஸரியான அர்த்தங்களைப் போதித்து ஸபைக்கு வந்திருந்த எல்லோரையும் பரமானந்தப்படுத்தி அவர்களால் தாம்புகழப் பட்டிருப்பதுடன் திருச்சானூரில் வஸித்துவரும் ஸ்ரீஸ்ரீ உத்தராதீமடாதீசருக்கு அபினந்தன பத்திரத்தையும் பெற்றிருக்கின்றன ரென்னும் விஷயத்தை இத்துந்துபி கம்பீரமான தன்னொலியினால் உலகமெங்கும் * பறவச்செய்திருக்கிறது.

இனி ஸ்ரீ மாந்தாசார்யரால் ஸ்ரீஸ்ரீகளுக்கு அனுப்பப்பட்டிருக்கும் ஸிவில் கேஸ் கண்டன புத்தகத்திலும் அவரிட உபன்யாஸங்களிலுமுள்ள விஷயங்கள் பரம அஸங்கதமானவைகளென்பது அவைகளை வாசிக்கும் பாரபக்ஷமில்லாத எல்லா பண்டிதர்களுக்கும் தெரிந்ததேயாயினும், ஸாமான்ய ஜனங்களுக்கும் அவரிட பாண்டித்யம் இன்னதென்று நன்கு விளங்குவதற்காக † ஸ்தாலீபுலாக நியாயத்தால் சிலவற்றைமாத்திரம் இங்கு கூறப்படுகிறது:—

1. கண்டனமெனின்:— 'ஸிவில் கேஸ் புத்தகத்தில் காட்டியிருக்கும் அத்வைதிகளின் ப்ரமாணங்கள் அன்னூல்களிலில்லை' என்றாகிலும் 'அந்த ப்ரமாணங்களுக்கு அங்கு சொல்லிய அர்த்தம் சரியல்ல' என்றாகிலும் ப்ரமாணங்களுடன் எடுத்துறைத்து, சரியான அர்த்தங்களை ஸப்ரமாணமாய்ச்சொல்லுவது கண்டனமாகுமேயொழிய புத்தகத்திற்கு ஸம்பந்தமில்லாத வார்த்தைகளையாடுவது கண்டனமெப்படி ஆகும்?

2. ஷயாரின் புத்தகத்தின் 4-வது பக்கத்தில் 'மதத்திற்கு பெருமைதருவது மதத்தின் ஸ்வரூப நிரூபணமேயொழிய

* மேற்கூறிய எல்லா விஷயங்களும் அப்போதைக்கப்போதே ஆந்த்ர பத்திரிகை முகாந்தரமாய் வெளியிடப்பட்டிருக்கிறது.

† தவலையிலுள்ள ஒன்றிரண்டு பரிக்கைகளை எடுத்துப் பார்த்து எல்லாம் இதைப்போலவே இருக்கின்றனவென்று தெரிந்துகொள்வது.

பரமத நிரஸன மெவ்வளவு மாத்ரமுமல்ல' என்றெழுதியிருக்கிறார். அதினால் இவ்வாசார்யரின் மதஸ்தாபகரான சங்கராசார்யர் ஷண்மதங்களை ஸ்தாபிப்பதற்கு முன்னமே அவைகளுக்குவிருத்தமான அனேக மதங்களைக் கண்டனம் செய்திருக்கும் விஷயத்தை இவ்வாசார்யர் மறந்தோ அல்லது தெரியாமலோ தம் ஆசார்யரின் பேரிலேயேதான் குற்றம் சாற்றினவராயினர்.

3 'ஸிவில்கேஸ்' புத்தகம் அத்வைதமதத்தைக் கண்டிப்பதற்காகவே ஏற்பட்டதாகையால் அதில் ஸ்ரீஸ்ரீகள் தம் மதத்தைச் சொல்லவேண்டியது அவஸ்யகமில்லை. தவிர 'ஜகத்து மித்யையல்ல, ஜீவப்ரஹ்மங்களுக்கு அபேதமில்லை, ப்ரஹ்மம் நிர்குணமல்ல' என்று ஷ நூலில் நிர்ணயம் செய்திருப்பதினால் அந்த நிர்ணயமே அவரிட மதமென்று தானாகவே ஏற்படுகிறது. அதுவுமன்றி—மாந்தாசார்யரே தம்மிட புத்தகத்தின் 10-வதுபக்கத்தில் "தீர்த்தரின் தத்வங்கள் இன்னதென்று விவரிக்கப்பட்டிருக்கிறது. தாவாலில் (a) ஜகத்து ஸத்யம், (b) விஷ்ணு ஸர்வோத்தமன், (c) பரமாத்மா ஜீவனைவிட வேறானவன், (d) பரமாத்மா ஸர்வோத்தமன் ஸர்வகர்த்தா ஜீவனைக்காட்டிலும் வேறானவன் என்றறிவதே மோக்ஷஸாதனம்" என்று தானே எழுதியுமிருக்கிறார். இப்படியிருந்தும் அவரிட புத்தகத்தின் 4-வது பக்கத்தில் "உம்மிட புத்தகங்கள் அத்வைத நிரஸனத்தையே ப்ரதானமாயுடையதாயிருக்கிறதே யொழிய உம்மிடமதம் என்ன ஆயிற்றோ யாருக்கும் கிரகிக்கமுடியாமலிருக்கிறது" என்றெழுதியிருப்பது எவ்வளவு அஸங்கதமோ வாசகர்களே அறியலாம். வ்யாஹதபாஷிகளுக்கு இதுவும் பூஷணமேயாகும்.

(4) வேதத்தில் அதிகாரமுள்ள வைஷ்ணவர்களும் ஆஸ்திகர்களும் வைதிக வைஷ்ணவர்களென்றும், வைதிக ஆஸ்திகர்களென்றும் சொல்லிக்கொள்ளப்படுகிறார்கள். வேதாதிகாரமில்லாத ஸ்த்ரீசூத்ராதி வைஷ்ணவர்களும் ஆஸ்திகர்களும் தாந்த்ரிக வைஷ்ணவர்களென்றும், தாந்த்ரிக ஆஸ்திகர்களென்றும் சொல்லிக்கொள்ளப்படுகிறார்களென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமேயாயிருக்க, இம்மாந்தாசார்யருக்கு மாத்திரம் இவ்விஷயும் தெரியாமல் ஸ்ரீஸ்ரீகள் தங்களிட புத்தகத்தில் 'வைதிக

வைஷ்ணவர்கள்' என்றும் 'வைதிக ஆஸ்திகர்கள்' என்றும் எழுதியிருப்பதற்கு, 'வைதிக வைஷ்ணவம், அவைதிக வைஷ்ணவமென்றும் ஆஸ்திகவைதிகம் நாஸ்திகவைதிகமென்றும் பேதமுண்டோ' என்று எழுதியிருப்பது வியக்கத்தகுந்ததேயாகும்.

(5) 12-வது பக்கத்தில் 'கச்சதீதி ஜகத்' நாசமடையக்கூடியதாகையால் ஸத்யம் நிஜம் நித்யமெப்படியாகும் என்றும், 13-வது பக்கத்தில் 'யதோவா இமானி பூதானி' என்கிற ஶ்ருதியும் 'ஜன்மாத்யஸ்ய யத:' என்கிற ஸூத்ரமும் ஜகத்துக்கு உத்பத்தி ஸ்திதி நாசங்களைச் சொல்லிக்கொண்டிருப்பதினால் ஜகத்து நிஜமெப்படியாகும் என்றும், எழுதி 16-1-35௳ தம்மிட உபன்யாஸத்தில் "மத்வராயர் 'ஆப்ரஹ்மஸ்தம்பபர்யந்தம் அஸாரம் சாப்யனித்யகம்' என்றெழுதியிருக்கிறாராகையால் அநித்யமான ஜகத்து நிஜமெப்படியாகும்" என்றும் கேட்டிருக்கிறார். ஆஹா! இவ்வாசார்யரின் புத்தி கூர்மையை என்ன சொல்லுவோம்.

'அனித்யம்' என்றால் சிலகாலம் இருந்து அநேக கார்யங்களையுண்டாக்கி நாசமடைவது என்று அர்த்தம். 'மித்யை' என்றால் முக்காலத்திலுமில்லாதது, சிப்பியில் தோன்றும் வெள்ளி, மலடி மகன், முயற்கொம்பு முதலியவற்றைப்போல் எக்கார்யத்திற்கும் உதவாதது என்று அர்த்தமென்கிற விஷயம் குழந்தைகளுக்கும் தெரிந்ததேயாகும்.

தவிர இதுவரைக்குமிருந்த அத்வைதி பண்டிதர்கள் யாரும் மித்யை என்ற பதத்திற்கு சில காலமிருந்து நசிப்பதென்று எங்கும் அர்த்தம் செய்யாததுமன்றி "ப்ரதிபன்னோபாதௌ த்ரைகாலிக நிஷேதப்ரதியோகித்வம் வா மித்யாத்வம்" "ஸ்வாஶ்ரய நிஷ்டாத்யந்தாபாவ ப்ரதியோகித்வம்" (அத்வைத ஸித்தி மித்யாத்வோபபத்தி ப்ரகரணம்) இதுமுதலிய வாக்யங்களால், மதுஸூதன ஸரஸ்வதி, ப்ரஹ்மாநந்தர், விட்டலேசோபாத்யாயர் முதலிய எல்லா ப்ராசீனாத்வைதாசார்யர்களும் மித்யை என்றால் முக்காலத்திலுமில்லாததென்றே எழுதியுளர் என்கிற விஷயம் மாந்தாசார்யருக்கு ஏன் தெரியவில்லையோ? அனித்ய

மாகையால் நிஜமல்ல என்கிற அபூர்வார்த்தம் இவரிட மனதில் எப்படி தோன்றிற்ருே? தெரியவில்லே. இந்த அர்த்தம் சங்காராத் வைதிகளால் செய்யப்பட்டதல்ல. இது ஓர் புதிய அத்வைதமே யாகும்.

(6) 15-வது பக்கத்தில் 'பரமாத்மா விஷ்ணுவைவிட வேறென்று ஸ்பஷ்டமாகிறது' என்று எழுதியிருப்பதினுல் "தத் விஷ்ணோ: வ்யாபனஶீலஸ்ய ப்ரஹ்மண: பரமாத்மனே வாஸுதேவாக்யஸ்ய" (விஷ்ணுவின் என்ருல் பரமாத்மாவின்) என்று அர்த்தம் செய்திருக்கும் காடகம் 3-வது வல்லீ 9-வது மந்த்ரத்தின் சாங்கர பாஷ்யாதிநூல்களே இவர் பார்த்தவரேயல்ல என்று வெளியாகிறது.

(7) எல்லா ப்ராஹ்மணச்சிருவர்களாலும்கூட பிரதிதினமும் அத்யயனம் செய்யப்படும் புருஷஸூக்தம் பரமாத்மாவினுல் ப்ராஹ்மணவர்ணுதி ஜகத்து உண்டாயிற்றென்றும், அந்தபரமாத்மாவை தேவதைகள் பூஜித்தார்கள் என்றும்* ஜன்ய ஜனக பாவம்† பூஜ்ய பூஜகபாவம் முதலியவைகளால் ஜீவபரமாத்மாக்களின் பேதத்தை அறிவித்து "தமேவம் வித்வானம்ருத இஹ பவதி" அந்த பரமாத்மாவை இவ்விதமாக தெறிந்தவன் மோக்ஷமடைகிருன் என்று முறையிட்டுக்கொண்டிருக்க, இம்மாந்தாசார்யர் இதையும் அறியாமல் ஸ்ரீஸ்ரீகள் "பரமாத்மா ஜீவனேக் காட்டிலும் வேறுபட்டவன் என்கிற ஞானமே மோக்ஷஸாதனமென்கிற அபூர்வார்த்தத்தைச் சொல்லியிருக்கிருர்" என்று அதே 15-வது பக்கத்தில் எழுதியிருப்பதும் வியக்கத்தக்கதே.

(8) 19-வது பக்கத்தில் 'ஸ்ரீஸ்ரீகளவர்கள் தம் மதத்திற்கு ப்ரஹ்ம ஸூத்ரங்கள் ப்ரமாணமென்கிருர். அவைகளோ ப்ரஹ்மத்தையே சொல்லுகின்றனவென்று ஸித்தமாகிறது. இச்சூத்திரங்களுக்கு விஷ்ணு ஸூத்ர மென்ருகிலும் பரமாத்ம ஸூத்ரமென்ருகிலும், ஜீவஸூத்ரமென்ருகிலும் வ்யவஹாரமில்லே. ஆகையால் விஷ்ணு பரமாத்ம ஜீவர்களேச்சொல்லும் ஸ்ரீஸ்ரீகளின்

* பிறக்கும் தன்மை பிறப்பிக்கும் தன்மை.

† பூஜிக்கும் தன்மை பூஜிக்கப்படும் தன்மை.

மதம் நிஷ்ப்ரமாணமாகும்" என்றெழுதியுள்ள். அது பிசகு. எப்படி எனின்:—'விஷல் வ்யாப்தெள' 'ப்ருஹ வ்ருத்தெள' என்றல் பரவும் தன்மையுடையது, பெருகும் தன்மையுடையது. இவ்விரண்டும் ஒரே அர்த்தமுடையதாகையால் ப்ரஹ்மஸூத்ரமென்றல் விஷ்ணுஸூத்ரமென்று அர்த்தமாகிறது. விஷ்ணு, பரமாத்மா, ப்ரஹ்ம என்கிற ஶப்தங்கள் ஒரே அர்த்தமுடையதென்று சங்கராசார்யரும் தம்மிட காடகபாஷ்யத்தில் சொல்லியிருக்கிருர். ஆனல் விஷ்ணு ஸூத்ர மென்றே ஏன் சொல்லக்கூடாதெனின்—இச்சூத்ரங்கள் முக்கியமாய் விஷ்ணு முதலிய ரூபங்களுடன் கூடிய ப்ரஹ்மத்தைச் சொன்னபோதிலும் *"ப்ருஹஜாதிஜீவகமலாஸன ஶப்தராஶிஷு" என்கிற நிகண்டுவை யனுசரித்து பரமாத்மாவினல் பிறப்பிக்கப்படும் ஜீவர்கள், அவர்களுக்குகிடைக்கும் ப்ராஹ்மணுதி ஜாதி, அவர்களால் யஜ்ஞாதிகளால் பூஜிக்கப்படும் ப்ரஹ்மாதிதேவதைகள், ஜீவர்களின் தேஹாதிகளுக்கு உபாதான காரணமான ப்ரக்ருதி அதிற்கபிமானியான மஹாலக்ஷ்மி, ஜீவர்களுக்கு ஸாதனங்களை அறிவிக்கும் வேதங்கள் இவ்வெல்லாவற்றையும் இச்சூத்ரங்கள் அமுக்கியமாய் அறிவிக்கின்றனவென்று தெரிவிப்பதற்காகவே ஸ்ரீ வேதவ்யாஸர் விஷ்ணுஸூத்ரமென்று பெயரிடாமல் இவ்வெல்லா அர்த்தத்தையும் சொல்லும் ப்ரஹ்மஸூத்ரமென்று சொல்லி இருக்கிருர் என்று சொல்லுவதற்கு யாதொரு தடையுமில்லை என்கிற விஷயம் பண்டிதர்களால் மிகவும் கொண்டாடத்தகுந்ததாயிருந்தபோதிலும் துராக்ரஹக்ரஸ்தராயிருக்கும் மாந்தாசார்யருக்குமாத்திரம் இவ்விஷயம் தெறியமாட்டாது.

(9) 20-வது பக்கத்தில் 'அனுத்யவச்சின்னகுருபரம்பரையினல் அறியக்கூடிய அத்வைத ஞானத்தை ஸ்ரீஸ்ரீகள் க்ரஹிப்பதெப்படி' என்கிருர். அத்வைத ஞானம் குருபரம்பரையினல் அறியக்கூடியதாயின் ஶங்கராசார்யரே முதலான அத்வைதிகளால்

---

* ப்ரஹ்ம ஶப்தத்திற்கு 'மமயோனிர் மஹத் ப்ரஹ்ம' என்ற ப்ரமாணுனுஸாரம் 'மஹாலக்ஷ்மி' என்றும் 'ப்ரக்ருதி' என்றும் அர்த்தமுண்டு. மற்றும் ப்ரஹ்ம ஶப்தத்திற்கு ஜாதி என்றும், ஜீவனென்றும், சதுர்முகனென்றும் வேதங்களென்றும் அர்த்தமுண்டு.

கோடிக்கணக்கான அத்வைதநூல்கள் இயற்றப்படுவானேன்? ஸ்ரீஸ்ரீகளும் தம்மிட குருபரம்பரையினுலேயே அத்வைதத்தின் ஸ்வரூபத்தையும் அறிந்திருக்கக்கூடும். ஆகையால் இக்கேள்வியே அஸங்கதமானது.

(10) 22-வது பக்கத்தில்—"மத்வாசார்யரால் தம்மிட மதத்திற்கு ப்ரமாணமாக 'ருக்யஜுஸ்ஸாமாதர்வாஶ்ச பாரதம் பஞ்சராத்ரகம்' என்று பாரத பஞ்சராத்ராதிகளை ப்ரமாணங்களாய்ச்சொல்லி பகவத்கீதையின் பெயரைக்கூட எடுக்காமலிருக்க, ஸ்ரீஸ்ரீகள் தம்மிட மதத்திற்கு பாரதாதிகளைத் தள்ளிவிட்டு கீதையை ப்ரமாணமாகச் சொல்லியிருப்பதால் இவர் மத்வ மதத்தினின்று வெளியாகிறார்" என்று எழுதியிருக்கும் இம்மாந்தாசார்யர் 'ஶாஸ்த்ரேஷு பாரதம் ஸாரம் பாரதே கீதிகாவரா' என்றவாறு ஸ்ரீபகவத்கீதை பாரதத்தில் சேர்ந்தது என்ற விஷயத்தையும் அறியாமற்போயினரென்றும் வெளியாகிறது.

(11) 32-வது பக்கத்தில்—'ஜகத்து மித்யை' என்னும் விஷயத்தில் அத்வைதிகளால் உதஹரிக்கப்பட்டிருக்கும் 'வாசாரம்பணம்' முதலிய ஒன்பது ப்ரமாணங்களிலும் ஜகத்துக்கு மித்யாத்வத்தைப் போதிக்கும் பதமெப்படி இல்லையோ அப்படியே ஜகத்துக்கு ஸத்யத்வபோதகமான பதங்களும் இல்லை' என்றும் 'ஷ ஶ்ருதிகளிலுள்ள பதங்கள் ஜகத்துக்கு மித்யாத்வத்தை நேராகப் போதிக்கிறதென்று எந்த புத்திமானும் சொல்லமாட்டான்' என்றும் எழுதியிருக்கிறார். இதினால் ஷ ஶ்ருதிகள் ஸந்தித்த ஶ்ருதிகளென்றும் அவைகளுக்கு ஸ்பஷ்டமாய் அர்த்தத்தைச்சொல்லும் ஶ்ருதிகளின் ஆதாரத்தினால் அர்த்தம் செய்ய வேணுமென்றும் ஏற்படுகிறது. மித்யாத்வத்தை ஸ்பஷ்டமாய்ச் சொல்லும் ஶ்ருதிகளையோ காணோம். ஆகையால் ஜகத்துக்கு ஸத்யத்வத்தை ஸ்பஷ்டமாய்ச் சொல்லும் 'விஶ்வம் ஸத்யம்' இது முதலிய ஶ்ருதிகளை யனுசரித்து ஜகத்து ஸத்யமென்று அர்த்தம் செய்யவேணுமென்றே ஏற்படுகிறதும் தவிர பல ஸத்ய-பதங்களும் வாசாரம்பண ஶ்ருதியில் காணப்படுகின்றபடியால் ஷ ஆசார்யர் ஜகத்து மித்யை என்று சொல்லுவதும் அங்கு ஸத்ய பதமில்லை என்பதும் அஸங்கதமென்பதை வாசகர்களே அறியலாம்.

(12) 40-வது பக்கத்தில—'கிரிஸ்தவர்களும் மகம்மதியரும் சொல்லுவதைப்போலவே த்வைதிகளும் ஈஶ்வரன் பெரியவன், ஜீவர்கள் அவனைவிட வேறானவர்கள், இப்படி அறிவதே மோக்ஷ ஸாதனமென்கிறபடியால் த்வைதமதமும் கிரிஸ்தவ மகம்மதிய மதத்திற் கொத்ததேயாகும்' என்கிறார். மதங்களில் சில தத்வங்கள் ஒன்றாக யிருந்தமாத்திரத்தினால் மதங்கள் ஒன்றே ஆய்விடமாட்டாது. ஆயினும்—'அஸத்யமப்ரதிஷ்டந்தே ஜகதாஹுரனீஶ்வரம்' 'ஈஶ்வரோஹமஹம் போகீ' 'மாமப்ராப்யைவ கௌந்தேய ததோயாந்த்யதமாம் கதிம்' இது முதலியவைகளால் சொல்லப்பட்டவாறு ஜகத்து மித்யை, நானே ப்ரஹ்மம் என்று சொல்லிக்கொண்டே, நானே இராஜனென்று சொல்லிக் கொண்டே இராஜனை அடையாமலே போலீஸாரால் பிடிக்கப் பட்டு த்வீபாந்தர ஶிக்ஷையை யடைவதுபோல், பரமாத்மாவை யடையாமலே அந்தந்தமஸ்ஸையடையும் அத்வைதமதத்தைவிட நான் இராஜ சேவகனென்று சொல்லிக்கொண்டு தைர்யமாய்த் திரிந்துகொண்டே அதிகாரிகளின் முகாந்திரமாய் சுகங்களை யனுபவித்துக்கொண்டே கடைசியில் இராஜனை யடைந்து மஹா ஸுகங்களை யனுபவிப்பதைப்போல், ஈஶன் பெரியவன் நான் அவனிட தாஸன் என்றறிந்து அவனை துதித்துக்கொண்டிருந்து இகபர ஸுகங்களைப் பெறும் இதர எல்லா மதங்களும் மேலானதேயாகும் என்ற விஷயத்தை வாசகர்களே அறியலாம்.

இம்மாந்தாசார்யரிட புத்தகத்திலும் உபன்யாஸத்திலுமுள்ள அஸங்கதங்களை எவ்வளவென்றுரைப்பது. வாசகர்கள் ஆராய்வரேயாகில் எல்லாம் வெளியாகும் என்று இத்துந்துபி தன் ஒலியினால் அறிவிக்கிறது.

---

## 23. ஆந்த்ர விஜயம்

### மூன்றாவது (பல்லாரி).

ஸ்ரீஸ்ரீகள் மேற்கூறியவாறு திருச்சானூரில் சிலகாலம் தங்கி 'வேதாந்த விசாரணை ஸிவில்கேஸ்' புத்தகங்களை இயற்றி தெலுங்கு, தமிழ், கன்னட பாஷைகளில் அச்சிட்டு வெளிப்படுத்தி 'அத்வை

தம் வேதசம்பந்தமற்றதாகையால் த்வைதத்தையே ஆஶ்ரயிக்க வேண்டியது' என்று தம் சிடர்களுக்கறிவித்து பவ வருஷம் மாக சுத்த அஷ்டமி (11-2-35) அங்கிருந்து புறப்பட்டு ஸ்ரீவேங்கடாசலத்திற்குச் சென்று தான் செய்த கைங்கர்யங்களை ஸ்ரீவெங்கடேஶனிடம் ஸமர்ப்பித்து அங்கிருந்து யாத்ராக்ரமமாய் யுவ வருஷம் சைத்ர (1935 ஏப்ரல்) மாதத்தில் பல்லாரிக்கு விஜயம் செய்து அங்குள்ள தம் சிடர்களுக்கு தத்வோபதேசங்களைச்செய்து கொண்டு சிடர்களால் கேழ்க்கப்படும் லௌகிக வைதிக விஷயகமான எல்லா ஸம்ஶயங்களுக்கும் எளிதில் மனதுக்குத் தெறியும்படியான ஸமாதானங்களைக்கூறி ஷி ஸம்ஶயாதிகளைப் போக்கடித்துக்கொண்டிருந்தனர்.

இப்படியிருக்க—அவ்வூரிலிருக்கும் அத்வைத ப்ரபோதக சங்கத்தினராகிய சில அத்வைதிகள் ஸ்ரீஸ்ரீகளை நேறில் காணுவதற்குக்கூட திறமையற்றவர்களாய் தூஷண பூஷணங்கள் மேத்யாமேத்யங்கள் முதலியவைகளெல்லாம் பாரமார்த்திகத்தில் ஒன்றே, இப்பவும் மித்யை என்று வாயால் சொல்லிக்கொண்டிருந்தபோதிலும், மனதில் மாத்திரம் தூஷணங்கள் வேறு பூஷணங்கள் வேறு என்கிற பேத (த்வைத) புத்தியுள்ளவர்களாய் ஸ்ரீஸ்ரீகள், தம் அத்வைதத்தை தூஷித்திருக்கிறுரென்று நினைத்து, வெகுதுக்கத்துடன் ஆலோசித்து, எப்படியாகிலும் இவ்வுத்தராதி மடாதிஶரை தாங்கள் வெல்லவேண்டுமென்கிற ஆவலுடன்—குண்டூரில் ஸ்ரீஸதனத்தில் நடந்த உபன்யாஸங்களைக் கண்டிக்கத் தயாராயிருந்த உத்தராதி மடாதிபதிகளின் சிடர்களுக்கு தம்மிட ஸபையில் இடங்கொடுக்காமலும், அவர்களால் செய்யப்பட்ட உபன்யாஸங்களுக்கு அவர்களால் அழைக்கப்பட்டுப் போகாமலும் தம்மிட வீட்டிலேயே தம்மிட வார்த்தைகளே ப்ரமாணமாயுள்ள இருபது உபந்யாஸங்களைச் * செய்திருக்கும் கல்யாணனந்த பாரதி மாந்தாசார்யரென்பவரை ரெயில்செலவு முதலியவைகளைக் கொடுத்து தம்மூருக்கு வரவழைத்தனர்.

---

* ஷி உபன்யாஸங்களை எல்லாம் அப்போதைக்கக்கப்போதே உத்தராதிமடாதீசரின் சிடர்கள் கண்டித்து விட்டிருக்கின்றனர்.

ஜராஸந்தன் ஸ்ரீ கிருஷ்ணனுடன் போருக்கு மறுபடியும் மதுராவுக்கு வந்தாற்போல் மாந்தாசார்யர் பல்லாரிக்கும் வந்தவராய் 26-4-35ம்தேதி மாலை 6-மணிக்கு புரூஸ் பேட்டையிலுள்ள ஸ்ரீ கணேசர் கோயிலில் உபன்யாஸத்திற்கு ஆரம்பித்து, தான் ஶங்கராசார்யரின் எந்த பீடத்திற்கும் சேராத வெரும் ஸன்யாஸியாயிருந்தும் 'சிருங்கேரி ஸ்ரீ விரூபாக்ஷ ஸ்ரீ வித்யாஶங்கர பத்மாவேஶ ப்ரகாஶித' இது முதலிய தம்மிடமில்லாத மாகாத்ம்யங்களை யெல்லாம் சுமார் ஒருமணி நேரம் உபன்யஸித்து ப்ரமாணங்களைக் காட்டாமலே 'ஶ்ருதி முதலியவைகள் ஐக்யத்தையே சொல்லுகின்றன, பேதத்தைச்சொல்லுவதில்லை' என்று சொல்லி 'அத்வைதம் ஸித்திக்கவேணுமாயின் த்வைதத்திற்கு மித்யாத்வம் ஸித்திக்கவேண்டியதாகையால் முதலில் த்வைத மித்யாத்வத்தைச் சொல்லுவது ஆவஶ்யகம்' என்று சொல்லி, அம் மித்யாத்வத்தை உபபாதிக்குங்காலத்தில் 'ஜகத்து ஸ்திரமல்ல நஶ்வரம் (நாசமடைவது), ஆகையால் அது மித்யை, மத்வாசார்யரும் தம்மிட பாஷ்யத்தில் இப்படியே சொல்லியிருக்கிறார்' என்று சொல்லி 'அஸாரம் சாப்யனித்யகம்' என்கிற ப்ரமாணத்தையும் உதகரித்தார்.

அப்போது அச்சபைக்கு வந்திருந்த ஸ்ரீ உத்தராதி மடாதிபதிகளின் சீடரான பண்டித சிரோமணி சிஞ்சோளி கிருஷ்ணசார்யர் 'மித்யா ஶப்தத்திற்கு தாங்கள் சொல்லும் அர்த்தம் சங்கராசார்யர் முதலிய அத்வைதாசார்யர்களுக்கு ஸம்மதமானதல்ல, மத்வ பாஷ்யத்திற்கும் அது அர்த்தமல்ல, மத்வ பாஷ்யத்தின் அர்த்தம் தங்களுக்குத் தெரியவில்லை' என்று ஆக்ஷேபித்தனர். அதற்கு ஸபாவ்யவஸ்தாபகரான டாக்டர் ம. ரா. ஸ்ரீ. நரசிம்ஹ பந்துலு அவர்களும், ம-ா-ா-ஸ்ரீ ரங்காரயர் முதலியவர்களும் 'உபன்யாஸத்தின் மத்தியில் விசாரம் வேண்டாம், தாங்கள் எல்லா விஷயங்களையும் குறித்து வைத்துக்கொண்டு உபன்யாஸம் முடிந்த பிறகு கேழ்விகளைக்கேழ்க்கலாம்' என்று சொன்னார்கள். மாந்தாசார்யரும் 'இருபது வருஷங்களாயினும் இங்கிருந்து தங்களிட கேழ்விகளுக்கெல்லாம் பதிலளித்தே போகிறேன்' என்று சொல்லி, உபன்யாஸத்தை முடிக்கும்போது இந்த ப்ரஹ்ம விசா

ரத்தில் ஸன்யாஸிகளுக்கே அதிகாரம், மத்வராயரும் 'ஸன்யஸ்தாகிலகர்மவான் ஸ உத்தமோதிகாரீ ஸ்யாத்' (கர்மங்களை விட்ட ஸன்யாஸிக்கே அதிகாரம் என்று சொல்லியிருப்பதினல் ஸன்யாஸிகள் யாராகிலும் கேட்டால்தான் பதில் சொல்லுவேனேயொழிய ஸம்ஸாரிகளுக்கு நான் பதில் சொல்லமாட்டேன் என்று சொல்லி * எழுந்து போய்விட்டனர்.

மருநாள் பல்லாரி ஸ்ரீமத்வஸித்தாந்த ஸபையோரால் ப்ரார்த்திக்கப்பட்ட ஸ்ரீஸ்ரீகள் ஶ்ருதி ஸூத்ர கீதா ப்ரமாணங்கள் த்வைதத்தைச் சொல்லுகிறதா அத்வைதத்தைச் சொல்லுகிறதா என்பதை விசாரிப்பதற்காக ஒத்துக்கொண்டு ஸபை கூட்டி மேற்படி ஸபைக்கு மாந்தாசார்யரை வரவேணுமென்று சொல்லியனுப்பியதற்கு மாந்தாசார்யர் தனக்கு வெகு கார்யங்களிருப்பதாயும், தம்முடன் யாரும் வரவில்லை என்றும், தான் ரிடர்ன் டிக்கட் வாங்கி வந்திருப்பதாயும், உத்தராதிமடத்து ஸ்வாமிகளுக்கும் தமக்கும் ஏதோ கடிதமூலமாய் விசாரம் நடந்துகொண்டிருப்பதாயும் அது முடிகிறவரைக்கும் ஓரிடத்தில் நேரில் அவருடன் விசாரம் செய்கிறதில்லை என்றும் பதிலளித்து 27-4-35-ம் தேதி தம்மிட உபன்யாஸத்தின் ஆரம்பத்திலேயே 'கேள்வி கேள்ப்போர் இச்சபைக்கு வரக்கூடாது' என்று சொல்லி வெகுஸந்தோஷத்துடன் உபன்யஸித்து, மருநாள் (28-4-35) 'மாந்தாசார்யர் ஸ்ரீ உத்தராதிமடாதிபதிகளுடன் நேரில் வாதமாடி உத்தராதி மடாதிபதிகளை ஊரைவிட்டு தெருத்திவிடுவார்' என்கிற தங்களிட மனோரதம் (அபிப்ராயம்) நிறைவேறாததினல் அத்ருப்தராயிருக்கும் பல்லாரி அத்வைத ப்ரபோதக சங்கத்தாரால் வழியனுப்பப்பட்டு வந்த வழியே சென்றனர். இப்படியிருக்க — அத்வைதத்திற்கு ஜயமென்றாகிலும், த்வைதத்திற்கு பராஜயமென்றாகிலும் சொல்ல முடியாததேயன்றி, மாந்தாசார்யார் ஸ்ரீகளின் முன் வந்து ப்ரமாணங்களைக் காட்டி த்வைதத்தைக் கண்டிக்காமலும், அத்வை

* சீடர்களாலாகிலும் ப்ரதிவாதிகளாலாகிலும் கேட்ட கேள்விகளுக்கு பதிலளித்துத் தான் சொல்லுவதை நிலைநிருத்திக்கொள்ளாத இத்தகைய உபன்யாஸங்களை புத்தியற்ற பாலகர்களும் கிறிப்பிள்ளைகளும் செய்யக்கூடுமாகையால் இதினல் தத்வ நிச்சயமெப்படியாகும்?

தத்தை நிலைநிறுத்திக்கொள்ளாமலும் போய்விட்டபடியால் ‘த்வைதத்திற்கே விஜயம்’ என்று இத்துந்துபியின் ஒலி அறிவிக்கிறது.

---

## 24. ஆந்த்ர விஜயம்.

### நான்காவது (ஆதவாணி)

பிறகு ஸ்ரீஸ்ரீகள் 26-12-35-ல் திருச்சானூரில் நடக்கும் ஸ்ரீமன் மத்வஸித்தாந்தாபிவ்ருத்திகாரணீ ஸபைக்கு, விஜயம் செய்ய வேண்டுமென்று அச்சபையோரால் ப்ரார்த்திக்கப்பட்டவராய் மேற்படி ஸபைக்கு விஜயம் செய்வதற்காக அத்தேஶத்திலிருந்து புறப்பட்டு க்ரமமாய் 10-12-35-ல் ஆதவாணிக்கு விஜயம் செய்து அங்குள்ள தம் சீடர்களுக்கு தத்வோபதேஶங்களைச் செய்து வந்தனர்.

இப்படியிருக்க அவ்வூரிலுள்ள “ஆதவாணி அத்வைத ப்ரபோதக” ஸங்கத்து அத்வைதிகள்—‘உத்தராதி மடத்து ஸ்வாமிகள் திருச்சானூர் ஸபையோரால் அழைக்கப்பட்டு போய்க்கொண்டிருக்கிறபடியால் இச்சமயத்தில் நாங்கள் ஸபை கூட்டி மேற்படி ஸ்வாமிகளை வாதத்திற்கழைத்தால் அவர் (மாந்தாசார்யர் பல்லாரியில் சொல்லியவாறு) தனக்கு வெகு கார்யங்களிருப்பதினால் இப்போது நிற்கமுடியாதென்று சொல்லிப்போய்விடுவார். அப்போது நாங்கள் ஸுலபமாய் இவரை வென்று நம்மூரைவிட்டு துறத்திவிட்டோமென்று பறைசாற்றி விடலாம்’ என்று நிச்சயித்துக்கொண்டு, அச்சபைக்குச் சேர்ந்த கோஸகி ராமசந்த்ர பட்டரென்பவர் 10-12-35-ஸாயங்காலம் 7-மணிக்கு ஸ்ரீ ஸ்வாமிகளிடம் வந்து தாங்கள் வாதத்திற்கு தயாராயிருக்கிறீரா? என்று வினவினர். அதற்கு ஸ்ரீஸ்ரீகள் நாங்கள் எப்போதும் தயாராகவே இருக்கிறோம் என்று சொல்லி ‘வெரும் வாயை மெல்பவன் அவலைக்கண்டால் விடுவானா’ என்ற பழமொழியையொத்து தான் திருச்சானூருக்குப் போவதை நிறுத்தி அங்கேயே தங்கினர். அய்யோ பாவம்! ஆதவாணி அத்வைதிகளின் துரத்ருஷ்டம் அவாளிட கோறிக்கை நிறைவேறாததாயிற்று. ராமசந்திர

பட்டர் தாங்களும் தயாராவதாகச் சொல்லி 20-12-35-ம் தேதி குண்டூருக்குப் போய் மாந்தாசார்யரை அழைத்துக்கொண்டு 22-12-35-ம் தேதி 10-மணிக்கு ஆதவானிக்கு வந்து சேர்ந்தனர். இம்மாந்தாசார்யரின் மகிமைகளும் அவரிட கார்யங்களும் குண்டூர் பல்லாரி விஜயங்களில் வெளியாயிருப்பதினுல் இங்கு அதிகமாய்க் கூறவேண்டியதில்லே. உத்தராதி மடத்திலோ யாருக்காகிலும் எக்காலத்திலாகிலும் ஸ்ரீகளுடன் வாதமாட எவ்விதத் தடையும் இல்லே. இப்படியிருந்தும் மாந்தாசார்யர் தம்மிட பரிவாரத்துடன் ஸ்ரீஸ்ரீகளிடத்திற்கு நேரில் சென்று வாதமாடி ஸ்ரீஸ்ரீகளே வென்று தம்மிட ப்ரதிஜ்ஞையை நிறைவேற்றிக் கொண்டு ஆதவானி அத்வைதிகளின் கோறிக்கையை ஈடேற்றிப் போகாமல் 22-ம் தேதி தான் இருந்த இடத்திலேயே ஸபை நடத்தத் துடங்கினர்.

அதைக் கண்டு உத்தராதி மடாதிபதிகள் அடியில் கண்டவாறு ஓர் அறிக்கைப் பத்திரிகையை வெளியிட்டனர்.

ஸ்ரீமத் பரஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய இத்யாத்யனேக குணஸம்பன்ன, ஸ்ரீமத் ராமசந்த்ர வேதவ்யாஸபாத பத்மாராதக ஸ்ரீமத் வைஷ்ணவ ஸித்தாந்த ப்ரதிஷ்டாபனுசார்ய ஸ்ரீமத் ஸத்ய ஞானதீர்த்த ஸ்ரீபாதவடயரின் கரகமல ஸஞ்ஜாத ஸ்ரீமத் ஸத்யத்யானதீர்த்த ஸ்வாமிகளால் எல்லா அத்வைத வித்வமண்டலியவர்களுக்கு பஹிரங்கமாய் அனுப்பிய வேதாந்த விசார ஸவால் பத்திரிகை.

"ப்ரஹ்ம ஸத்யம் ஜகன் மித்யா ஜீவோ ப்ரஹ்மைவ நாபர:" என்று ஸ்ரீ சங்கராசார்யர் சொல்லிய (1) ப்ரஹ்மம் நிர்குணம், என்றுல் ஸகல தர்மரஹிதம். (2) ஜகத்து மித்யை ப்ராஹ்மணுதி வர்ணங்கள் ப்ரஹ்மசர்யாத்யாஶ்ரமங்கள்..........ப்ரஹ்மத்தில் கல்பிதம், சிப்பியில் தோன்றும் வெள்ளியைப்போல் அஸத்யம். (3) 'ஜீவோ ப்ரஹ்மைவ நாபர:' ஜீவன் ப்ரஹ்மத்தைவிட வேறானவனல்ல, என்கிற இம்மூன்று விஷயங்களுக்கு ப்ரஸ்தானத்ரயத்தில் ஆதாரமில்லே. ப்ரஸ்தானத்ரயம், ப்ரஹ்மம் கல்யாண குண பரிபூர்ணமானது, ஜகத்து ஸத்யம், ஜீவ ப்ரஹ்மாக்களுக்கு பேதம்

என்றே போதிக்கின்றன என்று ஸ்ரீ சங்கராசார்யரே சொல்லி யிருக்கிறார்.

ஆகையால் ஸ்ரீசங்கராசார்யரிட மதம் அவைதிகம், அத்வைத மதம்பௌத்தமதமே. அத்வைதம் ப்ரஸ்தானத்ரயங்களால்ஸாதிக் கப்படுவதில்லை என்று வேதாந்த விசாரணை ஸிவில் கேஸ் என்னும் நூலில்சொல்லிய விஷயங்களை ஸ்தாபிப்பதற்கு நாங்கள் தயாராயி ருக்கிறோம். அத்வைதமதாபிமானிகள் யாராகிலும்மேற் சொல்லிய மூன்று விஷயங்களும் ப்ரஸ்தானத்ரயத்தினால் ஸித்தமாகின்றன வென்று நம்மெதிரில் விசார மூலமாய் ஸாதித்துக்கொள்ளலாம். அதற்காக இன்றயதினம் (23-12-35) ஸாயங்காலம் 4-மணி முதல் இரவு 8-மணிவரைக்கும், ராவ்சாஹேப் தம்ம ரெட்டியவர்களிட சத்திரத்தில் வந்தவர்களுடன் விசாரம் நடத்தப்படும். இப்படி விசாரம் ப்ராரம்பமாகுமாயின் அதேயிடத்தில் முன் துடரும். இவ்வாதம் நடக்கும் ஸமயத்தில் கையெழுத்துக்காக ஏற்படுத்தப் பட்டிருக்கும் ஸ்ப்யர்கள் தவிர மற்றவர்கள் யாரும் பேசக்கூடாது. நிஶ்ஶப்தமாயிருக்க வேண்டும். த்வைத சங்கத்தினராலாகிலும், அத்வைத ஸங்கத்தினராலாகிலும் ப்ரதி சங்கத்தினரும் 25 பேர் களுக்கு அதிகமாய் ஸபாமந்திரத்தில் ப்ரவேசிக்கக்கூடாது. இவர் களுக்கு அந்தந்த சங்கத்தின் கார்யதர்ஶிகள் உள்ளே ப்ரவேசிப் பதற்கு சீட்டுக் கொடுத்திருக்க வேண்டும்.

### வாத நியமங்கள்.

வாதம் செய்யும் இருதரத்தாரும் எதிரில் ஸம்ஸ்க்ருத பாஷையில் வினவிடை ரூபமாய் வாதம் நடத்தவேண்டும். நடந்த வினவிடைகளை எழுதுவித்துஅதில் இருதரத்தாரும் கையெழுத்து செய்யவேண்டும். இப்படிச் செய்த பத்திரத்தை ஏற்படுத் திக்கொண்டிருக்கும் ஐந்து ஸபிகரின் கையெழுத்துடன் வெளியிட வேண்டும். இவ்விதமாக வெளியிடப்பட்ட வினவிடை களின் முடிவான தத்வ நிர்ணயத்தை ஜனங்களே (வாசகர்களே) செய்துகொள்ள வேண்டியது.

முகாம்
ஆதவானி,
23—12—35.

ஸத்யத்யானதீர்த்த ஸ்ரீபாதர்,
உத்தராதி மடம்.
C. S. P. P.

இவ்விதமாகப் பத்திரிகை வெளியிட்டு மாந்தாசார்யருக்கும் சங்கத்தாருக்கும் அனுப்பி ஸாயங்காலம் ஸபையை ஆரம்பித்தனர்.

அதற்கு மாந்தாசார்யர் தமக்கனுப்பிய அழைப்புப் பத்திரிகை ஸரியானதல்லவென்றும், அதில் ஸ்ரீஸ்ரீகளின் கையெழுத்து இல்லை, ஸீல் இல்லை என்கிற இது முதலிய ப்ரயோஜனமற்ற ஆக்ஷேபணைகளைச் செய்துகொண்டே ஸபைக்கு வாராமலே சங்கத்தாரால் தனக்களிக்கப்படும் விருந்தைப்புசித்துக்கொண்டே ஸுகமாயிருந்து தன் மனதே ப்ரமாணமாயுள்ள சில உபன்யாஸங்களைச் செய்து ஆதவானி அத்வைதிகளின் கண் துடைத்துவிட்டு 30-12-35 திங்கட்கிழமை ஸாயங்காலம் சங்கத்தாரால் வழிகாட்டப்பட்டவராய் வந்தவழி பிடித்து குண்டூருக்குச் சென்றனர். ஆதவானி சங்கத்தினரும் ஸ்ரீஸ்ரீகள் திருச்சானூர் ஸபைக்கு போய்விடுவார் என்று நினைத்தது நிரைவேராமற் போனதற்காக வெகு வருத்தமுடையவராயினர். மற்றும் 'ஸ்ரீகள் ஸபையோரை வாதத்திற்கழைக்காமல் பொதுவாய் அத்வைத மதாபிமானிகள் யாவராகிலும் வந்து வாதமாடலாம் என்று வெளியிட்டிருப்பதினால் நமக்கு வாதம் செய்யவேண்டிய பாரம் துலைந்தது' என்று ஸந்தோஷமுமடைந்தனர். 'பனங்காட்டுநரி சலசலப்புக்கஞ்ஜுமா' என்றவாறு மகாதீரரான ஸ்ரீ உத்தராதி மடத்து ஸ்வாமிகள் ஆதவானி அத்வைதிகளின் தடபுடலுக்கு அஞ்ஜுவரோ. வந்தவரை ஓட்டிவிட்டு அத்வைதமதம் நிலைநிற்கக் கூடியதல்லாததினால் த்வைதானு ஸந்தான பூர்வகமாய் அனுஷ்டானம் செய்து ஸுகமடையுங்களென்று உபதேசித்துக்கொண்டு அங்கிருந்தாற்போலவே திருச்சானூர் ஸபையையும் வெகு விமர்சையாய் நடக்கவும் செய்தார். இம்மாந்தாசார்யரின் கார்யங்களை எல்லாம் கவனிக்கும் ப்ரதிமனிதர்களுக்கும் மகாபாரதத்திலுள்ள உத்தரகுமாரனின் சரித்திரம் ஞாபகத்திற்கு வந்தே தீரும் என்கிற விஷயங்களை துந்துபியின் இவ்வொலி அறிவிக்கிறது.

மஹனீயரால் புகழக்கூடிய இந்த ஸ்ரீஸ்ரீமத் உத்தராதிமடாதிபதிகளின் விஜயத்தை பூர்த்தியாய் எடுத்துறைக்க மந்தமதியான

எனக்கென்ன திரமையுண்டு? ஆயினும் எனக்கு அவரிட அனு க்ரஹத்தினுல் கிடைத்த அவரிட சில விஜயங்களில் என்மனதிற் கெட்டியவற்றை மகாஜனங்களின் முன் அறிவித்துக்கொண்டி ருக்கிறேன். அதிலுள்ள பூர்வாபரீகாரங்களை மகான்கள் மன்னிப் பாராகவும்.

ஸ்ரீஸ்ரீகள் இவ்விதமாகவே அநேகதேசங்களில் ஸஞ்சரித்துக் கொண்டே தம்சிடர்களின் அஞ்ஞானம் ஸம்ஶயம், மித்யாஞானம் இவைகளைப்போக்கி ஶ்ருதிஸூத்ர கீதாக்களால் முக்யார்த்தத் தாலேயே கூறப்படும் மேலான த்வைத மதத்தை—(1) ஸ்ரீ நாராயணன் ஸர்வோத்தமன், நிற்குணனல்ல, குணபூர்ணன், (2) ஜகத்மித்யையல்ல ஸத்யம், (3) ஜீவர்கள் பரமாத்மாவுடன் எப்போதும் வேறுபட்டவர்கள் (4) பரமாத்மனின் தாஸர்கள், (5) தாரதம்யமுடையவர்கள், (6) மோக்ஷம் என்றுல் ஸ்வரூபானந் தத்தை அனுபவித்தல் (7) மோக்ஷத்திர்க்கு சுத்தமான பக்தியே காரணம், (8) இவ்விஷயங்களுக்கு ப்ரத்யக்ஷம் அனுமானம் ஆகமம் இவைகளே ப்ரமாணங்கள், (9) பரமாத்மா வேதத்திஞலேயே அறியக்கூடியவன் என்று போதித்துக்கொண்டே, தான் அத்வைதமத கண்டன பூர்வகமாய் த்வைதமத ஸ்தாபனுதிகாரத் தைப்பெற்ற சகே 1833 விரோதிக்ருத் புஷ்ய பஹுளதசமி (13-1-1912) சனிக்கிழமை முதல் சகே 1857 யுவ வருஷம் மாக சுத்த ஸப்தமி குருவாரம் (1936 ஜனவரி 30-ம் தேதி) வரைக்கு முள்ள, இருபத்திநாலு வருஷங்களில் தன்னுல் ஸம்பாதிக்கப் பட்ட த்வைதவிஜயங்களை தம்மிட குருக்களான ஸ்ரீ ஸத்யஜ் ஞான தீர்த்தரின் முகாந்தரமாய் பரமகுருக்களான ஸ்ரீமத் ஜயதீர்த்தரின் அந்தர்யாமி பாரதீரமண முக்ய ப்ராணுந் தர்கதரான ஸ்ரீ வேதவ்யாஸரின் பாதகமல ஸன்னிதானத் தில் ஸமர்பிப்பதற்காக மேற்படி 1936 ஜனவரி 31உ ஸ்ரீமல கேடா க்ஷேத்திரத்திற்கு விஜயம் செய்து, அங்கு மறுநாள் (1-2-36) ஸ்ரீமன் மத்வநவமீ மஹோத்ஸவத்தையும் 2, 3, 4, 5, தேதிகளில் தம்மிட குருக்களான ஸ்ரீ ஸத்யஜ்ஞான தீர்த்தரிட மகாஸமாராதனை மஹோத்ஸவத்தையும் நடத்திக்கொண்டு தன்னு லுடையப்பெற்ற த்வைத விஜயங்களை ஸ்ரீ வேதவ்யாஸரிட பாதங்

களில் ஸமர்பித்து, 5-ம் தேதி மத்யானமே மூன்ருவது பூப்ர தக்ஷிணத்திற்காக விஜயம் செய்திருக்கிருரென்கிற விஷயத்தை இத்துந்துபியின் ஒலி உலகத்தில் பறவச்செய்கிறது:

## இதர விசாரங்கள்.

இதின் மத்தியில் மங்களூரிலிருக்கும் கோ. ஸம். காரந்த ரென்பவர்—ஸ்ரீ நாராயண பண்டிதாசார்யரால் சிருவர்கள் கெட்ட வழிக்குபோகாமலிருப்பதற்காக ஸ்ரீ சங்கராசார்யரின் சரித்திரங் களைச்சுருக்கமாய் இயற்றப்பட்டிருக்கும் மணிமஞ்ஜரீ என்னும் சிரு நூலைக்கண்டு வெகு ஆக்ரஹத்துடன் ‘மணிமஞ்ஜரீவிமர்சை’ என்கிற சிருபுத்தகத்தை இயற்றி 1931 பிப்ரவரி 3ம் தேதி யன்று உடுப்பி பாடசாலையில் வெளிப்படுத்தினர். அதில் அம்மணி மஞ்ஜரி நூலையும், நாராயண பண்டிதாசார்யரையும் பலவிதமாக தூஷித்திருக்கிருர். அதற்கு உடுப்பியிலிருக்கும் ரு. ம. ஸம் கரம் புளி பத்மனுபாசார்யரென்பவர்—ஓர் நூலை இயற்றி வெளியிட்டு மணிமஞ்ஜரி விமர்சினியை நாசப்படுத்தியிருக்கிருர். அதின் சுருக்கம்:—

இக்காரந்தகர் மரத்தின்துளிரைப்போன்ற இம்மணிமஞ் ஜரியை தூஷிப்பதில் என்ன ப்ரயோஜனம். அத்துளிருக்கு ஆதாரமாய் உலகமெங்கும் பரவியிருக்கும் மரங்களின் வேரைப் போன்ற புருஷோத்தம பாரதி, சித்விலாஸமுனி, ஆநந்தகிரி மாத வாசார்யர் (வித்யாரண்யர்) இவர்களால் இயற்றப்பட்டுள்ள *நான்கு சங்கர விஜயங்களையும் அக்ரந்தகாரர்களையும் நசிக்கச்செய்வரே யாகில் வேருடன் அறுக்கப்பட்டமரம் துளிராததுபோல் மணி மஞ்ஜரி முதலியவைகள் தானேநசித்துவிடும் என்றும், சங்கரா சார்யரின் ஜனனம் முதலியவைகளிலுள்ள தோஷங்களையும் அதினல் அவரிட தாயாருக்கு பஹிஷ்காரம் நேர்ந்திருந்ததாயும், ஆக்ஸ் பர்டன் போர்டன் ஸம்ஸ்க்ருத காலேஜ் ப்ரொபெஸர் பண்டிட் H. H. வில்ஸன் L. L. D. F. R. S. என்பவரால் எழுதப்

---

* மைசூர் ஓரியண்டல் லைப்ரெரி புத்தகங்களின் நெம்பர்கள் **543, A. 157, 51 K, A. 247.** முதலியன.

பட்டுள்ள * (A Sketch of the Religious sects of the Hindus) புத்தகத்தை நாசப்படுத்தினல் நலமென்றும் எழுதி மற்றும் மணிமஞ்ஜரிக்கு ஆதாரமான சங்கராசார்யரின் சரித்ரங்களையும் சுருக்கமாய் எழுதியிருக்கிருர். அவ்விஷயங்களை அப்புத்தகங் களினுலேயே விவரமாய் அறியலாம்.

மற்றும் இக்காரந்தகர் உத்தராதி மடாதிபரால் எழுதப் பட்டுள்ள ஸிவில்கேஸின் பேரில் 'இண்டியன் அபீல்' என்கிற ஒரு சிறுபுத்தகத்தை வெளியிட்டுருக்கிருர். அதிலுள்ள விஷயங் களும் மாந்தாசார்யரிட நூலிலுள்ளவாரே அஸம்பத்த ப்ரலாபங் களென்றும் வாசகர்களே அறியலாம்.

மற்றும் பல்லாரியிலிருக்கும் வெங்கடேஶ்வர ஶாஸ்த்ரிகள் அத்வைத ப்ரபோதசங்கத்திற்காக 'ஜகத்து அநித்தியமென்று உங்கள் ஆசார்யரே சொல்லியிருக்க நீங்கள் மித்யையல்ல என்று எப்படிச்சொல்லுகிறீர்கள்' இது முதலிய அஸம்பத்த ப்ரலாபங்க ளுடன்கூடிய 'அஸத்யத்வாந்த பாஸ்கரம்' என்கிற இது முதலிய நூல்களை இயற்றியிருக்கிருர். இவர்கள் யாதொரு தடையுமின்றி எப்போதும் விசாரம் செய்யத் தயாராயிருக்கும் ஸ்ரீ உத்தராதி மடத்து ஸத்யத்யான தீர்த்தரின் எதிரில் சென்றோ, அல்லது அவரை தம்மிடத்திற்கு வரவழைத்தோ நேரில் வாதமாடி தம் மதத்தை ஸ்தாபித்துக்கொள்வதைவிட்டு, ஆதாரமற்ற நிஷ்ப்ர யோஜகங்களான புத்தகங்களை வெளியிடுவதினுல் ப்ரயோஜன மென்ன ? அவைகளுக்கெல்லாம் "ந ஹி ருதமனுரௌதி க்ராம ஸிம்ஹஸ்ய ஸிம்ஹ:" என்றவாறு நம் ஸ்ரீகள் பதில் கூறுவது அனு வஶ்யகம் என்பதை நிஷ்பக்ஷபாதிகளான வாசகர்களே அறியலாம்.

---

* மைசூர் ஒரியண்டல் லைப்ரெரி புக் No. 212, 1048.

## த்வைதத்திற்கு பராஜயமாகிலும், அத்வைதத்திற்கு ஜயமாகிலும் எப்படி கிடைக்கும்?

(1) **நிற்குண ப்ரஹ்மம் உண்டென்னும் விஷயத்தில்**--அவாச்ய மாகையால் அந்த ப்ரஹ்மம் உண்டு என்பதில் ப்ரமாணங்களில்லை என்று 'ஸூத்தம் ஹி ந த்ருஶ்யம்' (அத்வைதசித்தி) 'அதோ ந நிர்தேஷ்டும் ஶக்யதே' (ப்ருஹதாரண்யக சங்கர பாஷ்யம் 2-3-6.) இது முதலிய வாக்யங்களால் அத்வைதிகளே ஒத்துக் கொண்டிருக்கிறார்கள்.

(2) **ப்ரஹ்மம் ஸகுணம் குணபூர்ணம் என்னும் விஷயத்தில்**— ராமகிருஷ்ணாதி ரூபங்களுடன்கூடிய ஸகுண ப்ரஹ்மத்தை அத்வைதிகள் உபாஸித்து வருகிறார்கள். தவிர ஸகுண ப்ரஹ்மோபாஸனையினால் ஜீவர்கள் வைகுண்டாதிகளில் நித்ய ஸுகத்தையடைகிறார்களென்றும் அவர்களே ஒத்துக்கொள்ளுகிறார்கள்.

(3) **ஜகத்து மித்யை என்னும் விஷயத்தில்**—கல்பதருபரிமள காரரும் ப்ரஹ்ம வித்யாபரணகாரரும் 1-1-1.ஸூத்ர பாஷ்ய வ்யாக்யானத்தில் வ்யாவஹாரிக ஸத்யம் என்றாலும் மித்யை என்றாலும் ஒன்றே என்று 'வ்யாவஹாரிக விஷயஸ்ய' இது முதலிய வாக்யங்களால் சொல்லியிருக்கிறார்கள். தவிர சங்கராசார்யரும் 2-2-28 முதல் 32 வரைக்குமுள்ள தம்மிட ஸூத்ர பாஷ்யத்தில் ப்ரமாணங்கள் தம் தம் விஷயங்களை பாரமார்த்திகங்களென்று க்ருஹிக்கின்றனவேயொழிய வ்யாவஹாரிகமென்றுக்ருஹிக்கிறதில்லை. ஆகையால் ஜகத்து வ்யாவஹாரிகமென்று சொல்லக்கூடாது. பாரமார்த்திக ஸத்யமென்றே சொல்லவேணுமென்று ஜகத்து வ்யாவஹாரிக ஸத்யம் என்று சொல்லும் பௌத்தரைக் கண்டித்திருக்கிறார். 'விஶ்வம் ஸத்யம்' முதலிய ஶ்ருதிகள் ஜகத்துக்கு ஸத்யத்வத்தை ஸ்பஷ்டமாய்ச் சொல்லுகின்றன. வித்யாரண்யரும் ஸத்யம் என்றால் பொய் யல்லாதது நிஜமானதே என்று அர்த்தம் செய்திருக்கிறார். ஆகையால் ஜகத்து மித்யை என்று சொல்ல முடியாது. ஸத்யமென்றே சொல்ல வேண்டுமென்பதை வாசகர்களே அறியலாம்.

(4) **ஜீவப்ரஹ்மாக்களின் ஐக்ய விஷயத்திலோ:**—எல்லா ப்ரமாணங்களும் பேதத்தையே சொல்லுகின்றனவென்று 2-1-20

வது ப்ருஹதாரண்யக சங்கர பாஷ்யத்தில் ஸ்பஷ்டமாகச்சொல்லி யிருக்கிறார். ஆயினும் அபேதத்தைச் சொல்லும் 'தத்வமஸி' முதலிய நான்காறு வாக்யங்களை யநுசரித்து இதர எல்லா ப்ரமாணங்களாலும் சொல்லப்படும் பேதம் பொய்யென்று சொல்ல வேணுமென்கிறார். அந்த 'தத்வமஸி' முதலிய வாக்யங்களும் முக்யார்த்தத்தால் அபேதத்தைச் சொல்லுவதில்லை என்றார். லக்ஷணார்த்தம் செய்யவேணுமாயின் முக்யார்த்தத்தால் அபேதத்தைச் சொல்லும் ஆதாரம் வேண்டும். தத்வமஸியின் கதியே இப்படியான பிறகு வேறு ஆதாரத்திற்கு எங்கு போவது? ஆகையால் அந்த ச்ருதிகளுக்கு பூர்வோத்தர ஸந்தர்ப்பங்களை யனுசரித்தும், வ்யாகரணாதிகளை யனுசரித்தும், முக்யார்த்தத்தால் பேதத்தையே சொல்லும் 'த்வாஸுபர்ணா' முதலிய ச்ருதிகளை யனுசரித்தும் பேதபரமாகவே அர்த்தமாகிறதே யொழிய ஐக்ய பரமாக எப்போதும் அர்த்தமாக மாட்டாது என்கிற விஷயத்தையும் வாசகர்களே எளிதில் அறியலாம்.

(5) **அத்வைத மதம் பௌத்த மதமே என்னும் விஷயத்தில்:—** ஸ்ரீ சங்கராசார்யருக்கு முன்னிருந்தவர்களும், அவரிட ஸமகாலீனரும், பின்னால் வந்தவர்களும் இக்காலத்திய பண்டிதர்களும், சொல்லியிருக்கும் ஆதாரங்களை இப்புத்தகத்தின் 42-வது பக்கத்தில் விவரமாகக் காணலாம்.

(6) அத்வைதிகள் யாரும் (நூல்களிலெங்கும்) த்வைதானுஷ்டானத்தினால் துக்கமுண்டாகிறதென்று சொல்லாததுமன்றி த்வைதோ (ஸகுணோ) பாஸனையினால் வைகுண்டாதிகளையடைந்து நித்ய ஸுகங்களையும் அடைகிறார்களென்று சொல்லியிருக்கிறார்கள். தவிர—அத்வைதோ (நிர்குணோ) பாஸனையினால் நிர்த்தர்மக நிஷ்க்ரிய நிராகார அவாச்யமான ப்ரஹ்மமாய் விடுகிறான் என்றும் சொல்லுகிறார்கள். இத்தகைய மோக்ஷத்தையடைந்து ஒன்றுமில்லாமல் ஸ்வரூப நாசமடைவதைவிட, பத்னீபுத்ராதிகளுடன் ஸுகமாய் வாழும் ஸம்ஸாரதசையே மேலாகிறதாகையால் கஷ்டப்பட்டு ஸாதனங்களைச் செய்ய வேண்டியதும் அனுவச்யகமாகும். அத்வைத மதத்தின்படிக்கு ஜீவர்கள் ப்ரஹ்

மமே யாகையால் த்வைதானுஷ்டானம் செய்தவர்களுக்கு தண்டனையாகிலும் தண்டிப்போராகிலும் கிடையாது என்று ஸ்பஷ்டமாய் தெரியவருகிறது. த்வைதிகளோ—த்வைதோபாஸனையினால் மஹாஸுக முண்டென்று ‘ஜக்ஷன் க்ரீடன்’ இது முதலிய வாக்யங்களால் சொல்லிக்கொண்டே, அத்வைதோபாஸனை செய்பவர்களுக்கு ‘அந்தந்தம: ப்ரவிஶந்தியேவித்யாமுபாஸதே’ ‘அஸத்யமப்ரதிஷ்டந்தே’ ‘ஈஶ்வரோஹமஹம் போகீ’ ‘மாமப்ராப்யைவ கௌந்தேய’ இது முதலிய ப்ரமாணங்களைக்காட்டி கோரமான மகா துக்கங்கள் உண்டாகின்றனவென்று சொல்லியிருக்கிறார்கள்.

ஆகையால் ஒருக்கால் அத்வைதமே நிஜமாயிருந்தபோதிலும்
த்வைதிகளுக்கு எப்போதும் யாதொரு பயமும் துக்கமும் கி
யாது. அத்வைதிகளுக்கோ அத்வைதம் நிஜமாயிருக்குமா
மாத்திரமே க்ஷேமம். த்வைதம் நிஜமாய் விட்டதோ அவா
கதியை சொல்லவே வேண்டியதில்லை. ஆகையால் ஸஜ்ஜன
ளெல்லோரும் எல்லா காலத்திலும் எவ்விதத்திலும் பரமஸ
தைத்தரக் கூடிய ஸகல ப்ரமாணங்களால் ஸித்தமாயிருக்
த்வைத மதத்தையடைந்து அதின்படிக்கு அனுஸந்தான பூ
மாய் ஸத்கர்மானுஷ்டானங்களைச் செய்து ஈஶ்வரானுக்ர
திற்கு பாத்ராளாகக் கடவார்களென்ற எண்ணத்துடன்
காருண்யக்கடலாகிய நம் ஸ்ரீ உத்தராதி மடாதீஶரான ஸ்ரீ வ
த்யானதீர்த்தரவர்கள் அநேக த்ரவ்யச் செலவுடனும், வெகு
ஶ்ரமத்துடனும் ஜனங்களை எச்சரித்து வருகிறபடியால் எல்
ரும் மேற்படி மகனீயரிடத்தில் நன்றி பாராட்டி மேன்மைய
வார்களாகவும்.



# அறிக்கை.

இப்புத்தகத்தை விரும்புவோர் பியாகிங் போஸ்டேஜ் வகைராக்களுக்காக நான்கு அணா தபால் சீட்டுகளை அடியில்கண்ட மேல்விலாஸத்திற்கனுப்பிப் பெறலாம்.

**எஸ். கிருஷ்ணாசார்,**

உத்தராதிமடம்,

13, சிங்கராசாரி தெருவு,

திருவல்லிக்கேணி,

**மதராஸ்.**

॥ श्रीः ॥

श्रीमत्परमहंसपरिव्राजकाचार्य श्रीमद्वैष्णवद्वैतमतप्रतिष्ठापनाचार्य

सकलसद्गुणसम्पन्न श्रीमन्मध्वाचार्यपीठाधीश्वर

श्रीमद्वैदिकसनातनधर्मप्रचारणतत्पर

श्री १०८ श्रीमत्सत्यध्यानतीर्थ मुनीन्द्रमहोदयानां

# अभिनन्दनम्

---

## स्रग्धरा छंदोभिः

श्रुत्वा यत्सिंहनादं कतिचन कुधियः पण्डितम्मन्यवर्याः ।
प्राप्ता गोमायुभावं किमपि कलकलं कुर्वते कान्दिशीकाः ॥
विद्यापीठेऽपि काश्यां सकलबुधजनाः शिष्यभावं प्रपन्नाः ।
पीत्वा यस्योपदेशामृतमिह सुधियः संभवन्ति प्रसन्नाः ॥ १ ॥

जातो यस्यास्यकञ्जामृतरसनिकरैर्नास्तिकाग्वा विशीर्णः ।
शेषः किं वा गणेशः स्वयमथ किमहो ! वाक्पतिश्चावतीर्णः ॥
श्रुत्वैव द्वैतसिद्धिं कथयितुममलां तत्त्ववित् सिद्धमन्त्रः ।
श्रीसत्यध्यानतीर्थः सुमतिनुतपदः सर्वतन्त्रस्वतन्त्रः ॥ २ ॥

दृष्ट्वा दानं यदीयं प्रतिदिनमधुना सादरं विज्ञनेभ्यः ।
स्वर्गस्थः कल्पवृक्षो भवति नतशिखस्तस्य शाखागणेभ्यः ॥
चित्वा पुष्पाण्ययत्नात् सुरजनवनिता यस्य गायन्ति गीर्तिं ।
श्रीमध्वाचार्यवर्यः स जयति भुवने शिक्षयन् धर्मनीतिम् ॥ ३ ॥

श्रीमानाचार्यवर्योऽयमाराध्यः सुजनैः सदा ।
श्रीरामं हृदये ध्यायन् सीतारामं च पश्यतु ॥ ४ ॥

शुभम्

साहित्यपरिषदुपसभापतिः

श्रीसीतारामझा (मैथिलः), काशी.